
20





செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் பெரியகுப்பம் கிராமத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் காவலர் செய்ததாக கூறப்படும் தாக்குதல்களும் பற்றிய அறிக்கை



திரு. எம். ஜி. ராஜாராம், ஐ.ஏ.எஸ்.,
விசாரணை ஆணைக்குழு
முதல் உறுப்பினர், வருவாய்த்துறை வாரியம், சென்னை.

©
தமிழ்நாடு அரசு
1975

தமிழ்நாடு அரசினருக்காக தமிழ்நாடு எழுதுபொருள்–அச்சுத்துறைச்
இயக்குநரால் அச்சிடப்பெற்றது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்.

தொடர் எண். (1)	பொருள். (2)	பக்கம் எண். (3)
I	தோற்றுவாய்—	
	(1) ஆணைக் குழுவை அமைத்தல்	1
	(2) ஆணைக் குழு அறிக்கை அனுப்பும் கால அளவை நீட்டித்தல்	1–2
II	பின்னணி	2–4
III	கிராமத்தின் விவரம்	4
IV	80/73-ம் எண் குற்றம் என்பது என்ன ?	4–5
V	விசாரணைக்கு முற்பட்ட செயல்—	
	(1) நிகழ்ச்சிப் பகுதியைச் சென்று பார்த்தல்	5
	(2) 1972 ஆம் ஆண்டு விசாரணை ஆணைக் குழு (தமிழ் நாடு) விதிகளைச் சேர்ந்த 7-வது விதியின்கீழ் அறிவிப்பு வெளியிடுதல்	5–6
	(3) விசாரணைக்கான இடத்தை முடிவு செய்தல் ..	6–7
	(4) ஆணைக் குழு ஒழுங்குமுறை விதிகளைத் தயாரித்தல் ..	7
	(5) சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் விடுத்தல் ..	7
VI	விசாரணை தொடக்கம்	7–9
VII	சாட்சிகளை வகைப்படுத்தல்	9–10
VIII	நிர்வாகம் சார்பில் சாட்சியங்களைப் பதிவு செய்தல் ..	10–11
IX	பெரியகுப்பம் பொதுமக்களின் சார்பில் சாட்சியங்களைப் பதிவு செய்தல்	11
X	திரு சி. ஆறுமுகம், எம்.எல்.ஏ. சார்பில் சாட்சியங்களைப் பதிவு செய்தல்	12–13
XI	14–7–1973 அன்று தாக்கல் செய்த இடைக்கால மனுவும் அதன் மீது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளும்	13
XII	பெரியகுப்பம் நிகழ்ச்சிக்குக் காரணமான நிகழ்ச்சிகள் ..	14–19
XIII	நிர்வாகத்தின் சார்பாக எடுத்துரைக்கப்பட்ட சாட்சியம்.	19–28
XIV	பெரியகுப்பம் பொதுமக்கள் சார்பாக எடுத்துரைக்கப்பட்ட சாட்சியம்	28–43
XV	ஆணைக்குழுவின் நோக்கம்	43–44
XVI	நிகழ்ச்சிகள் நடந்ததும் அவை குறித்த சாட்சியங்களை ஆய்வு செய்ததும்—	
	(a) நிகழ்ச்சி எண் 1—அலிக்குப்பத்தில் 11–6–1973 வெள்ளிக்கிழமையன்று காலை 3-00 மணியிலிருந்து காலை 5-30 வரை நடந்தது	45–47
	(b) நிகழ்ச்சி எண் 2—அலிக்குப்பம் கிராமத்தில் 11–5–1973 வெள்ளிக்கிழமையன்று மாலை 4-30 மணிக்கு நடந்தது.	47–48
	(c) நிகழ்ச்சி எண் 3—பெரியகுப்பம் கிராமத்தில் 11–5–1973 வெள்ளிக்கிழமை இரவு 11-00 மணிக்கு நடந்தது.	48–50
	(d) நிகழ்ச்சி எண் 4—பெரியகுப்பம் கிராமத்தில் 12–5–1973 சனிக்கிழமையன்று காலை 11 மணியிலிருந்து மாலை 5-30 மணி வரை நடந்தது ..	50–65
	(e) நிகழ்ச்சி எண் 5—பெரியகுப்பம் கிராமத்தில் 12–5–1973 சனிக்கிழமையன்று இரவு சுமார் 11 மணிக்கு நடந்தது	65–67

தொடர் எண்.	பொருள்.	பக்கம் எண்.
(1)	(2)	(3)
XVI	நிகழ்ச்சிகள் நடந்ததும், அவை குறித்த சாட்சியங்களை ஆய்வு செய்ததும்—தொடர்ச்சி.	
	(f) நிகழ்ச்சி எண் 6:—13–5–1973 ஞாயிற்றுக்கிழமை யன்று காலை 9 மணியிலிருந்து மதியம் 2 மணி வரை நடந்தது	67–70
	(g) நிகழ்ச்சி எண் 7—பெரியகுப்பம் கிராமத்தில் 14–5–1973 திங்கட்கிழமையன்று காலை 9 மணியிலிருந்து காலை 10 மணி வரை நடந்தது	70–74
	(h) நிகழ்ச்சி எண் 8:—11–5–1973 நாளிலிருந்து 15–5–1973 வரை காவலரின் சித்திரவதை	74–75
	(i) நிகழ்ச்சி எண் 9—புதன்கிழமையன்று நடந்தது ..	75–77
XVII	முடிவு செய்யப்படுவதற்கான பொருள்கள்	77–81
XVIII	வீடுகள் சூறையாடப்பட்டமையும், வீட்டுச் சாமான்கள் முதலியவற்றிற்குச் சேதம் விளைவித்தமையும்	81
XIX	திரு சி. ஆறுமுகம், எம்.எல்.ஏ.க்கு எதிரான லஞ்சக் குற்றச்சாட்டு	81–82
XX	எனது தீர்ப்புகள்	82
XXI	என் சிருத்துக்கள்—	
	(1) கலவரம் நிகழ்ந்த இடங்களுக்கு நிர்வாக உயர் அதிகாரிகள் உடனடியாகச் சென்று பார்க்க வேண்டியதன் அவசியம்	82–83
	(2) கிராம மணியக்காரரின் பங்கு	83
XXII	பரிவுரைகள்:—	
	(1) மீனவர் குப்பங்களுக்குச் செல்வதற்கான வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம்	83–84
	(2) குற்றவியல் நடைமுறை சட்டக் கோர்வையின்கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகள்	84
	(3) புறக்காவல் நிலையங்கள் நிறுவுவதற்கான அவசியம்.	84
XXIII.	நன்றி நவிலல்	84–85

இணைப்புகள்.

இணைப்பு I.	விசாரணை ஆணைக் குழுவை நியமித்து சென்னை-9, தலைமைச் செயலகம், பொது (ஜெனரல்-D) துறையின் அரசுத் துணைச் செயலாளரிட மிருந்து பெறப்பட்ட 2–6–1973 நாளிட்ட 1543ஆம் அரசாணையின் நகல்.	86–87
இணைப்பு I. (a)	1973 ஆகஸ்டு 15-ம் நாள்வரை கால வறையறைக்கு அனுமதி வழங்கி, சென்னை-9, தலைமைச் செயலகம் பொது (ஜெனரல்-A) துறை அரசு சிறப்புக் கூட்டுச் செயலாளரிடமிருந்து வந்த பொது (ஜெனரல்-A) துறையின் 4–7–1973ஆம் நாளிட்ட 1821ஆம் எண் அரசாணையின் நகல்.	87–88
இணைப்பு I. (b)	1973 அக்டோபர் 15-ம் நாள் வரை காலவரம்பை நீட்டித்து சென்னை-9, தமிழக அரசு, தலைமைச் செயலகம், அரசுத் தலைமைச் செயலாளரிடமிருந்து வந்த பொதுத் (ஜெனரல்-A) துறையின் 22–8–1973ஆம் நாளிட்ட 2271ஆம் எண் அரசாணையின் நகல்.	88

தொடர் எண்.	பொருள்.	பக்கம் எண்.
(1)	(2)	(3)
	இணைப்புகள்—தொடர்ச்சி.	
இணைப்பு I (c)	1973 நவம்பர் 30-ஆம் நாள் வரை காலவரம்பை நீட்டித்து, பொது (ஜெனரல்-A) துறையிட மிருந்து 27–10–1973 அன்று பிறப்பிக்கப்பட்ட 2826 ஆம் எண் அரசாணையின் நகல்.	89
இணைப்பு I (d)	1973 டிசம்பர் 25-ம் நாள் வரை காலவரம்பை நீட்டித்து பொது (ஜெனரல்-A) துறையிலிருந்து 5–12–1973 அன்று பிறப்பிக்கப்பட்ட 3187 ஆம் எண் அரசாணையின் நகல்.	89–90
இணைப்பு II.	சென்னை வடக்கு சரகம் காவல் துறை டெபுடி. இன்ஸ்பெக்டர்-ஜெனரல் 30–5–1973 அன்று வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பின் நகல்.	90–93
இணைப்பு II (a)	சென்னை காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் தெரிவித்த 31–5–1973 ஆம் நாளிட்ட பத்திரிகைச் செய்தியின் நகல்.	93–94
இணைப்பு III.	பெரியகுப்பம் சுற்றுப்புறம் ஆகியவற்றைக் காட்டும் தோராய வரைபடம்.	95–96
இணைப்பு IV.	திரு கே. வி. பாண்டுரங்கன் 11–5–1973 ஆம் நாளிட்ட குற்ற எண் 80/73-ல் கொடுத்த புகாரின் நகல்.	97
இணைப்பு V	தனி நபர் ஆணைக் குழுவினுல் வகுக்கப்பட்ட விதி முறைகளின் நகல்.	97–100
இணைப்பு VI	விசாரணை ஆணைக் குழு பெரியகுப்பம் கிராமத்திற் குச் சென்று பார்த்து குறித்த 28–6–1973 நாளிட்ட குறிப்பின் நகல்.	100–102
இணைப்பு VI(a)	விசாரணை ஆணைக்குழு 28–6–1973 அன்று பார்வை யிட்ட குடிசைகளையும், ஏனைய இடங்களையும் காட்டும் வரைபடம்.	103–105
இணைப்பு VII	நிர்வாகம் சார்பாக அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் விவரங்கள்.	106–108
இணைப்பு VII(a)	அவிக்குப்பம் மக்கள் சார்பாக அழைக்கப்பட்ட சாட்சிகளின் விவரங்கள்.	109
இணைப்பு VIII	நிர்வாகத் தரப்பில் குறிக்கப்பட்ட சான்ருவணங்கள்.	109–113
இணைப்பு IX	செய்யூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட 80/73 ஆம் எண் குற்ற வழக்கில் பயன்படுத்திய தாகக் கூறப்பட்டுள்ள ஆயுதங்கள் பற்றிய விவரச் சுருக்கம்.	113–114
இணைப்பு X	பெரியகுப்பம் கிராமத்தினர் சார்பில் அழைக்கப் பட்டு விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் விவரங்கள்.	114–118
இணைப்பு XI	விசாரணைக் குழுவின் முன் பொதுமக்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்ருவணங்களின் பட்டி யல்.	118–121

தொடர் எண்.	பொருள்.	பக்கம் எண்.
(1)	(2)	(3)

இணைப்புகள்—தொடர்ச்சி.

இணைப்பு XII .. பொது (ஜெனரல்) துறையின் 2–6–1973ஆம் நாளிட்ட 1543ஆம் எண் அரசாணையின்கீழ் அமைக்கப்பட்ட தனி நபர் குழுவிற்கு எழுதப்பட்ட பெரியகுப்பம் மக்களின் சார்பில் அவர்களது வழக்குரைஞரின் மூலமாக திருமதி ரமணிபாயால் 14–7–1973 அன்று தரப்பட்ட இடைக்கால மனுவின் நகல் 122–123

இணைப்பு XII(a) பொது (ஜெனரல்-D) துறையின் 2–6–1973ஆம் நாளிட்ட 1543ஆம் எண் அரசாணையின் கீழ் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் 5/73ஆம் எண்ணுள்ள நடவடிக்கைக் குறிப்பில் பிறப்பிக்கப் பட்ட ஆணைகளின் நகல் 123-125

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பெரியகுப்பம் கிராமத்தில் 1–5–1973-லிருந்து 16–5–1973 வரை நிகழ்ந்த நிகழ்ச்சிகளும், காவலர் அட்டூழியங்கள் செய்ததாகக் கூறப்பட்ட புகார்களைப்பற்றியும் திரு எம். ஜி. ராஜாராம், ஐ.ஏ.எஸ்., முதல் உறுப்பினர் (வருவாய்த் துறை வாரியம், சென்னை) அவர்கள் அளித்த விசாரணை அறிக்கை.

I. தோற்றுவாய்.

(1) ஆணைக் குழு அமைத்தல்.—(a) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தைச் சேர்ந்த பெரிய குப்பம் கிராமத்தில் 11–5–1973-லிருந்து 16–5–1973 வரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் குறித்தும், அதிலும் குறிப்பாக, செங்கற்பட்டு மாவட்டம், செய்யூர் காவல் நிலையத்தின் 80/73 ஆம் எண் குற்றம் சம்பந்தப்பட்ட வழக்கின் விசாரணையின்போது காவலர் அட்டூழியங்கள் செய்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டு பற்றியும் விசாரணை செய்வதற்கென்று தனி நபர் ஆணைக் குழுவாக, பொதுத் (ஜெனரல்-டி.) துறை, 2–6–1973 நாளிட்ட 1543 ஆம் எண் ஆணையில் உள்ளபடி தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் என்னை நியமித்தார். (இணைப்பு 1-க் காண்க.) இந்த நியமனம், 2–6–1973 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ், சிறப்பு வெளியீடு, II-ம் பாகம், 1-வது பிரிவில் வெளியிடப்பட்டது. இதே அரசாணையில், 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின் 5-வது பிரிவைச் சேர்ந்த (3) முதல் (5) வரையிலான உட்பிரிவுகளின் விதித் துறைகள் யாவும் இந்த விசாரணை ஆணைக் குழுவுக்கும் பொருந்துவதாகும் என்று அவர்கள் கட்டளையிட்டுள்ளார்.

(b) விசாரணை ஆணைக் குழுவை நியமித்து வெளியிட்டுள்ள இந்த அரசாணையில், கீழ்க்காணும் அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது :—

"கடலூர் கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிற்றரசாகிய அலிக்குப்பம் கிராமத்தில் தன்சிங் என்பவருக்கும், பாண்டுரங்கன் என்பவருக்கும் தனிப்பட்ட சச்சரவுகள் இருந்து வந்தன, 11–5–1973 நாள் வாக்கில், அலிக்குப்பத்திலிருந்து அருகிலுள்ள மற்றொரு சிற்றரசாகிய பெரியகுப்பத்திற்குக் குடிபெயர்ந்த தன்சிங்கும் அவரது குடும்பமும், அலிக்குப்பம் கிராமத்திற்குச் சென்று அங்கிருந்த மீனவர்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. வழக்கு ஒன்று, பல்வேறு குற்றப் பிரிவுகளின்கீழ் 80/73-ம் எண் குற்றமாகச் செய்யூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 11–5–1973-ல் காவல் துறை இன்ஸ்பெக்டராலும், 12–5–1973-லும் அதற்குப் பிந்திய நாட்களிலும் செங்கற்பட்டு, காவல் துறை டெபுடி சூப்பிரண்டாலும் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவரையில் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். புலன் விசாரணையின் போது காவலர்கள் அட்டூழியங்கள் செய்தனர் என்று குறிப்பாகப் பெண்களிடமிருந்து மூறையீடுகள் வரப் பெற்றுள்ளன. இது பற்றி 31–5–1973-ல் காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் வெளியிட்ட பத்திரிகைச் செய்தி, குறிப்பும் அவர்களுக்கு மன நிறைவு அளிக்க வில்லை. அங்கு நடந்துள்ளதாகச் சொல்லப்படுகின்ற விவரங்கள் பத்திரிகைகளில் வெளியாயின. எனவே, செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பெரியகுப்பம் கிராமத்தில் 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் நாள் முதல் 16 ஆம் நாள் வரை நிகழ்ந்த நிகழ்ச்சிகள் குறித்தும், குறிப்பாக காவலர் செய்த அட்டூழியங்கள் குறித்த குற்றச்சாட்டுகள் பற்றியும் விசாரணை நடத்துவதென்று அரசு முடிவு செய்துள்ளது."

(2) ஆணைக் குழு அறிக்கையை பணித்தனுப்புவதற்குரிய கால அளவு நீட்டிக்கப்படுதல்.—இந்த ஆணைக்குழு, பல்வேறு காரணங்களை முன்னிட்டு, விசாரணைகளை முடிக்க முடியாததால், அறிக்கையை பணித்தனுப்புவதற்குரிய கால அளவு நீட்டிக்குமாறு கேட்டு, கீழ்க்காணும் அரசாணைகள் ஒவ்வொன்றுக்கும் எதிராகக் குறிப்பிட்டுள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது:—

அரசாணை எண்ணும் நாளும்.	கால நீட்டிப்பு அனுமதித்துள்ள நாள்.
(a) பொது (ஜெனரல்-A) துறை, 1973 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4ஆம் நாளிட்ட 1821 ஆம் எண் அரசாணை.	1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15 ஆம் நாள் வரை.

அரசாணை எண்ணும் நாளும்.	கால நீட்டிப்பு அனுமதித்துள்ள நாள்.
(b) பொது (ஜெனரல்-A) துறை, 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 22ஆம் நாளிட்ட 2271ஆம் எண் அரசாணை.	1973ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாள் வரை.
(c) பொது (ஜெனரல்-A) துறை, 1973 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27ஆம் நாளிட்ட 2826ஆம் எண் அரசாணை.	1973 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை.
(d) பொது (ஜெனரல்-A) துறை, 1973 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5-ம் நாளிட்ட 3187ஆம் எண் அரசாணை.	1973ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25ஆம் நாள் வரை.

இந்த அரசாணைகளின் படிகள் முறையே I (a) முதல் I (d) வரையிலான இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

II. பிண்ணணி.

(1) விசாரணை ஆணைக் குழுவை நியமித்திட அரசு முடிவு எடுப்பதற்கு வழி கோலிய சூழ்நிலைகளைக் சுருதிப் பார்க்கும் பொருட்டு, பெரியகுப்பம் நிகழ்ச்சிகள் உருவெடுப்பதற்குப் மீண்ணணியாய் அமைந்த விவரங்களைச் சுருக்கமாகக் கூறுவது சாலவும் பொருந்துடையதாகும்.

(2) ஏனைய தமிழ் நாளிதழ்களிடையே, 1973ஆம் ஆண்டு மே திங்கள் 30-ம் நாளிட்ட ''நவசக்தி'' நாளிதழிலும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 29ஆம் நாளிட்ட ''அலை ஓசை'' நாளிதழிலும், இந்த நிகழ்ச்சிகளோடொட்டி திருமதி ரமணிபாய் பற்றிய சில செய்திக் குறிப்புகள் வெளியிடப்பட்டன. நாளிதழ்களில் வெளியான செய்தியின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

''மீனவர்களையும் அரிசனங்களையும் கொண்ட காங்கிரஸ் அனுதாபிகள் நிறைந்ததொரு கிராமத்தில், காவலரும், தி.மு.க. குண்டர்களும் பட்டப் பகலில் நுழைந்து, வீடுகளில் புகுந்து, பெண்களை அம்மணமாக்கிச் சுடு மணலில் அவர்களை உட்காரச் செய்து அட்டூழியங்கள் செய்தனர். இது 1973ஆம் ஆண்டு மே திங்கள் 30ஆம் நாளுக்குச் சுமார் இரு வாரங்களுக்கு முன் நிகழ்ந்தது. இவை வங்காள தேசத்தில் யாஹ்யாகான் செய்த அட்டூழியங்களையும் மிஞ்சி விட்டது என்றும், இவற்றை எதிர்த்து ஆட்சியாளர்கள் எந்த விதமான நடவடிக்கையையும் எடுத்துக் கொள்வதற்கான நாட்டத்தையும் இந்த நிகழ்ச்சிகள் பெறவில்லை என்றும் கூறப்பட்டது. பத்திரிகைச் செய்தி மேலும் கூறுவதாவது: பெரிய குப்பம் பக்கத்தில் அமைந்துள்ள அலிக்குப்பம் கிராமத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும், மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்பின் பிரதிநிதியுமாகிய சீதாராமன் என்பவருக்கு மீனளத் துறையால் 1972-ல் விசைப் படகு ஒன்று ஒதுக்கப்பட்டது. இவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்றும் இவரது குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிகிறது. விசைப் படகு சீதாராமனுக்குக் கிடைக்கின்ற காரணத்தைக் கொண்டு, தி.மு.க.வினரில் சிலர், கோவில் நிதிகளுக்காக ரூ. 5,000 கொடுக்குமாறு அவரைக் கேட்டிட, அதற்கு அவர் மறுத்துவிட்டார். இதனால் சினமுற்று, தி.மு.க. ஆட்கள், சீதாராமனையும் அவரது சகோதரர் தன்கிங்கையும் அடித்தார்கள். சீதாராமன் செய்யூர் காவல் நிலையத்தில் புகார் ஒன்று தொடுத்தார். இருப்பினும், தி.மு.க. எம்.எல்.ஏ. ஒருவர் சீதாராமனை அச்சுறுத்தி, காவலரிடம் கொடுத்த புகாரைத் திரும்ப பெறச் செய்தார். மீண்டும் ஏப்ரலில், அலிக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த தி.மு.க. குண்டர்கள் சீதாராமன் குடும்பத்தாரை அடித்தார்கள். காவலருக்குப் புகார் கொடுத்த போதிலும், நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. காரணம் காவலர்களுக்குத் தான் தெரியும். இதற்கிடையில், தி.மு.க. ஆட்களின் நடவடிக்கை காரணமாகப் பயந்து, சீதாராமன் பெரியகுப்பம் கிராமத்திற்குச் சென்றார். மீண்டும் மே திங்களில், அலிக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த தி.மு.க. ஆட்கள் சீதாராமன் குடும்பத்தாரை அடித்து அலிக்குப்பம் கிராமத்திலிருந்து அவர்களை பெரியகுப்பம் கிராமத்திற்கு விரட்டினார்கள். பெரிய குப்பம் கிராமத்து மக்கள் சீதாராமன் குடும்பத்திற்குப் பாதுகாப்பாக இருந்தனர்.

சீதாராமன் குடும்பத்தாருக்குப் பாதுகாப்பாக பெரியகுப்பம் கிராமத்து மக்கள் வருவதைக் கண்டு கோபமுற்று மே திங்கள் 11ஆம் நாளன்று, அலிக்குப்பம் தி.மு.க. ஆட்கள் தி.மு.க. எம்.எல்.ஏவைச் சென்று பார்த்து, அவருடனும். காவலர்களுடனும் அன்றிரவு 1-00 மணிக்கு பெரியகுப்பத்திற்குச் சென்றார்கள். காவலர்கள் சாதாரண உடையில் இருந்தனர். பெரியகுப்பத்து மக்கள் அவர்கள் தங்களைத் தாக்க வருவதாகக் கருதி அவர்கள் உள்ளே வருவதைத் தடுத்தனர். அடுத்த நாள் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாளில் காவல் துறை மாவட்ட சூப்பிரண்டு தலைமையில், படைக்கலம் தாங்கிய ஏராளமான சிறப்புக் காவல் படையினர் தி.மு.க. ஆட்களுடன் பெரிய குப்பம் கிராமத்திற்குச் சென்றார்கள். ஆயுதம் தாங்கிய காவல் படையினர் கிராமத்தை நெருங்கி வருவதைப் பார்த்ததும், ஆண்கள் பீதியடைந்து, பெண்களையும் குழந்தைகளையும் விட்டு விட்டு ஓடிவிட்டார்கள். காவலரும், தி.மு.க. ஆட்களும், வீடு வீடாக உள்ளே நுழைந்து பானை, தட்டுமுட்டுச் சாமான்கள் அனைத்தையும் தெருவில் தூக்கி எறிந்து அவற்றை அழித்தார்கள். அவர்கள் பெட்டிகளின் பூட்டை உடைத்து திறந்து அவற்றில் இருந்த பொருட்கள் எல்லாம் எடுத்துக்கொண்டார்கள். பாத்திரங்கள், துணி மணிகள் யாவும் வெளியே எடுக்கப்பட்டு காவல் துறை அதிகாரியின் முன்னிலையில் வைக்கப்பட்டன. பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு, அடிக்கப்பட்டு, தெருக்க களில் நடந்து செல்லுமாறு செய்யப்பட்டனர், இவை யாவும் பட்டப்பகலிலேயே நடைபெற்றன. நடுப்பகல் 12 மணியிலிருந்து பெண்கள் அம்மணமாகச் சுடு மணலில் உட்காருமாறு செய்யப்பட்டதனால், அவர்களுக்கு அனல் கட்டிகள் உண்டாயின. 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13-ம், 14-ம் நாட்களிலும், காவலரது அட்டூழியங்கள் தொடர்ந்து நடைபெற்றன. இந்த இரக்கமற்ற கொடியவர்களால் பெண்கள் செலும் கற்பழிக்கப்பட்டார்கள் என்று தெரிகிறது. கிராமத்தினரின் கால்நடைகள் வெட்டப்பட்டு கடலில் தூக்கி எறியப்பட்டன. சவுக்கு நாற்றுகள் அழிக்கப்பட்டன. கட்டுமரங்களும், மீன் பிடிக் சாதனங்களும் அழிக்கப்பட்டு, கடலில் எறியப்பட்டன. வீடுகளிலிருந்து குறையாடிய அரிசி, கோழிக் குஞ்சுகளைச் சமைத்து இவர்கள் சாப்பிட்டார்கள். இந்த எல்லா நாட் களிலும் பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு கிராமத்திலிருந்து பாலம் வரை காவல் படையினரில் ஒரு பிரிவினரால் விரட்டப்பட்டு, பாலத்திலிருந்து கிராமம் வரை மற்றொரு பிரிவினரால் விரட்டியடிக்கப்பட்டனர். அடையின்றி நிர்வாண கோலத்தில் இருந்ததாலும், அவர்கள் பலத்தகாயப்படுத்தப்பட்டதாலும் அதைப் பொறுக்க முடியாமல் மானத்திற்கு அஞ்சி, பெண்களில் சிலர் கடலில் மூழ்கி இறக்க முற்பட்டனர். சின்ன குப்பத்து மக்கள் இவர்கள் உடுக்க உடை கொடுத்து இவர்களைக் காப்பாற்றினர். கிராமதிரமணிபாய்ம், வக்கீல் கணேசனும், மற்றவர்களும் பெரிய குப்பம் கிராமத்திற்குச் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறினர். இவர்கள் சித்தாமூர், செய்யூர் காவல் நிலையங்களையும், மதுராந்தகம் துணைச் சிறையையும் சென்று பார்த்தார்கள். மீனவர்கள் நிறைந்த பெரிய குப்பத்து மக்களும், அங்குள்ள அரிசனங்களும் நிறுவன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தான் காவலர் தாக்குதலுக்கு இலக்கானவர்கள். இதில் கவலையிட்டு, அட்டூழியங்கள் நடக்கிய எல்லாரையும் கைது செய்யுமாறு கட்டளையிட்டு, அவர்கள் மீது மேற் கொண்டும் நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிட வேண்டுமென்று முதலமைச்சரை திருமதி ரமணிபாய் கேட்டுக்கொண்டார்.

(3) பெரிகுப்பத்திலிருந்து வந்த பெண்களை பத்திரிகை நிருபர்கள் சென்னையில் பேட்டி கண்டதாகவும், அவர்களிடம் பெண்கள் நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறியதாகவும், காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலையும் அவர்கள் சந்தித்த தாகவும் சில செய்திக் குறிப்புகள் நாளிதழ்களில் வெளியாயின. காவலர்கள் அடித்ததாகச் சொல்லப்படும் பெண்களின் புகைப்படங்கள் சிலவும் பத்திரிகை களில் வெளிவந்தன.

(4) மேலே கூறியவாறு காவலர் மீது திருமதி ரமணிபாய் தெரிவித்த குற்றச் சாட்டுகளுக்கு விவரமாகப் பதிலளித்து வடக்கு சரகம், காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் 1973 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் தேதி அன்று பத்திரிகையில் அறிக்கை ஒன்று வெளியிட்டார். இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்து 1973 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் நாளில் இன்ஸ்பெக்டர்-ஜெனரலும் பத்திரிகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். இந்த அறிக்கைகளின் படிகள் இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன. (முறையே II, II-A இணைப்பு களைக் காண்க.)

(5) 1973 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் நாளில் திருமதி ரமணிபாய் தலைமையில் சில பெண்கள் ஊர்வலமாகச் சென்று, நிகழ்ச்சிகள் பற்றி நீதி விசாரணை நடத்துமாறு கோரி முதலமைச்சரிடம் மகஜர் ஒன்று கொடுக்க முயற்சி செய்தனர். இதுவே இந்த விவகாரம் முழுவதற்கும் அடிப்படையாக அமைகிறது. இதன் காரணமாக அரசு விசாரணை ஆணைக் குழுவை நியமித்தது.

III. கிராமத்தின் விவரம்.

(1) பெரியகுப்பம் கிராமம், மதுராந்தகம் ரயில் நிலையத்திலிருந்து தென் கிழக்கில் சுமார் 17 மைல் தொலைவில் அமைந்துள்ளது. கடலூர் ரெவின்யூ வட்டத்தையும் ஊராட்சியையும் சேர்ந்த சிற்றூர்களில் இதுவும் ஒன்றாகும். இக்கிராமம், கிழக்கில் கடலாலும், தெற்கில் அலிக்குப்பம் சிற்றூர் மேற்கில் பக்கிங்ஹாம் கால்வாய் வடக்கில் வடவண்டைக்குப்பம் என்கிற சின்னக்குப்பம் ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. விசாரணையில் இடம் பெறும் முக்கியச் சிற்றூர்கள் அலிக்குப்பம், பெரியகுப்பம், சின்னக்குப்பம் என்று குறிக்கப்படுகின்றன. இந்த சிற்றூர்கள் ஒவ்வொன்றிலும் உள்ள மக்கட்தொகை, வீடுகளின் மொத்த எண்ணிக்கை பற்றிய விவரங்கள், 1971 மக்கட்தொகைக் கணக்கின்படி கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

சிற்றூர் பெயர்.	வீடுகளின் எண்ணிக்கை.	மக்கட் தொகை. மொத்தம்	ஆண்கள்.	பெண்கள்.
1. அலிக்குப்பம் (கடலூரைச் சேர்ந்த V-ம் எண் வளர்ச்சி வட்டாரம்).	82	217	201	418
2. பெரியகுப்பம் (கடலூர் VI-ம் எண் வளர்ச்சி வட்டாரத்தின் 54 முதல் 141 எண் வரை வீடுகள்).	88	238	217	455
3. வடவண்டைகுப்பம் என்கிற சின்ன குப்பம் (கடலூர் VI-ம் எண் வளர்ச்சி வட்டாரத்தின் 1 முதல் 53 வரை எண்ணுள்ள வீடுகள்).	53	132	126	258

(2) பெரியகுப்பம், சின்னகுப்பம், அலிக்குப்பம் கிராமத்து மக்கள் முக்கியமாக மீனவர் வகுப்பைச் சேர்ந்தவர்களாவர். கடலூர் முக்கிய நிராமமாகும். தங்களுக்குத் தேவைப்பட்ட பொருள்களை வாங்கிக்கொள்ளவும், மீன்களை விற்பனை செய்வதற்கும் இந்த மக்களுக்கு இது ஒரு அங்காடிப் பகுதியாக விளங்குகிறது. கடலூர் செல்ல வேண்டுமாயின், P.W.D. லாக் குறுக்கே நடைபாதையாகவே பக்கிங்ஹாம் கால்வாயைப் பொதுவாகக் கடந்து போக வேண்டும். அவர்களில் சிலருக்கு கால்வாயின் மற்றோரிடத்தில் ஆழமற்ற நீர்நிலையில் இறங்கி நடந்து செல்வதும் பொதுவாக இருந்து வரும் பழக்கமாகும். கடலூரிலிருந்து, பல்வேறு இடங்களுக்குச் செல்ல பேருந்துகளும் உள்ளன. கடலூர் ஊராட்சி, மதுராந்தகம் வட்டத்தில் பவுஞ்சூரில் உள்ள லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ளது. கிராமங்களும், சிற்றூர்களும் அமைந்துள்ள அமைப்பைக் காட்டும் தரைப்பட வரைபடம் ஒன்று III-ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

IV. 80/73-ம் எண் குற்றம் என்பது என்ன

(1) பெரியகுப்பம் நிகழ்ச்சிகள் தொடங்கியதற்கான மூல காரணம் செய்யூர் காவல் நிலையத்தின் 80/73-ம் எண் குற்றத்தில் உள்ளது. எனவே, இந்த குற்றம் பற்றிய விவரங்களைச் சுருக்கமாகக் கொடுப்பது பொருத்தமாகும்.

(2) செய்யூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த 80/73-ம் எண் குற்றத்தில் முதல் தகவலறிக்கை, 1973 ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் நாள் பிற்பகல் 2–15 மணிக்கு அலிக்குப்பம் வெங்கடசெட்டி மகன் கே. வி. பாண்டுரங்கன் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்டது. புகாரின் மூலப் படிவம், கே. வி. பாண்டுரங்கன் கையொப்பமிட்டுக் கொடுத்தவாறு அப்படியே தமிழில் எடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு IV ஐக் காண்க.) 80/73-ம் எண் உள்ள இந்தக் குற்றம், இ.பி.கோ. 149, 148, 147, 397, 395, 325, 326, 324, 323, 448, 379, 402, 427, 34——பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

(3) பெரியகுப்பம் கிராமத்திற்குக் காவலர் சென்றிருந்ததற்கான காரணம் இந்தக் குற்றத்தைப் பற்றி புலன் விசாரணை செய்வதற்காகும். மேற்சொன்ன புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கையில்தான் இந்த அட்டூழியங்கள் இழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

V. விசாரணைக்கு முற்பட்ட செயல்.

(1) நிகழ்ச்சிப் பகுதியைச் சென்று பார்த்தல்.—(a) விசாரணை ஆணைக் குழுவாக என்னை நியமித்தது குறித்து 1973ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2ஆம் நாள் (மாலை) எனக்குத் தெரிவித்ததும் உடனடியாக, அந்த இடம், மக்கள், விவகாரம் பற்றிய கருத்தறியும் பொருட்டு அடுத்த நாளன்றே அந்தப் பகுதிக்குச் செல்வதென்று முடிவு செய்தேன். இதன்படி, 1973ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3ஆம் நாள் நான், முதலில் மதுராந்தகத்திற்குச் சென்று, (அப்போது கலெக்டர் பொறுப்பிலிருந்த) செங்கற்பட்டு மாவட்ட வருவாய் அதிகாரி, செங்கற்பட்டு சப்-கலெக்டர், செங்கற்பட்டு (மேற்கு) மாவட்டம் காவல் துறை சூப்பிரண்டு, செங்கற்பட்டு காவல் துறை டெபுடி சூப்பிரண்டு, மதுராந்தகம் தாசில்தார் ஆகியோரிடம் தொடக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தினேன்.

(b) இதன் பின்னர், நான், லத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அமைந் துள்ள பவுஞ்சூருக்குச் சென்று, ஊராட்சி ஒன்றிய அலுவலகம் பெரிய குப்பத் திற்கு அருகாமையில் இருப்பதன் காரணமாக அங்கேயே விசாரணை நடத்துவது பற்றிய வாய்ப்புகளைப் பற்றி ஊராட்சி ஒன்றியத் தலைவருடனும், துணைத் தலைவருடனும் அங்கு இருந்த பொதுமக்களில் சிலரிடமும் பேச்சு வார்த்தை நடத்தினேன். பின்னர், நான் கடலூர் கிராமத்திற்கும், பக்கிங்ஹாம் கால்வாய் குறுக்கே அமைந்துள்ள பொதுப்பணித் துறை லாக் சைட்டிற்கும் சென்று பார்த் தேன். நான் அங்கு இருந்தபோது, சின்னகுப்பத்தில் அப்போது தங்கியிருந்த தாகச் சொல்லப்படும் பெண்கள் லாக்சைட்டில் என்னைச் சந்தித்துப் பேச ஆவலாய் உள்ளனர் என்றும், அவர்கள் ஏற்கனவே வழியில் வந்து கொண்டிருக்கிறனர் என்றும் எனக்குத் தகவல் கிடைத்தது. எனவே, அங்கேயே அவர்களுக்காகக் காத்திருப்பது என்று முடிவு செய்தேன். சுமார் அரை மணி நேரம் கடந்த பிறகு, குழந்தைகள் சிலர் உட்பட சுமார் 20 முதல் 25 பெண்கள் வந்தனர். காவலர் செய்த அட்டூழியங்கள், பெரியகுப்பத்தில் குடிசைகளுக்கு உண்டாக்கிய சேதங்கள், பெண்களிடம் காவலர்கள் தகாத முறையில் நடந்து கொண்டது ஆகியவை பற்றி அவர்கள் என்னிடம் எடுத்துரைத்தார்கள். அவர்கள் எவ்வித அச்சம் இல்லாமல் சாட்சியம் அளிக்கும் வகையில் துணைபுரிய வேண்டும் என்றும், ஆணைக்குழு முன் சாட்சியம் பற்றிய சூச்சமிக்க சில விவரங்களைத் தவிமையில் தாங்கள் தெரிவிக்க விரும்புவதாகவும் தெரிவித்தனர். பவுஞ்சூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஏற்ற இடமாக இருக்குமா என்று அவர்களது சம்மதத்தைக் கேட்டபோது அவர்களும் சரி என்று பதிலளித்தனர். அவர்களது வேண்டு கோளைக் குறித்துக்கொண்டு நான் சென்னைக்குத் திரும்பினேன்.

(2) 1972ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழு விதிகளைக் (தமிழ்நாடு) சேர்ந்த 7-வது விதியின் கீழ் அறிவிப்புகள் வெளியிடுதல்.—(a) பெரியகுப்பத்தில் நிகழ்ந்த மேற்சொன்ன நிகழ்ச்சிகள் பற்றி நன்கு தெரிந்தும் அறிந்துமுள்ளவர்களும், ஆணைக் குழு முன் சாட்சியமளிக்கவும் விருப்பமுடையவர்களுமாகிய அனைவரும், தங்களுக் குத் தெரிந்தமட்டிலும் நிகழ்ச்சிகள் பற்றிய உண்மைகள் யாவும் எடுத்துக் கூறப் பட்ட வாக்குமூலம் ஒன்றை ஆணைக்குழுவுக்கு கொடுக்குமாறு கேட்டும் 1973ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் நாள் அன்றே அல்லது அந்நாளுக்கு முன்னதாகவோ அத்தகைய எல்லா வாக்குமூலங்களும், அவற்றில் சொல்லப்பட்டவை யாவும் உண்மையென்று, உறுதி கூறி அதற்கு ஆதரவாக அவர்கள் கொடுக்கும் உறுதி மொழிப் பத்திரத்துடன் இணைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டும், விசாரணை ஆணைக்குழு விதிகளைச் சேர்ந்த 7-வது விதியின்கீழ் அறிவிப்பு ஒன்றை 1973ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் நாளில் நான் வெளியிட்டேன்.

(b) தமிழிலும் ஆங்கிலத்திலும் இந்த அறிவிப்புகள் பல்வேறு தமிழ் ஆங்கில நாளிதழ்களிலும், வெளியீடுகளும், கிராமங்களுக்கும் சம்பந்தப்பட்ட சிற்றூர்களுக் கும் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த அறிவிப்பு இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், மெயில், முரசொலி, தினமணி, தினத்தந்தி நாளிதழ்களிலும், கிராமங்களில்

தமுக்கு அடித்தும், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஊராட்சி அலுவலகங்கள், வட்ட அலுவலகம் முதலியவற்றின் அறிவிப்புப் பலகைகளில் ஒட்டப்பட்டும் வெளியிடப்பட்டது.

(c) காவலர்கள் விசாரணை செய்ய விரும்புகிற சாட்சிகளின் பட்டியல் ஒன்றையும், அவர்கள் எடுத்துக் கூற வேண்டிய விஷயங்கள் அடங்கிய சுருக்கமான வாக்குமூலத்துடனும் ஆணைக்குழுவிடம் கொடுக்குமாறு 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7 ஆம் நாளில் காவல் துறையும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

(d) இந்த அறிவிப்பு உரிய காலத்திற்குள் செய்யப்பட்டபோதிலும், உறுதிப் பத்திரங்களையும், வாக்குமூலங்களையும் தாக்கல் செய்வதற்கான கால வரம்பை நீட்டிக்குமாறு கேட்டு முக்கியமான நபர்களிடமிருந்து சில தந்திகளும் முறையீடுகளும் வரப்பெற்றன. எனவே, 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ஆம் நாள் வரை கால வரம்பை நீட்டித்து மற்றெருரு அறிவிப்பு 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11 ஆம் நாளில் வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பும் மேலே சொல்லிய முறையில் மேற்சொன்ன நாளிதழ்களிலும், சம்பந்தப்பட்ட கிராமங்களிலும் சிற்றூர்களிலும் உரிய வகையில் விளம்பரம் செய்யப்பட்டது.

(3) விசாரணைக்கு இடத்தை முடிவு செய்தல் —(a) விசாரணை நடைபெறும் இடம் சம்பந்தமாக ஆணைக்குழு எவ்வித முடிவும் அல்லது அறிவிப்பு எதுவும் கொடுக்காதபோதிலும், விசாரணை நடத்தும் இடமாக பெரியகுப்பம், பொதுப் பணித்துறை வாக்சேட், கடலூர் நிராமம், மதுராந்தகம், செங்கற்பட்டு, சென்னை போன்ற பல்வேறு இடங்களைக் குறிப்பிட்டு கருத்து தெரிவித்து முறையீடுகளும், தந்திகளும் வந்தன.

(b) இது குறித்து ஒருமித்த முடிவு எடுக்கும் பொருட்டு, செங்கற்பட்டு சப்-கலெக்டர் அலுவலகத்தில் 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் நாள் காலை 11-மணிக்கு பொது விசாரணை நடத்தப்படுமென்று நான் அறிவித்தேன். இது பற்றிய அறிவிப்பு, முறையீடுகள் கொடுத்திருந்த பல்வேறு அரசியல் கட்சி களுக்கும், பொதுவாக பொது மக்களுக்கும் கொடுக்கப்பட்டது.

(c) 1973-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ஆம் நாள் நடைபெற்ற பொது விசாரணையின்போது, 21 அதிகாரிகளும், பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதி கள் உட்பட அரசுச் சார்பற்றவர்களும் வந்திருந்தனர். மேலே குறிப்பிட்டுள்ள வர்கள் இது பற்றிக் கேட்கப்பட்டனர் :—

(i) திரு சி. சுணேசன், செயலாளர், மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி, செங்கற்பட்டு.

(ii) திரு எஸ். சந்தானம், தலைவர், சுதந்திராக் கட்சி, மதுராந்தகம்.

(iii) திரு சி. ஆறுமுகம், எம்.எல்.ஏ.

(iv) திரு வி. கோபால் ரெட்டி, தலைவர், ஊராட்சி ஒன்றியம், லத்தூர்.

(v) திருமதி வி. ரமணிபாய், அமைப்பாளர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, மகளிர் பிரிவு.

(vi) திரு சண்முகம், அ.தி.மு.க., மதுராந்தகம்.

(vii) திரு டி. கே. ஆதிமூலம், அரசு வழக்குரைஞர், செங்கற்பட்டு.

(viii) திரு யு. எஸ். நடராஜன், ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கற்பட்டு.

(ix) திரு எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ்., மாவட்டத் துணை ஆட்சித் தலைவர், செங்கற்பட்டு.

அவர்கள் சொல்லியதைக் கேட்டதன் பிறகு, செங்கற்பட்டு சப்-கலெக்டர் அலுவலகத்தில் விசாரணை நடத்துவதற்கு ஆதரவாக ஒருமித்த கருத்து இருந்ததை அறிந்தேன். இதனை முன்னிட்டு, செங்கற்பட்டு சப்-கலெக்டர் அலு வலகத்தில் விசாரணை நடத்த ஆணைக்குழுவால் முடிவு செய்யப்பட்டது.

(d) இதற்கிணங்க விசாரணை நடைபெறுமிடம் அறிவிக்கப்பட்டது. விசாரணை நடைபெறும் நாட்களும் முடிவு செய்யப்பட்டு, முதலில் 1973-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28ஆம் நாளிலிருந்து ஜூன் திங்கள் 30ஆம் நாள் வரையும், 1973ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 2-ம் நாளிலும் விசாரணை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்புகளும் நாளிதழ்களிலும், கிராமங்களிலும் மேலே விவரித்துள்ள இடங்களிலும் வெளியிடப்பட்டன.

(4) ஆணைக்குழு ஒழுங்குமுறை விதிகளை இயற்றுதல்.—(a) பிறகு, 1952ஆம் ஆண்டு விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின் 8-வது பிரிவின் கீழும், 1972ஆம் ஆண்டு (தமிழ் நாடு) விசாரணை ஆணைக் குழுக்கள் விதிகளைச் சேர்ந்த 14-வது விதியின் கீழும் ஒழுங்கு முறை விதிகளின் தொகுதி ஒன்றைத் தயாரித்து வெளியிட்டேன். (இணைப்பு–V)

(b) இந்த ஆணைக் குழு மேலாளராக, செங்கற்பட்டு மாவட்டம், ரெவின்யூ சார்நிலைப் பணியைச் சேர்ந்த தாசில்தார் பதவிக்குக் குறையாத பதவித் தரமுள்ள அதிகாரியாகிய திரு. பி. திருவேங்கடம், என்பவரையும் நியமித்தேன். விசாரணை காரியமாக, ஆணைக்குழுவின் சார்பில் அழைப்பாணைகள் நீதிமன்றக் கட்டளைகள் பிறப்பிக்க மேலாளருக்கு அதிகாரமளித்து நடவடிக்கைக் குறிப்பும் பிறப்பித்தேன்.

(5) சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் விடுத்தல்.—(a) 1972ஆம் ஆண்டு விசாரணை ஆணைக் குழுக்கள் (தமிழ் நாடு) விதிகளைச் சேர்ந்த 7-வது விதியின்கீழ் விடுத்த அறிவிப்புக் கிணங்க, 1973ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18ஆம் நாளில் 2-ம், 19-ம் நாளில் 9-ம் ஆக 11 பேர்களிடமிருந்து பெரியகுப்பம் கிராமத்து மக்கள் சார்பில் உறுதிமொழிப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

(b) சென்னை, காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் சார்பில் 1973ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15ஆம் நாளில் வடக்குச் சரகம் காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் 36 சாட்சிகளைக் கொண்ட பட்டியல் ஒன்றைத் தாக்கல் செய்தார்.

(c) 1973ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28ஆம் நாளில் விசாரணை ஆணைக் குழு முன் வந்திருக்குமாறு நிர்வாகத்தின் சார்பில் 18 சாட்சிகளுக்கு 1973ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21ம் நாளில் அழைப்பாணைகள் விடுக்கப்பட்டன.

VI. விசாரணைத் தொடக்கம்.

விசாரணையைத் தொடங்கும் முன்பு விசாரணை ஆணைக்குழு பெரிய குப்பத்துக்குச் சென்று பார்த்து வருவது அவசியமென்றும் விசாரணையைப் பகிரங்கமாக நடத்த வேண்டுமென்றும் தெரிவித்து வழக்குரைஞர் திரு. K. V. சங்கரன் மூலமாக திருமதி ரமணி பாய், திரு. கண்ணப்ப செட்டி சார்பில் 1973-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26-ஆம் நாளில் மனு ஒன்று வரப்பெற்றது. விசாரணையைப் பகிரங்கமாக நடத்த வேண்டுமென்று கோரி மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி (நிறுவனம்) செயலாளர் திரு. C. கணேசனிடமிருந்து தந்தியும் மனுவும் வரப் பெற்றது. சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளை மாற்றம் செய்யவேண்டும் என்றும் விசாரணையைத் தனிமையில் நடத்துவதற்கு மறுப்புத் தெரிவித்தும் மதுராந்தகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. அர்ச்சுனன் என்பவரிடமிருந்தும் 1973ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28ஆம் நாளில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

(2) வழக்குரைஞர்கள் அறிமுகம்.—(a) 1973ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28ஆம் நாளில் விசாரணை தொடங்கியதும், கீழ்க்காணும் வழக்குரைஞர்கள் விசாரணையின் போது வந்திருந்து வக்காலத்துகள் தாக்கல் செய்து கீழே ஒவ்வொரு வருக்கும் எதிரில் குறிப்பிட்டபடி தங்களை அறிமுகம் செய்துகொண்டனர்.

(i) திரு K. இராமசாமி, காவல் துறை நிர்வாகத்தின் தனி வழக்குரைஞர்.

(ii) திரு D. லட்சுமண ரெட்டி, அலிக்குப்பம் கிராமத்தினருக்காக வழக்குரைஞர்.

(iii) திரு P. K. ஆதிமூலம், அரசு வழக்குரைஞர், செங்கற்பட்டு நிர்வாகத்தினருக்காக உள்ள வழக்குரைஞர்.

(iv) திரு K. V. சங்கரன், பெரியகுப்பம் பொதுமக்களின் பிரதிநிதிகளாகவுள்ள திருமதி ரமணிபாய், திரு கண்ணப்ப செட்டி ஆகியோருக்காகவுள்ள வழக்குரைஞர்.

(v) திரு சி. கணேசன், பெரியகுப்பம், அலிக்குப்பம், கடலூர் கிராமத் தினருக்கான வழக்குரைஞர்.

(vi) திரு எஸ். சந்தானம், பெரியகுப்பம், அலிக்குப்பம், கடலூர் கிராமத் தினருக்கான வழக்குரைஞர்.

(பின்னர் 1973-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14-ம் நாளில் நடைபெற்ற நடவடிக்கையின்போது வழக்குரைஞர் திரு P. M. சுந்தரம், திருவாளர்கள் ஆறுமுகம், எம். எல். ஏ., சொர்ணம், தலைவர், கடலூர் ஊராட்சி, செய்யூர் பாலகிருஷ்ணன் ஆகியோருக்கான வழக்குரைஞர் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களது சார்பில் வக்காலத்து ஒன்றைத் தாக்கல் செய்தார்.)

(b) பொதுமக்கள் வற்புறுத்திய கீழ்க்காணும் பிரச்சினைகள் 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28-ஆம் நாளில் முதற்கண் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டன.—

(i) காவல்துறை அதிகாரிகளை மாற்றுவது, அல்லது தற்காலிகமாக வேலை நீக்கம் செய்வது அல்லது இவ்விரண்டும்.

(ii) விசாரணை தொடங்கும் முன் பெரியகுப்பம் அதாவது நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடத்தைப் பார்வையிடுதல்.

(iii) விசாரணையைப் பகிரங்கமாக நடத்துதல்.—இந்தக் கருத்துக்களை ஆதரித்தும் எதிர்த்தும் விவாதங்கள் நடைபெற்றன.

(c) மேலே (i) கருத்தைப் பொறுத்தமட்டில் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளை மாற்றவோ, தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யவோ ஆணையிட ஆணைக் குழுவுக்கு அதிகாரமில்லை என்றும் இதுபற்றி அரசு தாம் பொருத்தமெனக் கருதும் நடவடிக்கை எடுக்க ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் நான் சுட்டிக் காட்டினேன்.

(d) (ii) கருத்தைப் பொறுத்த மட்டில் 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாளில் பொதுப் பணித் துறையில் லாக்ஷைட்டில் ஆணைக் குழுவைச் சந்தித்த பெரியகுப்பம் பெண்கள் குறிப்பாகக் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே இந்த விசாரணை துவிமையில் நடைபெற வேண்டுமென்று கூறப்பட்டது என் பதைக் குறிப்பிட்டேன். எனினும், விசாரணை பகிரங்கமாக இருக்க வேண்டு மென்று வலியுறுத்தப்பட்டால் எனக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இருக்காது. ஆனால் ஆணைக் குழு நீதிமன்றக் கூடத்தில் கூட்டத்தை முறைப்படுத்தும் அதிகாரம் பெற்றதாக இருக்கவேண்டும். பத்திரிகையாளர்களும் உண்மையில் நடந்ததை நடந்தவாறே நடவடிக்கைகளை அறிவிக்கவேண்டும். அவர்கள் பரபரப்பான செய்திகளை வெளியிடுவதில் ஈடுபடக்கூடாது அல்லது உண்மைக்கு மாறாக திரித்துக் கூறப்படும் செய்திகளை அல்லது சந்தர்ப்பத்திற்கு முரண்பட்ட செய்திகளை வெளி யிடக்கூடாது.

(e) (iii) கருத்து சம்பந்தமாக பெரியகுப்பம் கிராமம் எப்போது பார்வை யிடுவது என்பதை முடிவு செய்வது ஆணைக் குழுவைப் பொறுத்ததாகும் என்றும் அதன்படி ஆணைக் குழுவுக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் வசதியான நாளை யும் நேரத்தையும் ஆணைக்குழு முடிவு செய்யும் என்றும் நான் நீர்ப்பளித்தேன்.

(3) இந்த முடிவுகளை அறிவித்ததும் நான் விசாரணை செய்யத் தொடங்கி நிர்வாகத்தின் சார்பில் முதல் சாட்சியை அழைக்க இருந்தேன். அப்போது பெரியகுப்பம் கிராமத்தினருக்கான வழக்குரைஞர் திரு கே. வி. சங்கரன், அறிவிப் பில் சொல்லியபடி உறுதிமொழிப் பத்திரங்களையும் வாக்குமூலங்களையும் காவலர் தாக்கல் செய்யவில்லையென்றும் இந்த ஆவணங்கள் தனக்குக் கிடைக்கும் வரையில் தனது வழக்கை எடுத்துக்கொண்டு சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய தன்னால் இயலாது என்றும் கூறி ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு வந்தார். சில நேர விவாதங்களுக்குப் பிறகு, காவலருக்கான தனி வழக்குரைஞர் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டார். அதன்படி, நான் 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள் காலை 11 மணிக்குள் உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்யுமாறு காவலருக்கான வழக்குரைஞருக்குக் கட்டளையிட்டேன்.

(4) அந்நாள் (1973 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28 ஆம் நாள்) மேற் கொண்டும் விசாரணையைத் தொடர்ந்து நடத்த முடியாமையாலும் எனக்கு நேரம் இருந்தமையாலும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களைக் கலந்துகொண்டு அன்று மாலையே பெரிய குப்பம் கிராமத்தைப் பார்வையிடுவது என்று முடிவு செய்தேன்.

(5) அதன்படி ஆணைக்குழுவும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களும் மாலை 4–30 மணி அளவில் பொதுப் பணித் துறை லாக்சைட்டில் கூடி அங்கிருந்து பெரிய குப்பம் பகுதிக்குச் சென்றனர். கீழே கொடுக்கப்பட்டுள்ளவர்கள் வந்திருந்தனர் :—

(i) திரு கே. வி. சங்கரன், பெரியகுப்பம் கிராமத்தினருக்கான வழக்குரைஞர்.

(ii) திரு சி. கணேசன், பெரியகுப்பம், அலிக்குப்பம், கடலூர் கிராமத்தினருக்கான வழக்குரைஞர்.

(iii) திரு எஸ். சந்தானம், பெரியகுப்பம், அலிக்குப்பம், கடலூர் கிராமத்தினருக்கான வழக்குரைஞர்.

(iv) திரு டி. கே. ஆதிமூலம், அரசு வழக்குரைஞர், செங்கற்பட்டு.

(v) திரு டி. லட்சுமண ரெட்டி, அலிக்குப்பம் கிராமத்தினருக்கான வழக்குரைஞர்.

(vi) திருமதி ரமணிபாய், அமைப்பாளர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி (பெண்கள் பிரிவு).

(vii) திரு யு. எஸ். நடராஜன், ஐ.ஏ.எஸ்., செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்.

(viii) திரு பு. சுப்பிரமணியன், மாவட்ட வருவாய் அதிகாரி, செங்கற்பட்டு.

(ix) திரு எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ்., மாவட்டத் துணை ஆட்சித் தலைவர், செங்கற்பட்டு.

(x) திரு எஸ். ராமநாதன், சுரவல்துறை டெபுடி சூப்பிரண்ட், செங்கற்பட்டு.

பெரியகுளம் கிராமத்திற்குச் சென்று, கிணறு, சேதமுற்ற பள்ளிக்கூடம், 13 குடிசைகள், தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்காக சாதாரணமாக கிராமத்தில் ஜாதி பஞ்சாயத்து நடக்கும் இடம் என்று கூறப்படுகிற இடம் ஆகியவற்றை நான் பார்வையிட்டேன். அந்த இடத்திற்கு பெண்களை அழைத்து வந்து சுடுமணலில் நிர்வாணமாக உட்கார வைத்ததாக குற்றம் சாட்டப்பட்டது. அலிக்குப்பம் மக்கள் சேதப்படுத்தியதாக கூறப்படும் மீன்பிடி படகையும், நான் பார்வையிட்டேன். அப்படகு தன்சிங் என்பவருக்குச் சொந்தமானதாகும். படகு கரைக்குக் கொண்டு வரப்பட்டது. பார்வையிட்ட குறிப்புக்களின் நகல் ஒன்றும் ஆணைக்குழு பார்வையிட்ட இடங்களைக் காட்டும் வரைபடம் ஒன்றும் முறையே VI, VI-A இணைப்புக்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

(6) 1973ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29ஆம் நாள் அன்று காவல் துறை சார்பில் வாதாடும் தனி வழக்குரைஞர் அலிக்குப்பம் கிராமத்தினருக்காக வாதாடும் வழக்குரைஞர் ஆகியோர் முறையே 13 பேர்களுக்கும், 2 பேருக்கும் உறுதி மொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்தார். இவற்றின் நகல்கள் பெரிய குப்பம் கிராமத்தினர் வழக்குரைஞரிடம் உள்ளன.

VII. சாட்சிகளை வகைப்படுத்தல்.

(1) நிர்வாகம் சார்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் A-1, A-2, A-3 .....என்று அழைக்கப்படுகின்றனர்.

(2) பொதுமக்கள் சார்பில் விசாரணை செய்யப்படும் சாட்சிகள் P-1, P-2, P-3..... என்று அழைக்கப்படுகின்றனர்.

(3) ஆணைக்குழு சார்பாக சாட்சியங்கள் யாரும் விசாரணை செய்யப்பட வேண்டிய அவசியமில்லை என்று கண்டறியப்பட்டது.

(4) சட்ட விரோதமாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்று தோன்றுகிற நபர்களான P-22, P-23, P-24 ஆகிய சாட்சிகள் 1972ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழு (தமிழ்நாடு) விதிகளின் 10-வது விதியின் கீழ் விசாரணை செய்யப்பட்டனர். இவர்கள் பெரியகுப்பம் மக்கள் சார்பில் சாட்சியங்கள் வழங்காத போதிலும் வசதிக்காக இவர்களுக்கு P வரிசையில் எண்கள் கொடுக்கப் பட்டன.

VIII. நிர்வாகம் சார்பில் சாட்சியங்களைப் பதிவு செய்தல்.

(1) வடக்குச் சரகம், காவல்துறை, டெபுடி இன்ஸ்பெக்டர் 1973-ம் ஆண்டு ஜூன் திங்கள் 12-ம் நாளிட்ட 3521/ஜி73ஆம் எண்ணுள்ள தமது கடிதத்தில் நிர்வாகம் சார்பில் விசாரணை செய்யப்படுவதற்கு 36 சாட்சிகள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். ஆயினும், விசாரணை செய்தபோது காவல்துறை தனி வழக்குரைஞருக்கு விசாரணை செய்வதற்கு இன்னும் கூடுதலாக 3 சாட்சிகள் தேவைப்பட்டது. இவ்வாறாக, சாட்சிகளின் எண்ணிக்கை அலிக்குப்பம் கிராமத்தினருக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் இரண்டு சாட்சிகள் உட்பட 39 பேர் ஆவர். கடைசியில் 15 சாட்சிகள் மட்டுமே விசாரணை செய்யப் பட்டனர். மீதி பேர்களை விசாரணை செய்யவில்லை.

(2) அவர்கள் தாக்கல் செய்த 13 உறுதி மொழிப் பத்திரங்களில் விசாரணையின்போது 3 சான்று ஆவணங்களாகக் (Exhibit A. 11, A. 16, A. 21 காண்க) காட்டப்பட்டன. உறுதி மொழிப் பத்திரங்கள் தாக்கல் செய்த 13 சாட்சிகளுள் 9 பேர் விசாரணை செய்யப்பட்டனர். மீதி பேர் விசாரணை செய்யப்படவில்லை. விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் பட்டியல், அவர்களது உறுதி மொழிப் பத்திரங்கள் கிடைத்த நாள், அவை சான்று ஆவணங்களாக வைக்கப்பட்டனவா அல்லவா என்பவை இணைப்பு VII-ல் கொடுக்கப் பட்டுள்ளன. விசாரணையின்போது நிர்வாகம் சார்பில் காண்பிக்கப்பட்ட சான்று ஆவணங்களின் பட்டியல் இணைப்பு VIII-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(3) அலிக்குப்பம் கிராமத்தினர் சார்பில் இரண்டு உறுதி மொழிப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. அலிக்குப்பம் கிராமத்தினர் வழக்குரைஞர் 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ம் நாளிட்ட தமது குறிப்பாணையில் இவ்விரு சாட்சிகளையும் விசாரணை செய்யாமல் விட்டு விட்டார். அவர் கூறியுள்ள சாட்சிகளின் பட்டியல் இணைப்பு VII(a)-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(4) நிர்வாகம் சார்பில் சாட்சிகளை விசாரணை செய்வது 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ம் நாளன்று தொடங்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது :—

(a) 1973-ம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ம் நாள்—A-1 (முடிவடையவில்லை)*

(b) 1973-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாள்—A1, A-2, A-3.

(c) 1973-ம் ஆண்டு ஜூலை திங்கள் 3-ம் நாள்—A-4, A-5, A-6 (முடிவடையவில்லை).**

(d) 1973-ம் ஆண்டு ஜூலை திங்கள் 4-ம் நாள்—A-7, A-8, A-9, A-10.

(e) 1973-ம் ஆண்டு ஜூலை திங்கள் 7-ம் நாள்—A-11 (முடிவடையவில்லை).**

(f) 1973-ம் ஆண்டு ஜூலை திங்கள் 8-ம் நாள்—A-11 (முடிவடையவில்லை).**

(g) 1973-ம் ஆண்டு ஜூலை திங்கள் 14-ம் நாள்—A-11, A-12, A-13 (முடிவடையவில்லை)**

(h) 1973-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20-ம் நாள்—A-14, A-15.

(i) 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ம் நாள்—A-11, A-13, A-14, A-15.

(j) 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29-ம் நாள்— A-5.

(k) 1973-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13-ம் நாள்—A-12.

** A-5, A-11 முதல் A-15 வரை உள்ள சாட்சிகள் பின்னர் ஒரு நாளில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர்.

(5) 1973-ம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ம் நாளன்று சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்த போது, 80/73 ஆம் குற்ற எண்ணில் சில பயங்கர ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது. இந்த ஆயுதங்கள் பற்றித் தெரிந்து கொள்ளும் பொருட்டு, அவற்றைப் பார்வைக்காக நீதி மன்றத்தில் கொண்டு வந்து காட்டுமாறு நான் ஆணையிட்டேன். அவற்றைப்பார்த்த பின்னர் அவற்றின் விவரங்களைச் சுருக்கமாகப் பதிவு செய்துள்ளேன். அவை இணைப்பு XI-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

IX. பெரியகுப்பம் பொது மக்களின் சார்பில் சாட்சியங்களைப் பதிவு செய்தல்.

(1) 1972 ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்களின் (தமிழ் நாடு) விதிகளின் 7ஆவது விதியின் கீழ் உள்ள அறிவிப்புக்கிணங்க, பெரிய குப்பம் மக்கள் சார்பில் 1973-ம் ஆண்டு ஜூன் திங்கள் 18-ம் நாளன்று இரண்டு உறுதிமொழிப் பத்திரங்களும், 1973-ம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ம் நாளன்று ஒன்பது உறுதி மொழிப் பத்திரங்களும் வரப்பெற்றன.

(2) உறுதி மொழிப் பத்திரங்கள் தாக்கல் செய்த 11 பேர்களில் 2 பேர்கள் மட்டுமே சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டனர். ஏனைய 9 பேர் விசாரணை செய்யப்படவில்லை. இந்த 9 பேரும் 1973 மே 11 முதல் 16 தேதி வரை நடந்ததாகக் கூறப்படும் நிகழ்ச்சிகளை நேரில் பார்த்த சாட்சியங்கள் அல்ல. அவர்களது உறுதிமொழிப் பத்திரங்களில் கூறியுள்ளவை அவர்கள் கேள்விப்பட்டவையே ஆகும்.

(3) பெரியகுப்பம் கிராமத்தினர் வழக்குரைஞர் 1973-ம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ம் நாளன்று கூடுதலாக 9 சாட்சிகள் கொண்ட பட்டியல் ஒன்றைத் தாக்கல் செய்தார். மீண்டும் 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ம் நாள் அன்று மேலும் 12 சாட்சிகள் அடங்கிய 2-வது பட்டியல் ஒன்றை அவர் தாக்கல் செய்தார். விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் பட்டியல், அவர்களது உறுதி மொழிப் பத்திரங்கள் வரப்பெற்ற நாள், உறுதி மொழிப் பத்திரங்கள் சான்று ஆவணங்களாக்கக் காட்டப்பட்டனவா இல்லையா ஆகியவை இணைப்பு X-ல் கொடுக்கப்பட்டுள்ளன. பெரியகுப்பம் மக்கள் சார்பில் கூறியுள்ள 32 சாட்சிகளில் கடைசியில் 21 சாட்சிகள் மட்டுமே விசாரணை செய்யப்பட்டனர். மீதி 11 சாட்சிகள் விசாரணை செய்யப்படாமல் விட்டு விடப்பட்டனர் என்பதைக் காணலாம்.

(4) பெரிய குப்பம் மக்கள் சார்பில் 16 சாட்சிகள் விசாரணையின் போது தங்களது வழக்குரைஞர் மூலம் எழுத்து மூலமாக வாக்குமூலம் கொடுத்தனர் என்பதும் அவர்களது வாய்மொழி சாட்சியத்துக்குத் கூடுதலாக உறுதிமொழிப் பத்திரங்களைப் பதிவு செய்வது குறித்து வலியுறுத்தினர் என்பதும் குறிப்பிடத் தக்கவையாகும். அவை உறுதி மொழிப் பத்திரங்களாக அனுமதிக்கப்படுவதற்கு ஆணைக்குழு பிறப்பித்துள்ள அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள கால அளவு முடிவடைந்து விட்டது என்பதால் அவற்றை இச்சமயத்தில் உறுதிமொழிப் பத்திரங்களாக அனுமதிக்கக் கூடாது என்று காவல்துறை தவி வழக்குரைஞர் ஆக்ஷேபித்தார். பின்னர் அவர்களது வாய்மொழி சாட்சியத்திற்கு ஆதரவாக எழுத்து மூலமான வாக்குமூலங்கள் மட்டுமே அனுமதிக்கப்படலாம் என்று தீர்ப்பு கூறப்பட்டது. அதற்கிணங்க, அவர்களது சார்பில் அவை சான்று ஆவணங்களாகக் காட்டப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன.

(5) 9 சாட்சிகள் பெரியகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் ஆவர். இவர்கள் நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டவர்கள் அல்லது நேரிடையாக தொடர்புடையவர்கள். 3 சாட்சிகள் (P-12, P-16, P-21) அவர்கள் தாமாகவே சாட்சி கூறினர்.

(6) திருமதி ரமணி பாய் (P-1) திரு கண்ணப்பச் செட்டி (P-2) நிகழ்ச்சி நடந்தபோது பெரியகுப்பம் கிராமத்தில் இல்லை. ஆனல் சென்னையிலும், பிற இடங்களிலும் பிற சாட்சிகள் கூறிய தகவல் கேட்டு அதன்படி சாட்சி கூறினர்.

(7) பெரியகுப்பம் மக்கள் சார்பில் சாட்சிகள் தாக்கல் செய்த சான்று ஆவணங்களின் பட்டியல் இணைப்பு XI-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

X. திரு சி. ஆறுமுகம்.எம்.எல்.ஏ., சார்பில் சாட்சியங்களைப் பதிவு செய்தல்.

(1) 1973-ம் ஆண்டு ஜூலை திங்கள் 14-ம் நாளன்று வழக்கு நடவடிக்கையின் போது திரு பி.எம். சுந்தரம், வழக்குரைஞர், திருவாளர்கள் சி. ஆறுமுகம், எம்.எல்.ஏ., எஸ். சொர்ணம், தலைவர், கடலூர் ஊராட்சி, ஜி. பால கிருஷ்ணன், செய்யூர் ஆகியோரது சார்பில் வழக்குரைஞராக ஆஜராகி வக்காலத் துக்களைத் தாக்கல் செய்தார். மேலும் அவர்களது சார்பில் உறுதி மொழிப் பத்திரங்களையும் தாக்கல் செய்தார். இந்த உறுதி மொழிப் பத்திரங்களில், சில நாளிதழ்களில் பத்திரிகைச் செய்திகள் மூலம் தங்களுக்கும், தி. மு. கழகத் திற்கும் எதிராகச் செய்யப்பட்ட பெரிய குற்றச் சாட்டுக்கள் குறித்தும் ஆணை குழு முன்னர் சாட்சியம் வழங்கப்பட்டபோது எழுப்பிய பிற குற்றச் சாட்டுகள் குறித்தும் ஒர்ந்து அறியப்பட்டுள்ளன. இந்தப் பெரும் தவறான குற்றச் சாட்டுக்கள் தங்களது பெயரையும், செல்வாக்கையும் தாங்கள் சார்ந்துள்ள கட்சி யையும் பாதிப்பதால் அவற்றை மறுத்து சாட்சி கூற அனுமதிக்குமாறு அவர்கள் கேட்டனர். இதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

(2) 1972-ம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் (தமிழ்நாடு) விதிகளின் 11-வது விதியின் கீழ் ஆணைக்குழு சாட்சிக்காக் குறுக்கு விசாரணை செய்ய வழக் குரைஞரை அனுமதித்தது. 1972-ம் ஆண்டு விசாரணை ஆணைக் குழுக்கள் (தமிழ்நாடு) விதிகளின் 10-வது விதியின்கீழ், விசாரணையின்போது கேட்டு தங்களது சார்பில் சாட்சியங்களை வழங்குவதற்கு நியாயமான வாய்ப்பு இவர் களுக்கு அளிக்கப்பட்டது.

(3) திரு பி. எம். சுந்தரம், வழக்குரைஞர் 1973-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28-ம் நாளன்று தமது மனுவில் P-2, P-3 ஆகிய சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளனரென்றும், திரு குப்புராஜ், திரு போரூர் ஸ்ரீனிவாசன் மற்றும் பிறர் ஆகியோரது முன்னிலையில் எம்.எல்.ஏ., விடுதியில் பஞ்சாயத்து ஒன்று நடந்ததாகவும் அதில் இரண்டு சாட்சிகள் திரு சி. ஆறுமுகம், எம்.எல்.ஏ.க்கு எதிராக அவதூறான குற்றச்சாட்டுக்கள் சிலவற்றைக் கொண்டு வந்துள்ளதாகவும், இவை தமது பெயருக்கும் நடத்தைக்கும் குறிப்பாக ஆருங்கட்சியான தி.மு. கழகத்தின் பெயருக்கு இழுக்கு விளைவிப்பதாகவும், குறிப்பிட்டு ஆணைக் குழுவுக்கு அனுப்பியுள்ளார். எனவே, சென்னை எம்.எல்.ஏ., விடுதியில் நடை பெற்ற பஞ்சாயத்து தொடர்பான விஷயங்கள் குறித்து சாட்சியம் வழங்குவதற் காக திரு குப்புராஜும், போரூர் ஸ்ரீனிவாசனும், வர வேண்டுமென்று இவர் விரும்பினர். ஆணைக்குழுவுக்கு அனுப்பிய 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ம் நாளிட்ட தமது மனுவில் ஏற்கெனவே, சொல்லியுள்ள இரண்டு சாட்சிகளைத் தவிர, T.N.H. 1006 எண்ணுள்ள சுற்றுலா டாக்சி டிரைவரையும் தமது சார்பில் விசாரணை செய்யலாம் என்று வழக்குரைஞர் கேட்டுக்கொண்டார். 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளன்று இந்த சாட்சிகள் அனைவரும் வரு மாறு கேட்கப்பட்டனர். எனினும், திருவாளர்கள் குப்புராஜும், போரூர் ஸ்ரீனிவாசனும் 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளன்று விசாரணைக்கு வர இயலவில்லை என்று தந்தி கொடுத்தனர். இதைத் தவிர சில சொந்த காரணங்களால் 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளன்று விசாரணை ஆணைக்குழுவால் விசாரணையை நடத்த முடியவில்லை. எனவே, அவர்கள் 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ம் நாளன்று விசாரணைக்கு வர வேண்டுமென்று மீண்டும் கேட்கப்பட்டனர்.

(4) திரு போரூர் ஸ்ரீனிவாசன், எம். எல். ஏ., அவர்கள் மோட்டார் விபத்து ஒன்றில் கடும் காயமடைந்து படுத்த படுக்கையாயிருந்ததால் விசாரணைக்கு வர முடியவில்லை. எனவே, அவர் வராததற்கு மன்னிப்பு அளிக்கப்பட்டது. கீழே குறிப்பிட்டுள்ளவாறு மற்ற மூன்று சாட்சிகளும் 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ம் நாள் அன்று விசாரணை செய்யப்பட்டனர் :—

(அ) திரு வி. சம்பந்தம், டாக்சி டிரைவர் P-22.

(இ) திரு பி. குப்புராஜ்—P-23.

(உ) திரு சி. ஆறுமுகம், எம்.எல்.ஏ. P-24.

கடலூர் திரு எஸ். சொர்ணம், போரூர் ஸ்ரீனிவாசன், எம்.எல்.ஏ., ஆகி யோரை விசாரணை செய்யாமல் விட்டு விடுவது குறித்து 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29-ம் நாள் அன்று குறிப்பாணை ஒன்றை சி. ஆறுமுகம், எம்.எல்.ஏ., அவர்கள் சார்பாக வழக்குரைஞர் தாக்கல் செய்தார்.

(5) இந்த சாட்சிகளுக்கு 'P' வரிசையில் எண்கள் கொடுக்கப்பட்டபோதி லும் இவர்கள் 1972-ம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் (தமிழ்நாடு) விதிகளின் 10-வது விதியின் கீழ் பெரியகுப்பம் மக்கள் சார்பில் உண்மையில் விசாரணை செய்யப்படவில்லை.

(6) P-22 திரு வி. சம்பந்தம், டாக்சி டிரைவர் தாக்கல் செய்த சான்றுவணங் களின் பட்டியலே இணைப்பு XI-ல் காணலாம்.

1973-ம் ஆண்டு ஜூலை திங்கள் 14-ம் நாள் அன்று தாக்கல் செய்த இடைக்கால மனுவும் அதன் மீது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளும்.

(1) 1973-ம் ஆண்டு ஜூலை திங்கள் 14-ம் நாள் அன்று பெரியகுப்பம் கிராமத்தினர் வழக்குரைஞர் திரு K.V. சங்கரன், வழக்குரைஞர் திரு சி. கணேசன் ஆகியோர் பெரியகுப்பம் மக்கள் பிரதிநிதியாகக் கூறப்படும் திருமதி ரமணிபாய் சார்பில் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் நியாயமான முறை யிலும், சரியான முறையிலும் ஆற்றப்பட வேண்டுமாயின் பெரியகுப்பம் மக்களிடையே கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பாது காப்பு உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று குறிப்பிடும் குறிப்பாணை ஒன்றைத் தாக்கல் செய்தார்.

(a) காவல் துறை அதிகாரிகளான டெபுடி சூப்பிரண்டு, சர்க்கிள் இன்ஸ் பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், தலைமைக் காவலர், காவலர் மல்லிகா மற்றும் பிறர் தங்களுடைய பதவிகளை செங்கற்பட்டு மாவட்டத்தில் வகிக்கக் கூடாது.

(b) செய்யாறு காவல்நிலையத்தில் 1973 மார்ச், ஏப்ரல் திங்களில் எந்த நபர்களுக்கு எதிர்ப்ப பல்வேறு புகார்கள் கொடுக்கப்பட்டனவோ அந்த நபர் களைப் பிடித்து முறை விசாரணை தொடங்க வேண்டும்.

(c) ஆணைக்குழு 1973-ம் ஆண்டு ஜூலை திங்கள் 14-ம் நாள் அன்றைக்கு வரையறுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்திவிட்டு, 19-ந் தேதிக்கு ஒத்திவைக்க வேண்டும். இந்த இடைக்காலத்தில் ஆணைக்குழு இது குறித்து தன் செல்வாக்கைப் பயன்படுத்தி அரசு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ள வேண்டும்.

(2) அவர்கள் எழுப்பிய கருத்துக்களை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளாவிடின், ஆணைக்குழுவின் சட்ட நடவடிக்கைகள் அனைத்திலும் கலந்து கொள்வதை நிறுத்திவிட வேண்டி வரும் என்று குறிப்பாணையில் பயமுறுத்தப்பட்டது. எனவே, இக்குறிப்பாணை குறித்து கருதிப் பார்ப்பதற்காக சிறப்பு விசாரணை ஒன்று நடத் தப்பட்டது. இரு தரப்பினரின் வழக்குரைஞர்களின் வாதங்களைக் கேட்டபின்னர் குறிப்பாணையில் கண்டுள்ளவற்றிற்கு வரிசைப்படி தமது தீர்ப்புகளை ஆணைக்குழு வழங்கியது.

(3) இக்குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டதும், ஆணைக்குழு தீர்ப்பு வழங்கிய தும் குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும் பெரிய குப்பம் வழக்குரைஞர் இச்சம யத்தில் சட்ட நடவடிக்கைகளிலிருந்து தாமாகவே நின்று விட்டார். திரு கே. வி. சங்கரன் வழக்குரைஞர் அனுப்பிய குறிப்பாணையின் நகலும், ஆணைக்குழு வழங்கிய தீர்ப்புக்களும் முறையே இணைப்பு XII, XII (a) ஆகியவற்றில் கொடுக் கப்பட்டுள்ளன.

(4) சட்ட நடவடிக்கையை ஒத்தி வைப்பதற்கு எந்தக் காரணமும் இல்லாத தால் திருவாளர்கள் கே. வி. சங்கரன், சி. கணேசன், ஆகியோர் திருமதி ரமணி பாய் அவர்களுடன் 1973-ம் ஆண்டு ஜூலை திங்கள் 14-ம் நாள் அன்று சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதை நிறுத்தி விட்ட போதிலும், தொடர்ந்து மேற் கொள்ள ஆணைக்குழு முடிவு செய்தது. இவர்கள் சட்ட நடவடிக்கைகளை நிறுத்தி விட்டதால், திரு கே. வி. சங்கரன் அவர்கள் காவல்துறை டெபுடி சூப்பிரண்டு திரு எஸ். ராமநாதன் அவர்களை அந்நாளன்று குறுக்கு விசாரணை செய்ய முடியாமற்போயிற்று. எனினும், வழக்குரைஞர் கேட்டுக் கொண்டதன் பேரில், காவல்துறை டெபுடி சூப்பிரண்டையும், பிறரையும் பின்னர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

XII. பெரிய குப்பம் நிகழ்ச்சிக்கு காரணமான நிகழ்ச்சிகள்.

1973-ம் ஆண்டு மே திங்கள் 11-ம் நாளுக்கு முன்னர், அலிக்குப்பத்தில் சில நிகழ்ச்சிகளின் கதை உருவாகியது. பெரியகுப்பத்தில் இதன் பின்னர் நடந்த நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருந்தது. தாக்கல் செய்யப்பட்ட ஆணை உறுதிப் பத்திரங்களிலிருந்தும் காவலர் கொடுத்த சாட்சியத்திலிருந்தும், சேகரிக்கப்பட்ட தகவலிலிருந்து இரண்டு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. (1) காவலர் தெரிவித்தவை. (2) பெரிய குப்பம் கிராமத்தினருக்கான வழக்குரைஞர் தெரிவித்தவை. இந்த அறிக்கையை மேற்கொண்டும் ஆய்வு செய்யுமுன்னர் இந்த நிகழ்ச்சி குறித்துத் தெரிந்துக் கொள்வது பொருத்தமுடையதாகும். அவ்வாறே பெரியகுப்பம் நிர்வாகத்தினர், மக்கள் சார்பாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை நான் கீழே கொடுத்துள்ளேன்.

(a) நிர்வாகத்தினர் சார்பாகக் கொடுக்கப்பட்ட கருத்து.—(i) காவல் நிலையம் ஒவ்வொன்றும், தனது அதிகார வரம்பிற்குள் உள்ள கிராமங்கள் அனைத்துக்கும் பகுதி IV குற்றவழக்குப் பதிவேடு என்பதை வைத்து வருகின்றன. பல்வேறு வகைக் குற்றங்கள் நடந்தது குறித்து ஒவ்வொரு கிராமத்தின் விவரத்தையும் இது விளக்குகிறது. காவல் நிலையம் பிவற்றைப் பதிவு செய்து வைத்து வருகின்றது. அலிகுப்பம் அமைதியான மீனவ் கிராமமாக இருந்து வந்துள்ளது. 1973-ம் ஆண்டு மே திங்கள் 11-ம் நாளுக்கு முன்னர் இரண்டு, 'காய' வழக்குகள் தவிர பகுதி IV குற்ற வழக்குப் பதிவேட்டில் கூங்கலகம் எதுவும் அங்கு பதிவு செய்யப்படவில்லை. அலிகுப்பம் மக்களுக்கும் பெரிய குப்பம் மக்களுக்கும் இடையேயும் அல்லது இந்த கிராமங்களிலுள்ள மக்களுக்கு இடையேயும் அரசியல் விரோதம் ஏதும் இருந்ததாக தெரியவில்லை.

(ii) அலிகுப்பத்தைச் சேர்ந்த தன்சிங் வீசைப் படகு ஒன்றை வாங்கினர். மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்பால் அவர் இந்த படகைப் பெற முடிந்தது. தன்சிங் அக்கிராமத்தைச் சேர்ந்தவராக இருந்ததால் மட்டுமே அவர் இந்தப் படகைப் பெற்றார். ஆகவே, இந்தப் படகு அவருக்கு மட்டுமின்றி கிராம மக்கள் அனைவருக்கும் பயன்படவேண்டும் என்று அலிகுப்பம் மக்கள் கருதினர். தன்சிங் இவ்வாறு செய்ய மறுத்து விட்டார். அவர் இப்படகைச் சென்னையில் பயன்படுத்தி வந்தார். தவிர அலிகுப்பத்தில் உள்ள கோயிலுக்கு வடக்குப் பக்கம் 5 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருந்தது. இந்த நிலங்களுக்குப் பட்டா வழங்குமாறு கேட்டு தாசில்தாருக்கு தன்சிங் விண்ணப்பித்திருந்தார். கிராம மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். தாசில்தாருக்கு மனு ஒன்றையும் கொடுத்தனர். அவரது சகோதரர் சீதாராமன் உட்பட 12 பேர் அலிகுப்பத்தில் தன்சிங்குக்கு ஆதரவாளர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர். தனது 12 ஆதரவாளர்கள் அவர்களுடைய குடும்பங்கள் ஆகியோர்களுடன் தன்சிங் அலிகுப்பத்தை விட்டுப் புறப்பட்டு 1973-ம் ஆண்டு மே திங்கள் 3-ம் நாளன்று பெரியகுப்பத்துக்குச் சென்றனர். 1973-ம் ஆண்டு மே திங்கள் 10-ம், 11-ம் நாள் இரவு முக்கியமாக 1973-ம் ஆண்டு மே திங்கள் 11-ம் நாள் விடியர்காலையில் தன்சிங், அவர் சகோதரர் சீதாராமன், சில பெண்கள் உட்பட மற்றவர்கள் அடங்கிய 100 பேர் கொண்ட கூட்டம் கத்தி, 'திருக்கைவாள்' 'ஈலாக்கோல்' 'வேலமுள்ளு' தடி, சுட்டி போன்ற ஆபாயமான ஆயுதங்களுடன் அலிகுப்பத்தில் நுழைந்து கிராம மக்களைத் தாக்கிப் பலருக்கு கடுமையான காயத்தை ஏற்படுத்தினர். வீடுகளில் புகுந்து சூறையாடினர். தூணிகள், பாத்திரங்கள், கட்டுமரங்கள், ஏனைய பொருள்கள் ஆகியவற்றை அவர்கள் எடுத்துச் சென்று விட்டனர். குடிசைகளுக்கும் ஏனைய சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்தனர். (பயன்படுத்தப்பட்ட இந்த ஆயுதங்களின் விவரங்களுக்கு IX இணைப்பைப் பார்க்கவும்.) இக்கிராமத்தில் நடந்த இந்த திடீர் தாக்குதல் 1973-ம் ஆண்டு மே திங்கள் 11-ம் நாள் அன்று காலை 3 மணிக்கும் 5-30 மணிக்கும் இடையே நடைபெற்றுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

(iii) தாக்குதலுக்குப் பின்னர் அலிகுப்பத்தைச் சேர்ந்த பாண்டு ரெங்கன் காயமுற்றவர்களுடன் செய்யூர் காவல் நிலையத்திற்கு பிற்பகல் சுமார் 2 மணிக்குச் சென்று தலைமைக் காவலர் மாணிக்கத்திடம் புகார் ஒன்றைக் கொடுத்தார். காயமுற்ற 11 பேரையும் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல அவர் ஏற்பாடு செய்தார். சிகிச்சைக்குப் பின்னர் 4 பேர் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர். முதல் தகவல் அறிக்கையில் 80/73-ம் எண் குற்ற வழக்காகப் பதிவு செய்யப்பட்ட புகாராகும் இது. தன்சிங், சீதாராமன், ராமு, தனபால், தங்கராஜன் மற்றவர்கள் ஆகியோர் உட்பட 60 பேர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

(Ex. A. 6ஐக் காண்க).

(iv) அதே நாளில், அதாவது 1973அம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாளன்று மாலை சுமார் 5 மணிக்கு செய்யூர் காவல்துறை சப் இன்ஸ்பெக்டர் மதுராந்தகம் காவல்துறை வட்ட இன்ஸ்பெக்டர்.ஆகியோர் செய்யூர் காவல் நிலையத்தின் 73/73 ஆம் குற்ற எண்ணிலுள்ள வழக்கை புலன் விசாரணை செய்த பின்னர் செய்யூர் காவல் நிலையத்திற்குத் திரும்பினர். பாண்டுரங்கன் கொடுத்த புகாரின் பேரில் 80/73ஆம் குற்ற எண்ணில் பதிவு செய்த வழக்கை தலைமைக் காவலர் அவர்களுக்கு இச்சமயத்தில் தெரிவித்தார்.

(v) உடனே காவல்துறை.வட்ட இன்ஸ்பெக்டர் செய்யூர் மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள காயமுற்றவர்களையும், ஏனைய 3 சாட்சிகளையும், பார்த்தார். பின்னர் காவல்துறை சப் இன்ஸ்பெக்டர், 4 காவலர்கள், ஆகியோருடன் அலிகுப்பத்துக்குச் சென்றார். படைக்கலந்தாங்கிய ஏழக் காவல்படையின் இரண்டு பிரிவை அனுப்புமாறு அவர் செங்கற்பட்டு காவல்துறை சூப்பிரண்டுக்கு தொலைபேசிச் செய்தி அனுப்பினர். படைக்கலம் தாங்கிய ஏழக் காவல் படையினர் காஞ்சிபுரத்திலிருந்து அலிகுப்பத்துக்கு உரிய நேரத்தில் வர தாமதமாகும் என எதிர்பார்த்ததால், அலிகுப்பம் கிராமத்திற்கு சில காவலரை அனுப்புமாறு அவர் மதுராந்தகம் காவல் நிலைய அதிகாரிக்கு தகவல் அனுப்பினர். அவர் கடலூர் கிராமத்தை அடைந்தபோது மதுராந்தகத்திலிருந்து ஏற்கெனவே வந்திருந்த 8 காவலரைக் கண்டார். அவர்களும் அலிகுப்பம் கிராமத்தை இரவு சுமார் 8 மணிக்கு அடைந்தார். நிகழ்ச்சி நடந்த இடத்தை அவர் பார்வையிட்டு அலிகுப்பத்தைச் சேர்ந்த தேவராஜன், இனனதுரை ஆகிய சாட்சிகளின் முன்னிலையில் பார்வை மகஜரைத் (Observation Mahazar) தயாரித்தார். கிராமத்தில் பலபேரை அவர் விசாரித்தார். இதற்கிடையே காஞ்சிபுரத்திலிருந்து படைக்கலந்தாங்கிய ஏழக் காவல் படையின் இரண்டு பிரிவுகள் இரவு சுமார் 10-25 மணிக்கு வந்து சேர்ந்தனர். அலிகுப்பத்தில் விசாரணையை முடித்த பின்னர் தனது படையினருடன் கடலூருக்கு திரும்பி வந்து கொண்டிருந்தபோது பெரியகுப்பத்திலிருந்து 200 பேர் அடங்கிய கூட்டம் ஒன்று தன்னை நோக்கி வருவதைக் கண்டார். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தாங்கள் ''காவல் துறையினர்'' என்று அவர்களுக்குத் தெரிவித்தபோது அவர்கள் அமைதியாகத் தங்களை இடத்திற்குத் திரும்பினர்.

இவர் காவல்படையை (ஆயுதம் தாங்கிய ஏழக் காவல்படைப் பிரிவுகள் இரண்டு, 12 காவலர்கள்) சப்-இன்ஸ்பெக்டர் பொறுப்பில் விட்டு விட்டு நள்ளிரவு சுமார் 12-30 மணி அளவில் மதுராந்தகத்திற்கு திரும்பி விட்டார். செய்யூர், காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் அன்று இரவு காவல் படையுடன் கடலூரில் தங்கி விட்டார்..

(vi) மதுராந்தகத்திற்கு திரும்பிய உடனேயே சர்க்கிள் இன்ஸ்பெக்டர், இந்த வழக்கு பற்றி செங்கற்பட்டு காவல்துறை.டெபுடி சூப்பிரண்டுக்குத் தெரிவித்து, நிகழ்ச்சி நடைபெற்ற இடத்திற்குச் சென்று பார்க்குமாறு கேட்டுக் கொண்டார். செங்கற்பட்டு காவல்துறை டெபுடி சூப்பிரண்டு, 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாளில் காலை சுமார் 8 மணிக்கு மதுராந்தகத்தை அடைந்தார். அவருடன் கூடுதலாக ஏழக் காவல்படைப் பிரிவுகள் இரண்டைக் கூட்டி வந்தார். பிறகு அவர் சர்க்கிள் இன்ஸ்பெக்டருடனும், ஏழக் காவல் படைப் பிரிவுகள் இரண்டுடனும் காலை சுமார் 9 மணிக்கு நிகழ்ச்சி நடைபெற்ற இடமாகிய அலிக்குப்பத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அலிக்குப்பத்தில் புகைப்படம் எடுப்பதற்காக புகைப்படக்காரர் ஒருவரையும் அவருடன் அழைத்துச் சென்றார். அலிக்குப்பத்தில் அவர் வேலையை முடித்துக் கொண்டதும், நடுப்பகல் 12 மணிக்கு பெரியகுப்பத்திற்கு அவர் புறப்பட்டுச் சென்றார், அவர், முந்திய நாள் கலவரம் நடைபெற்றபோது தங்கள்.வீடுகளிலிருந்து பொருட்கள் களவாடப்பட்டதாகக் கூறியுள்ள அலிகுப்பத்து பெண்கள் ஆறு பேரையும் உடன் கூட்டிச் சென்றிருந்தார். பெரியகுப்பத்து மக்கள் வைத்திருந்த உடைமைகளில் அவர்களது பொருட்களை அடையாளம் கண்டறிவதற்காகவே அவர்களை அவர் கூட்டிச் சென்றார். பெரிய குப்பத்தை அவர்கள் அடைந்தபோது, ஆண்கள் எவரும் இல்லாதிருப்பதையும், பெண்களும் குழந்தைகளும் மட்டுமே இருப்பதையும் அவர்கள் கண்டார்கள். அலிகுப்பத்து மக்கள் தங்கள் பொருட்களை அடையாளம் தெரிந்து கொள்வதற்காக, அவர்களது பித்தளை அலுமினியப் பாத்திரங்கள் முதலியவற்றை வெளியே எடுத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அவர்களுக்குக் காட்டப்பட்ட பாத்திரங்கள் எதையும் தங்களுடையது என்று எவரும் அடையாளம் காட்ட முடியவில்லை. இருப்பினும், அனுசுயா என்பவருக்குச் சொந்தமான பெட்டி ஒன்றை வெளியே கொண்டு வந்து திறந்து காட்டியபோது, அலிகுப்பத்து பெண்களில்

ஒருவராகிய லலிதாம்பாள் (A-3) தனதுவீட்டிலிருந்து திருடப்பட்டதாக புடவை ஒன்றை அடையாளம் காட்டினுள். மகஜர் ஒன்றின்படி இது மீட்கப்பட்டு இதற்கு அப்பாதுரை (A-5), அருணாசலம் ஆகியோர் மேலொப்பமிட்டுள்ளனர்.

(vii) இதன் பிறகு, தனது காவல்படை எல்லாவற்றையும் கூட்டிக் கொண்டு காவல்துறை டெபுடி சூப்பிரண்டு, பெரியகுப்பத்தை விட்டுப் புறப்பட்டு பொதுப்பணித் துறை லாக் சைட்டுக்குச் சென்றார். பெரியகுப்பத்தைச்சேர்ந்த பெண்கள் 23 பேர், அலிகுப்பத்தில் ஏற்பட்ட கலவரத்தின்போது தாங்கள் இருந்த தாகக் கூறியுள்ளனர். அலிக்குப்பத்தைச் சேர்ந்த ஆறு பெண்களும் விசாரணைக் காக லாக் சைட்டில் கூடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். லாக் சூப்பிரண்டு நாராயணசாமியும் (A-6) லஸ்கர் கிருஷ்ணனும் அருகில் தென்னை மரங்களில் கள் இறக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த முனுசாமி, மணி என்கிற மற்றிருவரும் அங்கு அப்போது இருந்தார்கள். பெரியகுப்பத்தைச் சேர்ந்த 23 பேர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டு குறித்துக் கொள்ளப்பட்டது. பின்னர் அவர்கள் எல்லாம் வீட்டுக்குச் செல்லுமாறு கூறப்பட்டனர். அலிகுப்பத்து பெண்களும் அனுப்பிவைக்கப்பட்டார்கள். அப்போது மணி சுமார் மாலை 5-30 இருக்கும். பிறகு, காவல்துறை டெபுடி சூப்பிரண்டு, செங்கற்பட்டுக்குத் திரும்பிச் சென்றார். இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்கும், டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்கும், காஞ்சி புரம் காவல்துறை சூப்பிரண்டுக்கும் விரைவு அறிக்கைகளை அவர் அனுப்பினர். காவல்துறை இன்ஸ்பெக்டர், தனது காவல் படையுடன் பொதுப்பணித்துறை லாக் சைட்டில் அன்றிரவு தங்கியிருந்தார்.

(viii) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாளில் காவல்துறை டெபுடி சூப்பிரண்டு காலை சுமார் 7-30 மணிக்கு லாக் பகுதிக்கு வந்தார். சர்க்கிள் இன்ஸ்பெக்டருடனும், காவல் படையுடனும் அவர் காலை சுமார் 8-00 மணிக்கு ஒய்யாலிக்குப்பத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அந்த இடத்திற்கு அவர்கள் காலை 9-00 மணிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அப்போது, அவர்கள், 50 பேர் கடலில் மத்தெறிந்து தப்பிச் செல்வதைப் பார்த்தார்கள். கடலில் தப்பிச் சென்றவர்களும், அலிக்குப்பம் கலவர வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களெனச் சந்தேகத்துக்குரியவர்களுமாகிய அந்த நபர்கள் திரும்பியதும் உடனேயே தனக்குத் தெரிவிக்குமாறு உள்ளூர்த் தலைவர்களிடம் கூறிவிட்டு டெபுடி சூப்பிரண்டு திரும்பி விட்டார். அவர் அந்த இடத்தில் ஒய்யாலிக்குப்பத்தில் 10 காவலர்களையும், 1416-ம் எண் தலைமைக் காவலரையும் விட்டுவிட்டு புறப்பட்டுச் சென்றார். பிறகு, அவர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், எஞ்சிய காவல் படையினர் ஆகியோருடன், ஒய்யாலிக்குப்பத்தை விட்டுப் புறப்பட்டு, மாலை 4-30 மணி வரை சதுரங்கப்பட்டினத்தில் தங்கியிருந்துவிட்டு, கடலூருக்குப் புறப்பட்டு மாலை 5-30 மணிக்குப் போய்ச்சேர்ந்தனர். அன்றிரவு அவர்கள் அங்கேயே தங்கி விட்டனர்.

(ix) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாளில் டெபுடி சூப்பிரண்டு, சர்க்கிள் இன்ஸ்பெக்டருடனும், சப்-இன்ஸ்பெக்டருடனும், எஞ்சிய காவல் படை யுடனும், காலை சுமார் 7-00 மணிக்கு ஒய்யாலிகுப்பத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர். எவரும் கைது செய்யப்படவில்லை என்பதை அவர்கள் அறிந்தனர். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாளில் தப்பிச் சென்றிருந்த குற்றஞ்சாட்டப் பட்டவரைக் கைது செய்யுமாறு சப்-இன்ஸ்பெக்டருக்குக் கட்டளையிட்டு, சப்-இன்ஸ்பெக்டரையும் எஞ்சியுள்ள காவல் படையினரையும் ஒய்யாலிகுப்பத்தில் இந்தச் சமயத்தில் விட்டுச் சென்றார். பிறகு அங்கிருந்து சர்க்கிள் இன்ஸ்பெக்டருடன், டெபுடி சூப்பிரண்டு, 73/73ஆம் எண் குற்றம் சம்பந்தமாக புலன் விசாரணை செய்வதற்கு தென்பட்டணம் காலனிக்குப் புறப்பட்டுச் சென்றனர். பிறகு அவர் நடுப்பகல் 12 மணிக்கு செங்கற்பட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தென் பட்டணத்தில் புலன் விசாரணை முடித்துக் கொண்டு 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள் மாலை சுமார் 6 மணிக்கு மதுராந்தகத்திற்கு திரும்பி விட்டார். 80/73ஆம் எண் வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் ஏழு பேரைத் தாம் கைது செய்து செய்யூர் காவல் நிலையத்திற்குக் கூட்டி வந்திருப்ப தாக சப்-இன்ஸ்பெக்டரிடமிருந்து சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு இரவு சுமார் 9 மணிக்குத் தகவல் கிடைத்தது.

(x) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 15ஆம் நாள் அன்று சுமார் 12 மணிக்கு, கைதான 7 பேர்களும், மதுராந்தகம் சர்க்கிள் அலுவலகத்தில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முன்பு கொண்டு வரப்பட்டனர். அதே நாளில் அவர்களை அவர் நீதிமுறைக் காவலில் வைத்தார்.

(xi) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 17 ஆம் நாளில் சப்-இன்ஸ்பெக்டர் மேலும் மூன்று பேர்களைக் கைது செய்து, செய்யூர் காவல் நிலையத்துக்குக் கூட்டி வந்தார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 18ஆம் நாளில் அவர்களை நீதி முறைக் காவலில் வைப்பதற்காக மதுராந்தகம் இன்ஸ்பெக்டரிடம் அவர் அனுப்பி வைத்தார்.

(xii) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 26 ஆம் நாளில் திருமதி ரமணிபாய், அவருடைய சகோதரர் ஜெயராமன், திரு. சி. கணேசன், வழக்குரைஞர்ஆகியோர், டெபுடி சூப்பிரண்டை செங்கற்பட்டில் அவருடைய அலுவலகத்தில் சந்தித்து, 80/73ஆம் எண் குற்றம் சம்பந்தப்பட்ட விவரங்களைக் கேட்டார். மேலும் குற்றச்சாட்டப்பட்டவர் சரணடைவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தங்களது விருப்பத்தைத் தெரிவித்தார்கள். அதே நாளில், அவர்கள் மதுராந்தகத்தில் சர்க்கிள் இன்ஸ்பெக்டரையும் சந்தித்தார்கள். குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரையும் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 30ஆம் நாளில் சரணடையச் செய்வதாக திருமதி ரமணிபாய் உறுதியளித்தார்.

(xiii) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 30 ஆம் நாள் காலை சுமார் 8-30 மணிக்கு திருமதி ரமணிபாய் காவல்துறை சர்க்கிள் இன்ஸ்பெக்டரை மீண்டும் சந்தித்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களைச் சரணடையச் செய்வதில் சில சங்கடங்கள் உள்ளதாகத் தெரிவித்தார். இருப்பினும், இதற்கிடையில், குற்றஞ்சாட்டப்பட்டவர், மதுராந்தகத்தைச் சேர்ந்த மானக்கந்த் என்பவரது வீட்டுப் பின்புறத்தில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகச் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்குத் தகவல் கிடைத்தது. அவர் செய்யூர், மதுராந்தகம் சப் இன்ஸ்பெக்டர்களைத் தன்னுடன் கூட்டிக் கொண்டு உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்து சென்று, குற்றஞ் சாட்டப்பட்ட 55 பேரையும் கைது செய்து சுவல் நிலையத்திற்கு அவர்களைக் கொண்டு வந்தார்.

(xiv) இவ்வாறு நான் சுருக்கமாகக் கூறியுள்ள இந்தக் கூற்றின்படி, 80/73ஆம் எண் குற்றம் சம்பந்தமாக முற்றிலும் புலன் விசாரணை செய்வதற்காகவே, 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாளில் காவலர்கள் பெரியகுப்பத்திற்குச் சென்றார்கள். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் அன்று புடவை (M. O. A. 1. கைப்பற்றப்பட்ட மீன்களும் அதன் பின்னர் சில நாட்களும் அவர்கள் பெரியகுப்பத்தில் இருந்தார்கள் என்பது அப்பட்டமாக மறுக்கப்படுகிறது. இதைப்போலவே, 1973 ஆம் ஆண்டு மே 12 ஆம் நாள் அன்றோ அல்லது வேறு ஒரு நாளிலோ பெரியகுப்பத்திலுள்ள பெண்களுக்குத் தொல்லை கொடுத்ததாகவும் அவர்களைப் பலவந்தப்படுத்தியதாகவும், அவர்களைக் கற்பழித்ததாகவும் கூறப்படுவது வன்மையாக மறுக்கப்படுகிறது. காவலர்களுடன் திரு. சி. ஆறுமுகம், எம்.எல்.ஏ., கடலூர் சொன்னம், முதலியோர் இருந்தார்கள் என்பது மறுக்கப்படுகிறது. அலிகுப்பம் கிராமத்திலுள்ள இரு வகுப்பினரிடையே ஏற்பட்ட தகராறு ஒன்றின் காரணமாக அலிகுப்பம் கிராமத்தில் கலகம் ஏற்பட்டு அது காவலர் வழக்காயிற்று. இந்தக் கலகத்தில் பெரியகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த பலர் ஈடுபட்டிருந்ததால் இவ்வழக்கு முழுவதற்கும் திருமதி ரமணிபாய், வழக்குரைஞர் கணேசன் ஆகியோரால் அரசியல் காரணம் காட்டப்பட்டுள்ளது. மேலும், பெரியகுப்பம் கிராமத்தினர், நிறுவன காங்கிரஸ் கட்சியிலும் அலிகுப்பம் கிராமத்தினர் தி.மு.க. கட்சியிலும் பெருமளவு வைத்திருந்தனர் என்று கூறப்படுகிறது. குற்ற எண் 80/73இல் பெரியகுப்பம் கிராமத்தினருக்கு எதிராகச் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துத் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற வெளிப்படையான நோக்கத்துடன், பெரியகுப்பம் கிராமத்தினரால், எல்லா வகையாலும் இச்சம்பவம் பெரிதுபடுத்தப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

(b) பெரியகுப்பம் மக்களின் சார்பான சாட்சியம்.—(i) திருமதி ரமணி பாயாலும் மற்றும் அவரது, சார்பானவர்களாலும் தாக்கல் செய்யப்பட்ட ஆணை. உறுதிப்பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கூற்று அமைந்துள்ளது. இந்த வழக்கில் திருமதி ரமணிபாய் முக்கியமானவராவார். அவர், இந்த வழக்கைத் தாமே விசாரணை செய்து எடுத்துக் கொண்டு, இந்த நிகழ்ச்சிகள் குறித்த தகவல்களையும் இவை நடப்பதற்கான சூழ்நிலைகளையும் கண்டறிந்தார்.

(ii) அலிகுப்பம் கிராமத்தில் சீதாராமன் என்பவருக்கு, சென்னை செங்கற்பட்டு மாவட்டக் கூடுறவு மீனவர் கூட்டமைப்பால் மீன்பிடி விசைப்படகு ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தி.மு.க. உள்ளூர் எம். எல். ஏ. திரு. சி. ஆறுமுகம், பாண்டுரங்கன் மற்றும் அலிகுப்பம்

கிராமத்தைச் சேர்ந்த தி.மு.க. ஆதரவாளர்கள் பலர் ரூ. 5,000 நன்கொடை அளிக்க வேண்டுமெனக் கேட்டனர். முதலில் இந்தத் தொகையினைக் கொடுக்க சீதாராமன் மறுத்துவிட்டார். ஆனல், அதன் பின்னர், இந்தத் தொகையைத் தவணை முறையில் கொடுக்க ஒப்புக்கொண்டார். இதன் காரணமாக, சீதாராமன், அவரது சகோதரர் தனசிங் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் ஆகியோருக்கும், பாண்டுரங்கன், வேலாயுதம் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இடையே வாய்ச்சண்டைகளும் வாக்குவாதங்களும் ஏற்பட்டுள்ளன. எம். எல். ஏ., திரு. ஆறுமுகத்தின் தூண்டுதலின் பேரில் அலுவ்லகம் தி. மு. க. ஆதரவாளர்கள், சீதாராமனியும் அவரைச் சார்ந்தவர்களையும் அடித்தனர். இது, 1973 மார்ச் திங்களில் நடைபெற்றது. செய்யாறு காவல் நிலையத்தில் பல்வேறு புகார்கள் செய்யப்பட்டன.

(iii) 1973 மார்ச் இறுதியில், திரு. சி. ஆறுமுகம், எம். எல். ஏ., புலவர் சீனிவாசன், எம். எல். ஏ., ஆகியோரின் முன்னிலையில் சென்னையில் எம். எல். ஏ.க்கள் விடுதியில் இது தொடர்பாக சமரசம் ஒன்று நடந்தது. அப்போது, சீதாராமன் காவல் நிலையத்தில் செய்த புகாரை வாபஸ் வாங்கும் படிச் செய்யப்பட்டார். எனினும், சம்பந்தப்பட்டவர்கள் இதனலும் திருப்தி அடையாது 1973 ஏப்ரல் திங்களில் அவரை மேலும் அடித்தனர். 1973 ஏப்ரல் 5ஆம் நாள், சீதாராமனின் மாமா அடிக்கப்பட்டு, அவரது வீடு சூறையாடப்பட்டது. மீன்பிடி சாதனங்கள் கொண்ட வலை ஆகியவை திருட்டப்பட்டன. மீண்டும் 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29ஆம் நாள் அன்று சீதாராமனின் வீட்டிற்குத் தீ வைக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட நபர்களைத் தவிர, இந்த தாக்குதல்களில், செய்யூர் பாலகிருஷ்ணன், அண்ணக்கட்டு குள்ளு, கடலூர் சொர்ணம், சந்திரன், தென்னந்தோப்பு வண்டு ஆகியோரும் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

(iv) தன்சிங், சீதாராமன் கூட்டத்தினர் மீது மேன்மேலும் பெருகிவந்த தொல்லைகள் தவிர, அடித்தல், கொள்ளையடித்தல், திருடுதல், வீடுகளுக்குத் தீ வைத்தல் ஆகிய நடவடிக்கைகள் வெளிப்படையாகவே தொடர்ந்து நடந்தன. காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர், ஏனையோரிடம் கொடுத்த புகார்கள் பயனற்ற தாகப் போயின. தி.மு.க.வினர் அளர்களது ஆதரவாளர்களின் வழிக்கு வர சீதாராமனும் அவரது சகோதரர் தன்சிங்கும் மிடிவாதமாக மறுத்ததால் வெறுப்படைந்து அலிகுப்பத்தைச் சேர்ந்த பாண்டுரங்கன், பாலகிருஷ்ணன், வடிவேலு, பஞ்சாமிர்தம் மற்றும் ஏனையோர், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் அன்று தன்சிங்கையும், சீதாராமனியும் தாக்கினர். மேலும் மேலும் செய்த துன்புறுத்தலைப் பொறுக்க முடியாமல் சீதாராமன், தன்சிங் மற்றும் அவர்களின் சொந்தக்காரர்கள் சுமார் 30 பேர் பெண்கள் குழந்தைகள் ஆகியோர் பெரியகுப்பத்திற்கு மாலை சுமார் 4-30 மணிக்குச் சென்றனர். அங்கு மக்கள் அவர்களுக்கு தங்க இடம் அளித்தனர். தன்சிங், சீதாராமன் ஆகியோருக்கு பெரியகுப்பம் மக்கள் தங்க இடமளித்த பாவத்திற்காக, அதன் பின்னர் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12, 13, 14 ஆகிய நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பழிக்குப் பழி வாங்கப்பட்டவைகளாகக் கருதப்பட்டன. 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் அன்று இரவு, பெரியகுப்பம் சிற்றாரில் திருச்சி சோனை செய்யப்பட்டது. எம். எல். ஏ. ஆறுமுகம், பாண்டுரங்கன், செய்யூர் பாலகிருஷ்ணன், அண்ணக்கட்டு குள்ளு, தென்னந்தோப்பு வண்டு, மற்றும் ஏனையோர் அவர்களின் குரல்களைக் கொண்டும், மற்றும் பிற வழிகளைக் கையாளும் அவர்கள் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டனர். எனினும், அவர்கள் பெரியகுப்பம் மக்களால் விரட்டியடிக்கப் பட்டனர். திடீர் சோதனைக் கூட்டத்தில் சில காவலர்கள் சாதாரண உடையில் இருந்தனர். அவர்களில் ஒருவர், மதுராந்தகம் காவல் துறை சர்க்கில் இன்ஸ்பெக்டரெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(v) இதனைத் தொடர்ந்து, 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் அன்று, செங்கற்பட்டு காவல்துறை டெபுடி சூப்பரெண்டின் தலைமையில் சுமார் படைக்கலம் தாங்கிய 100 காவலர்கள் பெரியகுப்பத்திற்கு வந்தனர். இந்த கலகத்தில் முன்னணியில் நின்ற எம். எல். ஏ. திரு. சி. ஆறுமுகம், மற்றும் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் ஆகியோரும் அவர்களுடன் வந்தனர். காவலர்கள் வருவதைப் பார்த்ததும் பெரியகுப்பத்தைச் சேர்ந்த ஆண்கள், கிராமத்தில் பெண்களையும் குழந்தைகளையும் மட்டுமே விட்டு விட்டு ஓடிவிட்டனர். காவல் துறை டெபுடி சூப்பரிண்டின் தலைமையில்கீழ், பெரியகுப்பத்திலிருந்த பெண்கள் இட்டமிட்டுத் துன்புறுத்தப்பட்டனர், பலவந்தப்படுத்தப்பட்டனர், சித்திரவதை செய்யப்பட்டனர், கற்பழிக்கப்பட்டனர். சுமார் 300 கோழிக் குஞ்சுகள், அரிசி முதலியன அவர்களிடமிருந்து எடுத்துச் செல்லப்பட்டன. அவர்கள் அலுமினியம்

பித்தளைப் பாத்திரங்களையும் எடுத்துச் சென்றனர். குடிசைகளிலிருந்த மட்பாண்டங்கள் உடைத்தெறியப்பட்டன. மீன்பிடி வலைகள், சாதனங்கள் சேதப் படுத்தப்பட்டன. பெண்கள் அவர்கள் வீடுகளிலிருந்து வெளியே விரட்டியடிக்கப் பட்டு, அவர்கள் கடும் வெய்யிலில் அடையின்றி உட்கார வைக்கப்பட்டனர். அவர்களின் உடைமைகள் பறிக்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன. அருகில் அமைந்துள்ள கடலூர் காலனியில் வசிக்கும் அரிசனங் களும் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்.

(vi) மேற்கூறப்பட்டவர்களைத் தவிர, ஹரிராமனின் மனைவி பூபதி, நடராஜனின் மனைவி (மற்றொரு) பூபதி, ராமனின் மனைவி சுப்புலட்சுமி, ஜெய ராமனின் மனைவி நாயகம், சின்னக்கண்ணுவின் மனைவி வேம்புவி, பட்டுவின் மனைவி குள்ளம்மாள், நந்தனின் மனைவி கஸ்தூரி, ஆகியோரும் காவலர்களால் தரக்குறை வாக நடத்தப்பட்டனர். தலைமைக் காவலர் மாணிக்கமும், காவலர்கள் மல்லிகா செல்வராஜ் ஆகியோர் குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடிக்கப்பட்டது.

(vii) பெரியகுப்பம் மக்களின் கூற்றுப்படி சொல்ல வேண்டுமாயின், சீதாராமன் உள்ளூர் எம்.எல்.ஏ-க்கு ரூ 5,000 கொடுக்கத் தவறிய காரணத்தால், அவரும் அவரது ஆதரவாளர்களும் அனுகுப்பம் கிராமத்தை விட்டு விரட்டப்பட்டனர். அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்த காரணத்தாலும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியகுப்பம் மக்களின் கருத்தை ஒத்தவர்களாக வும் இருந்த காரணத்தாலும், எம். எல். ஏ. திரு. அறுமுகம், அலுகுப்பம் தி.மு.க. ரவுடிகளும் 80/73ஆம் எண் குற்றத்தைச் செய்தனர். இதையே ஒரு சாக்காக வைத்து, தூண்டுதலின்பேரில் பெரியகுப்பத்திற்குள் நுழைந்து பெரியகுப்பம் பெண் களுக்கு கொடூரதீங்கிழைத்தனர்.

XIII. நிர்வாகத்தின் சார்பாக எடுத்துரைக்கப்பட்ட சாட்சியம்.

(1) 21-வது பக்கம் (1)வது பாரா VII-வது அத்தியாயத்தில் கூறப்பட்டதைப் போல, 15 சாட்சிகள் அனைவரும் நிர்வாகத்தின் சார்பாக விசாரிக்கப்பட்டனர். இவர்களில், 80/73ஆம் குற்ற எண் புலன் விசாரணை சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் மூவர் இருந்தனர். அவர்கள், A-11 திரு. S. ராமநாதன், காவல் துறை டெபுடி சூப்பிரெண்டு, செங்கற்பட்டு. A-13 திரு. M. N. பாலுசாமி, காவல் துறை சர்க்கிள் இன்ஸ்பெக்டர், மதுராந்தகம், A-14 திரு C. R. சுப்பிரமணியம், காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர், செய்யூர் ஆகியோராவார். மதுராந்தகம் சப்-மாஜிஸ்ட்ரேட்டுகள் A-4, திரு. M. K. நடராசன், A-12 திரு. M. பாலசுப்பிரமணியம் ஆகியோர் 80/73ஆம் குற்ற எண்ணில் காவலரால் பதிவு செய்யப்பட்ட புகார்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டவர்களை காவலில் வைப்பதற் கான ஆணை வழங்கியவர்களாவார். A-6 திரு. K. T. நாராயணசாமி, கடலூரில் உள்ள பொதுப் பணித் துறை லாக் சைட் கண்காணிப்பாளராவார். A-15 திரு. T. P. முருகேசன், மதுராந்தகம் தாசில்தார் ஆவார். ஏனையோர், 1973 மே 11ஆம் நாளிலிருந்து 80/73ஆம் குற்ற எண் குறித்த புலன் விசாரணையுடன் சம்பந்த பட்ட தங்களின் நடவடிக்கைகள் குறித்துத் தங்களுக்குச் சாதகமாக சாட்சியம் அளிக்கக் காவலரால் எடுத்துக் கூறப்பட்ட ஏனைய சாட்சிகள் அரசு அதிகாரிகள் அல்லாதோராவர்.

(2) காவல் துறை அதிகாரிகளாகிய காவல் துறை டெபுடி சூப்பிரண்டு, சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோரின் சாட்சியங்களை முதலில் எடுத்துக்கொள்வது பொருத்தமானதாகும். ஏனெனில், அவர்களின் நடவடிக்கை களிலில் தான், 1973ஆம் ஆண்டு மேதிங்கள் 12ஆம் நாளன்றும் மற்ற நாட்களிலும் பெரியகுப்பத்தில் காவலர்கள் அட்டூழியங்கள் நடந்ததாகக் கூறப்படுகிற சம்பவங்கள் நடந்தன.

(i) திரு. M. N. பாலுசாமி (A-13) காவல் துறை சர்க்கிள் இன்ஸ் பெக்டர் மதுராந்தகம், திரு. C. R. சுப்பிரமணியம் சப்-இன்ஸ்பெக்டர், செய்யூர் ஆகியோரின் சாட்சியம்.

இவர்கள் இரண்டு பேரின் வாக்குமூலம் முதற்கண் எடுக்கப் பட்டது. ஏனெனில், அவர்கள் 80/73ஆம் எண் குற்றத்தைச் சேர்ந்து புலன் விசாரணை செய்தனர். 1973 மே திங்கள் 11ஆம் நாள் அன்று இவர்கள் இருவரும் வேறு ஒரு வழக்கு சம்பந்தமாகப் புலன் விசாரணை செய்யச் சென்றிருந்தனர். அவர்கள் செய்யூர் காவல் நிலையத்திற்கு மாலை சுமார் 5 மணிக்குத் திரும்பினர். அப்போது இ.பி.கோ. 147, 148, 149, 395, 397, 323, 379, 428, 448, 324, 325, 326, 402, 34 ஆகிய பிரிவுகளின் கீழ் 80/73ஆம் எண்

குற்றம் பதிவு செய்யப்பட்டதாகச் செய்யூர் காவல் நிலையத் தலைமைக் காவலர் கூறினர். புலன் விசாரணையின் போது (Ex. A11, Ex A.16) தாங்கள் மேற் கொண்ட நடவடிக்கைகள் குறித்த விரிவான குறிப்பு ஒன்றைக் கொடுக்கும் உறுதிமொழிப் பத்திரங்களை அவர்கள் இருவரும் பதிவு செய்தனர். செய்யூர் மருத்துவ மனைக்குச் சென்று, சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த காயமுற்ற நபர்களை விசாரணை செய்த பின்னரும், ஏனைய சாட்சிகளை விசாரணை செய்த பின்னரும், அவர்கள் 4 காவலர்களுடன் அலிக்குப்பத்திற்குச் சென்றனர். படைக்கலம் தாங்கிய காவலர்படைகள் இரண்டினை அனுப்பும்படி காஞ்சிபுரம், காவல் துறை சூப்பிரெண்டுக்கு, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தொலைபேசி மூலம் செய்தியனுப்பினர். மேலும், தனக்கு புலன் விசாரணையில் உதவி செய்ய அலிக்குப்பத்திற்கு சில காவலர்களை அனுப்பும்படி மதுராந்தகம் காவல் நிலைய அதிகாரிக்கும் செய்தியனுப்பினர்.

(ii) அவர்கள் அலிக்குப்பம் செல்லும் வழியில், அவர்கள் கடலூரை அடைந்தபோது, மதுராந்தகத்திலிருந்து ஏற்கெனவே 8 காவலர்கள் வந்திருப்பதைக் கண்டனர். அவர்களையும் அழைத்துக்கொண்டு அலிக்குப்பத்திற்குச் சென்றனர். அலிக்குப்பத்தை அவர்கள் இரவு சுமார் 8 மணிக்குச் சென்றடைந்தனர். நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தை அவர்கள் சென்று பார்வையிட்டனர். அலிக்குப்பத்தைச் சேர்ந்த தேவராஜன், கின்னதுரை ஆகிய இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் அவர்கள் பார்வை மகஜர் ஒன்றைத் தயாரித்தனர். கிராமத்தினுள்ள பல நபர்களை அவர்கள் விசாரணை செய்து முடிக்கையில், இரவு சுமார் 10-25 மணியாகிவிட்டது. அந்த நேரத்தில், காஞ்சிபுரத்திலிருந்து அனுப்பும்படிக் கேட்டிருந்த ஆயுதம் தாங்கிய காவல்படைப் பிரிவுகள் இரண்டும் பணியை ஏற்றன. அவர்கள் அனைவரும், காவலர் படையுடன் கடலூரை நோக்கிப் புறப்பட்டனர். அப்போது அவர்களை நோக்கி சுமார் 200 பேர் அடங்கிய கூட்டம் ஒன்று அவர்களை நோக்கி வந்தது. எனினும், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு தாங்கள் காவல் படையினர் என்று கூறியதும் கூட்டம் கலைந்து சென்றது. அதன் பிறகு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், காவலர் படையைக் கடலூரில் செய்யூர் சப்-இன்ஸ்பெக்டரின் பொறுப்பில் விட்டு விட்டு அன்று இரவு மதுராந்தகத்திற்குத் திருப்பினர். (இதிலிருந்து காவல் துறை சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் சாட்சியத்தை மட்டுமே எடுத்துக் கூறுகிறேன்). இந்த வழக்கு குறித்தும் ஏனைய விவரங்கள் குறித்தும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உடனே, செங்கற்பட்டு காவல் துறை டெபுடி சூப்பிரெண்டுக்கு தொலைபேசி மூலம் செய்தி அனுப்பிவிட்டு, நிகழ்ச்சி நடந்த அந்த இடத்திற்கு அவரை வரும்படியும் கேட்டுக் கொண்டார்.

(iii) அடுத்தநாள் காலை அதாவது 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் அன்று காலை சுமார் 5 மணிக்கு மதுராந்தகம் காவல் துறை சர்க்கிள் இன்ஸ்பெக்டர், தலையில் காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட செல்வம் என்பவரை (Ex-A. 6-ல் குறிப்பிடப்பட்டது) விசாரணை செய்ய செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்றார். அவரை விசாரணை செய்த பின்னர், அவர் மதுராந்தகத்திற்கு காலை சுமார் 7-45 மணிக்குத் திரும்பினார். காலை சுமார் 8 மணிக்கு, செங்கற்பட்டு, காவல் துறை டெபுடி சூப்பிரெண்டு படைக்கலம் தாங்கிய மேலும் இரண்டு காவலர் படைப்பிரிவுகளுடன் வந்தனர். அவர்களுடனும், கடலூரில் சப்-இன்ஸ்பெக்டரின் பொறுப்பின் கீழிருந்த காவலர் படையுடனும் அவர் அலிக்குப்பத்திற்குச் சென்றார். நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தைச் சென்று பார்வையிடுவதற்கும், அலிகுப்பம் பெண்களை விசாரணை செய்வதற்கும் காவல் துறை டெபுடி சூப்பிரெண்டுக்கு அவர் (சர்க்கிள் இன்ஸ்பெக்டர்) உதவி செய்தார். அதன் பின்னர் மதியம் சுமார் 12 மணிக்கு பெரியகுப்பத்திற்கு அவர்கள் புறப்பட்டனர். அப்போது அவர்களுடன், தங்களின் உடமைகள் சிலவற்றைக் காணவில்லை என்று புகார் செய்திருந்த அலிகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த 6 பெண்களையும் கூட அழைத்துச் சென்றனர். பெரியகுப்பம் மக்களின் உடைமைகளிலிருந்து திருடப்பட்ட பொருள்களை அடையாளம் காட்டுவதற்காகவே அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். பெரியகுப்பத்தை அவர்கள் அடைந்தபோது அங்கு ஆண்கள் எவரும் இல்லை. ஆனால், பெண்களும் குழந்தைகளும் மட்டுமே இருந்தனர். அலிகுப்பம் பெண்கள் தங்களின் பித்தளை, அலுமினியம் பாத்திரங்களை அடையாளம் காட்டுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். எனினும், அவர்களால் எந்தப் பொருளையும் அடையாளம் காட்ட முடியவில்லை. எனினும், அனுசூயா என்பவரின் பெட்டி ஒன்று கொண்டுவரப்பட்டு திறக்கப்பட்டவுடன், அலிகுப்பத்தைச் சேர்ந்த லலிதாம்பாள் (A-3) என்ற பெண் தனது வீட்டிலிருந்து திருடப்பட்டதாக ஒரு

புடவையை (M.O.A.1) அடையாளம் காட்டினர். இது மகஜர் ஒன்றின் கீழ் (Ex.A-7) திரும்பப் பெறப்பட்டது. அப்பாதுரையும் (A-5), அருஞ்சலமும் மேலொப்பமிட்டனர். இதன் பின்னர், முந்திய இரவில் அலிக் குப்பத்தில் நடைபெற்ற கலவரத்தில் சம்பந்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட பெரியகுப்பத்தைச் சேர்ந்த 23 .பெண்களின் வாக்குமூலத்தைப் பதிவு செய்த பின்னர், அவர்கள் பொதுப்பணித் துறையின் லாக் சைட்டுக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். பெரியகுப்பத்தைச் சேர்ந்த பெண்களும் லாக் சைட்டுக்கு வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட அலிகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த 6 பெண் களும் அந்த இடத்திற்கு மாலை சுமார் 3 அல்லது 3-30 மணிக்கு வந்தனர். விசாரணை முடிந்து அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர், அவர்கள் அனைவரும் மாலை சுமார் 5-30 மணிக்கு வீட்டிற்குத் திரும்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர், அவர் அன்று இரவு லாக் சைட்டில் தங்கினர்.

(iv) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் அன்று, செங்கற்பட்டு காவல்துறை டெபுடி சூப்பிரெண்டு காலை சுமார் 7-30 மணிக்கு.லாக் சைட்டிற்குச் சென்றார். அப்போது அவர்கள் அனைவரும் ஒய்யாலிகுப்பத்திற்குக் கிளம்பிக் கொண்டிருந்தனர். அவர்கள், சுமார் 50 பேர் கட்டுமரத்தில் ஏறி கடலில் தப்பிச் செல்வதைப் பார்த்தனர். காவல் துறை டெபுடி சூப்பிரெண்டின் ஆணைப்படி தலைமைக் காவலர் ஒருவர், 10 காவலர்கள் ஆகியோர் ஒய்யாலிக்குப்பத்தை விட்டுச் சென்றனர். அதன் பிறகு, காவல்துறை சர்க்கிள் இன்ஸ்பெக்டர், டெபுடி சூப்பிரெண்டுடன் சதுரங்கப்பட்டினத்திற்குச் சென்றனர். அங்கு அவர்கள் மாலை 4-30 மணி வரை தங்கியிருந்தனர். அதன் பிறகு, அவர்கள் கடலூருக்குச் சென்று அந்த இரவு அங்கு தங்கினர்.

(v) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள் அன்று, காலை சுமார் 7 மணிக்கு ஒய்யாலிக்குப்பத்திற்கு காவல்துறை டெபுடி சூப்பிரெண்டு, சப்-இன்ஸ்பெக்டர், காவலர் படை ஆகியோருடன் சென்றார். அங்கு கைது .ஏதும் செய்யப்படவில்லை என்பதை அறிந்தார். காவல்துறை டெபுடி சூப்பிரெண்டின் கட்டளைக்கிணங்க, காவல் துறை சப்-இன்ஸ்பெக்டரையும், காவலர் படை முழு வதையும் ஒய்யாலிக்குப்பத்தில் தங்க வைத்துவிட்டு அவர்கள் சென்றனர். அதன் பிறகு அவரும், காவல்துறை டெபுடி சூப்பிரெண்டும், 7373ஆம் எண் குற்ற வழக்கு குறித்துத் தொடர்ந்து புலன் விசாரணை செய்வதற்காக தென்பட்டினத் திற்குச் சென்றனர். பிறகு டெபுடி சூப்பிரெண்டு செங்கற்பட்டிற்குத் திரும் பினர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மாலை சுமார் 6 மணிக்கு மதுராந்தகத்திற்குத் திரும்பினர். செய்யூர் காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர், 80/73ஆம் எண் குற்ற வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 7 பேரைக் கைது செய்து அவர், அவர்களை செய்யூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்தார் என காலை சுமார் 9 மணிக்கு இவருக்குத் தகவல் கிடைத்தது.

(vi) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 15ஆம் நாள் அன்று மதியம் சுமார் 12 மணிக்கு கைது செய்யப்பட்ட 7 பேரும் அவர்முன் கொண்டு வரப்பட்டனர், அவர்களை நீதிமன்றக் காவலில் வைக்கும்படிச் செய்தார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 18ஆம் நாள் அன்று சப்-இன்ஸ்பெக்டரால் கைது செய்யப்பட்ட மேலும் மூன்று பேர், பொறுப்புக் காவலில் வைக்கப்படுவதற்காக அவரிடம் அழைத்து வரப்பட்டனர்.

(vii) இதன் பிறகு, 1973ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாள் அன்று திருமதி ரமணிபாய், அவரது சகோதரர் ஜெயராமன், வழக்குரைஞர் கணேசன் ஆகியோர் அவரை அவரது அலுவலகத்தில் சந்தித்தனர். திருமதி ரமணிபாய், விவாதம் முடிந்த பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவரையும் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 30ஆம் நாள் அன்று கொண்டு வந்து விடுவதாக வாக்களித்தார்.

(viii) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 30ஆம் நாள் அன்று திருமதி ரமணி பாய் காலை 8-30 மணிக்கு அவரை மீண்டும் சந்தித்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கொண்டு வருவதில் உள்ள சில இடர்ப்பாடுகளை விளக்கினர். இதற்கிடையில், மதுராந்தகத்தைச் சேர்ந்த திரு. மானேக்சந்த் என்பவரின் வீட்டுக் கொல்லைப் புறத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வைக்கப்பட்டுள்ளனர் என்று சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்குத் தகவல் கிடைத்தது. அவர் செய்யூர், மதுராந்தகம் காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர்களுடன் அந்த இடத்திற்குச் சென்று குற்றஞ்சாட்டப் பட்டவர்கள் 55 பேரைக் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்.

(ix) காவல்துறை டெபுடி சூப்பிரெண்டுடன் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அலிகுப்பம், பெரியகுப்பம் ஆகிய இடங்களுக்குச் சென்றது 80/73ஆம் எண் குற்ற வழக்கு குறித்துப்புலன் விசாரணை செய்வதற்காக மட்டுமே என்றும், அவரோ அல்லது காவலர் படையினரோ எவரும், பெரியகுப்பத்தைச் சேர்ந்த பெண்கள் யாரையும் அடித்ததாகவோ அல்லது தரக் குறைவாக நடத்தியதாகவோ அல்லது தவருக நடந்து கொண்டதாகவோ கூறும் குற்றச்சாட்டு உண்மையானதல்ல என்றும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தெரிவித்துள்ளார். அவர் தனது ஆட்கள் என்ன செய்தார்கள் என்று தனக்குத் தெரியும் என்றும், அவர்களின் நல்ல நடைத்தைக்காக அவர்களுக்குத் தன்னுல் உறுதி கூற முடியும் என்றும் தெரிவித் தார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள், 12ஆம் நாள் 13ஆம் நாள் ஆகிய நாட்களில் நடந்ததாகக் கூறப்பட்டுள்ள குற்றங்கள் எதனேயும் அலிகுப்பத்தி லிருந்து எவரும் செய்யவில்லே என்ற உண்மையை வெளியிட்டார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாளுக்குப் பிறகும் கூட காவலின் கெட்ட நடத்தைகள் எவையும் பற்றித் தாம் கேள்விப்படவில்லே என்றும் அவர் கூறினர். ஏதுமறியாத நபர்களேத் துன்புறுத்தியதாகவும், பெண்கள் பலவந்தப்படுத்தப்பட்டதாகவும், சொத்துக்கள் முதலியவற்றிற்குச் சேதம் விளேவித்ததாகவும், சிங்காரவேலு என்பவரிடமிருந்து தந்தி ஒன்று (Ex.A-13) தனக்கு 1973ஆம் ஆண்டு மே திங்கள் 17ஆம் நாளன்றுதான் வந்ததாகக் கூறினர். இந்தத் தந்தியில் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையானவை அல்ல என்று அவர் தெரிவித்துள்ளார். கண்ணப்ப செட்டி (P-2) மற்றும் 4 பேர் கையெழுத்திட்ட புகார் ஒன்றை (Ex.A-14) சைக்லோஸ்டலில் செய்யப்பட்ட படி ஒன்றை இவர் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 21ஆம் நாளன்று பெற்றார். அதே நபர்கள் கையெழுத்திட்ட சைக்லோஸ்டல் செய்யப்பட்ட புகார் நகல் மற்றொன்றை (Ex. A-15) அவர் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாளன்று பெற்றார். தனது சொந்தக் கருத்தின்படி, இந்தப் புகார்கள் (Ex.A-14, Ex.A-15) கண்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையானவையல்ல, ஏனெனில், 80/73ஆம் எண் குற்ற வழக்கில் தானேபுலன் விசாரணே செய்ததாகக் கூறினர்.

(b) (i) செய்யூர் காவல் நிலேய சப்-இன்ஸ்பெக்டர் திரு. L. R. சுப்ர மணியத்தின் (A-14) வாக்குமூலம்.— (i) 1973 மே திங்களில், அவர் தான் செய்யூர் காவல் நிலேய சப்-இன்ஸ்பெக்டராக இருந்தார். 1973ஆம் ஆண்டு 14ஆம் நாள் வரை நடந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமாக, அவர் 1973ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29ஆம் நாளன்று ஆணேக் குழுவின் முன்பாக உறுதிமொழிப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்தார். இது அவரால் அடையாளம் காட்டப் பட்டது. (Ex.A-16).

(ii) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாளன்று இரவு அலிகுப்பத் திற்கு காவல்துறை சப்-இன்ஸ்பெக்டருடன் தான் சேர்ந்து சென்றது குறித்தும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாளன்று இரவு காவலர் படையுடன் கடலூரில் தான் தங்கியிருந்தது குறித்தும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாளன்று ஒய்யாலிகுப்பத்திற்கு காவல்துறை டெபுடி சூப்பிரண்டுடன் தான் சென்றது குறித்தும், ஒய்யாலிகுப்பத்தில் தலேமைக் காவலர் ஒருவரின் கீழ்க் காவலர் படையைத் தங்கச் செய்தது குறித்தும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாளன்று காவல்துறை டெபுடி சூப்பிரண்டு கடலூரில் தங்கியது குறித்தும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாளன்று காவல்துறை டெபுடி சூப்பிரெண்டு ஒய்யாலிகுப்பத்திற்கு சென்றது குறித்தும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களேக் கைது செய்வதற்காக ஒய்யாலிகுப்பத்தில் காவலர் படையுடன் தான் (சப்-இன்ஸ்பெக்டர்) தங்கியது குறித்தும், ஒய்யாலிகுப்பத்தில் 7 பேரைக் கைது செய்து தகவலே 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாளன்று காவல்துறை சர்க்கிள் இன்ஸ் பெக்டருக்குத் தெரிவித்தது குறித்தும், கைது செய்யப்பட்டவர்களே 1973ஆம் ஆண்டு மே திங்கள் 15ஆம் நாளன்று மதுராந்தகத்திற்கு அனுப்பியது குறித்தும், 80/73 குற்ற.வழக்கில் பதிவு செய்தது குறித்தும் A-13, சாட்சியின் சாட்சியத் திற்கு ஒத்ததாகத் தனது சாட்சியத்திலும் உறுதிமொழிப் பத்திரத்திலும் கூறி யுள்ளார்.

(iii) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 17ஆம் நாளன்று அவர் மேலும் மூன்று பேரைக் கடலூரில் கைது செய்து அவர்களே நீதித்துறைக் காவலில் வைப் பதற்காக 1973ஆம் ஆண்டு மே திங்கள் 18ஆம் நாளன்று சர்க்கிள் இன்ஸ்பெக் டரிடம் அனுப்பினர். 80/73ஆம் எண் குற்ற.வழக்கில் காயமடைந்த 7 பேர்கள்

சம்பந்தமாக செய்யூர் மருத்துவ அதிகாரி.கொடுத்த காயச் சான்றிதழ்களை அவர் [Exhibit A-17, Exhibit A-17 (a) முதல் Exhibit-17 (f). வரை] கொடுத்தார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாளன்று ஒய்யாலிக் குப்பத்தில் கைது.செய்யப்பட்ட எவரும் அல்லது 1973ஆம் ஆண்டு மே திங்கள் 17ஆம் நாளன்று கடலூரில் கைது.செய்யப்பட்டவர் எவரும், தங்களின் குடிசை களுக்கும், சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்தது குறித்தும், அல்லது பெரிய குப்பத்தில் காவலரால்செய்யப்பட்ட அட்டூழியங்கள் எவை குறித்தும் புகார் எதுவும் செய்யவில்லை என்று அவர் கூறினர். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாளன்று பெரியகுப்பத்தில் நிடீர் தாக்குதல்கள்.ஏதும் நடத்தப்படவில்லை என்றும் அவர் மறுத்துள்ளார். இந்தத் தாக்குதல் கூட்டத்தில் காவலர் சிலர் சாதாரண உடையில் இருந்தனர் என்பதையும் மறுத்தார்.

(c) செங்கற்பட்டு, காவல்துறை டெபுடி சூப்பிரெண்டு திரு எஸ். இராம நாதன் (A-11) அவர்களின் வாக்குமூலம்.—(1) இவர், செங்கற்பட்டு, காவல் துறை டெபுடி சூப்பிரெண்டாக கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பணியாற்றுகிறார். மதுராந்தகம் சர்க்கிள் அவரது ஆட்சி வரம்பிற்குள் இருந்தது. கிழ்க்கண்டவை குறித்துக் காவல் துறை சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் சாட்சியத்தை ஒத்ததாக இவர் சாட்சியம் அளித்துள்ளார் :—

(1) 80/73ஆம் எண் குற்ற வழக்கைப் பதிவு செய்தது குறித்து சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடமிருந்து தொலைபேசி மூலம் தகவல் பெறப்பட்டது குறித்தும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் அன்று இரவு நிகழ்ந்த ஏனைய விவரங்கள், அடுத்த நாள் காலையில் அந்த இடத்திற்குத் தான் வருவதாகக் கூறியது :—

(2) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் அன்று காலை 8—00 மணிக்கு மதுராந்தகத்திற்கு தான் சென்றது அதன் பிறகு காவல்துறை இன்ஸ்பெக்டருடனும் காவலர் படையுடனும் அலுகுப்பத்திற்குச் சென்றது :

(3) அலுகுப்பத்தில் நிகழ்ச்சி நடந்த இடத்தைச் சென்று பார்வை யிட்டது ; அலுகுப்பத்திலுள்ள தொழிலாளர்கள் உட்பட அனைவரையும் விசாரணை செய்தது ;

(4) பெரியகுப்பத்திற்கு 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் அன்று மதியம் சுமார் 12 மணிக்கு அலுகுப்பத்தைச் சேர்ந்த பெண்கள் ஆறு பேருடன் தான் சென்றது ; அப்போது பெரியகுப்பத்தில் ஆண்கள் யாரும் இல்லாது பெண்கள் மட்டும் இருந்தது. அலுகுப்பம் பெண்கள் தங்களது உடைமை களை அடையாளம் காட்டுவதற்காகப் பெரியகுப்பம் பெண்களைத் தங்களின் உடைமைகளைக் காட்டுமாறு தான் கேட்டுக் கொண்டது ;

(5) வலித்தாம்பாளால் (A-3) சரியாக அடையாளம் காட்டப்பட்ட புடவையை அனுகுயாவிடமிருந்து மீட்டது ;

அப்பாதுரை (A-5), அருளுசலம் ஆகியோரின் மேலொப்பத்துடன் மீட்பு மகஜர் (Exhibit A-7) தயாரிக்கப்பட்டது.

(6) குறுக்கு விசாரணைக்காக பெரியகுப்பத்தைச் சேர்ந்த 23 பெண் களையும் லாக்சைட்டிற்குத் தான் வரும்படி கேட்டுக் கொண்டது, அவரவர்கள் தங்களின் வீடுகளுக்கு மாலை 5—30 மணிக்குத் திரும்பியது ;

(7) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் அன்று காலை சுமார் 7—30 மணிக்கு தான் லாக் சைட்டிற்குச் சென்றது ; அங்கிருந்து காலை 9—00 மணிக்கு ஒய்யாலிக்குப்பத்திற்குச் சென்றது ;

(8) பெரியகுப்பம் ஆட்கள் கட்டுமரத்தில் ஏறி கடலில் தப்பிச் சென்றதைத் தான் பார்த்தது ;

(9) ஒய்யாலிக்குப்பத்தில் தலைமைக் காவலரின் கீழ் காவலர் படை ஒன்றைத் தான் விட்டுச் சென்றது ; அவர் சதுரங்கப்பட்டினத்திற்குச் சென்றது ; அதன் பிறகு 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் அன்று இரவு தான் கடலூரில் தங்கியது ;

(10) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள் அன்று ஒய்யாலி குப்பத்திற்கு தான் மீண்டும் சென்றது, குற்றஞ் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்வதற்காகக் காவல் துறை சப்-இன்ஸ்பெக்டரையும், காவலர் படையையும் அந்த இடத்தில் விட்டுச் சென்றது. அதன் பிறகு தான் செங்கற்பட்டிற்குத் திரும்பியது.

(ii) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் அன்று இரவு காவல் துறை சப்-இன்ஸ்பெக்டரிடமிருந்து தகவல் கிடைத்தவுடன் அதனை காவல் துறை சூப்பிரண்டிற்கு தொலைபேசி மூலம் தெரிவித்து படைக்கலம் தாங்கிய காவல் படைப் பிரிவு இரண்டினை அனுப்பும்படிக் கேட்டுக் கொண்டார். குறுக்கு விசாரணைக்காக பெரியகுப்பம் பெண்கள் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் அன்று லாக் சைட்டிற்கு வந்தபோது, காவலரின் அட்டூழியங்கள் பற்றியோ அலிகுப்பம் மக்களின் அட்டூழியம் பற்றியோ அவர்களில் எவரும் எந்தப் புகாரையும் கூறவில்லை என்ற உண்மையை அவர் எடுத்துரைத்தார். பெரியகுப்பத்தில் நடந்ததாகக் கூறப்படுகிற நிகழ்ச்சிகள் குறித்துப் பொதுமக்களிடமிருந்து தான் பெற்ற முதல் தகவல், சட்கோபால் (Exhibit A-4) என்பவரிடமிருந்து 1973ஆம் ஆண்டு மே திங்கள் 17ஆம் நாள் அன்று தான் பெற்ற தந்தி ஒன்றின் தகவல் தான் என்று அவர் தெரிவித்துள்ளார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாளிலிருந்து 16ஆம் நாள் வரை அல்லது அதன் பிறகு, காவலராலோ அல்லது அலிகுப்பம் மக்களாலோ, பெரியகுப்பம் பெண்களோ பலவந்தப்படுத்தப்பட்டது அல்லது கற்பழிக்கப்பட்டது போன்ற தவறான செய்திகள் ஏதும் நடைபெறவில்லை என்று அவர் திட்டவட்டமாகக் கூறினார். பெரியகுப்பத்திற்குத் தாங்கள் சென்றது 80/73 ஆம் எண் குற்ற வழக்கைப் புலன் விசாரணை செய்யவே சென்றதாகக் கூறினர்.

(iii) அலிகுப்பம் மக்களின் வழக்குரைஞரான திரு வட்சுமண ரெட்டி குறுக்கு விசாரணை செய்தபோது, 1973ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாள் அன்று திருமதி ரமணியாயும், அவரது சகோதரர் ஜெயராமன், வழக்குரைஞர் கணேசன் ஆகியோர், செங்கற்பட்டில் தனது அலுவலகத்திற்கு வந்து தன்னைப் பார்த்தனர் என்றும்; அப்போதும் கூட காவலரால் அல்லது அலிக்குப்பம் கிராமத்தினரால் அல்லது வேறு எவர்மூலமும், பெரியகுப்பத்தில் பெண்களை பலவந்தப்படுத்தியது அல்லது கற்பழித்தது அல்லது வேறு ஏனைய சம்பவங்கள் குறித்து அவர்கள் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

(iv) பெரியகுப்பம் மக்களின் வழக்குரைஞரான திரு கே. வி. சங்கரன் குறுக்கு விசாரணை செய்தபோது, 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் அன்று 80/73ஆம் எண் குற்ற வழக்கு குறித்துதான் இரவு 1 மணிக்குத் தகவல் பெற்றது குறித்துத் தனது வார நாட்குறிப்புப் புத்தகத்தில் பதிந்து வைத்துள்ளதைக் காட்டினார். (ஆணைக்குழு இதனைச் சரிபார்த்து அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருப்பதைக் கண்டது). காவல் துறை சூப்பிரெண்டால் மேலொப்பமிடப்பட்டு சென்னை, வடசரகம், காவல் துறை டேப்புடி இன்ஸ்பெக்டர் ஜெனரால் செய்தித் தாளுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையின் நகல் ஒன்றையும் (Exhibit A-5) அவர் குறிப்பிட்டார். 80/73ஆம் எண் குற்ற வழக்கில் முதல் தகவல் அறிக்கையை Exhibit A-6 ஆகவும் அவர் குறிப்பிட்டார். அனுகூலமிடமிருந்து கைப்பற்றப்பட்ட புடவைக்காக காவல் துறை இன்ஸ்பெக்டர் தயாரித்த சீட்டு மகஜரையும் அவர் Exhibit A-7 ஆகக் குறிப்பிட்டார். பெரியகுப்பம் மக்களின் வழக்குரைஞர் இவரைக் குறுக்கு விசாரணை செய்தபோது, அவர் காவல் துறை வண்டிகள் MDH 6546. MDH 6628 ஆகியவற்றின் நாட்குறிப்புப் புத்தகங்களை முறையே Exhibit A-8 ஆகவும், Exhibit A-8 (a) ஆகவும் குறிப்பிட்டார்.

(d) திரு V. பாண்டுரங்கனின் (A-1) வாக்குமூலம். – (i) இவர், அலிக்குப்பத்தைச் சேர்ந்த ஒரு மீனவராவார். தன்சிங் ஒரு விசைப்படகு வாங்கியது குறித்தும், 5 ஏக்கர் புறம்போக்கு நிலம் தன்சிங்கிற்கு ஒப்படை செய்யப்படவேண்டியது குறித்தும் தன்சிங்குக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் அலிக்குப்பம் கிராமத்திலுள்ள ஏனையோருக்குமிடையே அலிக்குப்பம் கிராமத்தில் நடந்த தகராறைப் பற்றி அவர் தெரிவித்துள்ளார். தன்சிங் அவரது ஆதரவாளர்கள் 12 பேருடனும் அவர்களது குடும்பத்தினருடனும் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 3-ஆம் நாளன்று பெரியகுப்பத்திற்குச் சென்றார் என அவர் தெரிவித்துள்ளார். சுமார் 100 பேரால் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 10/11 அன்று இரவு அலிக்குப்பத்தில் கொந்தளிப்பும் குழப்பமும் ஏற்பட்டது குறித்தும், குடிசைகள் மீன்பிடி சாதனங்கள் ஆகியவை அழிக்கப்பட்டது குறித்தும், கொடிய

ஆயுதங்களைக் கொண்டு தாக்கி இதனால், காயம் ஏற்பட்டது குறித்தும், காலை 3 மணியிலிருந்து காலை 5-00 மணிவரை கொள்ளையடித்தது குறித்தும் அவர் கூறினார். இந்தக் கலகம் நடந்த பின்னர், அவரும் அவரது ஆட்களும் காயமுற்ற 11 பேரை செய்யூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். தலைமைக் காவலர் மாணிக்கத்திடம் அவர் பிற்பகல் சுமார் 2.00 மணிக்குப் புகார் ஒன்றைக் கொடுத்தார். அவர் கொடுத்த புகாரில் 50 அல்லது 60 பேர்கள் சம்பந்தப்படுத்தப் பட்டிருந்தனர். தன்சிங்கும் அவரது சகாக்களும் உட்பட, அவர்கள் அனைவரும் பெரியகுப்பம், அலிக்குப்பம், கடலூர் காலனி ஆகிய இடங்களிலிருந்து வந்தவர் களாவர்.

(ii) காவல் துறை இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டருடனும் காவலர் படையுடனும் அலிக்குப்பம் கிராமத்திற்கு வந்தது உண்மையே என்று அவர் பின்னர் ஒத்த சாட்சியம் அளித்துள்ளார். அலிக்குப்பத்திலிருந்து காவலர் படையுடன் தான் திரும்பிக் கொண்டிருந்தபோது, அவர்கள் காவலர்கள் என் பதை அறியாது பெரியகுப்பம் மக்கள், அந்தக் கூட்டத்தினர் தங்களைத் தாக்க வருவதாகத் தவருகக் கருதிக்கொண்டு, அவர்களை விரட்டத் தொடங்கினர். எனினும் காவலர்கள், எதுகுமுன்னே எதை ஆரம்பித்ததும், பெரியகுப்பம் மக்கள் கிராமத்திற்குள் திரும்பிச் சென்றனர். அதன் பிறகு, பெரியகுப்பத்தில் காவலர் களின் நடமாட்டமும் நடவடிக்கைகளும் குறித்து காவல் துறை அதிகாரிகள் அளித்துள்ள சாட்சியத்தை ஒத்ததாகவே இவர் தொடர்ந்து சாட்சியமளித்தார்.

(iii) அலிக்குப்பம் கிராமத்தினரின் வழக்குரைஞர் குறுக்கு விசாரணை செய்தபோது, திருமதி ரமணிபாய், முதன் முதலில் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாளன்று பெரியகுப்பத்திற்கு வந்தார் என்றும், பெரியகுப்பத்தில் நடந்ததாகக் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் இதற்குப் பின்னரே செய்தித் தாள்களில் வெளியிடப்பட்டது என்றும் இதற்கு முன்பாக வெளியிடப்படவில்லை என்றும் கூறினர்.

(e) திரு பஞ்சாமிர்தத்தின் (A-2) வாக்குமூலம் :—இவர்A-1 கூறிய சாட்சியத்தைப் போலவே சாட்சியம் அளித்துள்ளார். 10/11 அன்று இரவு சுமார் 3 மணிக்கு கொடிய ஆயுதங்களுடன் பெரியகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 100 பேர் அலிக்குப்பம் கிராமத்தில் குழப்பம், தாக்குதல்கள், சம்பவங்கள் பற்றியும், அந்தத் தாக்குதலில் தனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்தும், காவல் நிலையத்தில் A-1ஆல் புகார் செய்யப்பட்டது குறித்தும், செய்யூர் மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றது குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

(f) திருமதி லலிதாம்பாளின் சாட்சியம் (A-3):—அலிக்குப்பம் கலகத்தை யும் திரௌபதியையும் இவர் உறுதிப்படுத்துகிறார். தனபால், வேலாயுதம், தனசிங் ஆகியவர்களைச் சேர்த்து 20—30 நபர்கள் தனது வீட்டிற்கு வந்து ஒரு வெப்புப் பட்டுச் சேலையையும் இரண்டு பித்தளைத் தவலைகளையும் ஒரு பித்தளை தேக்சாவையும் எடுத்துச் சென்றார்கள் என்றும் அவர் மேலும் தெரிவிக்கிறார். மறுநாள் அலிக்குப்பத்திற்குக் காவலர் வந்ததையும் நிழற் படங்கள் எடுத்ததையும் விசாரணைகள் நடத்தியதையும் அவர் உறுதிப்படுத்துகிறார். பெரியகுப்பத்தைச் சேர்ந்த பெண்களின் உடைமைகளைச் சோதனையிட்டதில் பாத்திரங்கள் எதுவும் மீட்கப்படவில்லை என்றும் அவருடைய சேலை ஒன்று அனுசூயா வீட்டிலிருந்து மீட்கப்பட்டது என்றும், காவல் துறை அதிகாரிகள் கூறும் சாட்சியத்தை இவர் உறுதி செய்கிறார். அந்தச் சேலை வெப்பு நிறம் என்று அவர் கூறுகிறார். அலிக் குப்பத்திலிருந்து வந்திருந்த பெண்களுடன் பெரிய குப்பம் பெண்களையும் காவலர் விசாரணை செய்தபொழுது அன்று பிற்பகல் தானும் லாக் சைட்டுக்குச் சென்றி ருந்ததாக அவர் மேலும் கூறுகிறார். பெரியகுப்பத்தில் பெண்களைத் தவருக நடத்துதல், பலவந்தப்படுத்துதல், கற்பழித்தல் போன்றவைகள் எதுவும் ஒரு போதும் நடைபெறவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார்.

(g) திரு ஜி. அப்பாதுரையின் சாட்சியம் (A-5) :—அனுசூயாவிடமிருந்த நீல நிற வாயல் சேலை (A-3) லலிதாம்பாளால் சரியாக அடையாளம் கண்டுபிடிக்கப் பட்டு மீட்கப்பட்டது. அதன் மீட்பு மகஜரில் அது உண்மையென அவர் கையொப்பமிட்டது பற்றி கூறுகிறார். அன்று காவலர்களோடு அவர் சேர்ந்து அலிக்குப்பத்திலிருந்து பெரியகுப்பம் வரை வந்ததையும், பின்பு லாக் சைட்டுக்கு வந்ததை பற்றியும் அவர் கூறுகிறார். தனது உறுதிமொழிப் பத்திரத்தை அடையாளம் காட்டியதுடன் அதனை Exhibit A-21 எனவும் குறித்தார்.

(h) திரு P. மணியின் சாட்சியம் (A-7):—இவர் பொதுப் பணித் துறை லாக் சைட்டிற்கு அருகில் உள்ள தென்னை மரங்களில் கள் இறக்கும் சானர். செல்வராசு என்னும் கள் இறக்கும் ஒப்பந்தக்காரரிடம் இவர் ஒரு பணியாளர். செல்வராசுக்கு (A-8) சந்திரன் என்னும் பெயருடைய கூட்டுப் பங்குதாரர் ஒருவரும் உண்டு. 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12-ஆம் நாளன்று காவலர் லாக் சைட்டுக்கு வந்தது பற்றியும் பெரியகுப்பத்தைச் சேர்ந்த பெண்களிடம் மாலை சுமார் 5.30 மணி வரை கேள்விகள் கேட்டதைப் பற்றியும் அவர்களைத் திருப்பி அனுப்பி வைத்தது பற்றியும் அறிவிக்கிறார். அலிக்குப்பத்தைச் சேர்ந்த பெண்களும் அங்கு இருந்தனர் என்று கூறுகிறார். பெரியகுப்பத்தைச் சேர்ந்த பெண்களை காவலர் பலவந்தப்படுத்தியது, கற்பழித்தது போன்ற தவருன நடவடிக்கைகளைச் செய்தனர் என்பது பற்றி தாம் ஒன்றும் கேள்விப்படவில்லை என்றும் அவர் கூறுகிறார். லாக் வழியாக குப்பத்தைச் சேர்ந்த மக்கள் கடலூருக்குச் செல்வது வழக்கமென்றும் பெரியகுப்பத்தைச் சேர்ந்த பெண்கள் காவலரால் பலவந்தப் படுத்தப்பட்டனர், கற்பழிக்கப்பட்டனர் அல்லது ஏனைய தரக் குறைவான செய்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் தாம் ஒருபோதும் கேள்விப்படவில்லை என்று திரு இலட்சுமண ரெட்டியின் குறுக்கு விசாரணையின்போது இவர் மேலும் தெரிவித்துள்ளார். இச்சிற்றூரிலிருந்து பெண்கள் ஓடியதைத் தான் ஒரு போதும் பார்த்ததில்லை.

(i) திரு D. சந்திரனின் சாட்சியம் (A-8):—(i) இவர் ஒரு கள் ஒப்பந்தக் காரரும் A-7-வின் முதலாளியுமாவார். இவர் 7-வின் சாட்சியத்தை உறுதி செய்வதோடு, 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாளன்று இரவு கடலூரில் காவலர் இருந்தது பற்றி அவர் கூறுகிறார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாளன்று காலை 7 மணிக்கு இரண்டு காவல் துறை மோட்டார் வண்டிகள் கடலூரை நோக்கிச் செல்வதை இவர் கண்டார். காவல் துறை சப்-இன்ஸ் பெக்டர் இவரிடம் 10 பட்டணம் படி உயர் ரக அரிசியைக் காவலர்களுக்காக வாங்கி வரும்படிக் கேட்டார். அதற்காக ரூ. 17.50 கொடுக்கப்பட்டது.

(ii) சாதாரணமாக குப்பத்திலிருந்து மக்கள் லாக் வழியாகத்தான் கடலூருக்குச் செல்வர் என்றும் பெரியகுப்பம் கிராமத்தில் காவலர் கொள்ளை யடித்தனர், பெண்களைப் பலவந்தப்படுத்தினர், கற்பழித்தனர் என்று ஒருவரும் ஒருபோதும் தம்மிடம் வந்து தாம் கடலூர் ஊராட்சியின் உறுப்பினர் என்ற முறையில் புகார் செய்யவில்லை என்று திரு இலட்சுமண ரெட்டியின் குறுக்கு விசாரணையின்போது தெரிவித்தார்.

(j) திரு செல்வமுத்து நாய்க்கரின் சாட்சியம் (A-9):—இவர் வாசவ சமுத்திரம் கிராமத்தின் கிராம முன்சீப் ஆவர். புதுப்பட்டணம் வயலூர் கிராமம் ஆகிய இரண்டின் வழியாகவும் வயலூர் கிராமத்தைச் சேர்ந்த ஒய்யாலிக்குப்பம் குக்கிராமத்திற்குச் செல்லலாம் என்று சொல்கிறார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் காலை 9 மணி அளவில் புதுப்பட்டணத்தில் இரண்டு காவல் துறை வண்டிகளையும் டெபுடி போலீஸ் சூப்பிரண்டையும் 30—35 காவலர்களையும் கண்டார். சோதனைச் சாவடிக்கு அருகே இருக்கும் பாலத்தில் வண்டியை விட்டி றங்கி ஒய்யாலிக்குப்பம் நோக்கி அவர்கள் நடப்பதை அவர் பார்த்தார். பிற்பகல் 1 மணி அளவில் அவர்கள் திரும்பி வந்து வண்டியில் ஏறி கல்பாக்கம் நோக்கிச் செல்வதையும் அவர் பார்த்தார். மாலை சுமார் 4 மணியளவில் மீண்டும் அவர்கள் வயலூர் நோக்கிச் செல்வதைப் பார்த்தார்.

(k) திரு ஆஞ்சனேயலுவின் சாட்சியம் (A-10):—1973ஆம் ஆண்டு மே திங்களில் கல்பாக்கம் அரசு விருந்தினர் இல்லத்தில் எடுபிடி ஆளாகப் பணி புரிந்த வர் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாளன்று ஞ்யிறு அன்று இரண்டு வண்டிகளில் விருந்தினர் இல்லத்திற்கு காவலர்கள் வந்த உண்மையைப் பற்றிக் கூறுகிறார். காவல் துறை டெபுடி சூப்பிரன்டு, காவல் துறை இன்ஸ்பெக்டர், காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் மற்றும் சில காவலர்கள் அங்கு வந்தனர். மதிய உணவு இல்லையென்று உறுதிப்படுத்திக்கொண்டதும், அவர்கள் சென்று விட்டனர். பிற்பகல் 2-30 மணிக்கு அவர்கள் மீண்டும் வந்து சற்று ஒய்வெடுத்துக்கொண்டு பிற்பகல் 3.30 மணி அளவில் சென்று விட்டனர்.

(l) திரு எம். கே. நடராஜன் (A-4)

(m) திரு எம். சுப்பிரமணியம் (A-12)—ஆகியோரது சாட்சியம்:—(i) திரு எம். கே. நடராஜன் (A-4) மதராந்தகத்தில் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 15ஆம் நாள் முதல் 19ஆம் நாள் வரை சப்-மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தார். நீதித் துறைப் பொறுப்பின்கீழ் காவலில் வைப்பதற்காக 1973ஆம் ஆண்டு மே

திங்கள் 15ஆம் நாளன்று மதுராந்தகம் காவல்துறை இன்ஸ்பெக்டர், குப்புசாமி என்பவரையும் ஏனைய 6 பேர்களையும் செய்யூர் காவல் நிலையம் 80/73 எண் குற்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு இவர் முன்பு கொண்டுவரப்பட்டனர். 1973ம் ஆண்டு மே திங்கள் 15ஆம் நாளிட்ட காவல் வைப்பு மனு (Ex. A-1) இவரால் குறிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர் யாராலும் எதுவும் இவரிடம் செய்யப்படவில்லே. அவர் காவலில் வைக்கப்படுவதற்கான ஆணைகள் பிறப்பித்து ரிமாண்டு மனுவில் மேற்குறிப்புகளையும் செய்தார்.

(ii) இதே போன்று 1973ஆம் ஆண்டு மே திங்கள் 18ஆம் நாளன்று ஜெயராமன் என்பவரையும் ஏனைய இரண்டு பேர்கள் குறித்து இதே வழக்கில் மற்றொரு ரிமாண்ட் மனுவையும் பெற்றார். (Ex. A-2) குற்றம் சாட்டப்பட்ட மூவரிடமிருந்தும் புகார்கள் எவையும் அவரிடம் செய்யப்படவில்லே. 15 நாட்களுக்கு நீதித் துறைக் காவலில் வைக்கப்பட்டனர். அதற்கான மேற் குறிப்புகள் காவல் ரிமாண்டு மனுவில் செய்யப்பட்டது. 1973ஆம் ஆண்டு மே திங்கள் 19ஆம் நாளன்று பலராமன் என்பவரையும் ஏனைய ஆறு பேர்களையும் காவலில் வைக்க மற்றொரு ரிமாண்டு மனு பெறப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டு இவர் முன் கொண்டுவரப்பட்ட 7 பேர்களும் புகார் எவையும் செய்யவில்லே. அவர்கள் நீதித் துறை காவலில் வைக்கப்பட்டனர். அதற்கான மேற் குறிப்புகள் ரிமாண்டு மனுவில் செய்யப்பட்டது.

(iii) திரு எம். பாலசுப்பிரமணியம் (A-12) 1978ஆம் ஆண்டு மே திங்கள் 29ஆம் நாளிலிருந்து மதுராந்தகம் சப்-மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 31ஆம் நாளன்று குற்ற வழக்கு எண் 80/73-ல் குற்றம் சாட்டப்பட்ட 55 பேர்களைக் காவலில் வைக்கும்படி கேட்டு மதுராந்தகம் காவல் துறை இன்ஸ்பெக்டரிடமிருந்து மனு ஒன்றைப் பெற்றார். அவர்கள் இவர் முன்பு கொண்டுவரப்பட்டனர். (Ex. A-9) 15 நாட்களுக்கு அவர்கள் நீதித் துறைக் காவலில் வைக்கப்பட்டனர். அதற்கான மேற்குறிப்புகள் செய்யப்பட்டது. காவலர்கள் துன்புறுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட எவரும் புகார்கள் எதுவும் செய்யவில்லே. 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாளன்றே அல்லது அதற்குப் பிந்திய நாட்களிலோ பெரியகுப்பத்தில் காவல் துறையினரால் நடத்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள சொத்துக்களைக் கொள்ளையடித்தல், பெண்களைப் பலவந்தப்படுத்துதல் போன்றவைகள் குறித்து அவர்கள் எதுவும் அவரிடம் கூறவில்லே. குற்ற வழக்கு எண் 80/73-ல் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட மீண் விண்ணப்பத்தையும் அது குறித்த பதிவெடுக்கையும் அவர் சமர்ப்பித்தார். (Ex. A-10) காவல் துறையினர் துன்புறுத்தல் எதுவும் குறித்துக் குற்றச்சாட்டுகள் எதுவும் செய்யப்படவில்லே யென்று திரு இலட்சுமண ரெட்டியின் குறுக்கு விசாரணையின்போது அவர் தெரிவித்தார்.

(n) மதுராந்தகம் தாசில்தார் திரு முருகேசனின் சாட்சியம் (A-15):—

(i) 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ஆம் நாள் அன்றிலிருந்து இவர் மதுராந்தகம் தாசில்தாராகப் பணிபுரிந்து வருகின்றார். மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க 1973ஆம் ஆண்டு மே திங்கள் 21ஆம் நாள் அன்று பெரியகுப்பத்திற்குச் சென்று ஓர் அறிக்கையைப் பணிந்தனுப்பினர். அதில் ஒரு நகலை உதவி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பினர். அது (Ex. A-18) என்று அடையாளமிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் அவர் பெரியகுப்பத்திற்குச் சென்றிருந்தபோது மூன்று குடிசைகள் மட்டுமே பாதிக்கப் பட்டிருந்தன எனத் தெரிவித்துள்ளார்.

(ii) குற்றம் சாட்டப்பட்டவர்கள் செய்யூர் காவல் நிலையத்தில் துன்புறுத்தப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுச் செய்தி உதவி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கிடைத்ததின் மேல் செய்யூருக்குச் சென்று விசாரணைக்குப் பின் தனிங்கால் எழுதப்பட்டு கையொப்பமிடப்பட்டதும் மற்றும் ஒன்பது பேர்களால் அத்தாட்சி செய்யப்பட்டதுமான ஓர் அறிக்கையை எழுதினர். கைது செய்யப் பட்ட எவரும் காவல் துறையினரால் துன்புறுத்தப்படவில்லே அல்லது சித்திரவதை செய்யப்படவில்லே. அவர்கள் நன்கு உணவு கொடுக்கப்பட்டனர், காவல் துறையால் முறையாக நடத்தப்பட்டனர் என்று தனிங் தானே இவ்வறிக்கையில் எழுதியுள்ளார். இதுபற்றி ஓர் அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பினர். அதன் நகலி ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பினர் (Ex. A-20).

(iii) பெரியகுப்பத்தில் 1973 மே திங்களில் 11ஆம் தேதியிலிருந்து 16ஆம் தேதி வரை இச்சம்பவங்கள் பற்றியும், கலகம் பற்றியும் காவல்துறையினர் மக்களே அடித்ததாக அல்லது அட்டூழியம் செய்ததாக கடலூர் கிராம முன்சீபிடமிருந்து செய்தி எதுவும் பெறப்படவில்லை என்று திரு இலட்சுமண ரெட்டியின் குறுக்கு விசாரணையின் போது கூறினர். 1973 மே திங்கள் 11ஆம் தேதியிலிருந்து 16ஆம் தேதிவரை அவர் ஜமாபந்திப் பணியில் ஈடுபட்டிருந்தார் என்றும், அந்தக் கால அளவில் பெரியகுப்பத்தில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி கிராமத்தார் ஒருவரும் புகார் எதுவும் செய்யவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரால் விசாரணை நடத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட பின்னரே பெரியகுப்பத்தில் நடந்ததாகக் கூறப்படும் நடவடிக்கைகள் பற்றி தெரிந்துகொண்டார்.

(o) திரு கே. டி. நாராயணசாமியின் சாட்சியம் (A-6).—பொதுப்பணித் துறை லாக் சூப்பிரண்ட், கடலூர் :—(i) 1973 மே திங்கள் 12ஆம் நாளன்று சென்னையில் தனது பணிகளை முடித்துக் கொண்ட பின்பு பிற்பகல் சுமார் 1 மணி அளவில் லாக் சைட்டுக்கு இவர் திரும்பினர். காவல் துறையினர் சுமார் 30 பெண்களுடன் பிற்பகல் சுமார் 3 மணியளவில் லாக் சைட்டுக்கு வந்தது உண்மை என்று கூறினர். செங்கல்பட்டு காவல்துறை டெபுடி சூப்பிரண்ட், மதுராந்தகம் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஆகிய காவல்துறை அதிகாரிகளையும் சுமார் 40 முதல் 50 காவலர்களும் வந்ததாக இவர் கூறினர். காவலர் விசாரணைக்குப் பிறகு பெண்கள் அனைவரும் மாலை சுமார் 5-30 மணியளவில் திருப்பியனுப்பப் பட்டனர். பெரியகுப்பத்தில் பெண்கள் துன்புறுத்தப்பட்டனர் ; அவர்களுடைய உடமைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன என்று அவரிடம் யாரும் கூறவுமில்லை. அவருக்குத் தெரியவும் தெரியாது. பெரியகுப்பத்தில் பெண்கள் பலவந்தப் படுத்தப்பட்டனர், சுற்றிவளைக்கப்பட்டனர், அவர்களுடைய வீடுகள் காவல்துறை யினரால் கொள்ளையடிக்கப்பட்டன என்று யாரும் இவரிடம் கூறவுமில்லை. இவருக்குத் தெரியவும் தெரியாது. 1973 மே திங்கள் 12ம் நாளன்று இரவு காவல் துறையினர் 300 கோழிகளைச் சமைத்துச் சாப்பிடவில்லை. 1973 மே திங்கள் 13ஆம் நாளன்று காலை சுமார் 6 மணிக்கு இவர் கூவத்தூருக்குச் சென்றார். அதே நாளில் இரவு சுமார் 10 மணியளவில் அவர் திரும்பியபோது, காவல் துறை டெபுடி சூப்பிரண்ட், காவல் துறை இன்ஸ்பெக்டர், சுமார் 40, 50 காவலர் ஆகியவர்களை இவர் கண்டார்.

(ii) சாதாரணமாக குப்பத்து மக்கள் லாக்சைட் வழியாகத்தான் கடலூர் போகிறார்கள், திரும்பி குப்பங்களுக்கு வருகிறார்கள் என்று திரு லட்சுமண ரெட்டி குறுக்கு விசாரணை செய்தபோது இவர் சாட்சியம் கூறினர். லாக்சைட் தரைப் பகுதியை விட பெரியகுப்பம், அலிக்குப்பம் ஆகியவை உயர்ந்த இடத்தில் அமைந்துள்ளதால் இந்த இரண்டு குப்பங்களின் குடிசைகளையும் அங்கிருந்து பார்க்க முடியும். 12ஆம் தேதி இவர் லாக்சைட்டில் தங்கியிருந்தபோது அங்கு கலவரம் ஏற்படவில்லை அல்லது பெரிய குப்பத்தைச் சேர்ந்த மக்கள் பயத்தால் ஓடும் அளவிற்கு எந்தவிதச் சம்பவங்களும் ஏற்படவில்லை. பெண்கள் பலவந்தப் படுத்தப்பட்டனர், சுற்றிவளைக்கப்பட்டனர் என்று கூறிக்கொண்டு ஆண்களோ அல்லது பெண்களோ ஓடியதையும் அவர்கள் பார்க்கவில்லை.

XIV. பெரியகுப்பம் பொதுமக்கள் சார்பாக எடுத்துரைக்கப் பட்ட சாட்சியம்.

(1) திருமதி ரமணிபாயின் சாட்சியம் (P-1)— (a) அறிவிப்புக்கிணங்க 1973 ஜூன் திங்கள் 18ஆம் நாள் இவர் தமது வாக்குமூலத்தை விசாரணைக் கமிஷன் முன்பு தாக்கல் செய்துள்ளார்.—(Ex· P-1) பெரியகுப்பம் பொதுமக்களின் சார்பாக இச்சம்பவங்கள் குறித்த கூற்று XIIவது அத்தியாயத்தில் 39-வது பக்கத்திலிருந்து 44-வது பக்கம் வரை விவரமாக கொடுக்கப்பட்டுள்ள இவரது வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே பொதுவாக அமைந்துள்ளதால், நான் மீண்டும் இங்கு அவற்றைத் திருப்பிக்கூறக் கருதவில்லை. எனினும் அவரது வாக்கு மூலத்தின் முக்கியக் கூறுகளை ஆணைக்குழுவின் முன் வைப்பேன்.

(b) சுமார் 7 அல்லது 8 மாதங்களாக இவர் நிறுவன காங்கிரஸ் மாநிலப் பெண்கள் பிரிவின் அமைப்பாளராக இருந்து வந்துள்ளார். இதற்கு முன்பும் தற்போதும்கூட இவர் தமிழ்நாடுவிசைப்படகு ஓட்டிகள் சங்கத்தின் செயலாளராகவும், தமிழ்நாடு தேசிய மீனவர்கள் ஐக்கிய சங்கத்தின் இணைச் செயலாளராகவும்

இருந்து வருகிறார். நீண்டகாலமாக இவர் நிறுவன காங்கிரசின் தீவிர உறுப்பின ராவார். பல சமூகநல நிறுவனங்களுடன் தொடர்பும் கொண்டுள்ளார். பெரிய குப்பத்தில் சில பெண்கள் இவரிடம் கொடுத்த வாக்குமூலத்தையும் தாம் 1973 மே திங்கள் 26ஆம் நாள் அவர் பெரியகுப்பத்திற்கு சென்றிருந்தபோது அங்கு கண்டவற்றையும், அடிப்படையாக வைத்துத் தமது வாக்கு மூலத்தைக் கொடுத் துள்ளார். இச் சம்பவங்கள் சம்பந்தமாக இவருக்கும் மற்றவர்களுக்கும் அனுப் பப்பட்டிருந்த கடிதங்களையும் இவர் வாக்குமூலம் அடிப்படையாகக் கொண் டுள்ளது. 1973 மே திங்களில் 11, 12, 13, 14 தேதிகளில் இவர் பெரியகுப்பத்தில் நேரில் இருக்கவில்லை. 1973 மே திங்கள் 23 ஆம் நாளன்று இவர் காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்திற்குச் சென்றிருந்தபோது இச்சம்பவங்கள் பற்றி இவரிடம் கூறப்பட்டது. மேலும் 1973 மே திங்கள் 24ஆம் நாளன்று இச்சம்பவங்கள் பற்றி பெரியகுப்பத்திலிருந்து வந்திருந்த சில முக்கிய நபர்கள் இவரிடம் கூறினர். இவை தேவை என்று நீங்கள்கவில்லையாகையால் இவ்விவரங்களைத் தமது வாக்கு மூலத்தில் குறிப்பிடவில்லை. மே 24 ஆம் தேதி கண்ணப்ப செட்டி (P-2) சடகோபால், பெரியகருப்பன் ஆகியோர் இவரது வீட்டிற்கு வந்து இச் சம்பவங் களைப் பற்றி கூறினர்கள். பெரியகுப்பத்தில் இவருக்கு நேரடி உறவினர்கள் யாருமில்லை. மே 24ஆம் தேதியன்று கண்ணப்பச் செட்டி, சடகோபால், பெரியகருப்பன் ஆகியோர் இவரைச் சந்தித்தபோது, எம்.எல்.ஏ. பாண்டுரங்கன், காவல் துறைச் சரக இன்ஸ்பெக்டர் ஆகியோர் யார், யார் என அவரிடம் கூறப் பட்டது. 1973 மே திங்கள் 26ஆம் நாள் பெரியகுப்பத்திற்குச் செல்வதற்கு முன் இவரும் வழக்கறிஞர் சங்கரனும் திரு கே. என். ஜெயராமனும் செங்கற்பட்டு காவல்துறை டெபுடி சூப்பிரண்டை அவரது அலுவலகத்தில் சந்தித்தனர். காவல் துறை டெபுடி சூப்பிரண்டிடம் இச்சம்பவங்கள் பற்றி எழுத்து மூலமாகவன்றி வாய்மொழிப் புகார் மட்டுமே கொடுத்தார்கள்.

(c) பெரியகுப்பம், செய்யூர் காவல் நிலையம் ஆகிய இடங்களுக்குச் சென்ற பின்பு சப்-கலெக்டருக்கு மனு ஒன்றும் கொடுக்கவில்லை என்று காவல் துறை யினரின் சிறப்பு விழக்கறிஞரின் குறுக்கு விசாரணையின் போது இவர் தெரிவித்தார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 17ஆம் (Ex. A 4) நாளிட்ட தந்தியின் தகல் ஒன்று காங்கிரஸ் அலுவலகத்தில் இவரிடம் கொடுக்கப்பட்டது. மே 19, 23 நாளிட்ட குறிப்பாணைகளும் (Ex. A14, Ex. A 15) பொறுத்த மட்டில், சென்னை காங்கிரஸ் அலுவலகத்திற்கு அவைகள் எவ்வாறு அனுப்பப்பட்டன என்பது பற்றிய விவரங்களை அவர் விசாரிக்கவில்லை. அவரது கட்சித் தலைவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவர் பெரியகுப்பத்திற்குச் சென்றார். மாவட்டக் கலெக்டரையோ அல்லது சப்கலெக்டரையோ கண்டு மனுக்கள் கொடுக்கும்படி இவரிடம் தலைவர்கள் ஆலோசனை கூறவில்லை. பெரியகுப்பத்திலிருந்து திரும்பிய பின்பு பத்திரிகை அறிக்கை ஒன்றின் மூலம் பத்திரிகையாளர்களுக்குச் செய்தி கொடுத்தார். பெரியகுப்பத்திற்கு இவர் சென்றபோது பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இவருடன் சேர்ந்துகொண்டனர். ஆனால் எந்தக் குறிப்பிட்ட கட்சி, எத்தனை கட்சிகள் அல்லது நபர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பது இவருக்குத் தெரியாது.

(d) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாளில் இவர் பெரியகுப்பத் திற்குச் சென்றிருந்தசோது ஆணை, பெண்ணை யாரும் அங்கு காணப்படவில்லை. பெரியகுப்பத்து மக்கள் சின்ன குப்பத்துக்குச் சென்றுள்ளார்கள் என்று கூறப்பட்ட தால் கடலூர் காலனியிலிருந்து தன்னுடை வந்த மக்கள் எனும் மூலம் சின்னக் குப்பத்திற்குச் சொல்லியனுப்பினர். பெரியகுப்பத்தைச் சேர்ந்த பெண்கள் காவல் துறையினரால் ஒவ்வொரு நாளும் துரத்தப்படுவதால் எந்த நாளில் எந்த நேரத்தில் அவர்கள் எங்கிருப்பார்கள் என்று உறுதியாகக் கூற முடியாது என்று மே திங்கள் 24ஆம் நாளில் கண்ணப்பச் செட்டி, சடகோபால், பெரிய கருப்பன் ஆகியோர் இவரிடம் கூறினர். தேவையில்லை என்று நினைத்ததால், அவர் தனது வாக்குமூலத்தில் இதைக் குறிப்பிடவில்லை. இவர் பெரியகுப்பத் திற்கு வந்திருப்பதைக் கேள்விப்பட்டு சின்னக்குப்பத்திலிருந்து பெரியகுப்பத்தைச் சேர்ந்த பெண்கள் சுமார் 20—30 பேர் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாளில் இவரைப் பார்க்க வந்தனர். அவர்களில் பலர் தங்களது உடம்பில் உள்ள பலவகைப்பட்ட காயங்களைக் காட்டினர். தனது வாக்குமூலத்தில் இதை குறிப் பிடவில்லை. காவல் துறையினராலும், தி.மு.க. கட்சியினராலும் தாங்கள் பலவந்தப்படுத்தப்பட்டனர், கற்பழிக்கப்பட்டனர் என்ற சில பெண்கள் கூறி னர். காயங்களுக்கு மருந்து போடுவதற்காக மருத்துவரிடம் சென்றீர்களா என்று அவர்களை இவர் கேட்டபோது சின்னக்குப்பத்தில் அவர்கள் தங்கியிருப்பதே ஒரு சோதனை என்றும், கால்வாயைக் கடந்து மருத்துவ வசதிகளைப் பெறுவதற்காக மருத்துவர் ஒருவரை அணுகுவது சாத்தியமல்ல என்று இவரிடம் கூறப்பட்டது.

உடம்பில் குறிப்பிட்ட இடங்களில் ஏற்பட்டிருந்த குறிப்பிட்ட வகைக் காயங்களே அவர்கள் காட்டும் நிலையில் இல்லாததால் அவர்கள் தாங்களாகவே சிகிச்சையும், மருந்துப் போட்டுக் கொண்டார்கள். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாளிலிருந்து 26ஆம் நாள் வரை காவல் துறையினரின் தொல்லைகளைத் தவிர்ப்பதற்காக அருகிலிருக்கும் சின்னக்குப்பம், புதுப்பட்டினம் ஒய்யாலிக்குப்பம், போன்ற பல்வேறு இடங்களில் அவர்கள் மாறி மாறித் தங்கி வந்தனர். .எப்படியும் தங்களது கஷ்டங்களை சின்னக் குப்பத்தில் இருக்கும் உறவினர்களிடம் சொல்லியிருப்பார்கள் என்று இவர் நினைத்ததால், சின்னக்குப்பத்திலிருக்கும் உறவினர்களிடம் உங்கள் கஷ்டங்களை எடுத்துச் சொன்னீர்களா என்று இவர் கேட்கவில்லை. அவர்கள் அவர்களின் உடலின் மீது எந்தக் காயத்தையும் அவர்பார்க்காத காரணத்தால் தங்கள் உறவினர்களிடம் இதனைக் கூறினார்களா என்று அவர் கேட்கவில்லை என்று சொல்லப்பட்ட கருத்தை இவர் மறுத்தார். காவல்துறை படுபடி சூப்பிரண்டையும் மற்றும் ஏனையோரையும் இவர் சந்தித்த பின்னரே அலிக்குப்பம், பெரியகுப்பம் மக்களிடையே 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் அன்று தகராறுகள் ஏற்பட்டது குறித்து அவருக்குத் தெரியவந்தது. 1973ஆம் ஆண்டு மே திங்கள் 23ஆம் நாளன்று கண்ணப்பச் செட்டியும் பெரியகுப்பத்தை சேர்ந்த (கடலூர் காலனியைச் சேர்ந்தவர்கள்) 10 அல்லது 15-க்கு மேற்பட்டவர்களுடன் சென்னையிலுள்ள அவரது வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்தனர். அப்போது அவர் தான் பெரியகுப்பம் முதலிய இடங்களுக்குச் சென்றுவந்தது குறித்து அவர்களிடம் கூறினார். அவர்தான் தெரிவித்த தகவல்களுக்கு 28-ம் நாளன்று கொடுத்த அறிக்கையைக் குறித்து அவர்களிடம் குறிப்பிடவில்லை. அவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் (பெண்கள் பகுதி) சார்பாகவும், தமிழ்நாடு விசைப்படகு உரிமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவராகிய அலிக்குப்பம் சீத்தாராமன் (P 3) இதில் சம்பந்தப்பட்டிருப்பதால் அவர் சார்பாகவும் இந்த விசாரணையில் கலந்துகொண்டார். அலிக்குப்பம், கடலூர் காலனியிலுள்ள பாதிக்கப்பட்டகாங்கிரஸ் கட்சியினருக்காகவும், பெரியகுப்பத்திலுள்ள அனைத்து மக்களும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் அவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாலும், அவர்கள் சார்பாக இவர் இவ்விசாரணையில் அக்கறை காட்டியுள்ளார். தனசிங், சீத்தாராமன் (P 3), பெருமாள் மற்றும் சிலர் அலிக்குப்பத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சிக்காரர்களாவர். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் விடியற்காலையில் ஏற்பட்ட தகராறுகளின் காரணமாக விளைந்த வழக்கிலிருந்து (குற்ற வழக்கு எண் 80/73) பெரியகுப்பத்தைச் சேர்ந்த தனசிங், சீத்தாராமன் மற்றும் ஏனையோரைக் காப்பாற்றுவதற்காக அவர் இந்த அறிக்கைகள் அனைத்தையும் அளித்துள்ளார் என்பதனையும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 24ஆம் நாளன்று அவரைக் கண்ணப்பச் செட்டி, சடகோபால் மற்றும் ஏனையோர் சந்தித்த பின்னர் அவர்களுடன் சேர்ந்து திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒன்றுகும் என்பதனையும் இவர் மறுத்துள்ளார்.

(e) அலிக்குப்பம் கிராமத்தினரின் வழக்கறிஞர் திரு இலட்சுமண ரெட்டி குறுக்கு விசாரணை செய்தபோது தனது தந்தை பெரியகுப்பத்தில் பிறந்து வளர்ந்தார் என்பது தனக்குத் தெரியாது என்று கூறினார். தனது தந்தையின் சொந்தக்காரர்களோப் பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றும் கூறினர். திரு ஜெயராமன் என்பவர் அவரது உடன்பிறந்த சகோதரர் ஆவார். அவர் அவரை விட சுமார் 25 வயது மூத்தவர். ஆனால் அவரது சகோதரர் பெரிய குப்பத்தில் தான் பிறந்தாரா என்பது அவருக்குத் தெரியாது. பெரியகுப்பத்தில் உள்ள அவரது சொந்தக்காரர்கள் அனைவரும் இந்த வழக்கில் சுபடட்டுள்ளதால் இவர் தனது நாட்டம் முழுவதையும் செலுத்தியுள்ளார் என்ற கூற்றினை இவர் மறுத்துள்ளார். நியாயமற்ற முறையில் எந்த இடத்தில் பெண்களுக்கு இடர் விளைவிக்கப்படுகின்றதோ, அந்த இடங்களுக்கு எல்லாம் தான் சென்று அந்த பெண்கள் அனைவரையும் காப்பாற்ற வேண்டியது கட்சியின் தாம் வகிக்கும் பதவியின் முக்கியக் கடமைகளில் ஒன்றுகும் என்று அவர் சொன்னர். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 24ஆம் நாளன்று இந்தச் சம்பவங்கள் குறித்து கண்ணப்பச் செட்டி மற்றும் ஏனையோரிடமிருந்து தகவல்களைப் பெற்ற பின்னர் இவர் பெரிய குப்பத்திற்குச் செல்லும் வழியில் செங்கற்பட்டு டெபுடி சூப்பிரண்டையே முதன் முதலாகச் சந்தித்தார். லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் கோபால் ரெட்டியார் என்பது அவருக்குத் தெரியும். அவர் நிறுவன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் இவர் அவரைச் சந்திக்கவுமில்லை அல்லது அவருடன் கலந்தாலோசிக்கவும் இல்லை. 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாளன்றைத் தவிர வேறு நாட்களில் இந்தச் சம்பவங்கள் நடந்தது குறித்துத் தனது வாக்குமூலத்தில் அவர் குறிப்பிடவில்லை. மே திங்கள் 13, 14 நாளன்றும் கூட காவலர்கள் பெரிய குப்பத்திற்கு வந்து 12ஆம் நாளன்று செய்ததைப் போலவே

அட்டுழியங்கள் செய்தனர் என்று அவர் கூறினர். அவர் தனது சாட்சியத்தில் இவற்றைக் குறிப்பிடலாம் என்று கருதியதால், தனது வாக்குமூலத்தில் இதனைக் குறிப்பிடவில்லை. இச்சம்பவம் பற்றி அவர் பொதுவாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பியதால் அவர் செய்தித்தாள்களுக்குக் கொடுத்த அறிக்கையில் பாதிக்கப்பட்ட பெண்களின் பெயர்களைக் குறிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கருதினர். குறிப்பிட்ட ஒரு வகுப்பினரிடையே எழுந்த ஒரு சாதாரணத் தகராறுக்கு அரசியல் தூபம்போட்டு அதற்கு அரசியல் காரணமும் காட்டும் பொருட்டே விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பினர் என்ற வாதத்தை அவர் ஒட்டு மொத்தமாக மறுக்கிறார். திண்டுக்கல் தேர்தலுக்காக ஆறுமுகம், எம். எல். ஏ., செய்யூர் பாலகிருஷ்ணன் ஆகியோர் மதுராந்தகத்தைவிட்டுச் சென்றுவிட்டது அவருக்குத் தெரியாது. அவர்கள் 1973-ஆம் ஆண்டு மே திங்கள் 12-ஆம் நாளன்று அங்கிருந்ததாக பெரியகுப்பம் மக்கள் அவரிடம் கூறினர். கடலூர் சொர்ணம், மே திங்கள் 10ஆம் நாள் முதல் வியாபார நிமித்தமாக ஊரைவிட்டுச் சென்றுவிட்டாரா என்பதையும் அவர் நேரில் அறிந்திருக்கவில்லை. ஆனல் கடலூர் சொர்ணம் அங்கு இருந்ததாக பெரியகுப்பம் மக்கள் கூறினர். சென்னைக்குத் தாம் திரும்பி வந்தவுடன் பத்திரிகைக்கு செய்திக் குறிப்புக் கொடுப்பதற்கு முன்னர் முதலமைச்சரைச் சந்திக்க அவர் முயற்சி செய்தார். ஆனல் சந்திக்க முடியவில்லை.

(2) (f) திரு கே. சண்ணப்பச் செட்டியின் (P-2) வாக்குமூலம். (a) இவர் பெரியகுப்பம், அலிக்குப்பம், சின்னக்குப்பம், கணத்தூர் குப்பம், வடபட்டினம், தென்பட்டினம் ஆகிய ஊர்களுக்கு நாட்டாண்மைக்காரர். பாரம்பரியமாக அவர் குப்பத்தின் மக்களுக்குத் தலைவராக இருந்து வருகிறார். வகுப்பினரின் வாழ்வைப் பாதிக்கும் அன்றாடப் பிரச்சினைகள், தகராறுகள் ஆகியவற்றைத் தீர்த்துவைக்க மக்கள் இவரை அணுகுகின்றனர். அச்சமயங்களில் தகராறுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் அவருக்கு படி கொடுக்கின்றனர். இது பாரம்பரியமாகக் கொடுக்கப்பட்டு வரும் படியாகும். இவர் தமது வாக்குமூலத்தை (Ex P-2) 1973ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18ஆம் நாளன்று கமிஷனிடம் தாக்கல் செய்தார்.

(b) அரசு ஒதுக்கியுள்ள மின்பிடி விசைப்படகு குறித்து ஒருபுறம் அலிக்குப்பத்தைச் சேர்ந்த பாண்டுரங்களுக்கும் மறுபுறம் தனசிங், அவரது சகோதரர் சீத்தாராமன் ஆகியோருக்கும் இடையே தகராறு எழுந்தது. படகு அலிக்குப்பம் மக்களுக்குச் சொந்தமாக இருக்கின்றதால், அலிக்குப்பம் மக்களுக்கு சீதாராமன் 5,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று பாண்டுரங்கன் கூறினர். பாலகிருஷ்ணன் பஞ்சாமிர்தம், வடிவேலு ஆகியோரும் இக்கோரிக்கையில் பாண்டுரங்கனுடன் சேர்ந்துகொண்டனர். சீதாராமன் இத்தொகையைக் கொடுக்க மறுத்தார். அலிக்குப்பத்திலுள்ள பழைய கோயிலை திருப்பணி செய்து மண்டபத்தின் முகப்பில் தனது பெயர் பொறிக்கப்படவேண்டுமென்று சீதாராமன் விரும்பினர். ஆனல், அலிக்குப்பம் மக்களின் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. தகராறு காரணமாக கிராமத்தில் இவ்விரு சாராரிடையே (தனசிங்கும் அவரது கூட்டாளிகளும் பாண்டுரங்கனும் அவரது கூட்டாளிகளும்) விரோத மனப்பாண்மை நிலவியது. அவ்வப்போது இவர்களிடையே அடிதடி ரகளைகளும் நடந்துள்ளது. தனசிங், சீதாராமன், தனபால், ஆறுமுகம் ஆகியோர் செய்யூர் காவல் நிலையத்தில் புகார்களைக் கொடுத்தனர். காவலர் இவற்றின்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(c) பாண்டுரங்கன், பாலகிருஷ்ணன், தனசிங், சீதாராமன் ஆகியோர் அவரிடம் வந்து ஆறுமுகம், எம். எல். ஏ. அவரைச் சென்னையில் உள்ள எம்.எல்.ஏ விடுதிக்கு வருமாறு கேட்டுக்கொண்டார் எனக் கூறினர். அவர் பாப்பார மூர்த்தி செட்டியார், சீதாராமன், தனசிங், பாலகிருஷ்ணன், பாண்டுரங்கன் ஆகியோருடன் சென்னைக்குச் சென்றார். ஆறுமுகம், எம். ஏல்.ஏ. வைச் தவிர செய்யூர் பாலகிருஷ்ணன், கடலூர் சொர்ணம், சென்னையைச் சேர்ந்த குப்புராஜ் மற்றும் சிலர் அவருடன் இருந்தனர். ஏற்கெனவே ஒப்புக்கொண்டபடி ரூ 5,000-ஐ தனசிங் கொடுக்கவில்லை என்று ஆறுமுகம், எம்.ஏல்.ஏ. தனசிங்கிடம் கூறினர். மேலும் காங்கிரஸ் கட்சிக்கு மாறியதற்காகவும் கோபால் ரெட்டியாருக்காகப் பிரசாரம் செய்ததற்காகவும் அவர் கண்டனம் தெரிவித்தார் என்றும் கூறினர். அவர் கிராமத்தினரிடமிருந்து ரூ. 5,000 கேட்டதாகவும், அவர்கள் மிகவும் ஏழைகள் என்றும் இதனல் இரண்டு கட்சிகளுக்குமிடையே பிரச்சினைகள் எழும் என்றும் ஆறுமுகம், எம்.ஏல்.ஏ.விடம் கூறினர். ஆறுமுகம், எம்எல். ஏ. ரூ 5,000 கொடுக்க வேண்டுமென்று, தான் வலியுறுத்தவில்லை என்றும் அவர்கள்

தங்கள் கிராமத்திற்குச் சென்று அமைதியாக வாழும்படியும் கூறினர். அவர்கள் எம்.எல்.ஏ. விடுதியை விட்டு வெளியே வருவதற்கு முன்பாக கிராமத்தில் இனி எந்தச் சண்டையும் நடக்காது என்பது குறித்து வாக்குமூலம் ஒன்றை அவர்களிட மிருந்து எழுதி வாங்கிக் கொண்டார். இதில் தனசிங்கும், சீதாராமனும் கையொப்பமிட்டனர், அலிக்குப்பம் கிராமத்தினரின் விருப்பத்திற்கு ஒவ்வாத வகையில் எவ்வாறு அவர்கள் இத்தகையதொரு உடன்படிக்கைக்கு வந்தனர் என்று அலிக்குப்பம் மக்கள் பாண்டுரங்கனையும் பாலகிருஷ்ணனையும் கேட்டனர். கிராமத்தில் அவர்களிடையே மேலும் சண்டைகள் ஏற்பட்டன. அதன்பிறகு தனசிங் மீண்டும் அவரைச் சந்தித்து தனக்கும் பாண்டுரங்கன், பால கிருஷ்ணன் ஆகியோருக்குமிடையே ஏற்பட்ட தகராரைத் தீர்த்து வைக்குமாறு அவரைக் கேட்டுக்கொண்டார். இதற்கு அவர் படியும் கட்டினர். அவர் பாண்டுரங்கனையும் பாலகிருஷ்ணனையும் பெரியகுப்பத்துக்கு வருமாறு சொல்லியனுப்பியபொழுது அவர்கள் எம்.எல்.ஏயின் உத்தரவில்லாமல் தங்களால் வர இயலாது எனக் கூறிவிட்டனர். சில நாட்களுக்குப் பிறகு எம்.எல்.ஏ. ஆறுமுகம் செய்யூர் பாலகிருஷ்ணன், கடலூர் சொர்ணம் ஆகியோர் கடலூர் சொர்ணத்தின் வீட்டில் இருந்ததாகக் கேள்விப்பட்டதன் பேரில் அவர்களை அங்கு சென்று பார்த்து இது பற்றிப் பேசலாம் என்று கருதினர். அவர் கால்வாயை நெருங்கு கையில் பெரியகுப்பத்தின் தென் பகுதியிலிருந்து கூச்சல் வருவதைக் கேட்டு அவர் பெரியகுப்பத்திற்குத் திரும்பினர். பாண்டுரங்கன், பாலகிருஷ்ணன், வடிவேலு, பஞ்சாமிர்தம் ஆகியோருடன் 60 அல்லது 70 பேர் கொண்ட கூட்டத்தினர் அலிக்குப்பத்தைச் சேர்ந்த சில பெண்களும் அதில் இருந்தனர். தனசிங், சீதாராமன், தனபால், ஆறுமுகம், பெருமாள் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் ஏனையோர் மொத்தம் சுமார் 20 பேரைத் தூரத்திலிருந்தால் அவர்கள் பெரிய குப்பத்தை நோக்கி ஓடி வருவதை அவர் பார்த்தார். தனசிங், சீதாராமன் அவர்களது ஆதரவாளர்கள் ஆகியோரை பெரியகுப்பத்தில் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று அவர்கள் கூவினர். அவ்வாறு அவர்களைச் சேர்த்தால் அவர்கள் இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் கூவினர். இவை அனைத்தும் மூன்று திங்களுக்கு முன்பு ஒரு வெள்ளிக்கிழமையன்று மாலை சுமார் 4-30 மணிக்கு நடந்தது. (பெரியகுப்பத்தில் நிகழ்ச்சி நடந்த நாள் 1970ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் நாளன்று என்று கூற இது குறிப்பிடப்பட்டுள்ள) அன்றிரவு சுமார் 11 மணிக்கு இரவு உணவை முடித்த பின்னர் வெளிக்குச் சென்ற சில பெண்கள் திரும்பிவந்து எல்லையம்மன் கோயிலுக்கு அருகில் சுமார் 30 அல்லது 40 பேர் கொண்ட மக்கள் கூட்டம் ஒன்றைப் பார்த்ததாகக் கூறினர். அவர்கள் பெரிய குப்பத்தைச் சேர்ந்த எல்லா ஆண்களையும் திரட்டிக்கொண்டு (இவர்கள் சுமார் 100 பேர் இருப்பர்) எல்லையம்மன் கோவிலை நோக்கிச் சென்றனர். இவர்களைப் பார்த்ததும் மேற்கு நோக்கி ஒரு கூட்டம் திரும்பிச் செல்வதை அவர்கள் பார்த்தனர்.

இவர்கள் அவர்களைத் துரத்திச் சென்றபோது, அவர்கள் கால்வாயை கடந்து சென்றுள்ளனர். அவர்கள் அவ்வாறு கடந்து செல்ல முடியுமையில் அவர்கள் மறுபக்கத்தில் காவலர்கள், '' நாங்கள் போலீசார்'' என்று சொல்லிக் கொண்டு காவலர் ஊதுகுழலை ஊதுவதைக் கேட்டார்கள். '' நான் தான் ஆறுமுகம், எம்.எல்.ஏ. பொழுது விடிந்ததும் என்ன நடக்கிறது பார்'' என்று குரல் கொடுத்ததையும் அவர் கேட்டார். அவர், அந்தக் குரல் ஆறுமுகம், எம்.எல்.ஏ. வினுடையது என்பதையும் தெரிந்துகொண்டார்.

(d) அடுத்த நாள் சனிக்கிழமை காலை சுமார் 11-00 மணிக்கு சின்னகுப்பத்திலிருந்து அவரும், பெரியகுப்பம் ஆட்களும், ஆறுமுகம், எம்.எல்.ஏ. செய்யூர் பாலகிருஷ்ணன், அணைக்கட்டு குள்ளு, கடலூர் சந்திரன், வண்டு நாயக்கர், சொர்ணம், பாண்டுரங்கன், வடிவேலு, பஞ்சாமிர்தம் மற்றும் அலிக்குப்பத்திலிருந்து சிலரும் லாக் சைட்டுக்கருகே இரண்டு காவல் துறை வண்டிகளிலிருந்தும், ஒரு ஜீப் வண்டியிலிருந்தும் காவல் துறையினருடன் இறங்கி வருவதைக் கண்டார்கள். அவர்களைக் கண்டதும், மேற்சொன்ன அனைவரும் சென்னையை நோக்கி ஓடிவிட்டார்கள்.

(e) சுமார் நான்கு நாட்களுக்குப் பின்னர் அவருடைய மகன் ஜெயராமனுடைய (P-4) மனைவியும், மருமகளுமான நாயகம்மாள் (P-8) திருவான்மியூர் குப்பத்திற்கு வந்தாள். காவல்துறையினர் பெரியகுப்பத்திற்கு வந்து பெண்களை அடித்து, கோழிக்குஞ்சுகளையும், நான்கு பசுமாடுகளையும் எடுத்துச் சென்றனர் என்றும், அவர்களுடைய சவுக்கு நாற்றுகளுக்குச் சேதம் விளைவித்தனர் என்றும் அவள் அவரிடம் கூறினுள். காவல்துறையினர் அவர்களுடைய ஆடைகளைக் கழற்றிய பின்னர் அடித்தனர் என்றும் அவள் அவரிடம் கூறினுள். தலைமைக் காவலர்

மாணிக்கமும், காவலர் மல்லிகாவும் அவருடைய ஆடைகளை நீக்கி அவளை அடித்தனர் என்று நாயகம்மாள் அவரிடம் கூறினாள். அடுத்தாண்டு தங்களுக்கு '' தொப்பியோடு '' குழந்தைகள் பிறக்கும் என்று காவலர்கள் சொல்லியதாக அவள் மேலும் அவரிடம் கூறினாள்.

(f) காவலருக்கான தனி வழக்கறிஞர் செய்த குறுக்கு விசாரணையில் அவர் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 10, 11ஆம் நாளன்று இரவு அலிகுப்பத்தில் ஏற்பட்ட குழப்பம் குறித்துத் தனக்கு ஏதும் தெரியாது என்று கூறினார். தனசிங்கும், சீதாராமனும் பெரியகுப்பத்திலுள்ளவர்கள் பலபேருடன் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாளன்று அதிகாலை அலிக்குப்பத்தை திடீர் சோதனையிட்டு, அவர்களுடைய குடிசைகளுக்குச் சேதம் விளைவித்து, 11 பேர்களை அடித்து காயப்படுத்தினர் என்பது உண்மையல்ல. 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாளன்று மாலை ஏறத்தாழ 4–30 மணிக்கு மட்டுமே பெரியகுப்பத்திற்கு தனசிங்கும், சீதாராமனும் வந்தனர் என்று அவர் கூறினார். தனசிங்கையும், சீதாராமனையும் ஏன் அலிகுப்பத்திலிருந்து வந்தீர்கள் என்று அவர் கேட்கவில்லை. மூன்று திங்களுக்கு முன்பே பெரியகுப்பத்திற்கு தனசிங்கும், சீதாராமனும், மற்றவர்களும் வந்தனர் என்பதும் 11ஆம் தேதி காலை அலிகுப்பத்தை அவர்கள் அனைவரும் திடீர் சோதனை நடத்தினர் என்பதும் உண்மையில்லை. திருவான்மியூர் குப்பத்தில் நாமதேவ் செட்டியார் என்பவர் ஒருவர் வீட்டில் அவர் தங்கினார். 12ஆம் தேதி காலை பெரியகுப்பத்திலிருந்து அவர் புறப்பட்ட பின்னர் மாலை சென்னை வந்தடைந்ததும் பெரியகுப்பத்தில் என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரியாது. பெரியகுப்பத்திலிருந்து அவர் புறப்பட்ட குறிப்பிட்ட நேரம் குறித்து திருவான்மியூர் காவல் துறைக்கு மேலும் ஏதும் அவர் கொடுக்கவில்லை. சட்கோபால், பெரிய கருப்பன் ஆகியோர் அவரை மந்தவெளியில் பார்க்க வந்தனர். அவர் ஜெயராம வாத்தியாரிடம் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் குறித்து புகார் ஒன்று கொடுக்க அவர்களை ஜெயராம வாத்தியாருடன் காவல் துறைக்கு அனுப்பினார்.

(g) மே 24ஆம் நாளன்று, சட்கோபால், பெரிய கருப்பன் ஆகியோர் அவரை திருவான்மியூர் குப்பத்தில் பார்த்து அவர்கள் அனைவரும் திருமதி வி.ரமணிபாயைச் (P-1) சந்திக்கச் சென்றனர். வக்கீலின் வீட்டில் Ex. A-14-ல் அவர் கையெழுத்திட்டார். வக்கீலின் பெயர் அவளுக்குத் தெரியவில்லை. Ex. P-14-ல் என்ன எழுதியிருந்தார் என்பதையும் அவர் விளக்கவில்லை. பெரியகுப்பத்தை விட்டு அவர் புறப்பட்ட பிறகு நான்காம் நாள் திருவான்மியூர் குப்பத்தில் அவரைப் பார்ப்பதற்காக நாயகம்மாள் வந்தாள்.

(3) திரு. டி. சீதாராமன் (P-3) கூறிய சாட்சியம்.—(a) எழுத்து மூலமான வாக்குமூலத்தை அவர் ஆணைக்குழுவின் முன் தாக்கல் செய்தார். அவர் அலிகுப்பத்திலேயே பிறந்து வளர்ந்தவர். இத்தனை ஆண்டுகாலமாக அவர் அங்குதான் இருந்து வந்துள்ளார். அவருடைய மூதாதையர்கள் அனைவரும் அலிகுப்பத்தைச் சேர்ந்தவர்களாவர். 1967-ல் அலிகுப்பத்திலுள்ள அனைவரும் தி. மு. கழகத்தில் இருந்தனர். 1971-ல் அலிகுப்பத்தைச் சேர்ந்த 11 குடும்பங்கள் காமராஜ் காங்கிரஸில் சேர்ந்தன. அவர் அலிகுப்பத்திலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராவார். அவர் சென்னை-செயற்பட்ட மீனவர் கூட்டமைப்பின் பிரதிநிதி உறுப்பினராகவும் இருந்து வந்தார். கூட்டமைப்பின் மூலம் அவருக்கு மீன்பிடி விசைப்படகு ஒன்று கிடைத்தது. அவர் படகுக்காக விண்ணப்பித்த பின்னர், நன்மையற்சிக்காகவும், பொறாமைக்காகவும் பயன்படுத்திக் கொள்ள ஆறுமுகம், எம். எல். ஏ.வை நாடினார். அவரைக் கவவித்துக்கொள்ள முடியுமா என்று எம். எல். ஏ. அவரைக் கேட்டார். தனக்கு அந்தப் படகு கிடைக்கப்பெற்றால் பணம் கொடுப்பதாக அவர் கூறினார். படகு அவருக்கு கிடைத்தபின்னர், ஆறுமுகம், எம். எல். ஏ. ரூ. 5,000 லஞ்சம் கொடுக்கும்படிக் கேட்டார். இந்நிகழ்ச்சி கடலூர் சொர்ணம் வீட்டில் நிகழ்ந்தது. முதலில் ரூ. 1,000 கொடுப்பதாகவும், பின்னர் சிறிது சிறிதாகக் கொடுப்பதாகவும் அவர் கூறினார். எம். எல். ஏ. தொகை முழுவதும் தேவை என்று கூறிவிட்டுப் போய்விட்டார். இதற்குப் பின்னர் பாண்டுரங்கனும் மற்றும் சிலரும் சவுக்குத் தோப்பில் அவரை வழிமறித்து கையாலும் தடியாலும் அடித்தனர். இது குறித்து செய்யூர் காவல் நிலையத்தில் அவர் கொடுத்த புகார் விசாரணை செய்யப்படவில்லை. ஆறுமுகம், எம்.எல்.ஏ. சென்னை, எம்.எல்.ஏ. விடுதியில் சமாதான பேச்சுவார்த்தைக்காக வருமாறு தன்னைக் கேட்டதாகக் கூறி குப்புசாமி அவருக்கு சொல்லி அனுப்பிய விஷயத்தை இவரும் ஒப்புக்கொள்கிறார். அவ்வாறே, தனசிங், வினுயகமூர்த்தி, கண்ணப்ப செட்டியார் மற்றும் சிலரும் அங்கு சென்றனர். தனக்குப் பணம் எதுவும் தேவையில்லை என்றும் ஆனால்,

கிராமத்தவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றும் திரு. ஆறுமுகம் கூறினர். அவ்வாறு செய்ய இயலாவிட்டால் அவர் அதை கோவிலுக்குக் கொடுத்திருக்க லாம். கோயில் சீரமைப்புப் பணியை தானே ஏற்றுக்கொள்வதாக சீதாராமன் கூறினர். ஆனல், இதை பாண்டுரங்கனும், ஏனையோர்களும் ஏற்றுக்கொள்ள வில்லே. அவரை கிராமத்திற்கு செல்லுமாறும், கட்சிக்காரர்களிடமிருந்து தொந்தரவுகள் ஏதும் ஏற்பட்டால் தன்னேவந்து பார்க்குமாறும் எம்.எல்.ஏ. கூறினர். அவர் சில பேர்களுடன், முதலமைச்சரை அவருடைய வீட்டில் பார்த்து நிகழ்ந்தவைகளேப் பற்றி கூறினர். முதலமைச்சர், அது குறித்து தான் கவனிப் பதாகக் கூறி அவர்களே இல்லங்களுக்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். ஊராட்சி மன்றக் கூட்டம் கூட்டி இவ்விவகாரத்தை முடிவு செய்வதற்காக பெரியகுப்பத்தில் கண்ணப்ப செட்டியாரையும் (P- 2), மற்றவர்களேயும் தாம் அணுகியது பற்றிய மற்ற உண்மைகளேயும் இவர் கூறினர்.

(b) 1973 மே திங்கள் 11ஆம் நாள் அன்று மாலே சுமார் 4—30 மணிக்கு பாண்டுரங்னும், அவரது கூட்டாளிகளும் சீதாராமனேத் தாக்கும் நோக்குடன் சீதாராமனே நெருங்கி வந்தனர். அக்குமுப்பத்தைக் கண்டதும் பெண்கள், குழந் தைகள் உட்பட அனேவரும் பெரியகுப்பம் நோக்கி ஓடினர். பெரியகுப்பம் கிராமத்து மக்கள் தங்களேத் துரத்திக்கொண்டு வந்த அலிகுப்பம் கிராமத்து மக்களேத் தடுத்து நிறுத்தினர். அலிகுப்பம் கிராமத்து மக்கள் அவர்களே பய முறுத்திவிட்டுத் திரும்பினர். அன்றிரவு 11—00 மணிக்கு அலிகுப்பத்திலிருந்து மக்கள் கூட்டம் ஒன்று வந்தது. பெரியகுப்பம் கிராமத்தினர் அவர்களேத் துரத் யது, எம். எல். ஏ. அச்சுறுத்தும் சொற்களேக் கூறியது அவருடைய போக்கு ஆகியவை குறித்து திருமதி ரமணிபாயின் (P-1) சாட்சியத்தை இவர் அப்படியே ஒப்புக்கொண்டார்.

(c) அடுத்த நாள் காலே சுமார் 10—00 மணிக்கு, காவல் துறை டெபுடி சூப்பிரண்டு, எம்.எல்.ஏ. ஏனேய சிலரும், சுமார் 50 முதல் 60 போர்கள் கொண்ட காவல் படையுடன் பெரியகுப்பம் நோக்கி வருவதை அவர்கள் கண்டனர். அவர்கள், அவர்களேக் கண்டதும் ஓய்யாலிகுப்பம் நோக்கி ஓடினர்கள். அவர் பின்னர் சென்னேக்குச் சென்றார். இந்நிகழ்ச்சிக்கு பின்னர் என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரியாது.

(4) திரு. கே. ஜெயராமன் (P-4) கூறிய சாட்சியம்.—(a) எழுத்து மூல மான வாக்குமூலத்தை (Ex. P-4) அவர் ஆணேக்குமுவின் முன் தாக்கல் செய் தார். அவர் கண்ணப்ப செட்டியாருடைய (P-2) மகனுவார். அவர் கடலூரில் தங்கி வேளாண்மையில் ஈடுபட்டு வந்தார்.

1973 மே திங்கள் 11ஆம் நாள் முதல் 15ஆம் நாள் வரை அவர் கடலூரில் தங்கியிருந்தபோதிலும், பெரியகுப்பத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் குறித்து அவருக்கு எதுவும் தெரியாது. 1973 மே திங்கள் 11ஆம் நாள் அன்று, அலிகுப்பம கிராமத்து மக்கள் பெரியகுப்பம் கிராமத்து மக்களுக்கு எதிராக வழக்கு ஒன்று தாக்கல் செய்தது குறித்தும் அவருக்கு எதுவும் தெரியாது. 1973 மே திங்கள் 16ஆம் நாளன்று காவலர் மல்லிகா மற்றொரு காவலர் ஆகியோர் தன்னேயும் வேணுவையும் (P-5) பிடித்துச் சித்திரவதை செய்தனர் என்று தனது எழுத்து மூலமான வாக்குமூலத்தில் அவர் தெரிவித்தார். மறு நாளும், காவலர் அவர்களே அதற்கு அடுத்த நாள் மதுராந்தகம் அணே நிறைச்சாலேக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பும் காவல் நிலேயத்தில் அவர்களேச் சித்திரவதை செய்தார்கள். ஜெயராம வாத்தியாருக்கு எழுத்து மூலமான வாக்குமூலத்தில் தான் என்ன சொன்னுரோ அதைப் பற்றிய விவரங்களே அவர் விளக்கிக் கூறினர். அதனே அடிப்படையாக வைத்து (Ex. P-4) தட்டச்சு செய்யப்பட்டது. அதில் அவர் கையெழுத் திட்டார்,

(b) தனக்கு காவலரின் கையால் ஏற்பட்ட காயங்களே நீதிபதிக்குத் தான் காட்டவில்லே என்றும், காவலர் அடித்தது குறித்து முறையீடு எதுவும் செய்ய வில்லே என்றும், அக்காயங்களே அணே நிறைச்சாலேக்கு மருத்துவருக்குதான் காட்ட வில்லே என்றும் காவலருக்கான தனி வழக்குநிஞர் செய்த குறுக்கு விசாரணே யில் தெரிவித்தார்.

(c) அவர் நாயகம்மாளுடைய (P-8) கணவராவார். அவர் தன்னுடைய நிலத்திலேயே தங்கி, தானே உணவு சமைத்துக்கொள்கிறார். அவர் பெரிய குப்பத்திற்குச் செல்லவில்லை.

(5) திரு. P. வேணு (P-5) கூறிய சாட்சியம்.—(a) ஆணைக்குழுவின் முன் எழுத்துமூலமான வாக்குமூலம் (Ex. P-5) ஒன்றை அவர் தாக்கல் செய்தார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 16ஆம் நாள் அன்று காவலர் மல்லிகா, மற்றொரு காவலர் ஆகியோர் தன்னையும், ஜெயராமனையும் (P-4) பிடித்துச் சித்திரவதை செய்தனர் என்று தனது எழுத்துமூலமான வாக்குமூலத்தில் அவர் தெரிவித்தார். மறு நாளும் காவலர் அவர்களே அதற்கு அடுத்த நாள் மதுராந்தகம் துணைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பும் காவல் நிலையத்தில் சித்திரவதை செய்தார்கள்.

(b) ஜாமீனில் வெளிவந்ததும் சுமார் 4 அல்லது 5 நாட்களுக்குப் பின்னர் அவர், சென்னை, சாந்தோமிலுள்ள ஜெயராம வாத்தியாரிடம் சென்று நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் விவரமாகச் சொன்னார். அவர் கையெழுத்திட்டுள்ள வாக்குமூலத்திலும் இதை அவர் குறித்துள்ளார்.

(c) காவலரால் அச்சுறுத்தப்பட்டதால், தமக்கு ஏற்பட்ட காயங்களைக் குறித்து நீதிபதிக்குப் புகார் எதுவும் தான் கொடுக்கவில்லை என்று குறுக்கு விசாரணையில் அவர் தெரிவித்துள்ளார்.

(6) திருமதி சுப்புலட்சுமி (P-6) கூறிய சாட்சியம்:— (a) ஆணைக்குழுவின் முன் எழுத்து மூலமான வாக்குமூலம் ஒன்றை Ex. P-6 அவள் தாக்கல் செய்தாள். சுமார் மூன்று திங்களுக்கு முன்னர், ஒரு சனிக்கிழமையன்று காலை 11—00 மணிக்கு பெரிய கூவல் தூர அதிகாரி, கடலூர் சொர்ணம், சந்திரன், வண்டு, அலிக்குப்பம் பாண்டுரங்கன், பஞ்சாமிர்தம், பூபாலன், பாலகிருஷ்ணன், மனோகரன் மற்றும் சிலர் காவலர்கள் படையுடன், தடி மற்றும் ஆயுதங்களுடன், பெரியகுப்பத்திற்கு வந்தனர் என்று அவருடைய வாக்குமூலத்தில் அவள் தெரிவித்தாள். ஜாதி பஞ்சாயத்து சதுக்கத்திலுள்ள "பூவரசு" மரத்தின் கீழ் காவல் துறை அதிகாரி உட்கார்ந்திருந்தார். பெண்களை காவலர்கள் அடித்து அவர்களுடைய ஆடைகளை அவிழ்த்தனர். சுடும் மணலில் அவர்களை உட்காரும்படிச் செய்தனர். பாண்டுரங்கனும், வேறு சிலருடனும் காவல் துறையினர் ஒவ்வொரு வீடாகப் புகுந்து பித்தளை அலுமினியம், எவர்சில்வர் பாத்திரங்களை எடுத்துவந்து ராமசாமி செட்டியாரின் வீட்டில் வைத்து காவியை குள்ளமாலிடம் (P-9) கொடுத்தனர். இளம் வயது பெண்கள் சிலரைக் காவலர்கள் கற்பழித்தனர் என்றும், அவர்களில் ஒரு பெண் சுருட்டினாலினால் துன்பப்பட்டதாகவும் அவள் கூறினாள். காவலர் செய்த அட்டூழியத்தினால் மற்றொரு பெண் உரிய காலத்திற்கு முன்பே குழந்தையை ஈன்றாள். காவலர்கள் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டபின்னர், மற்ற இளம்பெண்களுடன் அந்த பெண்கள், சின்னகுப்பம் வழியாக வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். அன்றிரவு சுமார் இரவு 11-00 மணிக்கு காவலர் கடலூர் சொர்ணம், மற்றும் வேறு சிலருடன் மீண்டும் அங்கு வந்து ராமசாமி செட்டியார் வீட்டில் வைத்துச் சென்றப் பொருள்களை எடுத்துச் சென்றனர்.

(b) அடுத்த நாள் (ஞாயிறு) சுமார் காலை 9-00 மணிக்கு காவலர்கள் மீண்டும் வந்து, அவ்வீடுகளில் புகுந்து அரிசி, ஏனைய பொருட்கள், கோழி, கட்டு மரங்கள் போன்றவற்றை எடுத்துச் சென்றனர்.

(c) திங்கட்கிழமை சுமார் காலை 9-00 மணிக்கு, மீண்டும் அவர்கள் அங்கு சென்று பெண்களை அடித்தனர். ஒரு காவலர் அவளைக் கட்டித்தழுவினர். அவள் அவரிடமிருந்து தப்பிச் செல்லமுயலுகையில், அவள் ஆடைகள் கழற்றப்பட்டன. வேறு மூன்று பெண்களுடன் அவள் ஓடிச் சென்று நிர்வாணமாகக் கடலில் விழுந்தாள். பின்னர், அவர்கள் சின்னகுப்பம் அருகே சென்றனர். அங்கு துரைக்கண்ணு செட்டியார் (P-16) என்பவர் ஒருவர் அவர்களைக் காப்பாற்றினர்.

(d) காவலருக்கான தனி வழக்கறிஞர் மற்றும் வழக்கறிஞர் லஷ்மணரெட்டி ஆகியோர் செய்த குறுக்கு விசாரணையில், ஒரு பெண் எப்படி கருச்சிதைவினால் துன்பப்பட்டாள் என்பது தனக்குத் தெரியாது என்று அவள் தெரிவித்தாள்; கஸ்தூரியின் பெற்றோர்கள் அங்கு வந்து அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர் என்றும், அவள் மேலும் தெரிவித்தாள். நிகழ்ந்தவைகளை விளக்குவதற்கு சனிக்கிழமை சின்னகுப்பத்திற்கு பெண்கள் எவரும் செல்லவில்லை.

பலவந்தப்படுத்தப்பட்ட அல்லது கற்பழிக்கப்பட்ட பெண்களில் ஒருவரைத் தவிர மற்ற பெண்களின் பெயர்கள் தனக்குத் தெரியாது என்றும் அவள் கூறினுள். அது குறித்து எவரையும் தான் பார்க்கவோ அல்லது கேட்கவோ இல்லை என்றும், விசாரணை நாள் குறித்தும் தனக்குத் தெரியாது என்றும் அவள் கூறினுள். கஸ்தூரி என்பவளின் பெயர் மட்டுமே தனக்குத் தெரியும் என்றும், ஆனல் கஸ்தூரி காவலரால் கற்பழிக்கப்பட்டவள் என்பது தனக்குத் தெரியாது என்றும் அவள் மேலும் கூறினுள். காவலர் அவளை அடித்தது, அதனல் அவளுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டது ஆகியவற்றை அவள் கேட்டறிந்ததாகமட்டுமே கூறினுள்.

(7) திருமதி வேம்புலி (P-7) கூறிய சாட்சியம்.—(a) ஆணைக்குழுவின் முன் எழுத்துமூலமான வாக்குமூலம் Ex. P-7 ஒன்றை அவள் தாக்கல் செய்தாள். சனி, ஞாயிறு, திங்கள் கிழமைகளில் பெரியகுப்பத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் குறித்து P-6 கூறிய வாக்குமூலத்தையே அவளும் கூறினுள். சனிக்கிழமை இரவு சுமார் 10 அல்லது 11-00 மணிக்கு அலிகுப்பம் பாண்டுரங்கன், மற்றும் சிலர், காவலருடன் அவளுடைய வீட்டிற்கு வந்து, பீரோவை உடைத்து, 3 சவரன் தங்கச்செயினையும், ஒரு தங்க மோதிரத்தையும், துணிகளையும், எடுத்துச் சென்றனர். மீன்பிடி வலைகளையும் அவர்கள் எடுத்துச் சென்றனர். அந்நேரத்தில் அவளை அவர்கள் அடித்தனர்.

(b) காவலருக்கான தனி வழக்கறிஞர் அவளைக் குறுக்கு விசாரணை செய்த போது கற்பழிக்கப்பட்ட பெண்களின் பெயர்கள் தனக்குத் தெரியாது என்றும், அவள் அதை நேரடியாகப் பார்க்கவில்லை என்றும் ஆலை பக்கத்திலுள்ளவர்கள் சொல்லக் கேள்விப்பட்டதாகவும், கஸ்தூரியின் மாமியார் பூபதி சனிக்கிழமை அந்திப்பொழுதில் ஒயிலாடுவதற்கு அவளை அழைத்துச் சென்றதாகவும், நாயகம்மாள், சுப்புலட்சுமி, குள்ளம்மாள், சின்னம்மாள் என்ற பெயர்கள் தனக்குத் தெரியும் என்றும் சனிக்கிழமை காவலர்கள் தங்களை பலவந்தப்படுத்தி கற்பழித்ததாக அவர்கள் தன்னிடம் நேரடியாகக் கூறியதாகவும் அவள் தெரிவித்தாள். வெளியிட்டத்திற்கு அவளை அனுப்பவேண்டி சின்னக்குப்பத்திற்கு அந்த இளம் பெண்களை அவர்கள் அழைத்து வந்தபோது அன்று அக்கிராமத்தில் நடந்த அனைத்தையும் அவர்கள் விவரித்தனர்.

(8) திருமதி நாயகம்மாள் (Ex.P-8) கூறிய சாட்சியம்.—(a) ஆணைக்குழுவின் முன்பு அவள், எழுத்துமூலமான வாக்குமூலம் ஒன்றை Ex. P-8 தாக்கல் செய்தாள். இந்த வாக்குமூலத்தில் பெரியகுப்பத்தில் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை ஆகிய நாட்களில் நடந்த நிகழ்ச்சிகள் தொடர்பாக P-6, P-7 எழுத்துமூலம் எழுதிக்கொடுத்த வாக்குமூலத்தைப்போலவே அவள் சாட்சியமளித்தாள். திங்கட்கிழமை காவலரால் அடிக்கப்பட்டு, ஆடை களையப்பட்ட பெண் தான்தான் என்றும், குள்ளம்மாள் (P-9), சின்னம்மாள், சுப்புலட்சுமி (P-6), ஆகியோருடன் கடலில் விழுந்ததாகவும் சின்னக்குப்பத்தைச் சேர்ந்த துரைக்கண்ணு செட்டியாரால் தான் காப்பாற்றப்பட்டதாகவும் அவள் மேலும் தெரிவித்தாள்.

(b) காவலருக்கான தனி வழக்கறிஞர் அவளை குறுக்கு விசாரணை செய்த போது, சனிக்கிழமை காவலர் கற்பழிப்பதிலும், பலவந்தப்படுத்துவதிலும் ஈடுபடவில்லை என்றும், ஆனல், வீடுகளிலிருந்து பொருள்களை எடுத்தனர் என்றும், ஞாயிற்றுக்கிழமை காலை இரண்டு பெண்களை காவலர் கற்பழித்துவிட்டனர் என்றும், அந்த இருவரில் தானும் ஒருத்தி என்றும், மற்றொருத்தி கஸ்தூரி என்றும் (P-12) தானும், கஸ்தூரியும் ஞாயிற்றுக்கிழமை இரவு பெரியகுப்பத்தில் தங்கியிருந்ததாகவும் அவள் தெரிவித்தாள்.

(c) ஆணைக்குழு கேட்ட ஒரு கேள்விக்கு கஸ்தூரி மட்டும் தன்னிடம் வந்து தான் கற்பழிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தாள் என்றும், தான் அதை நேரடியாகப் பார்க்கவில்லை என்றும், காவலர் அடித்ததையும், கற்பழித்தல் போன்ற ஏனைய அட்டூழியங்களை செய்ததையும் தான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றும் ஆனல், கிராமத்திலுள்ள மற்ற பெண்கள் அதைச் சொல்ல தான் கேள்விப் பட்டதாகவும் அவள் தெரிவித்தாள்.

(9) திருமதி குள்ளம்மாள் (P-9) கூறிய சாட்சியம்.—(a) ஆணைக்குழு முன்பு இவள், எழுத்துமூலமான வாக்குமூலம் ஒன்றை Ex. P-9 தாக்கல் செய்தாள். தனது வாக்குமூலத்தில் P-6, P-7, P-8 ஆகியோர் அளித்த வாக்குமூலத்தை பொதுவாக அப்படியே இவளும் தெரிவித்தாள். காவலரும், ஏனையோரும் அவளுடைய வீட்டிலிருந்து ரூ. 1,000 துணிகள், மீன்பிடி வலைகள் ஆகியவற்றை எடுத்துச்

சென்றனர் என்றும், திங்கட்கிழமை காவலர் அவளுடைய ஆடையைக் கழ்ந்தனர் என்றும், ஏனைய மூன்று பெண்களுடன் தானும் கடலில் விழுந்ததாகவும் சின்னக் குப்பத்தைச் சேர்ந்த துரைக்கண்ணுவால் (P-16) தான் காப்பாற்றப்பட்டதாகவும் அவள் மேலும் தெரிவித்தாள்.

(b) காவலருக்கான தனி வழக்கறிஞர் அவளைக் குறுக்கு விசாரணை செய்த போது சனிக்கிழமை காவலர் சுமார் 130 பெண்களை அடித்தனர் என்றும், அந்தப்பெண்கள் அவர்களுக்குள்ளேயே சொல்லிக்கொண்டதிலிருந்து 10 பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் என்றும், அவளுடைய வீட்டிலேயே காவலர் ஒரு பெண்ணை கற்பழித்தனர் என்றும் அவள் தெரிவித்தாள். இளம் பெண்கள் வெளியில் சென்றுவிட்டதால் ஞாயிற்றுக்கிழமை காவலர் எந்தப் பெண்ணையும் பலவந்தப் படுத்தவில்லை அல்லது கற்பழிக்கவில்லை.

(10) திருமதி ராஜாம்மாள் (P-10) கூறிய சாட்சியம்.—(a) ஆணைக்குழுவின் முன்பு இவள், எழுத்துமூலமான வாக்குமூலம் (Ex. P-10) ஒன்றை தாக்கல் செய் தாள். சனிக்கிழமை மட்டும் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து P-6, P-7, P-8, P-9 ஆகியோர் கொடுத்த எழுத்துமூலமான வாக்குமூலங்களை அவள் அப்படியே சொன் னாள். ஆயினும், சனிக்கிழமை மாலை 5-00 மணிக்கு காவலர், பாண்டுரங்கன் மற்றும் பிறர் சவுக்குமரச் செடிகளை அழித்துவிட்டதாகத் தனது குழந்தை தன்னிடம் தெரிவித்ததாகவும் அவள் அந்த மரங்களை வீட்டிற்குக் கொண்டு வந்து பின்னர் சின்னக்குப்பத்திற்குச் சென்றதாகவும் தெரிவித்தாள்.

(b) குறுக்குவிசாரணையின்போது, தனது கணவருக்குச் சொந்தமான நான்கு ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தில் விளைந்த சுமார் 3 வயது சவுக்குச் செடிகள் அனைத்தையும் காவலர் பிடுங்கிவிட்டனர் என்றும் அவை சுமார் 100 தலைச்சுமை அளவுக்கு இருந்தன என்றும் அவள் தெரிவித்தாள்.

(11) திரு M. நடராஜன் (P-11) கூறிய சாட்சியம்.—ஆணைக்குழு முன்பு இவர், எழுத்துமூலமான வாக்குமூலம் ஒன்றை (Ex. P-11) தாக்கல் செய்தார். 1973-ம் ஆண்டு மே திங்கள் 21-ம் நாளன்று, காவலர் தன்னைத் தட்டம்பேடு கிராமத்தில் கைது செய்ததாகவும், 1973-ம் ஆண்டு மே திங்கள் 21-ம் நாளி லிருந்து 9 நாட்களுக்கு தன்னை காவலர் சித்திரவதை செய்ததாகவும், 1973-ம் ஆண்டு மே திங்கள் 30-ம் நாள் அன்றுதான் தன்னை சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்ட தாகவும் தெரிவித்தார்.

(12) திருமதி கஸ்தூரி, (P-12) கூறிய சாட்சியம்.—(a) இவள் சாட்சியம் அளித்த நாளுக்கு அதாவது 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2-ம் நாளுக்கு 6 மாதங்களுக்கு முன்னர்தான் இவளுக்குத் திருமணம் நடந்தது. நிகழ்ச்சி நடந்த அன்று, ஏனைய 6 பெண்களுடன் தனது பெரிய மாமியாருடன் அவள் தங்கியிருந்தாள். சுமார் 10 காவலர் வீட்டிற்குள் வந்து அவர்களை அடித்த பின்னர் வெளியே இழுத்தனர். அவள் வெளியே வந்தபோது 50 அல்லது 60 பெண்கள் கொண்ட கூட்டம் ஒன்று உட்கார்ந்திருந்ததைப் பார்த்தாள். இதில் சுமார் 10 பெண்கள் தங்கள் மீது ஆடையின்றி இருந்தனர். அவள் வீட்டிற்குள் திரும்பி ஓடினாள். அவளை நான்கு அல்லது ஐந்து காவலர் துரத்திச் சென்றனர். அவளை காவலர் பிடித்து கற்பழிக்கும் நோக்குடன் அவளுடைய சேலையைக் கழ்ந்தனர். அவள் மயக்கமுற்று கீழே விழுந்தாள். அவள் அப் போது மூன்று மாத கர்ப்பிணியாக இருந்தாள்.. தனக்கு நிகழ்ந்து பிறகு நினைவு திரும்பும்வரை பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் எதுவும் அவளுக்குத் தெரியாது. அவள் ரத்த வெள்ளத்தில் கிடந்தாள். தனது வயிற்றில் வலி இருப்பதை உணர்ந்தாள். ரத்தப்போக்கு காரணமாக தனக்கு கருச்சிதைவு ஏற்பட்டதாக நினைத்தாள். தனது வயிற்றில் பூட்ஸ் காலால் உதைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று நினைத்தாள். அதே நாளில் அவள் சென்னைக்கு கொண்டுவரப்பட்டு வீட்டில் சிகிச்சை அளிக்கப் பட்டாள்.

(b) காவலருக்கான தனி வழக்கறிஞர் செய்த குறுக்கு விசாரணையின் போது, அந்தி நேரத்தில் தன்னுடைய மாமியார் தன்னை சின்னகுப்பத்திற்கு அழைத்துச் சென்றதாக அவள் கூறினாள். கருவாடு வாங்குவதற்காக ராய புரத்திலிருந்து சின்னகுப்பத்திற்கு இருவர் அவளை அதே இரவு (சனிக்கிழமை) அழைத்துச் சென்றனர். அவர்கள் ஒய்யாலிகுப்பம், வயலூர், புதுப்பட்டிணம் வழியாகச் சென்று சென்னை பேருந்தில் ஏறினர். ராயபுரத்திலிருந்து வந்த இருவரை அவளுக்குத் தெரியாது. அவர்களும் அவளுக்குச் சொல்லவில்லை. அவ ளுடைய தந்தை அவளை அழைத்துச் செல்ல வரவில்லை. தனக்கு ஏற்பட்டது

குறித்துத் தனது தந்தையிடம் அவள் எதுவும் சொல்லவில்லை. தன்சிங்கும், சீதாராமனும் அலிகுப்பம் மக்களை அடித்தது குறித்து அவளுக்கு எதுவும் தெரியாது. சிறையிலிருந்து தனது கணவர் ஜாமீனில் வெளிவந்த பின்னர் இந்நிகழ்ச்சி குறித்து தனது கணவனுக்குத் தெரிவித்தாள்.

(13) நடராஜனின் (P-13) மனைவி திருமதி பூபதி அம்மாள் கூறிய சாட்சியம்.—(a) அவள் எழுத்துமூலமான வாக்குமூலம் (Ex. P-12) ஒன்றை தாக்கல் செய்தாள். சனிக்கிழமை நடந்த நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை, P-6, P-7, P-8, P-9, P-10, அளித்த எழுத்துமூலமான வாக்குமூலங்களின் விவரங்களை அவள் அப்படியே திருப்பிக் கூறினாள். சனிக்கிழமை அவள் சின்னகுப்பத்திற்குச் சென்றாள்.

(b) காவலருக்கான தனி வழக்கறிஞர் செய்த குறுக்கு விசாரணையின் போது சிலர் பெரியகுப்பத்திலும், சிலர் சின்னகுப்பத்திலும் தங்கிவிட்டதாக அவள் தெரிவித்தாள். சுமார் 20 பேர் பெரியகுப்பத்தில் தங்கி இருக்க வேண்டும்.

(14) திரு தேவராஜன் (P-14) கூறிய சாட்சியம்.—(a) ஆணைக்குழுவின் முன்பு அவர், எழுத்து மூலமான வாக்குமூலம் Ex. P-13, ஒன்றை தாக்கல் செய்தார். வாக்குமூலத்தில் 1973-ம் ஆண்டு மே திங்கள் 11-ம் நாள் அன்று இரவு 9-00 மணிக்கு காவல்துறை வட்ட இன்ஸ்பெக்டர்களிடமிருந்தும், திரு ஆறுமுகம், எம்.எல்.ஏ., விடமிருந்தும் அழைப்பு வந்ததன் பேரில் தான் உடன் சென்றதாக அவர் தெரிவித்தார். காவல் வட்ட இன்ஸ்பெக்டரும், மற்றவர்களும் அலிகுப்பம் கிராமத்திற்குப் பார்வையிட்டு விசாரணைகள் செய்த பின்னர், சிலரிடமிருந்து வாக்கு மூலங்களைப் பதிவு செய்தனர். சுமார் இரவு 11-00 மணிக்கு அவர்கள் அனைவரும் பெரியகுப்பத்திற்குச் சென்றனர். பாதி வழியில் கோவிலுக்கு அருகே சென்றுகொண்டிருந்தபோது தங்களைத் தாக்குவதற்கு அலிகுப்பம் மக்கள் வருகிறார்கள் என்று நினைத்து பெரியகுப்பம் மக்கள் அவர்களைத் துரத்தி அடித்தனர். வட்ட இன்ஸ்பெக்டர் தனது வீடு குழலை ஊதினார். ''காவலர்களை நீங்கள் துரத்துகிறீர்கள், இல்லையா ?'' என்று கேட்டார், '' விடியட்டும், பார்த்துக்கொள்கிறோம்'' என்று எம்.எல்.ஏ. கூறியதாக அவர் கொன்னார்.

(b) 1973-ம் ஆண்டு மே திங்கள் 12-ம் நாள் அன்று காலை 9-00 மணிக்கு காவல் துறை டெபுடி சூப்பிரண்டு, வட்ட இன்ஸ்பெக்டர், திரு. ஆறுமுகம், எம்.எல்.ஏ. மற்றவர்கள்,மூன்று காவல்துறை வண்டிகளில் வந்தனர். சொர்ணத்தின் வீட்டில் சிற்றுண்டியை முடித்த பின்னர், கடலூர் லாக்சைட்டிற்குச் சென்றனர். அவர் அங்கு சென்றபோது, எல்லோரும் தப்பிவிட்டனர், எவரும் அங்கு இல்லை என்று சொல்லிக்கொண்டு எம்.எல்.ஏவும், பாலகிருஷ்ணனும் பெரியகுப்பத்திலிருந்து திரும்பி வருவதைக் கண்டார். பிற்பகல் 1-00 மணிக்கு அவர் பெரியகுப்பத்திற்குச் சென்றபோது கூட்டத்தில் பெண்கள் நிர்வாணமாக உட்கார்ந்திருந்ததைக் கண்டார். காவல்துறை டெபுடி சூப்பிரண்டு மூன்று வீட்டுப்பொருள்கள் குவியலாக வைக்கப்பட்டிருந்தன. காவல்துறை டெபுடி சூப்பிரண்டு அவர் யார் எனக்கேட்டார், காலனியிலிருந்து அவர் வந்தார் என்று வட்ட இன்ஸ்பெக்டர் பதிலளித்தபோது, காவல்துறை டெபுடி சூப்பிரண்டு அவரை அடித்துத் துரத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவர் திரும்பிச் சென்று பக்கிங்காம் கால்வாய்க்கு அருகில் இருந்தார். காவலர்கள், அரிசி, கோழி, மீன்பிடி பொருள்கள், சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றைக் கொண்டுவந்தனர்.

(c) ஞாயிற்றுக்கிழமை காவலர்களும், அலிகுப்பம் கிராமத்து மக்களும் பாத்திரங்கள், கோழி கட்டுமரங்கள் போன்ற பொருள்களை வண்டி ஒன்றில் எடுத்துச் சென்றனர். இது பற்றி தலைமைக்காவலர் மாணிக்கத்தையும், மற்ற வர்களையும் அவர் கேட்டபோது, அவற்றை நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்வதாகத் தெரிவித்தார்.

(d) 1973-ம் ஆண்டு மே திங்கள் 18-ம் நாள் அன்று சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவரைக்கூப்பிட்டு ''பெரியகுப்பம் மக்களுக்கு ஏன் ஆதரவாக இருக்கிறீர் ?'' என்று கேட்டார். 1973-ம் ஆண்டு மே திங்கள் 19-ம் நாள் அன்று காவல் படையினர் அவரையும் ஏனைய ஆறுபேரையும் மதுராந்தகத்திற்குக் கொண்டு சென்றனர். காவற்படையினருக்குச் சாதகமாகப் பேசினால் அவர்கள் விட்டுவிடப்படுவார்கள் என்றும், இல்லை என்றால் அவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சொன்னார். பொய் சொல்ல முடியாது என்று அவர்கள் சொன்னபோது, அவர்கள் கிணைச்சிறைச் சாலைக்கு அனுப்பப் பட்டனர்.

(e) தானும் தனது சகோதரரும் காமராஜ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வர்கள் என்றும் கடலூர் ஊராட்சித் தலைவர் தேர்தலில் அவரது சகோதரர் பலராமன் சொர்ணத்தை எதிர்த்துப் போட்டியிட்டார் என்றும் சொர்ணம் தேர்தலில் வெற்றிபெற்றார் என்றும், திரு லஷ்மண ரெட்டி நடத்திய குறுக்கு விசாரணையின்போது அவர் கூறினர்.

(15) திரு குப்புசாமியின் (P-15) சாட்சியம்.—இவர் தனது எழுத்து மூலமான வாக்குமூலத்தைத் தாக்கல் செய்துள்ளார். (Ex-P-14) இந்த வாக்கு மூலத்தில் அவர் சொல்லியுள்ளதாவது :—சூணம்பட்டை வயலூரிலிருந்து அவர்தமது மனைவியுடன் திரும்பி வந்து கொண்டிருக்கையில்.பவுஞ்சூர் செல்லும் பேருந்தைப் பிடிப்பதற்காக செய்யூர் சாலைச் சந்திப்பில் இறங்கினர். காவல் நிலையத்தினருகே அவர் செய்யூர் பாலகிருஷ்ணையும் ஏனையோரையும் பார்த்தார். அவரைப் பார்த்தவுடன், சொர்ணமும், பாண்டுரங்கமும் காவல்நிலையத்திற்குள் சென்று விட்டு வெளி வந்தனர். காவல் நிலையத்திலிருந்து இன்ஸ்பெக்டரும் தலைமைக் காவலரும் வெளிவந்து அவர் அருகில் வந்தனர். சப்-இன்ஸ்பெக்டரும் ஏனையோரும் 1973-ம் ஆண்டு மே திங்கள் 15-ம் நாள் வரை அவரைச் சித்திரவதை செய்தனர். 1973-ம் ஆண்டு மே திங்கள் 15-ம் நாள் அன்று அவர் மதுராந்தகம் கிளைச் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

(16) திரு. துரைக்கண்ணு (P-16) அளித்த வாக்குமூலம் :—(a) மூன்று மாதங்களுக்கு முன்னுல் ஒரு திங்கள் இடைவெளி காலை 11-00 மணி அளவில் அவர் கடலில் மீன்பிடித்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். கூக்குரல் கேட்கவே அங்கு விரைந்தார். ஒரு பெண் கைகளை ஆட்டி அவரைக் கூப்பிடுவதைக் கண்டார். நான்கு பெண்கள் மார்பளவு நீரில் கடலில் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். தாங்கள் ஆடையின்றி இருப்பதாக அவர்கள் அவரிடம் தெரிவித்தார். தாம் தலையில் சுற்றியிருந்த 8 அடி துணியை எடுத்து அவர்களிடம் எறிந்துவிட்டு வீடு சென்றார். பின்னர்ப்பம் பெண்களை அழைத்து, கடலில் நின்று கொண்டிருந்த பெண்களுக்குச் சேலைகள் கொடுத்து வருமாறு சொன்னார். தங்கள் ஆடைகளைக் காவலர் பறித்துக் கொண்டதாகவும் தங்கள் மானத்தைக் காத்துக் கொள்ள தாங்கள் கடலுக்குள் ஓடியதாகவும் அப் பெண்கள் அவரிடம் கூறினர்.

(b) நாயகம்மாள் (P-8) தன்னை மூன்று காவலர்கள் கற்பழித்ததாகவும் தற்கொலை செய்து கொள்வதற்காகக் கடலுக்குள் ஓடியதாகவும் அவரிடம் சொன்னள். அப்பெண்கள் சின்னக்குப்பத்தில் பல்வேறு வீடுகளில் தங்கியிருக்க அவர் ஏற்பாடு செய்தார்.

(c) காவல்துறையின் பிறப்பு வழக்குரைஞர் இவரைக் குறுக்கு விசாரணை செய்தார். சனிக்கிழமையன்றும் ஞாயிற்றுக்கிழமையன்றும் அவர் சின்னக் குப்பத்தில் இருந்ததாகவும் சனியன்றே ஞாயிறன்றே பெரியகுப்பத்தைச் சேர்ந்த பெண்கள் எவரையும் சின்னக்குப்பத்தில் பார்க்கவில்லை என்றும் குறுக்குவிசாரணையில் அவர் சொன்னார்.

(17) R. வேதாசலம் சாட்சியம் (P-17)—(a) அவர் ஆணைக்குழு முன்பு எழுத்து மூலமான வாக்கு மூலம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். (Ex. P-15) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12-ம் நாள் அன்று காலை 11-00 மணியளவில் காவல்துறை வண்டி சொர்ணம், அலிகுப்பம் பாண்டுரங்கன் ஆகியோரை சொர்ணத்தின்.வீட்டிலிருந்து அழைத்துச் சென்றது என்று அவர் தமது வாக்கு மூலத்தில் கூறியுள்ளார். வண்டியில் காவல்துறை டெபுடி சூப்பிரெண்டு, எம்.எல்.ஏ. திரு ஆறுமுகம் ஆகியோர் முன்பக்கத்தில் அமர்ந்திருந்தனர். பிற்பகல் இரண்டு மணியளவில் எம்.எல்.ஏ. திரு ஆறுமுகம், செய்யூர் பாலகிருஷ்ணனும், கால்வாய்ப் பக்கத்திலிருந்து கடலூருக்கு வந்தனர். மாலை ஐந்து மணியளவில் காவல்துறை வண்டி டெபுடி சூப்பிரெண்டுடன், சென்றுவிட்டது.

(b) 1973-ம் ஆண்டு மே திங்கள் 13-ம் நாள் அன்று பிற்பகல் இரண்டு மணியளவில் காவல்துறை வண்டி கோழிக்குஞ்சு, மீன்பிடிவலை, கட்டுமரங்கள், முதலியவற்றுடன் லாக்சைட்டிலிருந்து கடலூருக்கு வந்தது. அலிகுப்பம் பஞ்சாமிர்தம் (A-2) அந்த வண்டியில் இருந்தார்.

(e) 1973-ம் ஆண்டு மே திங்கள் 14-ம் நாள் அன்று காலை 10 மணி அளவில் காவல்துறை வண்டி பித்தளை, அலுமினியம், எவர்சில்வர் பாத்திரங்களுடனும், மீன்பிடி வலைகளுடனும், கால்வாய்ப் பக்கத்திலிருந்து கடலூருக்கு வந்தது. அந்த வண்டி கடலூரில் சிறிது நேரம் நின்றது. இதைப்பற்றி கேட்டபோது அப்பாத்திரங்கள் பெரியகுப்பம் மக்களால் அலிக்குப்பத்தில் திருடப்பட்ட பொருட்கள் என்றும், அவை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன என்றும் பாண்டுரங்கள் (A-1) அவரிடம் கூறினர்.

(18) திரு. குட்டியப்பன் (P-18) சாட்சியம்.—இவர் விசாரணைக்குமுன்பு எழுத்து மூலமான வாக்கு மூலமொன்றைத் தாக்கல் செய்துள்ளார். ஒரு திங்களுக்கு முன்னர், ஒரு ஞாயிறன்று காலை 10 மணியளவில் காவல்துறை வண்டி ஒன்று லாக்சைட்டிலிருந்து கடலூருக்கு வந்து கொண்டிருந்ததைத்தாம் பார்த்ததாகவும், அதில் மீன்பிடி வலைகள், கட்டு மரங்கள், மேலும் பல மூட்டைகள் இருந்ததாகவும், காவலர்களும் அதில் இருந்ததாகவும் அவர் தமது வாக்கு மூலத்தில் கூறியுள்ளார். அதன் பின்னர் மல்லிகா காவலர் மூன்று கோழிக்குஞ்சுகளை காகிதத்தில் சுற்றி எடுத்து வந்தனர். அதே மாதிரி மேலும் இரண்டு காவலர்கள் நான்கு கோழிக்குஞ்சுகளைக் காகிதம் ஒன்றில் சுற்றிக் கொண்டு வந்தனர். சந்திரனுடன் (A-8) பஞ்சாமிர்தம் (A-2) பாண்டுரங்கன் (A-1) ஆகியோர் அண்டா ஒன்றைக் கொண்டுவந்தனர். அந்த அண்டாவின் இறகுகள் பிய்க்கப்பட்ட கோழி, வாத்து முதலியன இருந்தன. இதைப்பற்றிக் கேட்டபோது காவலர் மல்லிகா அவருக்கு ஒரு அடி கொடுத்தார்.

(19) திருமதி ஆராயி அம்மாள் (P-19) சாட்சியம்.—(a) இவர் விசாரணைக்குமுன்பு எழுத்து மூலமான வாக்கு மூலமொன்றைக் (Ex-P-17) கொடுத்துள்ளார். ஒரு திங்களுக்கு முன்னர் ஒரு திங்கட்கிழமையன்று காலை 11 மணியளவில் துரைக்கண்ணு (P-16) கிராமத்திற்கு வந்ததாகவும், நான்கு பெண்கள் ஆடையின்றி கடலில் நின்று கொண்டிருந்ததாகவும் அவர் கூறினர் என்றும் அவர்களுக்கு சில சேலைகளைக் கொண்டு செல்லுமாறு அவர்களையும் ஏனையோரையும் கேட்டதாகவும் தனது வாக்கு மூலத்தில் கூறியுள்ளார். அவரும், ஏனையோரும் அவ்வாறே செய்தனர். நாயகம்மாளுக்கு அவர் சேலை ஒன்றைக் கொடுத்தார். நாயகம்மாளையும், ஏனையோரையும் அவர் துரைக்கண்ணு செட்டியார் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

(b) நாயகம்மாளைத்தவிர, ஏனைய மூன்று பெண்களின் பெயர்கள் தமக்குத் தெரியாது என்று குறுக்கு விசாரணையில் அவர் கூறினர்.

(20) ஹரிராமன் மனைவி திருமதி பூபதி அம்மாள் (P-20) சாட்சியம்.—(a) விசாரணைக் கமிஷன் முன்பு இவர் எழுத்துமூலமான வாக்குமூலம் ஒன்றைத் (Ex-P1-18) தாக்கல் செய்துள்ளார். சனிக்கிழமை நடந்த சம்பவங்களைப் பொறுத்தவரை அவர் பி-6, பி-7, பி-8, பி-9, ஆகியோர் கொடுத்துள்ள எழுத்து மூலமான வாக்கு மூலங்களை அவர் உறுதிப்படுத்தினார். பிற்பகல் 3-00 மணி அளவில் அவர் தமது வீட்டிற்குச் சென்றபோது, தனது மருமகள் கஸ்தூரி (பி-12) இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டார். அவரது வீட்டில் இருந்த பெட்டிகள் உடைக்கப்பட்டிருந்தன, ஆடைகள் காணவில்லை, தோயில் பணமும் கிராமத்துப் பணமும் வைக்கப்பட்டிருந்த இரண்டு உண்டிகள் காணப்படவில்லை. ராயபுரத்திலிருந்து வந்த இரண்டு பெண்களின் உதவிகொண்டு அவர் தமது மருமகளை சின்னக்குப்பத்திற்கு எடுத்துச் சென்றார்.

(b) காவல் துறையின் சிறப்பு வழக்குரைஞர் இவரைக் குறுக்கு விசாரணை செய்தார். சனிக்கிழமை இரவு சென்னையிலிருந்து தாம் வந்ததாகவும், இரவு சின்னக்குப்பத்தில் தங்கியதாகவும் அவர் குறுக்கு விசாரணையில் சொன்னார். ராயபுரத்திலிருந்து இரண்டு பெண்கள் அந்த நிகழ்சி நடந்த சனிக்கிழமையன்று பெரியகுப்பத்திற்கு வந்தனர். ராயபுரத்திலிருந்து வந்த இரண்டு பெண்களுடன் தனது மருமகளை சனிக்கிழமையன்று அனுப்பியதாகவும் தானே ஞாயிறு அன்று சென்னைக்கு சென்றதாகவும் அவர் சொன்னார்.

(c) Ex P-18 வாக்குமூலத்தில் அவர் குறிப்பிட்டுள்ள நபர்களை அடையாளம் காட்டமுடியுமா என்று அவர் மறு விசாரணையில் கேட்கப்பட்டார். அவர் பாண்டுரங்கனை (எ-1) சுட்டிக்காண்பித்தார். அது சரி, இன்னொரு நபரை பட்டையன் என்று அவர் சுட்டிக்காட்டினர். ஆனால் அது உண்மையில் பூபாலன்.

(21) கே. வினுயகம் (P-21) சாட்சியம்.—(a) இவர் 20 ஆண்டுகளாக கட லூரில் வசித்து வருபவர். மூன்று நிங்களுக்கு முன்னர் ஒரு சனிக்கிழமையன்று காலை 10 மணியளவில் காவல்துறை வண்டிகள் நான்கு கடலூருக்கு வந்தன. ஆயுதம் தாங்கிய காவல் படையினர் சொர்ணத்தின் வீட்டினருகே இறங்கியதை அவர் கண்டார். நான்காவது வண்டியில் காவல்துறை டெபுடி சூப்பிரெண்டு, சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் தலைமைக் காவலர், மாணிக்கம், ஆகியோரும், பாண்டுரங்கன், சந்திரன் ஆகியோரும் எம். எல். ஏ. ஆறுமுகம், இருந்ததை அவர் கண்டார். சொர்ணம் இந்த வண்டியில் ஏறிக்கொண்டார். நான்கு வண்டிகளும் லாக் சைட்டை நோக்கிச் சென்றன.

(b) அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை காவல்துறை வண்டி லாக் சைட் டிலிருந்து கடலூருக்குத் திரும்பி வந்ததை அவர் கண்டார். கட்டு மர துண்டு களும், மீன்பிடி வலைகளும், பில சாக்கு மூட்டைகளும் வண்டியில் அடுக்கப்பட்டி ருப்பதை அவர் கண்டார். இதுபற்றி அவர் காவலர் மல்லிகாவைக் கேட்டபோது அவை பெரியகுப்பம் மக்களால் அலிக்குப்பத்திலிருந்து திருடப்பட்டதாகவும், இவை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் அவருக்குச் சொல்லப் பட்டது.

(22) டாக்சி டிரைவர் திரு. வி. சம்பந்தம் (P-22) சாட்சியம்.—(இந்த சாட்சி எம். எல். ஏ. திரு. ஆறுமுகம் சார்பாக விசாரிக்கப்பட்டார்)—(a) சுற்றுலா டாக்சி T.N.H. 1006 எண்ணுள்ள வண்டியின் டிரைவர் இவர். இந்த வண்டி ஜி. பாஸ்கரன் என்பவருக்குச் சொந்தமாகும். 1973ஆம் ஆண்டு மே நிங்கள் 10ஆம் நாள் அன்று இரவு உரிமையாளர் திரு. ஜி. பாஸ்கரன் அவரை அழைத்து 10 அல்லது 15 நாட்களுக்கு எம். எல். ஏ. ஆறுமுகம் அவர்களுடன் அவர் செல்ல வேண்டியிருக்கும் என்ற தெரிவித்தார். வண்டி தேர்தல் பணிக்காக எம். எல். ஏ.க்குத் தேவைப்படுகிறது என்றும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. 1973ஆம் ஆண்டு மே நிங்கள் 11ஆம் நாள் அன்று காலை 6 மணியளவில் மதுராந்தகத்தில் எம். எல். ஏ.வைச் சந்திக்குமாறு அவருக்குச் சொல்லப்பட்டது. அவர் 1973ஆம் ஆண்டு மே நிங்கள் 11ஆம் நாள் அன்று காலை 6 மணியளவில் வண்டியுடன் எம். எல். ஏ.வைச் சந்தித்தார். மூன்று அல்லது நான்கு போர்கள் வந்து சேர்வார்கள் என்றும், காலை 10 மணியளவில் அவர்கள் செலல வேண்டியிருக்கும் என்றும் எம். எல். .ஏ. அவருக்குத் தெரிவித்தார். அவர்கள் காலை 10-30 மணியளவில் மதுராந்தகத்தை விட்டுச் சென்றனர். அவரைத் தவிர, அந்த வண்டியில் மொத்தம் ஆறு போர் இருந்தனர்.

(b) அவருடன் சேர்ந்து வந்த நால்வரில், செய்யூர் பாலகிருஷ்ணன், எருவாக்கம் சண்முகம் ஆகிய இருவர் பெயர்தான் அவருக்குத் தெரியும். மற்றவர் கள் பெயர் அவருக்குத் தெரியாது. திருவண்ணாமலை-மதுரை வழியாக 1973ஆம் ஆண்டு மே நிங்கள் 12ஆம் நாள் அன்று பிற்பகல் 1 மணியளவில் கோடைக்கா னல் சாலையை அடைந்தனர். அவர்கள் ஒவ்வொரு நாளும் இண்டுக்கல் தொகுதிக்குச் சென்று இரவில் கோடைக்கானல் சாலைக்குத் திரும்பி வந்து விடுவர். 1973ஆம் ஆண்டு மே நிங்கள் 20ஆம் நாள் வரை அவர்கள் அங்கு தங்கியிருந்தனர். மே 21ஆம் நாள் அவர்கள் அந்த இடத்தை விட்டு காலையில் இளம்பி தஞ்சாவூருக்கு வந்து டிம்புகாருக்குச் சென்று பார்வையிட்டனர். அதன்பின்னர் அன்று இரவு மதுராந்தகம் திரும்பினர். அவரது வண்டியில் எம். எல். ஏ.க்காக செய்த பய ணங்கள் Ex. பி-19 ஆவணத்தில் 31—41 வரையிலுள்ள பக்கங்களில் குறிப்பிடப் பட்டுள்ளன. மதுராந்தகம் எம். எல். ஏ., என்ற முறையில் அவருக்கு திரு ஆறு முகம் அவர்களைத் தெரியும்.

(c) பெரியகுப்பம் மக்களின் வழக்குரைஞர் இவரைக் குறுக்கு விசாரணை செய்தார். வண்டியின் உரிமையாளர் 1973 மே 11ஆம் நாளிலிருந்து 21ஆம் நாள் வரையுள்ள கால அளவிற்கு வாடகைக் கட்டணமாக ரூ 650 வசூலித்தார் என்று குறுக்கு விசாரணையில் அவர் சொன்னார். Ex. பி-19 ஆவனமாகிய பயணத் தடவைப் பட்டியலின் மூலப்பிரதிகளையும், அதற்கடுத்த மூலப்பட்டியல்களையும், அதற்கு முந்திய மூலப்பட்டியல்களையும் கொடுக்க வேண்டுமென்று பெரியகுப்பம் மக்களின் வழக்குரைஞர் குறுக்கு விசாரணையில் கேட்டார். அவை அவ்வண்ணமே பெறப்பட்டு Ex. பி-19 (a), Ex. பி-20, Ex. பி-20 (a), Ex. பி-21, Ex.பி-21 (a) என்று அடையாளம் இடப்பட்டன.

(23) திரு. குப்புராஜ் (P-23) சாட்சியம்.—(a) இவர் சென்னை செங்கற்பட்டு மீனவர் கூட்டுறவு சம்மேளனத்தின் தலைவர். சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள மீனவர் குப்பங்களை நன்கு அறிந்தவர். சம்மேளனத்தின் அலுவலகத்தின் பிரதிநிதியான சீதாராமனை இவர் நன்கு அறிவார். 1973 மே திங்களுக்கு முன்னும் சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் சீதாராமனும், தன்சிங்கும் சென்னையிலுள்ள அவர் வீட்டிற்கு வந்தனர். அவர்கள் அலுவலகத்திலுள்ள புறம்போக்கு நிலங்களில் சவுக்கு மரங்களை வளர்த்ததாகவும் அவர்கள் அந்த மரங்களை வெட்டியெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லையென்றும் அவர்கள் கூறினர். உள்ளூர் எம். எல். ஏ.யைக் கலந்தாலோசித்து இத்தகராறைத் தீர்த்துக்கொள்ளுமாறு அவர் அவர்களுக்குக் கூறினர். உள்ளூர் எம். எல். ஏ. உடன் தங்களுக்குப் பழக்கமில்லையென்று அவர்கள் கூறினர். பஞ்சாயத்துக் கூட்டி இத்தகராறைத் தீர்க்குமாறு அவர்கள் கேட்டுக்கொண்டனர். எனவே அவர் எம். எல். ஏ. திரு. ஆறுமுகம் அவர்களை அணுகி அவரையும் சென்னைக்கு வரும்படி நாள் குறிப்பிட்டார். அவரைத் தவிர, சென்னை பாப்ஸோ படகு ஓட்டும் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரான திரு. ஜி. பாலகிருஷ்ணன், இளம்பரிதி, உள்நாட்டு நீர்நிலைகள் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரான பி. கே. வேணுகோபால், சென்னை 90-வது டிவிஷன் நகராட்சி உறுப்பினர், எம். ராஜு, போளூர் ஸ்ரீனிவாசன், எம். எல்.ஏ. தன்சிங், சீதாராமன், செய்யூர் பாலகிருஷ்ணன், சுடலூர் சொர்ணம், பாண்டுரங்கன் மற்றும் சிலர் அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர். அக்கூட்டம் சென்னையில் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் எம். எல். ஏ. ஆறுமுகம் அவர்களின் அறையில் நடைபெற்றது.

(c) அந்த நிலம் கிராமத்தாருக்குச் சொந்தமென பாண்டுரங்கனும், அவரது குழுவினரும் சாதித்தனர். தன்சிங்கும், சீதாராமனும் அந்நிலத்தின் பயனை அனுபவிப்பதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். நிலத்தின் அனுபோக உரிமையை தன்சிங்கும், சீதாராமனும், அவர்களுக்குப் பக்கத்தைச் சேர்ந்த ஏனையோருக்கும் பகிர்ந்து கொள்ளலாம் என்ற இணக்க ஏற்பாட்டினை எம். எல். ஏ.யும் ஏனையோரும் தெரிவித்தனர்.

(d) சீதாராமனுக்குக் கொடுக்கப்பட்ட படகு அவர் அலிக்குப்பத்தைச் சேர்ந்தவர் என்பதனால்தான் அவருக்குக் கொடுக்கப்பட்டது என்றும், எனவே, அந்தப் படகு அலிக்குப்பம் மக்களிடம்தான் இருக்க வேண்டுமென்றும், பாண்டுரங்கனும், அவரது குழுவினரும் சாதித்தனர். எம். எல். ஏ. உண்மை நிலைபற்றி அவரைக் (குப்புராஜ்) கேட்டார். சீதாராமன் படகுக்கான விலையைக் கொடுத்துள்ளதாலும், இன்சூரன்ஸ் தொகையைச் செலுத்தியுள்ளதாலும் அப்படகு அவரைத்தான் சேர்ந்தது என்றும், அலிக்குப்பம் மக்களுக்கு இதில் சம்பந்தம் இல்லையென்றும் அவர் (குப்புராஜ்) கூறினார். இது பஞ்சாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், அவர் (குப்புராஜ்) கூறினர்.

(e) எம். எல். ஏ. திரு ஆறுமுகம் எவரையும் பணம் கேட்கவில்லை. அவர் பணம் கேட்டதாக எவரேனும் சொன்னால் அது பொய். படகு கொடுக்கப்பட்டது குறித்து எம். எல். ஏ.வுக்கு எந்த விதத் தொடர்புமில்லை. சீதாராமனுக்கு படகு ஒதுக்கப்படுவது குறித்துத் தம்மிடம் (குப்புராஜ்) ஒருபொழுதும் எம். எல். ஏ. பேசியதில்லை என்றும் சொன்னார். இதன் பின்னர் அவர்கள் தங்கள் வழக்கப்படி வெற்றிலை மாற்றிக்கொண்டனர். அவர்கள் தத்தம் கிராமத்திற்குச் சென்று மகிழ்ச்சியாக வாழுமாறு அவர்களுக்கு அறிவுரை கொடுக்கப்பட்டது.

(f) சீதாராமன் (P-3) தனது சாட்சியத்தில் சொல்லியுள்ளதுபோல திரு. ஆறுமுகம், எம். எல். ஏ. பஞ்சாயத்து பேச்சுக்குப் பிறகு தனக்குப் பணம் தேவையில்லையென்று சொல்லியதாகச் சொல்லும் கூற்று பொய் என்று அவர் (குப்புராஜ்) சொன்னார்.

(24) தி. ஆறுமுகம், எம். எல். ஏ. (P-24) சாட்சியம்.—(a) இவர் மதுராந்தகம் தொகுதி எம். எல். ஏ. அலிக்குப்பம், பெரிய குப்பமும் இவரது தொகுதியில் இருக்கின்றன. அலிக்குப்பத்திலுள்ள இரண்டு சாராரிடையே உள்ள தகராறு பற்றி குப்புராஜ் (P-23) அவரிடம் சொல்லி அதில் தலையிட்டுத் தகராறைத் தீர்த்து

வைக்கும்படி அவரைக் கேட்டுக் கொண்டார். சட்டசபைக் கூட்டத்தொடர் இருந்ததால் இந்த சமரசப் பேச்சு சென்னையில் தான் நடைபெற முடியும் என்றும், எந்த ஒரு நாளிலும் பிற்பகல் 3 மணிக்குப் பிறகு சமரசப் பேச்சுக்கு ஏற்பாடு செய்ய முடியும் என்றும் எம். எல். ஏ. சொன்னார்.

சென்னையில் பஞ்சாயத்திற்கு வந்த பிறகுதான் சீதாராமனை (P-3) அவருக்குத் (எம். எல்.ஏ.வுக்குத்) தெரியும். தான் ரூ. 5,000 கேட்டதாகவும், முதலில் ரூ. 1,000 பெற்றுக்கொள்ளவும், பின்னர் எஞ்சிய தொகையைப் பெற்றுக் கொள்ளவும் இசைந்ததாக சீதாராமன் (P-3) சொல்லுவது பொய் என்றார். காவற்படையினரின் கடமைகளில் தலையிட்டு அவர்கள் நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்ததாகச் சொல்லப்படுவதும் பொய் என்றார். படகு பெறுவதற்கு தான் சீதாராமனுக்கு எந்த வகையிலும் உதவவில்லையென்றும், சீதாராமன் இது குறித்து எச்சமயத்திலும் தம்மை அணுகவில்லையென்றும் அவர் கூறினார். திண்டுக்கல் தேர்தலில் பங்கு கொள்வதற்காக அவர் TNH 1006 கூற்றுலா டாக்ஸியில் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் அன்று காலை புறப்பட்டதாகச் சொல்லுகிறார். செய்யூர் பாலகிருஷ்ணன், எருவாக்கம் சண்முகம், புதூர் மோகன், வேடல் சபாபதி, ராமலிங்கம் ஆகியோர் அவருடனிருந்தனர். டாக்ஸியை ஓட்டி வந்தவர் சம்பந்தம் (பி-22) என்று அவர் உறுதி கூறுகிறார்.

(b) திண்டுக்கல் வட்டத்தைச் சேர்ந்த என். பஞ்சம்பட்டியில் அவருக்குத் தேர்தல் பணி கொடுக்கப்பட்டது. 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் முதல் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 21ஆம் நாள் வரையில் காலையிலிருந்து மாலை வரையில் அவர் அங்கிருந்தார். 21ஆம் தேதி இரவு தான் அவர் மதுராந்தகம் திரும்பினார்.

(c) தனது பெயர் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருப்பதை 1973ஆம் ஆண்டு மே திங்கள் 29ஆம் நாள் அன்று அவர் கண்டார். விசாரணைக் கமிஷன் முன் பின்னர் நடைபெற்ற நடவடிக்கைகளில் அவரது பெயர் அடிப்பட்டது. அவர் ரூ. 5,000 லஞ்சம் கேட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. தன் பெயருக்கு ஏற்பட்ட இழுக்கை அகற்றிக் கொள்வதற்காகவும் விசாரணைக் கமிஷன் முன் உள்ள விசாரணையில் தனது நலனைக் காக்கவும் அவர் வழக்குரைஞர் ஒருவரை அமர்த்திக்கொண்டார்.

(d) செய்யூர் பாலகிருஷ்ணன், அணைக்கட்டு குள்ளு, கடலூர் சொர்ணம் முதலியோர் காவற்படையினருடன் சென்றனர் என்பதும், அவரும் காவற்படையினரும் பெரிய குப்பம் கிராமத்தில் குற்றங்கள் செய்ததாகச் சொல்லப்படுவது பொய் என்று அவர் சொல்லியுள்ளார். இதற்கெல்லாம் காரணம் அரசியல் விரோதம் தான். தன் பெயருக்கும் தான் சார்ந்துள்ள கூட்சிக்கும் இழுக்கு விளைவிக்கும் நோக்கத்துடனேயே நிறுவன காங்கிரஸ் கட்சியினர் இத்தகைய குற்றச் சாட்டுகளை தன்மீது சுமத்தியுள்ளனர் என்றும் அவர் சொல்லியுள்ளார்.

(e) பெரிய குப்பம் மக்களின் வழக்குரைஞர் இவரைக் குறுக்கு விசாரணை செய்தார். பெரியகுப்பம், அலிகுப்பம் மீனவர்கள் குப்புராஜ் (P-3) கேட்டுக் கொண்டதற்கிணங்க 1973ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4ஆம் நாளில் தன்னைச் சந்தித்தனர் என்று அவர் சொன்னார். சமரசப் பேச்சுகள் அனைத்தையும் குப்பு ராஜ் நடத்திஞர். தொகுதி எம். எல். ஏ. என்ற முறையில்தான் அவர் அங்கிருந்தார். இச் சச்சரவு சுமுகமான முறையில் தீர்க்கப்பட வேண்டும். அவர்கள் நல்ல முறையில் பகைமையின்றி வாழவேண்டுமென்பது தான் அவரது அவா. அக் கூட்டத்தில் போஞர் சீனிவாசன், வேணுகோபால், தன்சிங், சீதாராமன், ராஜு மற்றும் சிலர் ஆகியோர் அக்கூட்டத்தில் இருந்ததாக அவரது நினைவு.

XV. விசாரணைக் கமிஷன் ஆய்வு வரம்பு.

1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் தேதி முதல் 16ஆம் தேதி வரையில் பெரிய குப்பம் கிராமத்தில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி குறிப்பாக செய்யூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட 80/73 எண்ணுள்ள குற்ற வழக்கினை விசாரணை செய்கையில், காவலர் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட அட்டூழியங்கள் பற்றி விசாரணை செய்யுமாறு விசாரணைக் கமிஷன் நியமன ஆணையில் நான் பணிக்கப் பட்டேன். இன்னின்ன பிரச்னைகள் பற்றி விசாரணை நடத்தி முடிவுகள் சொல்ல வேண்டுமென்று எனக்கு அரசு கட்டளைகள் இடவில்லை. எனவே, பெரியகுப்பம்

மக்கள் செய்துள்ள குற்றச் சாட்டுகள் அவர்களது சாட்சிகளின் சாட்சியங்களிலும் ஆவணங்களிலும் கண்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையாயிருக்கக் கூடும்; வெளிப்படையான வழக்கு உள்ளதா; காவல் துறையினர் தங்கள் தரப்பில் கொடுத்துள்ள பதில் வாக்குமூலங்களும், அவர்களது சாட்சிகள் கொடுத்துள்ள சாட்சியங்களிலும், ஆவணங்களிலும் கண்டுள்ள தகவல்கள் பெரியகுப்பம் மக்களினுல் செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நம்பத்தகாதவை, ஆதாரமற்றவை என மெய்ப்பிக்கத் தகுந்தவையா என்பவற்றையெல்லாம் கண்டறிவது தான் என்னுடைய பணி. விசாரணைக் கமிஷன் என்பது நீதி மன்றமல்ல. இங்கு தீர்ப்பு எதையும் வழங்க முடியாது. சில தகவல்களை ஆராய்ந்து அவை பற்றிய முடிவுகளைக் கண்டறிந்து அரசுக்கு அளித்து அரசு மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்க இயலச் செய்வதே இதன் நோக்கமாகும். சுருக்கமாகச் சொன்னுல், இது ஒரு தகவலறியும் குழுவாகும். இதுதான் நானறிந்த வரையில் இந்த விசாரணைக் கமிஷனின் ஆய்வு வரம்பாகும்.

XVI. நடந்த நிகழ்ச்சிகளும் அவை பற்றிய சாட்சியங்களின் பகுப்பாய்வும்.

(1) 80/73 எண்ணுள்ள குற்ற வழக்கில் செய்யப்பட்ட புலனுய்வினைப் பயன்படுத்தி காவல்துறையினர் பெரியகுப்பம் மக்களுக்கு எதிராகக் கீழ்க்காணும் செயல்களைச் செய்தனர் என்பது பெரியகுப்பம் மக்களின் புகாரின் முக்கிய அம்சமாகும். இதனை அவர்களது வழக்குரைஞர் தமது வாதங்களில் எடுத்துரைத்துள்ளார். (a) பெரிய குப்பத்தைச் சேர்ந்த வயது வந்த ஆண்களில் பெரும்பாலோர்—இவர்கள் 72 பேர் இருக்கலாம்—80/73 எண்ணுள்ள குற்றவழக்கில் சம்பந்தப்பட்டனர்.

(b) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் முற்பகலில் பெரிய குப்பத்தைச் சேர்ந்த வயது வந்த ஆண்களின் எண்ணிக்கைக்கு நிகரான எண்ணிக்கையுள்ள ஆயுதம் தாங்கிய காவற்படையினர் பெரிய குப்பம் கிராமத்தின்மீது கட்டவிழ்த்து விடப்பட்டனர். ஆண்கள் ஒடிவிட்ட பிறகு பெண்கள் அவமானத்திற்கு உள்ளாக்கப்பட்டனர்; பலவந்தப் படுத்தப்பட்டனர்; மானபங்கம் செய்யப்பட்டனர். (இது சாதாரண வழக்கில் கற்பழித்தல் என்று சொல்லப்படுகிறது.) அவர்களது சொத்துக்கள் திருடி ஒளித்து வைக்கப்பட்டன. அல்லது அழித்து விடப்பட்டன.

(c) பெண்கள் கிராமத்தை விட்டு ஒடும்படிக் கட்டாயப் படுத்தப்பட்டனர். கிராமம் 1973 ஆகஸ்டு இரண்டாவது வாரம் வரை ஆளில்லாமலிருந்தது.

(d) கைது செய்யப்பட்ட ஆண்கள் அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டனர்.

(e) இச் செயல்களைச் செய்தவர்கள் காவலர்கள்; காவல்துறை டெபுடி சூப்பிரண்டு, சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், தலைமைக் காவலர் ஆகியோர் தலைமையில் பெயர் குறிப்பிட்டுள்ள காவலர்கள் இச் செயல்களைச் செய்தனர்.

(f) இவர்களுக்கு அளும் கூடியில் உள்ளூர் எம். எல். ஏ. உட்பட பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் இவர்களுக்கு முன்நின்று உதவி செய்தனர்.

(2) 30 முதல் 44 வரையிலுள்ள பக்கங்களில் நான்ஏற்கனவே குறிப்பிட்டுள்ள படி 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் முதல் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 16ஆம் நாள் வரையில் அலிக்குப்பம், பெரிய குப்பம் கிராமங்களில் நடந்த சம்பவங்கள் பற்றி இரு வேறுபட்ட கூற்றுகள் உள்ளன. காவல்துறையினர் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் அன்று பெரிய குப்பத்திற்கு 80/73 எண்ணுள்ள குற்ற வழக்கினை விசாரிப்பதற்காகத் தான் சென்றனர் என்பது நிர்வாகத் தரப்பில் சொல்லப்படுவதாகும். அலிக்குப்பத்திலிருந்து திருடியதாகச் சொல்லப்படும் பொருட்களைக் கண்டறிவதற்காக பெரியகுப்பம் பெண்களின் உடைமைகளைச் சோதனையிட்ட பிறகும், சேலையை (M.O.A.) மீட்ட பிறகும் காவற் படையினர் பிற்பகல் சுமார் 3 மணியளவில் பெரிய குப்பத்தை விட்டுச் சென்று பொதுப்பணித் துறை லாக் சைட்டிற்குச் சென்றனர். இதற்குப் பின்னர் காவல் துறையினர் பெரியகுப்பத்திற்குச் செல்லவில்லை. பெரியகுப்பத்தின் பெண்களைத் தொல்லைக்குட்படுத்தவோ, பலவந்தப்படுத்தவோ, கற்பழிக்கவோ இல்லையென்றும்,

அவர்கள் உடைமைகளைக் கொள்ளையடித்து அழிக்கவில்லையென்றும் அவர்கள் ஆணித்தரமாகக் கூறுகின்றனர். எம். எல். ஏ. ஆறுமுகம், கடலூர் சொர்ணம், தி.மு.கவைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் ஆகியோர் காவற்படையுடன் இருந்தவர் என்ற குற்றச்சாட்டையும் அவர்கள் மறுக்கின்றனர். பெரியகுப்பம் மக்கள் 80/73 எண்ணுள்ள குற்ற வழக்கில் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றப் பத்திரிகையிலிருந்து தப்பித்துக்கொள்ளவே பெரியகுப்பம் மக்கள் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் அன்றும், ஏனைய நாட்களிலும் காவல் படையினர் அட்டூழியங்கள் புரிந்தனர் என்று குற்றம் சாட்டியுள்ளதாகவும், இதில் அவர்களுக்கு நிறுவனக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி வி. ரமணிபாய், கண்ணப்ப செட்டியார், ஏனையோர் அரசியல் விரோதம் காரணமாக அவர்களுக்கு உதவியாகவும், தூண்டுதலாகவும் இருந்ததாகவும் நிர்வாகத்தினர் சொல்லியுள்ளனர்.

(3) உள்ளூர் எம். எல். ஏ.க்கு சீதாராமன் ரூ. 5,000 லஞ்சம் கொடுக்கத் தவறியதன் காரணமாகவும் விசைப் படகுகளைப் பயன்படுத்துதல், புறம்போக்கு நிலங்களைப் பயன்படுத்துதல் போன்ற பிற தகராறுகள் காரணமாகவும் அவரும், அவரது ஆதரவாளர்களும், குடும்பத்தினருடன் அலங்குப்பம் கிராமத்தை விட்டுத் துரத்தப்பட்டனர். அவர்கள் நிறுவன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் பெரியகுப்பம் மக்கள் காங்கிரஸ் கட்சியின்பால் கொண்டுள்ள பற்று காரணமாகவும் 80/73 எண்ணுள்ள குற்ற வழக்கு திரு. ஆறுமுகம், எம். எல். ஏ. அலிக்குப்பத்தைச் சேர்ந்த தி.மு.க. போக்கிரிகள் ஆகியோரின் தூண்டுதலினால் உருவாக்கப்பட்டது என்றும், இதையொரு சாக்காக வைத்துக்கொண்டு காவல் துறையினர் பெரியகுப்பத்தில் நுழைந்து 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12, 13, 14ஆம் நாட்களில் அட்டூழியங்கள் செய்தனர் என்பதும், பெரியகுப்பம் மக்களின் தரப்பில் சொல்லப்பட்டது.

(4) நிர்வாகத்தின் தரப்பிலும், பெரியகுப்பம் மக்களின் தரப்பிலும், பல்வேறு சம்பவங்களும், நிகழ்ச்சிகளும் மேற்கோளாக காட்டப்பட்டுள்ளன. இவை ஒன்றுடன் ஒன்று முரண்பாடாக உள்ளன. எனவே, அவற்றை இரு தரப்பினரும் சொல்லியுள்ளபடி நாள் வாரியாகச் சொல்கின்றேன். அதன்பின்னர் அவர்களுக்கு ஆதரவாகச் சொல்லப்பட்டுள்ள சாட்சியங்களையும், எதிராகச் சொல்லப்பட்டுள்ள கூற்றுகளையும் விவாதித்து பகுப்பாய்வு செய்வோம். இந்த நிகழ்ச்சிகள் நடந்திருக்கக் கூடுமா அல்லவா என்பது பற்றியும், காவல் துறையினர் மீதும், ஏனையோர் மீதும் வெளிப்படையான வழக்கு ஒன்று உருவாகியுள்ளதா என்பது பற்றியும் அப்போதுதான் நியாயமான முடிவுக்கு வர முடியும்.

(a) சம்பவம் 1—வெள்ளிக்கிழமை 1973அம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் (காலை 3 மணி முதல் 5-30 வரை. இடம் : அலிக்குப்பம்).

(i) இந்த சம்பவத்தின் பலனுதத்தான் செய்யூர் காவல் நிலையத்தில் 80/73 எண்ணுள்ள குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. காலை 3 மணி வரையில் அலிக்குப்பத்தில் ஒர் ஆரவாரம் எழுந்தது. தன்சிங், சீதாராமன், ராமு, சிவநேசன், ஆகியோர் உட்பட 100 பேர் அடங்கிய கூட்டமொன்று பெரியகுப்பத்தைச் சேர்ந்த சில பெண்களுடன் ''சுத்தி'' ''திருக்கைவரல்'' ''வேலமுள்'', ''தடி'', ''கூட்டி'' போன்ற பயங்கர ஆயுதங்களுடன் அலிக்குப்பம் கிராமத்தில் புகுந்து மக்களை அடித்துத் துன்புறுத்தி வீடுகளுக்கும், ஏனைய சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்துக் கொள்ளையடித்தனர். சுமார் 11 பேர் காயமுற்றனர். A-1, A-2, A-3 ஆகிய சாட்சிகள் இதுபற்றித் தங்களது சாட்சியங்களில் சொல்லியுள்ளனர். பாண்டுரங்கன் (A-1) இதுபற்றி செய்யூர் காவல் நிலையத்தில் புகார் ஒன்றை பிற்பகல் 2-15 மணியளவில் தாக்கல் செய்து காயம்பட்ட அனைவரையும் கொண்டு வந்து காண்பித்தார். தலைமைக் காவலர் மாணிக்கம் காயமுற்றோரை செய்யூர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தார். அங்கு சிகிச்சையளிக்கப்பட்டவுடன் நான்கு பேர் செங்கற்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர்.

(ii) பஞ்சாமிர்தம் (A-2), A-1ன் சாட்சியை உறுதிப்படுத்தினர். லலிதாம்பாள் (A-3) சம்பவங்களை உறுதிப்படுத்துகையில், 20 அல்லது 30 பேர் தங்களது வீட்டிற்கு வந்ததாகவும், அக்கூட்டத்தில் தன்சிங், வேலாயுதம், தனபால் ஆகியோரைத் தான் பார்த்ததாகவும் அவர்கள் தன் வீட்டிலிருந்து ஒரு சிவப்பு சேலை, இரண்டு செம்புத் தவலைகள், ஒரு செம்பு தேக்ஸா, ஆகியவற்றை எடுத்துச் சென்றதாக என்றும் கூறினர். A-1 கொடுத்த புகார் குறித்த முதல் தகவல் அறிக்கை (Ex. A-6) ஆகும்.

(iii) குறுக்கு விசாரணையில் Ex. A-6 முதல் தகவல் அறிக்கை உண்மையானதுதானு என்று பெரியகுப்பம் கிராமத்தினரின் வழக்குரைஞர் கேட்டார். Ex. A-6 உடனடியாக நேரே மிக அருகிலுள்ள உதவி மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பப்படவில்லே என்றும், ஆனல் மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு நேராக அனுப்பப்பட்டது என்றும், அதுவும்கூட 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள் தான் அனுப்பப்பட்டது என்றும் Ex. A-6 இன் முதலாவது ஐந்தாவது பக்கங்களில் மாவட்ட மாஜிஸ்திரேட், உதவி மாஜிஸ்திரேட் ஆகிய இருவருடைய முத்திரைகளும் இடம் பெற்றிருக்கையில் அதன் மூன்றுவது பக்கத்தில் மாவட்ட மாஜிஸ்திரேட்டின் முத்திரை இடம் பெறவில்லே என்றும் அவர் வாதிட்டார். இதன்மூலம், குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் அடங்கிய 3-வது 4-வது பக்கங்கள், மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் இருக்கவில்லே என்றும் இந்த முதல் தகவல் அறிக்கை, பின்னல் உதவி மாஜிஸ்திரேட்டுக்கு வந்து சேர்ந்த சமயத்தில் அடுத்துச் சேர்க்கப்பட்டவையாகும் என்றும் அவர் நிரூபிக்க முயன்ருர்.

(iv) Ex. A-6 இன் மூலம், புகார் செய்யுர் காவல் நிலேயத்தில் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாளன்று பிற்பகல் 2-15 மணிக்கு கொடுக்கப்பட்டது என்பது தெரிகிறது. 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் அம்மாதத்தின் 2-வது சனிக்கிழமை, 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை இரு நாட்களும் பொது விடுமுறை நாட்களாகும். Ex. A-6 ஆனது, பெரும் பாலும் அடுத்த வேலே நாளான 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாளன்று மாவட்ட மாஜிஸ்திரேட் அலுவலகத்தில் திறக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. 80/73 ஆம் குற்ற எண்ணில் முதல் வகுப்பு வழக்குகளும் சம்பந்தப் பட்டிருந்தபடியால், காவல் துறை நிலே ஆணே 574 இன் கீழ் அதிகார வரம்பைப் பெற்றுள்ள முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் ஆன செங்கற்பட்டிலுள்ள மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு இது அனுப்பப்பட்டது. செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணே செய்யப்படத்தக்க குற்றங்களும் 80/73-ஆம் குற்ற எண்ணில் அடங்கியிருந்தன வாதலால், தொடக்க விசாரணே நடத்தி, அவசியமாயின் குற்றவாளிகளே செஷன் ஸுக்கு ''கமிட்'' செய்யும் பொருட்டு, இது மாவட்ட மாஜிஸ்திரேட்டால் மதுராந்தகம் துணே மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும். மூன்றுவது பக்கத்தில் மாவட்ட மாஜிஸ்திரேட் அலுவலக முத்திரை இல்லாதிருப்பதைப் பொறுத்தவரை, இதைத் தவறிப்போய் விட்டிருக்கவேண்டும் என்றும் அவ்வாறு விட்டிருப்பது மாவட்ட மாஜிஸ்திரேட் அலுவலகத்தின் தவறு என்றும் நான் கருதுகிறேன். இதற்குக் காரணம் என்னவெனில், குற்றவாளிகளின் பெயர் பட்டியல் அடங்கிய மூன்றுவது, நான்காவது பக்கங்கள் முதல் தகவல் அறிக்கையின் ஒரு பகுதி என்பது தெளிவு என்பதோடு, ''குற்றவாளிகளின் பெயரும் வசிக்குமிடமும்'' என்பவற்றைக் குறிப்பிடும் 2-வது பத்தியின் தொடர்ச்சியே ஆகும். Ex. A-6 இல் ''தனசிங்கும் மற்றும் இம்பத்தாறு பேர்களும்—பட்டியல் இணேக்கப்பட்டுள்ளது'' என்று தமிழில் தலேமைக்காவலர் எழுதியுள்ளதும் காண முடிகிறது. எனவே, மாவட்ட மாஜிஸ்திரேட்டின் அலுவலக முத்திரை இல்லாததால் மட்டுமே இந்த ஆவணம் பயனற்றதாக ஆக்கப்பட்டுவிடாது.

(v) இதைத் தவிர, மருத்துவச் சான்றிதழ்களான Ex. A-17, Ex. A-17 (a) முதல் 17 (f) வரையில் உள்ளன ஆகியவை, பஞ்சாமிர்தம் (A-2), பட்டையன் பிச்சைக்காரன், சுவாமிநாதன், செல்வன், தேசப்பன், பொன்னுரங்கம் ஆகியோருக்கு Ex. A-6இல் பதிவு செய்யப்பட்டுள்ள திடீர் சோதனைகளின் விளேவாக ஏற்பட்ட காயங்களேக் குறிப்பிடுகின்றன.

(vi) Ex. A-1, Ex.A-2, Ex. A-3, Ex. A-9 ஆகியவை மதுராந்தகம் துணே மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பப்பட்ட ரிமாண்டு அறிக்கைகளாகும். இந்த அறிக்கைகளுடன், குற்றஞ்சாட்டப்பட்ட 7, 3, 7, 55ஆம் நபர்கள் முறையே, நீதி விசாரணேக்காவலுக்காக மாஜிஸ்திரேட்டின் முன்னர் கொண்டுவரப்பட்டனர். A-4, A-12 ஆகிய துணே மாஜிஸ்திரேட்டுகள் இந்த ஆவணங்களேப் பற்றியும் கூறியுள்ளனர். அவர்கள் பிறப்பித்த ரிமாண்டு ஆணேகளும், விசாரணேச் சிறைக்காவல் அறிக்கைகளுக்கு அவர்கள் அளித்த மேலொப்பக் குறிப்புகளும் பதிவில் உள்ளன.

(vii) தெளிவாக வறையறுத்துச் சொல்வதானுல், Ex. A-6 நம்பகமானதா அல்லவா என்பது பற்றி ஆய்வு செய்வது என்னுடைய கடமையன்று, அது 80/73ஆம் குற்ற எண்ணுகப் பதிவு செய்யப்பட்டுள்ளது ; அது

தொடர்பாகப் புலன் விசாரணை நடைபெற்று வருகிறது. வழக்குத் தொடரும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்பொழுது, இது பற்றி ஆய்வு செய்யவேண்டியது இவ் வழக்கை விசாரிக்கும் நீதிமன்றத்தின் பொறுப்பாகும்.

(viii) இவற்றின் விளைவாக, இங்கு நிகழ்ச்சிகள் நடந்திருக்கக் கூடுமா என்று நான் ஐயப்படுவதற்கு எவ்விதக் காரணமுமில்லை. ஆகவே, தெளிவாகப் பார்க்கும் அளவில், 80/73 ஆம் குற்ற எண் பதிவு செய்யப்பட்டதானது சரியானதே என்னும் முடிவுக்கு வருகிறேன்.

(b) நிகழ்ச்சி எண் 2.—1973 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் நாள் வெள்ளிக்கிழமை. பிற்பகல் 4-30 மணி, இடம் : அலிக்குப்பம்.

(i) இது பின்வருவனவற்றைப் பற்றி விவரிக்கிறது : அலிக்குப்பத்தில் பாண்டுரங்கமும் (A-1), பஞ்சாமிர்தமும் (A-2) மற்றும் சுமார் 60 அல்லது 70 பேர் அடங்கிய குழுவினரும் தனிங் மீதும் அவரைச் சேர்ந்த ஆண், பெண், குழந்தைகள் அடங்கிய சுமார் 20 பேர் மீதும் தாக்குதல் நடத்தி அவர்களைப் பெரியகுப்பத்திற்கு விரட்டிச் சென்றது ; பெரியகுப்பம் கிராமத்தார் அவர்களுக்குப் பாதுகாப்பும், அடைக்கலமும் அளித்தது ; அலிக்குப்பம் கிராமத்தார் நுழைவதைப் பெரியகுப்பம் கிராமத்தார் தடுத்தும் இறுதியில் அலிக்குப்பம் கிராமத்தினர் மிரட்டல் விடுத்தும் ஆகியவை பற்றி.

(ii) இந் நிகழ்ச்சி பற்றிக் கூறிய முக்கிய சாட்சிகள் வருமாறு : ரமணி பாய் (P-1), கண்ணப்ப செட்டி (P-2), சீதாராமன் (P-3),.

(iii) P-1 ரமணிபாய் இந் நிகழ்ச்சியைக் கண்ணுல் பார்த்த சாட்சி அல்லர் ; அவர் Ex. P-1-ல் தெரிவித்துள்ளவை, ஏனை தவிர்த்த சாட்சிகளால் அதே போலக் கணிசமான அளவில் ஒத்துச் சாட்சியமளிக்கப்படாவிட்டால் வெறுங் கூற்றுவிடும். P-2 கண்ணப்ப செட்டி கூறுவதாவது : வெள்ளிக்கிழமை, 4-30 மணியளவில் சீதாராமன், தனபால் மற்றும் ஏனையோர், பாண்டுரங்கத் தாலும், ஏனையோராலும் தாக்கப்பட்டனர். இச் செயல்களைப் பொறுக்க முடியாமல், சீதாராமனும் அவரது உறவினர்களும் பெரியகுப்பம் கிராமத்தில் அடைக்கலம் கோரினர். அவர், தனிங், சீதாராமன், தனபால், ஆறுமுகம், பெருமாள் ஆகியோரும், மற்றும் குழந்தைகள், குடும்பத்தினர் ஆகியோரும் அடங்கிய சுமார் 20 பேர் பெரியகுப்பத்தை நோக்கி ஓடிவரக் கண்டார். அவர்கள் பாண்டுரங்கம், பஞ்சாமிர்தம் மற்றும் பெண்கள் உட்பட 60 அல்லது 70 பேர்களால் துரத்தி வரப்பட்டனர். துரத்தி வந்தவர்கள், முன்னால் ஓடிவந்தவர்களைப் பெரியகுப்பத்துக்குள் அனுமதிக்கக் கூடாது என்றும் அவர்கள் அனுமதிக்கப்படுவார்களானால், அதனால் அவர்கள் (பெரியகுப்பம் மக்கள்) தொலைக்கு உள்ளாவார்கள் என்றும் உரக்கக் கத்திக்கொண்டிருந்தனர். இதற்கிடையே தனிங்கும் அவரது ஆட்களும் பெரியகுப்பத்துக்குள் நுழைந்து விட்டிருந்தனர். அலிக்குப்பம் ஆட்கள் அவர்களை மீண்டும் எச்சரித்துவிட்டுத் தங்கள் கிராமத்திற்குத் திரும்பினர்.

(iv) சீதாராமன் (P-3) கூறுவதாவது : பாலகிருஷ்ணன், சொர்ணம், சந்திரன், வண்டு நாயக்கர், அனைக்கட்டுக்குள்ளு ஆகியோர் பாண்டுரங்கனுடனும், அவரது ஆட்களுடனும் சேர்ந்துகொண்டு அவரையும் மற்றவர்களையும் தாக்கினர். இதனால் அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, பெண்கள், குழந்தைகள் உட்பட அவர்கள் அனைவரும் பெரியகுப்பத்தை நோக்கி ஓடிவந்தனர். பெரியகுப்பம் ஆட்கள் அலிக்குப்பம் ஆட்களைத் தடுத்து நிறுத்தினர். அலிக்குப்பம் ஆட்கள் அவர்களை மீண்டும் எச்சரித்துவிட்டுத் திரும்பிச் சென்றனர். அவர் தாம் அளித்த சாட்சியத்தில் " நாங்கள் அன்றிரவு பெரியகுப்பத்தில் பல வேறு ஆட்களின் குடிசைகளில் தங்கியிருந்தோம் " என்று கூறியுள்ளார். அதே சமயம் அவர் அளித்த எழுத்து மூலமான வாக்குமூலமான Ex. P-3-இல் அவர் " பிறகு நாங்கள் அங்குந்தும் வெளியேறிவிட்டோம் " என்று கூறியுள்ளார். இது தொடர்பாக, சாட்சி P-2 கண்ணப்பச் செட்டி தமது சாட்சியத்தில் கூறியுள்ளது இங்கு குறிப்பிடத் தக்கது ; அவர் கூறியுள்ளதாவது : " எம். எல். ஏ. ஆறுமுகம், செய்யூர் பாலகிருஷ்ணன், கடலூர் சொர்ணம் ஆகியோர் கடலூர் சொர்ணத்தின் வீட்டில் வந்துள்ளனர் எனக் கேள்விப்பட்டதன்மேல் நாம் அங்கே சென்று அவர்களைப் பார்த்து இந்த விவகாரம் பற்றிப் பேசலாம் என்று எண்ணினோம் " என்றும், " நாங்கள் கால்வாயை நெருங்கியபோது பெரியகுப்பத்தின் தென் பகுதியில் கூக்குரல்களும், சத்தமும் எழக் கேட்டோம் ; உடனே நாங்கள்

பெரியகுப்பத்திற்குத் திரும்பிவிட்டோம்'' என்றும் கூறியுள்ளார். அவர், தன் சிங்கும், சீதாராமனும் மற்றும் சுமார் 20 பேர் அடங்கிய கூட்டமும், அலிக் குப்பத்திலிருந்து 60 அல்லது 70 பேரடங்கிய கூட்டத்துடன் பாண்டுரங்கம் முதலியவர்களால் துரத்தப்பட்டு வருவதைக் கண்டதாகக் கூறினர். அவர் கூறுகின்ற கால்வாய்ப் பக்கத்திலிருந்து நிகழ்ச்சி நடைபெற்ற இடமானது மூன்று பர்லாங் தொலைவுக்கும் அதிகமாக இருக்கும். இவ்வாறு, அவர் அங்கு எங்கேயும் இருந்திருக்கவில்லை, தவிரவும் அவர் பார்த்ததாகக் கூறுகின்ற ஆட்களைப் பார்த் திருக்க முடியாது. அது இயலாத ஒன்றுமாகும். அவரைக் குறுக்கு விசாரணை செய்த பொழுதும் கூட, Px. P 2-இல் 3-வது பக்கத்தில் அவர் அளித்துள்ள வாக்குமூலத்தில் '' இந்தச் செயல்களை எல்லாம் பொறுக்க முடியாமல் சீதாராம னும், தன்சிங்கும், மற்றும் ஆண், பெண், குழந்தைகள் சுமார் 30 பேர் அடங்கிய ஏனைய உறவினர்களும் பெரியகுப்பம் கிராமத்தில் அடைக்கலம் நாடி வந்தனர் : பெரியகுப்பம் மக்கள் அவர்களுக்குப் பாதுகாப்பும், அடைக்கலமும் தந்தனர் '' எனக் கூறியுள்ளது சரியல்ல என்று அவரே மறுத்துள்ளார். இவர்களால் காணப் பட்டதாகக் கூறப்படும் பஞ்சாமிர்தம் பிற்பகல் 3-55 மணியளவில் செய்யூர் மருத்துவ மனையில் இருந்தார் என்பது சாட்சியத்தில் பதிவாகியுள்ளது. Ex. A 17-இல் உள்ள காயச் சான்றிதழும் இதனையே தெரிவித்து உறுதிப்படுத்துகிறது. பாண்டுரங்கம், பாலகிருஷ்ணன், வடிவேலு ஆகியோரை செய்யூர் காவல் நிலையத் தில் வழக்கு பற்றி விசாரணை செய்யும்பொழுது மாலை 5 மணிக்கு சர்க்கிள் இன்ஸ் பெக்டர் பார்த்துள்ளார். பின்னும் மருத்துவ மனையில் பஞ்சாமிர்தத்தையும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பார்த்தார். எனவே, காயம்பட்ட வர்களை அன்று காவல் நிலையத்துக்குக் கூட்டிச் சென்ற பாண்டுரங்கம், பாலகிருஷ்ணன், வடிவேலு ஆகியோர் பிற்பகல் 4-30 மணியளவில் அலிக்குப்பத்தில் இல்லை என்பது தெளிவு. ஆகவே, அவர்களை அங்கு பார்த்திருக்க முடியாது. இந்தத் தகவலையும் சாட்சிகள் P 2, P 3 அளித்துள்ள சாட்சியங்களின் முரண்பட்ட தன்மையையும் சேர்த்துப் பார்க்கிறபொழுது, அன்றைக்கு அந்த நேரத்தில் தன்சிங் முதலானோர் ஓடியதாகக் கூறப்படும் நிகழ்ச்சி உண்மைதானு என நம்புவதற்குத் துணைபுரிவதாக இல்லை.

(v) இவற்றின் விளைவாக, 1973 மே திங்கள் 11 ஆம் நாளன்று மாலை 4-30 மணியளவில் இந்த நிகழ்ச்சி நடந்திருக்க இயலாது என்பது எனது கருத்தும் முடிவும் ஆகும்.

(c) நிகழ்ச்சி எண் 3.—1973 மே திங்கள் 11ஆம் நாள் வெள்ளிக்கிழமை—நேரம்—இரவு 11 மணி, இடம்—பெரியகுப்பம்.

(i) அலிகுப்பம் கிராமத்து ஆட்களும் சாதாரண உடையில் வந்த காவல் துறையினர் என்று பின்னல் அடையாளம் கூறப்பட்ட சிலரும் 1973 மே திங்கள் 11ஆம் நாளன்று இரவு 11 மணிக்கு பெரியகுப்பம் கிராமத்தின்மீது திடீர்த்தாக்கு தல் நடத்தியதாகக் கூறப்பட்டது பற்றியும், Ex. P-2 இல் 7-வது பத்தியில் கூறப்பட்டுள்ளபடி, அவர்கள் சூறையாடி வகைதொகையின்றித் தாக்கியது பற்றியும் இது விவரிக்கிறது. திரு. அறமுகம், எம்.எல்.ஏ., பெரியகுப்பம் கிராம மக்களை மிரட்டியதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

(ii) சாட்சி (P-2) கண்ணப்பச்செட்டி கூறியுள்ளதாவது : இரவு 11 மணியளவில், வெளிக்குச் சென்ற பெண்மக்கள் சிலர் திரும்பிவந்து, தாங்கள் எல்லையம்மன் கோவில் அருகே சுமார் 30 அல்லது 40 பேரடங்கிய கூட்டம் ஒன்றைக் கண்டதாகத் தெரிவித்தனர். அவர் பெரியகுப்பத்தில் இருந்த ஆட்கள் ஏறத்தாழ 100 பேரைத் திரட்டினர் : அனைவரும் எல்லையம்மன் கோவிலை நோக்கிச் சென்றனர். எல்லையம்மன் கோவிலருகே கும்பலொன்று மேற்குத் திசை நோக்கிச் செல்வதை இவர்கள் கண்டனர். இவர்கள் அவர்களை விரட்டிச் சென்றனர். அந்தக் கூட்டம் கால்வாயைத் தாண்டியது. பெரியகுப்பம் மக்களும் கால்வாயைத் தாண்ட முனைந்தபொழுது அவர்கள் காவலரின் ஊதுகுழல் ஓசையைக் கேட்டனர் ; அதைத் தொடர்ந்து '' நாங்கள் போலீஸ்காரர்கள் '' என்னும் சொற்களையும் கேட்டனர் ; '' நான்தான் ஆறுமுகம், எம்.எல்.ஏ., விடியட்டும், என்ன நடக்கிறதென்று பாருங்கள்.'' என்று கூறுவதையும் கேட்ட னர். அன்றிரவு இருள் படிந்திருந்தது : மங்கலாகச் சிறிது நிலா வெளிச்சம் தெரிந்தது. அவர்கள் யாரையும் பார்க்க முடியவில்லை ; ஆனல் பேச்சுக் குரல் களை மட்டுமே கேட்டனர். சீதாராமனும் கூட (சாட்சி P-3) சாட்சி P-2 கூறியதைப் பொதுவாக ஆதரித்து அதனையே கூறியுள்ளார். சாட்சி P-2 (கண்ணப்பச் செட்டி) காவல் துறை வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப் பட்ட பொழுது அவர் முன்னர் கூறியதையே மறுத்துக் கூறியுள்ளார் ; அதாவது,

அவர் தாம் அளித்துள்ள Ex.P-2-இல் உள்ள வாக்குமூலத்தில் '' 1973 மே திங்கள் 11ஆம் நாளன்று, மேற்குறிப்பிட்ட நபர்களும் மற்றவர்களும், இன்னும், மதுராந்தகம் காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் உட்பட சாதாரண உடையில் வந்த காவலர்கள் என்று பின்னல் அடையாளம் கூறப்பட்ட வேறு சிலரும் பெரியகுப்பம் சிற்றூரின் மீது திடீர்த் தாக்குதல் நடத்திச் சூறையாடி கண்மூடித்தனமாகத் தாக்கினர் '' என்று தெரிவித்துள்ளது சரியல்ல எனக் கூறியுள்ளார். குறுக்கு விசாரணையின்போது, அந்தக் கூட்டம் '' பெரிய குப்பத்துக்குள் நுழையவுமில்லை, சேதம் ஏதும் விளைவிக்கவும் இல்லை '' என்றும் கூறியுள்ளார். சாட்சி P-2-வின் கூற்றுப்படி தன்சிங்கும் சீதாராமனும் அன்றிரவு பெரியகுப்பத்தில் இல்லை. Ex.P-3-இல் கூறப்பட்டுள்ளபடி கூட சீதாராமன் '' பிறகு நாங்கள் அங்கிருந்தும் வெளியேறிவிட்டோம் '' எனத் தெரிவிக்கிறார். சாட்சி P-3 தாம் எழுத்துமூலமாக அளித்த வாக்கு மூலத்தில் கூட (Ex. P-3) கால்வாயின் புறமாக எம்.எல்.ஏ., விடுத்த மிரட்டல் பற்றிக் குறிப்பிட்டிருக்கவில்லை. எனவே, இந்த நிகழ்ச்சி நடந்திருக்கும் என்பது மிகவும் சந்தேகத்துக்குரியதாகவே தோன்றும்.

(iii) எம்.எல்.ஏ.-யைப் பொறுத்த வரையில், (P-24) பெரியகுப்பம் நிகழ்ச்சிகளின்போது அவர் நகரில் இல்லை எனக் சாட்சியம் அளித்துள்ளார், டாக்சி டிரைவர் சம்பந்தமும் (P-22) இதையொத்துச் சாட்சியம் அளித்துள்ளார். (எம்.எல்.ஏ. கொடுத்துள்ள இந்த வேற்றிட (alibi) வாதத்தை நான் ஏற்றுள்ளேன் ; இதுபற்றிப் பின்னல் விரிவாக விளக்கப்பட்டுள்ளது).

(iv) காவல்துறையினரின் கூற்றுப்படி, A-13 ஆன சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அன்று அளிக்கப்பத்தில் புலன் விசாரணையை முடித்துக்கொண்டு, தேவராஜன், சின்னதுரை ஆகியோர் முன்னிலையில் நேர்முக விசாரணை மகஜரைத் தயாரித்த பின்னர் கடலூருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். இரவு சுமார் 10-25 மணிக்கு அவர் மூன்று கேட்டிருந்த படைக்கலந்தாங்கிய ஏமக்காவற்படைப் பிரிவு இரண்டு அவரிடம் வந்து கடமைப் பொறுப்பேற்பதாய்த் தகவல் அளித்தனர். அவர்களுடன் அவர் கடலூருக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில், பெரிய குப்பம் இருந்த பக்கத்திலிருந்து சுமார் 200 பேர் கொண்ட கூட்டம் அவருடைய குழுவினரை நோக்கி வந்து கொண்டிருப்பதை உணர்ந்தார். அவர் தான் யார் என்பதையும் தெரிவித்து, தாங்கள் காவல் துறையினர் என்பதையும் அவர்களுக்கு எடுத்துரைத்தபோது பெரியகுப்பம் மக்கள் வீலகிச் சென்று விட்டனர். அவர் காவற்படையினரைக் கடலூரில் செய்யூர் சப்-இன்ஸ்பெக்டரது பொறுப்பில் விட்டு விட்டு மதுராந்தகத்திற்கு நள்ளிரவு தாண்டி 12-30 மணி அளவில் திரும்பி வந்து சேர்ந்தார். காவல் துறை வண்டி MDH 6628 இன் நாட்குறிப்பேட்டில், 1973 மே திங்கள் 11ஆம் நாளுக்கான குறிப்பில் [Ex. A 8 (a)] உள்ள பதிவுகள் கீழ்க்காணும் தகவல்களை வெளியிடுகின்றன :—

'' . . . . . கடலூர் போய், அங்கிருந்து குப்பம் போய் பார்வையிட்டு திரும்பி மதுராந்தகம் வரப்பட்டது ''. A-1 பாண்டுரங்கமும், A-14, சப்-இன்ஸ்பெக்டரும் இதனையொத்துச் சாட்சியம் அளித்துள்ளனர். தவிரவும், (A-8) சந்திரன், தான் அன்று (1973 மே திங்கள் 11ஆம் நாள்) இரவு 11 மணியளவில் கடலூருக்குத் திரும்பிவந்தபொழுது அவர் '' மகளிர் மன்றத்தில் '' சுமார் 20 காவலர்களைப் பார்த்ததாகக் கூறியுள்ளார். அப்போது சப்-இன்ஸ்பெக்டர் உட்கார்ந்து கொண்டிருந்தார் ; காவலர் சிலர் பக்கத்திலிருந்த கடையில் எதையோ சாப்பிட்டுக்கொண்டிருந்தனர் எனக் கூறியுள்ளார்.

(v) A-13 தெரிவித்த நிகழ்ச்சியும் அதனை ஒத்து முறையாக A-14, A-1 ஆகியோர் அளித்த சாட்சியங்களும் பயனுள்ள முறையில் திறம்பட மறுத்துரைக்கப்படவில்லை. சாட்சிகள் P-1, Ex.P-1-இலும், P-2, Ex.P-2 இலும் முதற்கண், பெரியகுப்பம் கிராமத்தின் மீது அலிக்குப்பம் கிராமத்தினர் தாக்குதல் நடத்தினர் எனவும் காவல்துறை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உட்பட காவலர்களும் பெரியகுப்பத்தை கண்மூடித்தனமாக சூறையாடுவதில் ஈடுபட்டனர் எனவும் குற்றம் சாட்டினர். முன்னே கூறியது போல, குறுக்கு விசாரணையின்போது இது சரியல்ல என்று பின்னல் P-2 ஆலேயே அறிவிக்கப்பட்டுள்ளது. அதே குறுக்கு விசாரணையின்போது அவர் அந்தக் கூட்டம் '' பெரியகுப்பம் கிராமத்துக்குள் நுழையவுமில்லை, சேதம் ஏதும் விளைவிக்கவும் இல்லை '' என்றும் கூறியுள்ளார். சாட்சி P-1 (ரமணிபாய்) இந்த நிகழ்ச்சியைத் தாமே கண்ணால் பார்த்த சாட்சி அல்லர் ; எனவே அவர் கூறியுள்ளது மற்றவர், கூறியதைக் கேட்டுச் சொன்னதாகும்.; தனிப்பட்ட சாட்சிகள் அதனையொத்துச் சாட்சியம் அளிக்கவில்லையாதலால் அதனை நம்ப இயலாது.

(vi) இவ்வாறு, இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரை, சாட்சியங்களில் பொருத்தமான தன்மை ஏதும் இல்லை. ஆனால் மாறாக, பெரியகுப்பம் கிராமத்து மக்களின் சாட்சிகள் கூறியுள்ளதில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. இருப்பினும், அலிக்குப்பத்து ஆட்கள் கூட்டத்தைப் பெரியகுப்பத்து மக்கள் பார்த்தார்கள் என்பதிலும், அதுபோல, பெரியகுப்பத்திலிருந்து மக்கள் கூட்ட மொன்றை காவல் துறையினர் கண்டனர் என்பதிலும் ஒற்றுமையுள்ளது. உண்மையில், அலிக்குப்பத்திலிருந்து வந்த கூட்டம், 80/73 ஆம் குற்ற எண்ணில் புலனுய்வு செய்த பின்னர் கடலூரை நோக்கித் திரும்பிச் சென்று கொண்டிருந்த காவல் துறைப்படையினரேயாகும். பெரியகுப்பம் ஆட்கள் இந்தக்குழு தங்களை நோக்கித்தான் வருகிறது என எண்ணியிருக்க வேண்டும்; அவர்கள் அக்குழுவினருடன் மோதக் கூடிய நிலையில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தமது ஊதுகுழலை ஊதி தாங்கள் காவல்துறையினர் என்பதைத் தெரிவித்தார். அதற்குப்பின்னர் ஏதும் நடந்ததாகத் தெரியவில்லை. அந்தச் சமயம் இரவு (மணி 11) என்பதையும் பார்வைக்குப் புலனுவதும் தெளிவாகக் கண்டறிவதும் மிகக் கடினமாயிருந்திருக்கும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

(vii) இந்த நிலையில், அன்றிரவு பெரியகுப்பத்தை எவரும் தாக்கவுமில்லை, சூறையாடவுமில்லை என்றும், குற்றஞ்சாட்டிக் கூறப்பட்ட நிகழ்ச்சி அடிப்படையேயில்லாத கற்பனை என்றும் நான் முடிவு செய்கிறேன்.

(d) நிகழ்ச்சி எண் 4.—1973 மே திங்கள் 12ஆம் நாள் சனிக்கிழமையன்று (காலை 11 மணி முதல் மாலை 5-30 மணி வரை) பெரியகுப்பத்தில் நடந்தது.

(i) குற்றச்சாட்டுகள் எல்லாவற்றுக்கும் முக்கிய காரணமாக அமைந்துள்ளது இந்நிகழ்ச்சியே. பெரியகுப்பம் மக்கள் கூறுவது: அன்றையதினம் காலை சுமார் 11 மணியளவில் திரு. ஆறுமுகம், எம்.எல்.ஏ. காவல் துறை டெபுடி சூப்பிரண்டு, செய்யூர் பாலகிருஷ்ணன், அணைக்கட்டுகுளுரு, கடலூர் சந்திரன், வண்டு நாயக்கர், கடலூர் சொர்ணம், பாண்டுரங்கன், வடிவேல், பஞ்சாமிர்தம் ஆகியோரும் காவலர்கள் பலரும் இரண்டு வண்டிகளிலும் ஒரு ஜீப்பிலும் வந்து லாக்சைட்டில் இறங்குவதை பெரியகுப்பம் மக்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் பெரியகுப்பம் நோக்கிச் செல்வதைக் கண்ட ஆண் மக்கள் ஓடிவிட்டனர். பின்னர், காவல் படையினர், மேற்சொன்னவர்களுடன் பெரியகுப்பத்தில் நுழைந்து, பெண்களை அடித்து, உதைத்து, அவர்களைத் தாக்கி, உடைகளைக் களைந்து, அவர்களைப் பலவந்தப்படுத்திக் கற்பழித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. ஒரு பெண்ணுக்குக் (P-12) கர்ப்பச் சிதைவும், மற்றொரு பெண்ணுக்குக் குறைப்பிரசவமும் ஏற்பட்டது. பெண்கள் விரட்டப்பட்டு சுடு மணலில் காவல் துறை டெபுடி சூப்பிரண்டு முன்னிலையில் நிர்வாணமாக உட்காரச் செய்யப்பட்டனர், அச்சமயம், வீடுகளிலிருந்து பித்தளை, அலுமினியப் பாத்திரங்கள் சேகரிக்கப்பட்டு பின்னர் இராமசாமி செட்டியார் வீட்டில் வைத்துப் பூட்டப்பட்டு, குள்ளம்மாளிடம் (P-9) சாவி ஒப்படைக்கப்பட்டது.

(ii) நிர்வாகத்தினர் கூறுவது.—இன்றையத் தினம்தான் காவல்துறை டெபுடி சூப்பிரண்டு, சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், காவலர் படையினர் ஆகியோருடன் காலை 10 மணியளவில் அலிக்குப்பத்திற்கு வந்தனர்; குற்ற எண் 80/73 தொடர்பாகச் சில விசாரணைகள் நடத்தி, புகைப்படங்கள் எடுத்த பின்னர், அலிகுப்பத்தைச் சேர்ந்த ஆறு பெண்களுடன் மதியம் சுமார் 12 மணியளவில் பெரியகுப்பம் நோக்கிச் சென்றனர்; மேற்படி ஆறு பெண்கள் தான் தங்களுடைய பொருள்களை பெரிய குப்பத்தைச்சேர்ந்த பெண்கள் களவாடியதாகக் குற்றம் சாட்டியிருந்தனர். களவு போனதாகக் கூறப்படும் பொருளைதுவும் சோதனையின்போது காணப்படவில்லை; ஆனால், அனுசூயா என்பவர் வீட்டிலிருந்து புடவை ஒன்று (MOAI) மீட்கப்பட்டது; லலிதாம்மாள் (A-3) அதை அடையாளம் காட்டினர். புடவையை மீட்பதற்கான மீட்பு மகஜர் (Ex.A-7) ஒன்று தயாரிக்கப்பட்டது. இவையனைத்தும் அநேகமாக 3 மணி நேரத்தில் நடந்த நிகழ்ச்சிகளாகும்; பின்னர், முந்திய நாள் அலிகுப்பம் தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பெரியகுப்பம் பெண்கள் 23 பேரையும் விசாரணைக்காக லாக் சைட் என்ற இடத்தில் வந்து கூடுமாறு கேட்டுக் கொண்டு காவலர் படையினர் லாக் சைட்டை நோக்கிப் புறப்பட்டனர், அலிக்குப்பத்தைச் சேர்ந்த ஆறு பெண்களும் லாக் சைட்டில் வந்து கூடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். பிற்பகல் சுமார் 3-30 மணியளவில் பெரியகுப்பம் பெண்களும் அலிகுப்பம் பெண்களும் வந்து கூடினர், விசாரணை நடத்தப்பட்டு மாலை சுமார் 5-30 மணி வரை வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. அதன்பின்னர்,

மேற்படி பெண்கள் அனைவரும் வீடு திரும்புமாறு கூறப்பட்டனர். இதன்பின்னர் காவல் துறை டெபுடி சூப்பிரண்டு இரவு செங்கற்பட்டுக்குத் திரும்பி தமது மேலதிகாரிகளுக்குத் தகவல்கள் கொடுத்தார். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பொறுப்பிலிருந்த காவல் படையினர் கடலூரிலேயே நிறுத்திவைக்கப்பட்டனர்.

(iii) ஏற்கெனவே கூறியுள்ளதைப்போல, திருமதி ரமணிபாய் (P-1) இந்நிகழ்ச்சிகளை நேரில் பார்த்தவர் அல்லர். ஆகவே, அவர்தம் வாக்குமூலத்தை, ஏனைய சாட்சிகள் தனித்தனியே கொடுக்கும் வாக்குமூலத்துடன் ஒத்திருந்தாலன்றி மற்றப்படி அதை நம்பகமாக எடுத்துக்கொள்ள இயலாது.

(iv) கண்ணப்ப செட்டியும் (P-2), சீதாராமனும் (P-3), 1973 மே திங்கள் 12ஆம் நாளன்று காலை வரை நடந்த நிகழ்ச்சிகளை மட்டுமே குறிப்பிட்டுள்ளனர். 1973 மே திங்கள் 12ஆம் நாளன்று காலை காவல் துறையினரைப் பார்த்தபிறகு அவர்கள் ஒடிவிட்டனர் என்பதையும் இந்நிகழ்ச்சிகள் நடந்த தாகக் கருதப்படும் சமயத்தில் அவர்கள் பெரியகுப்பத்தில் இல்லை என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். ஆகவே, P-1-ஐப் போன்று அவர்கள் சாட்சியமும் எனக்குப் பயனற்றது.

(v) சுப்புலட்சுமி (P-6), வேம்புலி அம்மாள் (P-7), நாயகம்மாள் (P-8), குள்ளம்மாள் (P-9), ஜராஜாம்பாள் (P-10), கஸ்தூரி (P-12), நடராஜன் மனைவி பூபதி (P-13), ஹரிராம செட்டியார் மனைவி பூபதி (P-20) ஆகியோரே பெரியகுப்பத்தில் 1973 மே திங்கள் 12ஆம் நாள் முதல் 1973 மே திங்கள் 14ஆம் நாள் வரை நடைபெற்ற நிகழ்ச்சிகளை நேரில் பார்த்தவர்களாக வாக்குமூலம் அளித்துள்ள பெரியகுப்பம் மக்கள் ஆவர்.

(vi) திருமதி ரமணிபாயும் ஏனையோரும் குறிப்பாக வேண்டுகோள் விடுத்ததன் பேரில், வாக்குமூலங்கள் தாக்கல்செய்வதற்கான காலஅளவு நட்டிக்கப்பட்டிருந்த போதிலும் தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குமுக்கள் பற்றிய விதிகளைச் சேர்த்த 7-வது விதியின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கிணங்க, மேற் சொன்ன 8 சாட்சிகளும் ஆணைக்குமு நிர்ணயித்திருந்த தேதிக்கு (அதாவது, 1973 ஜூன் திங்கள் 19ஆம் நாளுக்கு) முன்பாக மேற்படி அறிவிப்பில் கேட்டிருந்தபடி வாக்குமூலம் எதுவும் தாக்கல் செய்ய முன்வரவில்லை. அவர்கள் அனைவரும் தங்கள் இன்னல்களை வெளிப்படுத்த பத்திரிகைகளையும் பொது மேடைகளையும் நாடி, காவல் நிறையினர் செய்த கொடுஞ்செயல்கள் என்று குற்றஞ்சாட்டிப் புகைப்படங்கள் கொடுத்தல் முதலிய வழிகளைக் கையாண்டனரே அன்றி மற்றப்படி வாக்குமூலம் ஏதேனும் தாக்கல் செய்வதே முறையானதென்று அவர்கள் நினைக்கவில்லை. -' நிர்வாகத்தினர் '' குறிப்பிட்டுள்ள சாட்சியங்கள் மேற் சொன்ன அறிவிப்புக்கேற்றவையால் இல்லையென்று விசாரணைத் தொடக்கத்தில் கடுமையான ஒழுங்குப் பிரச்சினையெழுப்பி, வாக்குமூலங்கள் தாக்கல் செய்த பெரியகுப்பம் சார்பு வழக்கறிஞரே மேற்கொண்டு இவ்விவகாரத்திற்கு முன்வரவில்லை. எனினும், நீதியை நிலைநாட்டவும் நியாயமான விசாரணை நடைபெறவும் வேண்டும் என்ற நல்லெண்ணத்தினால் பெரியகுப்பம் மக்கள் பாதிக்கப்பட்டதரப்பினர் என்ற காரணத்தால், பெரியகுப்பம் மக்கள் சார்பில் இந்த சாட்சிகளை விசாரிக்க ஆணைக்குமு அனுமதித்தது. இந்த சாட்சிகள் விசாரணை மேடைக்குச் சென்று உறுதிமொழி எடுத்துக்கொள்ளும்போது தங்களுடைய வாய்மொழி, வாக்குமூலத்திற்கு ஆதரவாக எழுத்துமூல வாக்குமூலங்கள், அதாவது, நகலெடுக்கப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட அறிக்கைகள் அளிக்கப்பட்டன; அவற்றையும் வாக்குமூலங்களாகப் பதிவு செய்யவேண்டுமென்றும் அவர்களுடைய வழக்கறிஞர் வற்புறுத்தினர். இது அனுமதிக்கப்படவில்லை. எனினும், நியாயமான விசாரணை நடைபெற வேண்டுமென்ற காரணத்தால், மீண்டும் இந்த அறிக்கைகள் அவர்களுக்கு ஆதரவான சான்றுவணங்களாகப் பதிவு செய்யவும் உபயோகப்படுத்தவும் அனுமதிக்கப்பட்டன.

(vii) மேலே துணைப் பத்தி (v)-ல் குறிப்பிட்டுள்ள ஆணைக் குமுவின் முன்பாகச் சாட்சியம் கொடுத்துள்ள சாட்சிகளில் இராஜாம்பாள் (P-10) நீங்கலான அனைவரும் திருமதி ரமணிபாய் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தில் (Ex. P-1) பாதிக்கப்பட்டவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். பெண்களை அடித்தல், உதைத்தல், உடைகளைக் களைதல், பலவந்தப்படுத்தல், சுற்றிவளைத்தல் உட்பட காவல் துறையினருக்கெதிரான மிகவும் கடுமையான குற்றச்சாட்டுக்களை பெரியகுப்பத்தைச் சேர்ந்த இப்பெண்கள் கூறி வருகின்றனர். பாதிக்கப்பட்டுள்ளவர்கள் என்ற வகையில் பேசியுள்ள சாட்சிகள் இவர்களே. ஆகவே, அவர்களது

சாட்சியத்தை நம்பலாமா அல்லவா என்பதுதான் இப் பிரச்னைக்கு முடிவு கட்டுவ தாக அமையும். அவர்களது முரண்படாத தெளிவான சாட்சியம் காவல் துறை யினரும் ஏனியோரும் புரிந்துள்ள குற்றங்களைத் தீர்மானிக்கும். எனவே, நான் அவர்களுடைய சாட்சியத்தை விரிவாக ஆராயத் தொடங்குகிறேன்.

சுப்புலட்சுமி (P-6).—இவருக்குத் தமிழ் படிக்கத் தெரியாது என்றாலும் தமிழில் அவர் கையொப்பமிட முடியும். இவர் தாம் விசாரணை செய்யப்பட்ட தேதியில் எழுத்து மூலமான வாக்குமூலமொன்றைத் தாக்கல் செய் தார். நிகழ்ச்சி நடந்த தேதியில் காவல் துறை பெரிய அதிகாரியொருவர் (காவல் துறை டிபுடி சூப்பிரண்டு) '' பூவரச '' மரத்தடியில் உட்கார்ந்துகொண் டிருந்ததாக இவர் தெரிவித்துள்ளார். காவல் துறையினர், பெண்களை எல்லா இடங்களிலும் அடித்து, பூட்ஸ் காலால் உதைத்து, உடைகளைக் கீளியச் செய்து, காவல் துறை அதிகாரிக்குமுன் கொளுத்தும் மணலில் கூட்டமாக உட்கார வைக்கப்பட்டனர். காவல் துறையினர், பாண்டுரங்கன், பாலகிருஷ்ணன், மனோ கரன், பூபாலன், அலிக்குப்பம் பஞ்சாமிர்தம், ஆனியோருடன் ஒவ்வொரு வீட்டி னும் நுழைந்து பித்தளை, அலுமினிய, எவர்சில்வர் பாத்திரங்களைக் கொண்டுவந்து காவல் துறை அதிகாரி முன்பாக வைத்தனர். இளம் பெண்கள் சிலர் வீடுகளுக் குள் தள்ளப்பட்டு, கற்பழிக்கப்பட்டனர். காவல் துறையினரின் அடாத செயல் காரணமாக ஒரு பெண்ணுக்குக் கர்ப்பச் சிதைவும் மற்றொரு பெண்ணுக்குக் குறைப் பிரசவமும் ஏற்பட்டது. அந்த தெருக்கு இரு வீரர்கள் கழித்து திருமதி ரமணி பாய், வக்கில் கனேசன், ஜெயராம வாத்தியார், ஆனியோர் பெரியகுப்பம்சென்று சின்னக்குப்பத்தில் இருந்த இவருக்குச் சொல்லியனுப்பினர். இவரும் பெரிய குப்பத்தைச் சேர்ந்த ஏனைய 30 பெண்களும் அவர்களைச் சந்தித்து விவரங்களைக் கூறினர்; அவர்கள் இந்த விவரங்களைப் பதிவு செய்து கொண்டனர். அவர் களையும் அவர்களுடைய வீடுகளையும் வைத்துப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. ஒரு வாரம் கழித்து சுமார் 100 பெண்கள் சென்னைக்குச் சென்றனர்; அப்போது மக்கள் பலர் அவர்களை விசாரித்து மேற்கொண்டும் புகைப் படங்கள் எடுத்தனர். பின்னர் அவர்கள் ஊர்வலமாகச் சென்று மாண்புமிகு அமைச்சர்களுக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் மனுக்கள் கொடுத்தனர். காவல் துறையினருக்கான தனி வழக்கறிஞர் இவரைக் குறுக்கு விசாரணை செய்தபோது, இவர், ஒரு பெண்ணுக்குக் கர்ப்பச் சிதைவு ஏற்பட்டதாகவும், ஆனால், கர்ப்பச் சிதைவு எப்படி ஏற்பட்ட தென்று தெரியாது என்றும் இவர் கூறினர். இந்த நிகழ்ச்சி நடந்தது அந்தப் பெண் (கர்ப்பச் சிதைவு ஏற்பட்ட பெண்) சென்னை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டதும் மட்டுமே இவருக்குத் தெரியும். அவர் பெயர் கஸ்தூரி. Ex. P-6-ன்போது கஸ்தூரியின் பெயர் நினைவுக்கு வராததால் இவர் அச்சமயத்தில் கஸ்தூரியின் பெயரைக் குறிப்பிடவில்லை. வழக்கறிஞர் லட்சுமண ரெட்டி இவரைக் குறுக்கு விசாரணை செய்தபோது, இவருடைய தெரு வைச் சேர்ந்த எல்லா வீடுகளிலும் உள்ள பெண்களின் பெயர்களும் தமக்குத் தெரியுமென்று இவர் தெரிவித்தார். அவமானப்படுத்தப்பட்ட அல்லது கற்பழிக் கப்பட்ட பெண்களின் பெயர்கள் (ஒருவர் நீங்கலாக) இவருக்குத் தெரியாது. இவர் பார்க்கவோ, அது பற்றி எவரையும் கேட்கவோ இல்லை. இவர் சாட்சிய மளித்த தேதியன்று கூட இந் நிகழ்ச்சி பற்றி இவருக்குத் தெரியாது. கஸ்தூரி யின் பெயர் மட்டுமே இவருக்குத் தெரிந்தேயன்றி, காவல் துறையினரால் கற்பழிக்கப்பட்டவர் கஸ்தூரிதான் என்பது இவருக்குத் தெரியவில்லை. காவல் துறையினர் கஸ்தூரியை அடித்தனரென்பதும் அவருக்குக் கர்ப்பச் சிதைவுஏற்பட்ட தென்பதும் இவர் கேள்விப்பட்டதுதான். இவர் பெரியகுப்பத்திலிருந்தபோது சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை ஆகிய நாட்களிலோ, தாம் சாட்சியமளிக்கும் தேதி வரை எந்தச் சமயத்திலோ கஸ்தூரியைப் பார்க்கவில்லை. இவருடைய குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களைத் தவிர, பெரியகுப்பத்திலுள்ள ஏனைய ஆண்களின் பெயர்கள் இவருக்குத் தெரியாது. ஆனால், பாண்டுரங்கன், பாலகிருஷ்ணன், பஞ்சாமிர்தம், வேலாயுதம், அலிக்குப்பம் பட்டயன், ஆகி யோரின் பெயர்கள் இவருக்குத் தெரிகிறது. எனினும், இவரை மறு விசாரணை செய்தபோது, வழக்கறிஞர் குறிப்பான கேள்வியொன்று கேட்ட சமயத்தில், இவர் தம்மையும் காவல் துறையினர் பலவந்தப்படுத்தியதாகக் கூறினர்.

வேம்புலி அம்மாள் (P-7).—இவருக்குத் தமிழ் படிக்கவோ எழுதவோ தமது பெயரைக் கையொப்பமிடவோ தெரியாது. தமது பெருவிரல் ரேகை முத்திரையுடன் கூடிய எழுத்து மூல வாக்குமூலமொன்றை இவர் தாக்கல்செய்தார். காவல் துறையினருக்கான தனி வழக்கறிஞர் இவரைக் குறுக்கு விசாரணை செய்த போது, கற்பழிக்கப்பட்ட பெண்களின் பெயர்களைத் தம்மால் கூற முடியவில்லை யென்று இவர் கூறினர். இவர் தாமாகவே எதையும் பார்க்கவில்லை. ஆனால், நிகழ்ச்சியை அண்டை வீட்டார் கூறக் கேட்டிருக்கிறார். கர்ப்பச் சிதைவு

ஏற்பட்ட பெண்ணின் பெயர் கஸ்தூரி என்பது இவருக்குத் தெரிகிறது. Ex. P-7-ல் இவர் கொடுத்துள்ள வாக்குமூலத்தில் இவ்வுண்மை ஏன் குறிப்பிடப்படவில்லை என்று இவருக்குத் தெரியவில்லை. கஸ்தூரியின் மாமியாரான பூபதி என்பவர் அந்த சனிக்கிழமை 1973 மே திங்கள் 12-ம் நாளன்று அந்தி நேரத்தில் அவரை ஒய்யாலிக்குப்பத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டதாகவும், அதன் பின்னர் பெரிய குப்பத்திற்குத் திரும்பவேயில்லை என்றும் இவர் தெரிவித்தார். நாயகம்மாள், சுப்புலட்சுமி, குள்ளம்மாள், சின்னம்மாள் ஆகியோரின் பெயர்கள் இவருக்குத் தெரிகிறது. தாங்கள் காவல் துறையினரால் பலவந்தப்படுத்தப்பட்டு கற்பழிக்கப் பட்டதாக அவர்கள் இவரிடம் நேரில் கூறினர். இது சனிக்கிழமை நடை பெற்றது. (இந்த உண்மை Ex. P-7-ல் இவர் கொடுத்துள்ள எழுத்துமூலமான வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாக தமது சாட்சியத்தில் இவர் கூறியருக்க, இவ்வுண்மையை இவர் குறிப்பிடவில்லையென்பது Ex. P-7 மூலம் தெரியவரும்).

நாயகம்மாள் (P-8).—இவருக்குத் தமிழ் படிக்கவோ, எழுதவோ, தமது பெயரைக் கையொப்பமிடவோ தெரியாது. தமது பெருவிரல் ரேகை முத்திரையுடன் கூடிய எழுத்துமூல வாக்குமூலமொன்றை இவர் தாக்கல் செய்தார். இவர் Ex. P-6-ல் அளித்துள்ள வாக்குமூலமும் இவரது சொந்த எழுத்து வடிவ வாக்குமூலமும் பொதுவில் ஒரே மாதிரியாக இருக்கின்றன. காவல் துறையினருக்கான தனி வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ததில், தமது கணவர் கே. ஜெயராமன் (P-4) சாதாரணமாக பெரியகுப்பத்திலிருந்து சுமார் இரண்டு பர்லாங் தொலைவிலுள்ள வயல்களில் தங்குவது வழக்கமென்று இவர் தெரிவித்தார். எப்போதோ ஒரு முறை அவர் குப்பத்திற்கு வருவது வழக்கமென்றும் இவர் தெரிவித் தார். அவர் அமர்த்தியுள்ள சமையற்காரி, உறவினர்கள் வீட்டிற்குச் செல்லும் போது, சாதாரணமாக மாதமொரு முறை தமது கணவருடைய வயலுக்குச் செல்வது வழக்கமென்றும் இவர் தெரிவித்தார். காவல் துறையினர் அந்த சனிக் கிழமை, 1973 மே திங்கள் 12-ம் நாளன்று பிற்பகல் சுமார் 3-00 மணிவரை பெரிய குப்பத்தில் இருந்ததாகவும், அன்றையதினம் அவர்கள், பலவந்தப்படுத்தும் அல்லது கற்பழிக்கும் செயல்எதிலும் ஈடுபடவில்லை என்றும் இவர் தெரிவித்துள்ளார். காவல் துறையினர் அவர்களுடைய வீடுகளிலிருந்து பொருள்களை எடுத்துவரவும் அவர்களை அடிக்கவும் மட்டுமே செய்தனர். அந்த சனிக்கிழமை இரவு காவல் துறையினர் எந்தப் பெண்ணையும் அடிக்கவில்லையென்று ஒரு சமயத்திலும், சனிக் கிழமையன்று அவர்கள் வந்து பெண்களை அடித்தனரென்று மற்றெரு சமயத் திலும் இவர் கூறியிருக்கிறார். மேலும், சனிக்கிழமையன்று, அதாவது 1973 மே திங்கள் 13-ம் நாளன்று காவல் துறையினர் வந்து கூட்ட நேரத்தில் இரண்டு பெண்களைக் கற்பழித்ததாகவும், அந்த இரண்டு பெண்களில் தாமும் ஒருவர் என்றும், மற்றெருவர் கஸ்தூரியென்றும் இவர் தெரிவித்துள்ளார். இவரையும் கஸ்தூரியையும் கற்பழித்த காவலர்களின் பெயர்கள் இவருக்குத் தெரியுமா என்று ஆணைக் குழுவினர் கேட்ட குறிப்பான கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், தமக்குப் பெயர்கள் தெரியாது என்றும், ஆனால், அடையாளம் காட்ட முடியு மென்றும் இவர் தெரிவித்தார். கஸ்தூரி மட்டுமே வந்து, தாம் கற்பழிக்கப் பட்டதாக இவரிடம் கூறினர். ஆனால், இவராக அதைப் பார்க்கவில்லை. காவல் துறையினர் அடித்தல், கற்பழித்தல் உட்பட, எனும் அட்டூழியச் செயல்கள் செய்தல் முதலிய நிகழ்ச்சிகள் எதையும் இவர் தாமாகப் பார்க்கவில்லை. இதைக் கிராமத்தைச் சேர்ந்த ஏனைய பெண்கள் சொல்லக் கேட்டதுதான்.

குள்ளம்மாள் (P-9).—இவருக்குத் தமிழ் படிக்கவோ எழுதவோ தமது பெயரைக் கையொப்பமிடவோ தெரியாது. தமது பெருவிரல் ரேகை முத்திரையுடன் கூடிய எழுத்து மூல வாக்குமூலமொன்றை (Ex. P-9) இவர் தாக்கல் செய்தார். இவரது சாட்சியமும் Ex. P-6-ல் கொடுத்துள்ள வாக்கு மூலமும் பொதுவாக ஒரே மாதிரியாக இருக்கின்றன. காவல் துறையினருக்கான தனி வழக்கறிஞர் இவரைக் குறுக்கு விசாரணை செய்ததில், அந்த சனிக்கிழமை, 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாளன்று காவல் துடையினர் சுமார் 130 பெண்களை அடித்தனரென்று இவர் கூறினர். 10 பெண்கள் கூறியதைக் கொண்டு தான் அவர்கள் காவல்துறையினரால் கற்பழிக்கப்பட்டனரென்று இவருக்குத் தெரிய வந்தது. அவர்கள் யாரென்பது இவருக்குத் தெரியாது. இவரது வீட்டிலேயே காவல் துறையினர் ஒரு பெண்ணைக் கற்பழித்தனர். ஞாயிற்றுக்கிழமையன்றும் காவல் துறையினர் வந்து பெண்களை அடித்தனர். அன்றையதினம், அதாவது, 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 13 ஆம் நாளன்று இளம்பெண்கள் போய்விட்டதால் காவல் துறையினர் எவரையும் பலவந்தப்படுத்தவோ, கற்பழிக்கவோ இல்லை. திங்கட்கிழமை 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 14 ஆம் நாளன்று அங்கிருந்த நாயகம்மாள், சின்னப்பொன்னு, மாரியம்மா, மேகாத்தா ஆகியோரது

பெயர்கள் இவருக்கு நினைவிலிருக்கிறது. இவர் கைவிரல் ரேகை முத்திரை யிட்ட Ex. P-9 எங்கு எப்போது தயாரிக்கப்பட்டதென்பது இவருக்குத் தெரியவில்லை. ஆணைக்குழுவினர் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், கர்ப்பச் சிதைவு ஏற்பட்ட நபர் கஸ்தூரியென்று இவர் தெரிவித்தார்.

இராஜாம்பாள் (P-10).—இவருக்குத் தமிழ் படிக்கவோ, எழுதவோ தமது பெயரைக் கையொப்பமிடவோ தெரியாது. எழுத்துமூலம் வாக்குமூலமொன்றை (Ex. P-10) இவர் தாக்கல் செய்தார். காவல் துறையினர் பெண்களை அடித்தது, உதைத்தது, பூட்ஸ் காலால் உதைத்தது, அவர்களுடைய உடைகளைக் கீழ்ந்து சுடு மணலில் அவர்களை உட்காரச் செய்தது ஆகியவை குறித்து,Ex. P-6-ல் கண்டுள்ள வாக்குமூலம் இவரது சாட்சியமும் பொதுவில் ஒரே மாதிரியாக இருக்கின்றன. தம்மையும் எல்லா இடங்களிலும் ஒரு கழி கொண்டு தாக்கியதாகவும் சுடுமணலில் நிர்வாணமாக உட்கார வைக்கப்பட்டதாக வும் இவர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாகத் தீப்புண் ஏற்பட்டு தமது புட்டங்கள் பாதிக்கப்பட்டதாகவும் இவர் தெரிவித்துள்ளார். இது தவிர காவல் துறையினர் பலவந்தப்படுத்தல், கற்பழித்தல் ஆகிய செயல்களில் ஈடுபட்டது அல்லது பெண்கள் பாதிக்கப்பட்டது குறித்து இவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

கஸ்தூரி (P-12).—உறுதிமொழிப் பத்திரம் அல்லது எழுத்து மூல மான வாக்குமூலம் எதனையும் இவள் தாக்கல் செய்யவில்லை. இவள் தன்னுடைய பெரிய மாமியாரின் மூத்த சகோதரனின் மனைவியுடன் வாழ்ந்து வந்தாள். இவளுடன் அந்த வீட்டில் அப்போது ஆறு பெண்கள் இருந்தனர். சுமார் 10 காவலர்கள் அவளுடைய வீட்டிற்குள் வந்து அவர்களை அடித்த பின்னர் அவர்களை வெளியே இழுத்து வந்தனர். அவள் வெளியே வந்து 50 அல்லது அதற்கு மேற் பட்ட பெண்கள் தரையில் அமர்ந்திருந்ததையும் அவர்களில் 10 பெண்கள் உடைகள் ஏதுமின்றி இருந்ததையும் கண்டாள். அவள் தன்னுடைய வீட்டிற்குள் ஓடினாள் ; அவளை 4 அல்லது 5 காவலர்கள் துரத்திச் சென்றனர். காவலர் அவளைப் பிடித்து, அவளைக் கற்பழிக்கும் நோக்குடன் அவளுடைய சேலையை இழுத் தனர். அவள் மயக்கமுற்று கீழே விழுந்தாள். அவள் அப்போது மூன்று மாத கர்ப்பிணியாக இருந்தாள். அதற்குப் பின் அவளுக்கு நடந்தது ஒன்றும் தெரியாது. அவளுடைய மாமியார் வந்து அவள் படுத்திருந்த இடத்திலிருந்து அவளை எடுத்துச் சென்றாள். அவளுக்கு நினைவு வந்தபோது, அவளுடைய உடலிலிருந்து இரத்தம் வெளி வந்து கொண்டிருந்ததோடு அவள் படுத்திருப்பதையும் கண்டாள். இரத்தம் வருவதால் கருச்சிதைவு ஆகிவிட்டதாக நினைத்தாள். தனது வயிற்றில் பூட்ஸ் காலால் உதைக்கப்பட்டிருக்கவேண்டும் என்று அவள் உணர்ந்தாள். ஒரு முறை காவலரால் உதைக்கப்பட்டதை அவள் நினைவுபடுத்தினாள். 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் சனிக்கிழமையன்றே அவள் சென்னைக்கு எடுத்துச் செல்லப் பட்டு, வீட்டில் சிகிச்சை அளிக்கப்பட்டாள். காவலருக்கான தனி வழக்குரைஞர் அவளை குறுக்கு விசாரணை செய்தபோது, ரமணிபாயைத் தனக்குத் தெரியாது என்றும் அல்லது அவள் எங்கு தங்கியிருக்கிறாள் என்பதும் தெரியாது என்றும் அவள் தெரிவித்தாள். அவளே வந்து சொல்லிய நாள் வரை ரமணிபாயை அவள் பார்த்ததில்லை. அவளும் அவளிடம் வந்ததில்லை. பெரிய மாமியாருடன் தங்கு வதற்காக அவள் சென்றாள். ஏனெனில் அவள் அலிக்குப்பத்தைச் சேர்ந்தவள். எனவே, தான் அங்கு பாதுகாப்பாக இருக்க முடியும் என்று கருதினாள். எனினும், பெரிய மாமியாரின் பெயர் அவளுக்குத் தெரியாது. சனிக்கிழமை அந்தி நேரத் திற்குப் பின் அவளுடைய சொந்த மாமியார் அவளை சின்னக்குப்பத்திற்கு அழைத் துச் சென்றதாகவும் அதே இரவு சின்னக்குப்பத்திற்கு வந்திருந்த ராயபுரத்தைச் சேர்ந்த இருவர் அவளை ஓய்யாலிக்குப்பம், வயலூர், புதுப்பட்டிணம் வழியாக சென்னைக்கு அழைத்துச் சென்றதாகவும் அவள் தெரிவித்தாள்.

நடராஜனின் மனைவி பூபதி அம்மாள் (P-13). தமிழை ஓரளவுக் குப் படிக்கவும் எழுதவும் இவளுக்குத் தெரியும். தமிழில் கையெழுத்தைப் போடு வாள். இவள் எழுத்துமூலமான வாக்குமூலத்தைக் கொடுத்துள்ளாள் (Ex. P- 12). எல்லா இடங்களிலும் பெண்களைக் காவலர் அடித்ததையும், அவர்களை பூட்ஸ் காலால் உதைத்ததையும், பெரிய காவல் துறை அதிகாரி முன்பு சுடு மணலில் அவர்களை உட்காருமாறு செய்ததையும் குறித்து Ex. P-6-ல் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தில் உள்ளதையே இவள் தெரிவித்தாள். இதே மாதிரி தானும் அனு பவித்ததாகத் தெரிவித்தாள். வலியைத் தாங்க முடியாததாலும், காவலர்களின் கையில் மேற்கொண்டும் சித்திரவதைப்படுவோம் என்ற பயத்தினாலும் இவள் சின்னக் குப்பத்திற்குச் சென்றாள். அங்கு காவலரும், தி.மு.க. ஆட்களும் பெரிய குப்பத் திற்கு வந்து துன்புறுத்துவதில் ஈடுபட்டனர் என்று அங்குள்ள பெண்கள் இவளிடம் தெரிவித்தனர்.

காவலருக்கான தனி வழக்குரைஞர் இவளைக் குறுக்கு விசாரணை செய்தபோது, தான் கோட்டைக்கு (சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையைத் தான் சொன்னாள்) சென்றபோது Ex. P-12-ல் தான் கையெழுத்திட்டதாகத் தெரிவித்தாள். பெரியகுப்பத்தில் நிகழ்ச்சி நடந்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர் அவள் கோட்டைக்குச் சென்றாள். காவலர்கள் பெண்களை கற்பழித்ததை அல்லது பலவந்தப்படுத்தியதைத் தான் பார்த்தது குறித்து அவள் எதுவும் சொல்லவில்லை.

ஹரிராம செட்டியாரின் மனைவி பூபதி அம்மாள் (P-20). தமிழில் எழுதவோ படிக்கவோ அல்லது கையெழுத்துப் போடவோ இவளுக்குத் தெரியாது. அவள் எழுத்து மூலமான வாக்குமூலத்தைத் தாக்கல் செய்துள்ளார் (Ex. P-18). 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாளன்று காவலர் அடித்ததையும், காவல் துறை அதிகாரி முன்பு சுடு மணலில் பெண்கள் நிர்வாணமாக உட்கார வைக்கப்பட்டார்கள் என்பதையும் பற்றி Ex. P-6-ல் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தை இவள் பொதுவாக ஒப்புக்கொண்டாள். அந்த மாதிரி தானும் அனுபவித்ததாக அவள் தெரிவித்தாள். அன்று பிற்பகல் 3-00 மணிக்கு தன்னுடைய வீட்டிற்குச் சென்றபோது, தன்னுடைய மருமகள் கஸ்தூரி (P-12) இரத்த வெள்ளத்தில் கிடந்ததைக் கண்டாள். தன் வீட்டில் இருந்த பெட்டி உடைக்கப் பட்டிருந்ததையும், அதில் இருந்த துணிகள் காணாமல்போயிருந்ததையும் கண்டாள். கோவிலுக்கும், கிராமத்திற்கும் சொந்தமான 2 உண்டியல்களில் இருந்த பணம் காணமற்போயிருந்தன. ராயபுரத்திலிருந்து வந்த இருவருடன் தன்னுடைய மருமகளை சின்னக்குப்பத்திற்கு அழைத்துச் சென்றாள். ராயபுரத்திலிருந்து வந்த இரு பெண்கள் சின்னகுப்பத்திலிருந்து அவளை ராயபுரத்திற்கு அழைத்துச் சென்றனர். ரமணிபாய், வக்கீல் சுணேசன், ஜயராம் வாத்தியார் ஆகியோர் பெரியகுப்பத்திற்கு வந்தபோது அவள் தனது வாக்குமூலத்தைக் கொடுத்தாள். காவலருக்கான தனி வழக்குரைஞர் லட்சுமண ரெட்டி அவளைக் குறுக்கு விசாரணை செய்தபோது, சென்னையிலிருந்து சனிக்கிழமை இரவே தான் வந்ததாகவும், அந்த இரவு சின்னகுப்பத்தில் தங்கியிருந்ததாகவும் தெரிவித்தாள். அதற்கு முன்னர் அவள் சென்னையில் தங்கியிருந்தாள். ராயபுரத்திலிருந்து வந்துள்ளதாக அவள் குறிப்பிட்டுள்ள இருவர் பெண்களாவர்; நிகழ்ச்சி நடந்தபோது சனிக்கிழமை அவர்கள் பெரியகுப்பத்திற்கு வந்திருந்தனர். பெரியகுப்பத்தைச் சேர்ந்த மற்றொரு பெண் சுடுமணலில் நிர்வாணமாக உட்கார்ந்திருந்ததை இந்த இரு பெண்களும் கண்டனர். ராயபுரத்திலிருந்து வந்த இந்த இரண்டு பெண்களுடன் சனிக்கிழமை அன்று தனது மருமகள் கஸ்தூரியை (P-12) அனுப்பி வைத்தாள்: தானும் ஞாயிறன்று சென்னைக்குச் சென்றுவிட்டாள். இரண்டு நாட்கள் கழித்து அவள் சின்னகுப்பத்திற்குத் திரும்பிவந்தாள். (பெரியகுப்பம் மக்களுக்கான வழக்குரைஞர் அவளை மீண்டும் குறுக்கு விசாரணை செய்தபோது, அவள் நினைவு படுத்தி, Ex. P-18-ல் எழுத்து மூலம் எழுதிக் கொடுத்த வாக்குமூலத்தில் அவள் குறிப்பிட்டுள்ள நபர்களை அடையாளம் காட்ட முடியுமா என்று அவளிடம் கேட்கப் பட்டபோது, அவள் பஞ்சாமிர்தத்தைக் காட்டினாள். அது சரியாக இருந்தது. அவள் பட்டையன் என்ற மற்றொரு நபரைக் காட்டினாள். ஆனால் அவன் பூபாலன் ஆகும்).

(viii) சாட்சியங்களின் ஆய்வும் முடிவும். செங்கற்பட்டு, காவல் துறை டெபுடி சூப்பிரண்டுக்கு சடகோபால் என்பவர் அனுப்பிய தந்தியான 1973 மே திங்கள் 17ஆம் நாளிட்ட Ex. P-4 ஆவணமும், மதுராந்தகம் காவல் துறை இன்ஸ்பெக்டருக்கு சிங்காரவேலு என்பவர் 1973 மே திங்கள் 16ஆம் நாளன்று அனுப்பிய தந்தியான (Ex. A-13 ஆவணமும் கற்பழிக்கப்பட்ட அல்லது பலவந்தப்படுத்தப்பட்ட நபர்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். கண்ணப்ப செட்டி (P-2), சண்முகம், நந்தகோபால், சடகோபால், கண்ராஜன் ஆகியோர் 1973 மே திங்கள் 19ஆம் நாள் அன்று கையெழுத்திட்ட படியெடுக்கப்பட்ட மனு Ex. A-14 ஆகும். பெண்கள் பலவந்தப்படுத்தப்பட்டது குறித்து நாங்கள் கேள்விப்படுகிறோம் என்று சொன்னபொது, சம்பந்தப்பட்ட பெண்களின் பெயர்களைப்பற்றி அதில் எதுவும் குறிப்பிடவில்லை. Ex. A-14-ல் தொடர்ச்சியும், அதே நபர்கள் கையெழுத்திட்ட படியெடுக்கப் பட்ட மனுவான 1973 மே திங்கள் 23ஆம் நாளிட்ட Ex. A-15இல் பாதிக்கப் பட்ட பெண்ணின் பெயர் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. திருமதி ரமணி பாய் (P-1) கண்ணப்ப செட்டி (P.-2), சடகோபால், பெரிய கருப்பன் ஆகியோர் முன்னிலையில் சென்னையைச் சேர்ந்த வழக்குரைஞர் ஒருவரால் Ex. A-14 தயாரிக்கப்பட்டது என்று P-2 சாட்சியத்தில் பதிவாகியுள்ளது. நிகழ்ச்சியின் விவரங்களை திருமதி ரமணிபாயும், கண்ணப்ப செட்டியும் வக்கீலிடம் தெரிவித் திருப்பார்கள். அதனை அடிப்படையாகக் கொண்டு Ex. A-14 தட்டச்சு செய்யப்

பட்டிருக்கிறது. கண்ணப்ப செட்டியின் (P-2) உறுதிமொழிப் பத்திரத்தில்கூட (Ex. P-2) பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயர் குறிப்பிடவில்லே. காவலரால் பலவந்தப்படுத்தப்பட்ட தனது மருமகள் (P-8) உட்பட கிராமத்தின் இளம் பெண்கள் சிலர் தப்பி வந்து தன்னேச் சந்தித்து விவரங்களேத் தெரிவித்தனர். என்றும், அதனே அடிப்படையாக வைத்து Ex. A-14-ம், Ex. A-15-ம் தயாரிக்கப் பட்டு அனுப்பப்பட்டதாகவும் அவர் உறுதிமொழிப் பத்திரத்தில் தெரிவித் துள்ளார். [எனினும், அவரது மருமகளான நாயகம்மாள் (P-8) தவிர மற்ற எவரும் அவரைச் சந்திக்கவில்லே என்று சாட்சியத்திலிருந்து தெரிய வருகிறது]. காவலருக்கான தனி வழக்குரைஞர் அவரை குறுக்கு விசாரணே செய்தபோது, தான் கையெழுத்திட்டு கொடுத்த Ex. A-14-ல் எழுதியிருத்ததைப் பற்றி தனக்கு விளக்கப்படவில்லே என்று கண்ணப்ப செட்டி (Ex. P-2) கூறினர். அவரது மருமகள் நாயகம்மாள் (P-8) நிகழ்ச்சி நடந்த நான்கு நாட்களுக்குப் பின்னர் அதாவது 1973 மே திங்கள் 16ஆம் நாளன்று திருவான்மியூர் குப்பத்தில் அவரைச் சந்தித்து இந்நிகழ்ச்சி பற்றி அவருக்கு விளக்கினுள். இதை அவரே தனது சொந்த சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். எனவே, கண்ணப்ப செட்டியின் மருமகள் (P-8) விவரித்துள்ளவாறு கண்ணப்ப செட்டிக்கு (P-2) நிகழ்ச்சி அனேத் தும் பற்றி விபரம் தெரியும். இவ்வாறிருக்க, பெண்களேப் பற்றிய தகவல்களேயும் கற்பழித்தலில் சம்பந்தப்பட்ட பெயர்களேயும், Ex. A-14-ல் (இதை இவர் 1973 மே திங்கள் 19ஆம் நாள் தான் கையெழுத்திட்டார்) குறிப்பிடாதது விந்தையாயிருக்கிறது. நான்கு நாட்களுக்குப் பின்னர் அதாவது, 1973 மே திங்கள் 23-ஆம் நாளன்று கையெழுத்திடப்பட்ட Ex. A-15-லும் பெண்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லே. பெரியகுப்பம் பெண்கள் கற்பழிக்கப்பட்டதற்கு காரணத்தை வெளிப்படுத்திய திரும்தி ரமணிபாயோ (P-1) கண்ணப்ப செட்டியோ (P-2) கற்பழிக்கப்பட்ட அல்லது பலவந்தப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி குறித்து காவலரிடம் புகார் ஒன்றைத் தாக்கல் செய்யவில்லே அல்லது மாஜிஸ்டிரேட் முன்பு புகார் ஒன்றைத் தாக்கல் செய்யவில்லே என்பது விந்தையாயிருக்கிறது! அவர்கள் கலந்தாலோசித்து வக்கிலும் இவ்வாறு செய்யுமாறு அவர்களுக்கு ஆலோசனே கூறியதாகத் தெரியவில்லே, அல்லது அவர் ஆலோசனே கூறியிருந்தால் அது செயல்படுத்தப்படவில்லே. இது குறித்து சாட்சியம் எதுவும் இல்லே.

(ix) நேரில் பார்த்த சாட்சியங்களின் முரண்பாடுகளேயும் பார்த்தவர்கள் என்னிடம் தெரிவித்த கருத்துக்களிலிருந்து என்னுல் எதையும் திட்டவட்ட மாகத் தெரிவிக்கமுடியவில்லே. அவர்கள் அளித்த சாட்சியங்களில் உள்ள குழப்ப நிலேயைப் பற்றி எடுத்துரைக்க, அவர்களேக் குறுக்கு விசாரணே செய்தபோது வெளிப்பட்ட பல்வேறு முரண்பட்ட கருத்துக்களே கீழே கொடுத்துள்ளேன் :—

கஸ்தூரி குறைமாதக் குழந்தையைப் பெற்றெடுத்தாள் என்று சுப்பு லட்சுமி சொன்னுள் (P-6) ஆனுல் எப்படி என்று தெரியவில்லே என்கிருள். அது நடந்ததோது அதைப் பார்க்கவுமில்லே.

கற்பழிக்கப்பட்ட பெண்களின் பெயர்கள் தனக்குத் தெரியாது என்று வேம்புலி அம்மாள் (P-7) சொல்கிருள். அவள் தானே எதையும் பார்க்கவில்லே ஆனுல் பக்கத்தில் உள்ளவர்கள் சொல்லத்தான் கேள்விப்பட்டாள். எனினும், குறைமாதக் குழந்தையைப் பெற்றெடுத்தவள் கஸ்தூரி என்று அவள் அறிந்திருக் கிருள். 1973 மே திங்கள் 12ஆம் நாள் எனிக்ழுமை அந்தி நேரத்தில் கஸ்தூரியின் மாமியார் பூபதி அம்மாள் அவளே ஒய்யாலிகுப்பத்திற்கு அழைத்துச் சென்றதாகவும், அதன் பின்னர் அவர்கள் பெரிய குப்பத்திற்குத் திரும்பவில்லே என்றும் அவள் கூறினுள். எனினும், நாயகம்மாளும் (P-8) கஸ்தூரியும் அந்த ஞாயிறு இரவில் பெரியகுப்பத்தில் தங்கியதாக நாயகம்மாள் கூறினுள். கஸ்தூரி எனிக்ழுமையன்றே பெரியகுப்பத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டதாக வேம்புலி அம்மாள்(P-7)தெரிவித்ததற்கு இது முற்றிலும் முரணுக உள்ளது! அவளேக் (நாயகம்மாளே) கற்பழித்த காவலரின் பெயரும் அவளுக்குத் தெரியாது. கஸ்தூரி யைப் பொறுத்தவரை, அவள் வந்ததான், நீ கற்பழிக்கப்பட்டு விட்டாய் என்று அவளுக்குச் (கஸ்தூரிக்குச்) சொன்னுள். (எனினும், P-8க்கு தான் சொல் லியது பற்றி கஸ்தூரியே தனது சாட்சியத்தில் எதுவும் சொல்லவில்லே. அதை அவள் தானே பார்க்கவுமில்லே. மற்ற பெண்களேக் காவலர்கள் அடித்ததை அல்லது கற்பழித்ததை அவள் பார்க்கவில்லே.)

நூற்றுமுப்பது பெண்கள் அடிக்கப்பட்டதாகவும், 10 பெண்கள் தங்க ளுக்குள்ளே சொல்லிக்கொண்டதிலிருந்து அவர்கள் காவலர்களால் கற்பழிக்கப் பட்டதாக அவளுக்குத் தெரியவந்தது என்றும் குள்ளம்மாள் (P-9) பொதுவாகச் சொன்னுள். அந்த 10 பெண்கள் யார் என்று அவள் தெரிவிக்கவில்லே. இது தவிர, அவள் தானே எதையும் பார்க்கவில்லே.

தன்னை காவலர் பிடித்துக் கற்பழிக்கும் நோக்குடன் தன் சேலையைப் பிடித்து இழுத்தனர் என்று கஸ்தூரி (P-12) சொன்னாள். இந்த நிலையில் அவள் மயக்கமுற்றுக் கீழே விழுந்து விட்டாள். அதன் பின்னர் நடந்தவை அவளுக்கு நினைவில்லை. சனிக்கிழமை அந்தி நேரத்திற்குப் பின்னர் தன்னுடைய மாமியார் தன்னை சின்னக்குப்பத்திற்கு அழைத்துச் சென்றதாக அவள் தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். (இது இவ்வாறிருக்க, நாயகம்மாள் (P-8) கஸ்தூரி யுடன் பெரியகுப்பத்தில் 1973 மே திங்கள் 13ஆம் நாள் ஞாயிறன்று இரவு இருந்ததாகச் சொல்வது சரியாக இருக்க முடியாது).

தன்னைக் காவலர் கற்பழித்துவிட்டதாகவும், அதனால் தன்னை மாய்த்துக் கொள்ள கடலை நோக்கி ஓடியதாகவும் நாயகம்மாள் (P-8) தன்னிடம் சொன்ன தாக துரைக்கண்ணு (P-16) கூறினார். மூன்று காவலர்கள் தன்னைக் கற்பழித்தது பற்றி நாயகம்மாள் (P-8) தன் சாட்சியத்தில் எதுவும் சொல்லவில்லை. நாயகம் மாள், சுப்புலட்சுமி, குள்ளம்மாள், சின்னம்மாள் என்ற பெயர்கள் தனக்குத் (வேம்புலி அம்மாள் (P-7) தெரியும் என்றும் காவலர்களால் தாங்கள் கற்பழிக்கப் பட்டதாக அவர்கள் அவளிடம் நேரில் தெரிவித்ததாகவும் அவள் கூறும்போது, அது நடந்ததை அவள் பார்க்கவில்லை. தான் கற்பழிக்கப்பட்டதாக தனது சாட்சியத்தில் சுப்புலட்சுமி (P-6) தெரிவிக்கவில்லை. தான் கற்பழிக்கப்படவில்லை என்று குள்ளம்மாள் (P-9) தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். இங்கு குறிப் பிடப்பட்ட சின்னம்மாள் விசாரணை செய்யப்படவே இல்லை. எனவே அவளைப் பற்றி எதுவும் சொல்ல முடியாது. தான் கற்பழிக்கப்பட்டதாக கஸ்தூரியும் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை. காவலர்கள் அவளது சேலையைப் பறித் திழுக்கும்போது அவள் மயக்கமுற்று விழுந்து விட்டாள் : அதன் பின்னர் நடந்தது அவளுக்கு எதுவும் நினைவில்லை என்பது நினைவில் வைத்துக் கொள்ளப்படவேண்டும். ஆகவே, தான் உண்மையில் கற்பழிக்கப்பட்டுவிட்டதாக தனது சாட்சியத்தில் சொன்ன ஒரே பெண் நாயகம்மாள்தான் (P-8). P-6, P-7, P-20 ஆகியோரின் சாட்சியத்தில் இது பதிவாகியுள்ளது. கஸ்தூரி தானே கொடுத்த சாட்சியத்தின்படி 1973 மே திங்கள் 12ஆம் நாள் சனிக்கிழமை இரவு அவள் பெரியகுப்பத்தி லிருந்து அழைத்துச் செல்லப்பட்டாள். என்வே, ஞாயிறு காலை கஸ்தூரி கற்பழிக் கப்பட்டாள் என்று நாயகம்மாள் (P-8) சொல்வது பொய்யாகும். இவ்வாறு கற்பழிக்கப்பட்டுவிட்ட குற்றச்சாட்டுடன் வந்த ஒரே பெண் நாயகம்மாள் (P-8) தான் சொல்லியவற்றுக்கு முரணைக் சொல்லியதுடன் மட்டுமின்றி, நடந்த நிகழ்ச்சிகள் குறித்து அவளைக் குறுக்கு விசாரணை செய்தபோது உண்மையை மறைப்பதாக உள்ளது. ஆனால் அவள் தெரிவித்தவையும் மற்ற பெண்கள் கொடுத்த வாக்குமூலத்திற்கு முரணை உள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை தான் கற்பழிக்கப்பட்டதாக நாயகம்மாள் கூறினாள். நாயகம்மாளும் ஏனைய பெண் களும் தாங்கள் சனிக்கிழமை கற்பழிக்கப்பட்டதாக தன்னிடம் சொல்லியதாக வேம்புலி அம்மாள் (P-7) தெரிவித்தார். பத்து பெண்கள் தன்னிடம் சொல்லியதி லிருந்து, அவர்கள் காவலரால் சனிக்கிழமை கற்பழிக்கப்பட்டதாக குள்ளம்மாள் (P-9) தெரிவித்தாள். அவர்கள் யார் என்று அவளுக்குத் தெரியாது.

பக்கத்தில் கூடலூரில் உள்ள தன் கணவன் ஐயராமனுக்கு (P-4) தான் கற்பழிக்கப்பட்டு விட்டதைத் தெரிவிக்க நாயகம்மாள் (P-8) எதுவும் சொல்லவில்லை என்பது ஆச்சரியமாயிருக்கிறது. பெரியகுப்பத்தில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து ஐயராமனுக்கு (P-4) எதுவும் தெரியாது. நான்கு நாட்கள் கழித்து நாயகம்மாள் தனது மாமனார் கண்ணப்ப செட்டியை (P-2) திருவான்மியூரில் சந்தித்து, பெரியகுப்பத்தில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து அவருக்கு விவரித்தாள். கண்ணப்ப செட்டி என்ன செய்கிறார் ? அவர் எதுவும் செய்யவில்லை. சாதாரண மாக அவரிடமிருந்து இது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றுமும். தனது மருமகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்ய அவர் ஏற்பாடு செய்யவில்லை ; காவலருக்கு அல்லது மாஜிஸ்டிரேட்டுக்குப் புகார் ஒன்றைத் தாக்கல் செய்யவும் நினைக்கவில்லை. தான் சனிக்கிழமை மாலை பெரியகுப்பத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு, அடுத்த நாள் ஞாயிறு பிற்பகல் சென்னையை அடைந்ததாக கஸ்தூரி (P-12) தனது சாட்சியத்தில் தெரிவித்தாள். அதை மற்றவர்களும் ஏற்றுக் கொண்டனர். இவ்வாறுக, மருத்துவரிடம் பரிசோதனை செய்து கொள்ளவும், உரிய மருத்துவச் சான்றைப் பெறவும், காவலருக்கோ, மாஜிஸ்டிரேட்டுக்கோ புகார் ஒன்றைத் தாக்கல் செய்ய அவளுடைய தந்தையின் அல்லது அவரது நண்பர்களின் உதவியை நாடவோ அவளுக்கு வாய்ப்பிருந்தது. இவை எதையுமே அவள் செய்யவில்லை. அவளுக்கு ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் தொல்லையை அதுபற்றி தன் தந்தை யாருக்குச் சொல்லவில்லை என்று கஸ்தூரி சொன்னாலும் அவளுடைய தந்தையாருக் கும் தெரிந்திருக்கவேண்டும். அவரும் இதுபற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நாயகம்மானும் (P-8) கஸ்தூரியும் (P-12) நான்கு நாட்களுக்குள் நிகழ்ச்சி நடந்த இடத்திலிருந்து வெளியேறிவிட்டனர். மருத்துவ அதிகாரியிடம் பரிசோதனைக்குச் சென்று தங்கள் நிலைமைபற்றி தெரிவிக்க காவலர் அல்லது ஏனைய ஒருவர் தடுப்பார் என்ற பயம் இருந்திருக்க நியாயமில்லை.

பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று அறிக்கைகள் கொடுக்கவும், காவலர்களால் தாங்கள் கற்பழிக்கப்பட்டு வருவதையும், பலவந்தப்படுத்தப்பட்டு வருவதையும் பற்றி வீட்டின் கூரைகளிலிருந்து கூக்குரலிடவும், புகைப்படங்களுக்கு போல் கொடுக்கவும் இந்த பெண்கள் வெட்கமடையாதிருக்கும்போது, இந்நிகழ்ச்சி பற்றித் தெரிவிக்க சந்தர்ப்பம் இருந்த போதிலும் தங்கள் கணவரிடமோ அல்லது தந்தையிடமோ தெரிவிக்கவில்லை என்பது ஆச்சரியமாகவும் வருத்தமாகவும் உள்ளது. அவர்களுடைய நண்பர்கள் அவர்களுக்குத் தவருக ஆலோசனை கூறியுள்ளனர் என்று தெரிகிறது.

(x) P-6, P-7, P-8, P-9, P-10, P-10, P-13, P-20 ஆகியோர் கொடுத்த எழுத்து மூலமான வாக்குமூலங்கள் 1973 ஜூன் திங்கள் 18ஆம் நாளிட்டதாகும்; அவற்றை அவர்கள் அதே நாளில் கையெழுத்திட்டனர் என்பது மற்றொரு ருசிகரமான நிகழ்ச்சியாகும். P-6, P-7-ம் இந்த எழுத்து மூலமான வாக்குமூலங்கள் 1973 ஆகஸ்டு திங்கள் 28 ஆம் நாள் என கூறிவிட்டனர். P-8, P-9, P-10, ஆகியோர் 1973 செப்டம்பர் திங்கள் 1ஆம் நாள் எனக் குறியிட்டனர். P-13, 1973 செப்டம்பர் திங்கள் 2 ஆம் நாள் என குறியிட்டனர், P-20, 1973 செப்டம்பர் திங்கள் 3-ஆம் நாள் எனக் குறியிட்டனர். இந்த எழுத்துமூலமான வாக்கு மூலங்களை குறியிட்ட நாட்கள், அவர்களை சாட்சிகளாக விசாரித்த நாட்களாகும். எழுத்து மூலமான வாக்குமூலங்களை (Ex-6, P-7, P-8, P-9, P-10) ஒருவர் படிக்கும்போது, அதில் '' சுமார் மூன்று மாதங்களுக்கு முன் ஒரு சனிக்கிழமையில் '' என்று அவர்கள் அனைவரும் சொல்லத் தொடங்கியதைப் பார்த்தால், 1973 ஜூன் திங்கள் 18 ஆம் நாளுக்கு முன் மூன்று மாதங்கள் என்று ஒருவர் சாதாரணமாக நினைப்பார். இது சரியல்ல. ஆனால் சாட்சியளித்த நாளுக்கு முன்னர் மூன்று மாதங்கள் என்று பொருள் படும். அவ்வாறிருந்தும் பெரியகுப்பத்தில் நிகழ்ச்சி நடந்த நாளான 1973 மே திங்கள் 12ஆம் நாளை ஒத்திருக்கவில்லை. Ex P-12-ல் பூபதி அம்மாள் (P-13) தட்டச்சு செய்யப்பட்ட '' 3 '' என்ற இலக்கத்தின் மேல் மையினால் தமிழில் '' ஒரு '' என்று எழுதியுள்ளது. இவ்வாறு இரண்டாவது பாராவில் '' ஒரு மாதத்திற்கு முன் ஒரு சனிக்கிழமையில் '' எனப் படிக்குமாறு திருத்தினர். ஆயினும் இதை முதல் பாராவில் திருத்த அவள் மறந்துவிட்டாள்.

(xi) இந்த வாக்குமூலங்கள் பெரியகுப்பம் மக்களுக்கான வழக்குரைஞர்களால் உறுதிமொழிப் பத்திரங்களாகத் தாக்கல் செய்யப்பட எழுதப்பட்டவை என நினைக்கிறேன். ஏனெனில், 1973ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18ஆம் நாள் என்பது அறிவிக்கப்பட்ட இறுதி நாளான 1973ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19ம் நாளுக்கு முன்னர் ஒரு நாள் முந்தியதாகும். ஆனால் ஏதோ ஒரு காரணத்திற்காக அவர் அவ்வாறு செய்யவில்லை. சாட்சியம் அளிக்கும் நாளன்று அவற்றை உறுதிமொழிப் பத்திரங்களாகக் குறியிடப்படவேண்டும் என அவர் விரும்பியபோது, காவலருக்கான வழக்குரைஞர் இதற்கு மறுப்பு தெரிவித்தார். ஏனெனில் அவை உறுதிமொழியாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. தவிர அந்த நாளில் அது தாமதமாகக் கொடுக்கப்பட்டது. அந்தக் காலங்கடந்த நிலையில் திடீரென்று அவை குறியிடப்படுவதற்கும் அவர் மறுப்பு தெரிவித்து, பின்னர் இந்த ஆவணங்களை அவர்கள் தயாரித்தனர். என்றும், அவற்றை நம்பக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். எனினும், இந்த வாதத்தில் சாராம்சம் இருக்கிறது என்றாலும், நியாயத்தைக் காப்பதற்காக ஆவணங்களைக் குறிப்பிடுவதை அவர்களின் வாய்மொழி சாட்சியத்திற்கு ஆதரவாக எழுத்துமூலமான வாக்குமூலங்களாக இருக்க நான் அனுமதிக்கிறேன். பொதுமக்களின் சார்பாக சாதாரணமாகவும், அசட்டையான முறையிலும் சாட்சியங்கள் விசாரணை செய்யப்பட்டதை உரைத்தலே நான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

(xii). இப்பொழுது கற்பழிக்கும் குற்றம் மிகவும் கடுமையானதாகும். இந்திய தண்டனை விதிக் கோவையின் 376-வது பிரிவின் கீழ் ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுக் கால அளவிற்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும். அபராதமும் விதிக்கப்படுவதற்குட்பட்டதாகும். காவலர்கள் பலவந்தப்படுத்தலிலும், கண்மூடித்தனமாகக் கற்பழிப்பதிலும் ஈடுபட்டனர் என்று பெரியகுப்பம் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். அரசியல் துறையில் உள்ள பொறுப்புள்ள மக்கள் உறுதிமொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளனர். பத்திரிகைகளுக்கு

அறிக்கைகளும், நிழற்படங்களும் கொடுத்துள்ளனர். ஊர்வலங்கள் நடத்தினர். மக்களின் கவனத்தை ஈர்த்தனர். பெண்கள் துன்புறுத்தப்பட்டது, கற்பழிக்கப் பட்டது முதலிய குற்றச்சாட்டுகள் குறித்து முன்னர் சொல்லிய பாராக்களில் நான் விவாதித்த சாட்சியத்திலிருந்து, சாட்சிகள் கொடுத்த சாட்சியங்களின் நம்பகத் தன்மையும் அவர்கள் சொல்லியுள்ளதை உண்மையாக இருக்கக்கூடுமா என்பதும் ஐயத்திற்கிடமானவை என்று தெரியவரும். உத்தேசமாக நடந்திருக்கலாம் என்று சொல்வதற்குக்கூட அச்சாட்சிகள் நம்புவதற்கில்லை. இந்த சாட்சியங்கள் எந்த அளவுக்குமுறைண்ண அமைந்துள்ளன என்பது பற்றி ix-வது பாராவில் நான் விளக்கி யுள்ளேன். இத்தகைய நேர்வுகளில் அவசியமான மருத்துவச் சான்றிதழும் முழு வதும் இல்லை. இத்தகைய சூழ்நிலைகளில் இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. காவலர் மீது அநியாயப் பழியைச் சுமத்துவதானது பொறுப்பற்றது என்றுதான் இதிலிருந்து தெரிய வருகிறது. அவர்கள் முகத்தை வைத்து அவர்களின் சாட்சி யத்தை ஏற்றுக்கொண்டு இதற்கு காவலரே பொறுப்பாவர் என்றுல் யாராவது ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்பலாமா? இதற்கு விடை இல்லை என்பதாகும். P-6 P-7, P-8, P-9 ஆகியோரின் எழுத்துமூலமான வாக்குமூலங்கள் அனைத்திலும், காவலரின் கொடூரமான காரணமாக பெண் ஒருத்திக்குக் குறைப் பிரசவம் ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் எவரும் தங்களுடைய வாக்குமூலங் களில் அல்லது என்முன் அளித்த சாட்சியத்தில் சம்பந்தப்பட்ட பெண்ணின் பெயரை அல்லது அந்தப் பெண் யார் என்பதைச் குறிப்பிடவில்லை. இந்த துரதிருஷ்டப் பெண் குறித்து ஆதாரவான பிற சாட்சியம் முழுவதும் இல்லாதது, இது ஒரு பொய்யான குற்றச்சாட்டாகும் என்றும், அத்தகைய நிகழ்ச்சி எப்போதுமே ஏற்படாது என்ற முடிவிற்குத்தான் கொண்டுபோய்விடும். எனவே, நான் இக்குற்றச்சாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கமுடியாமலுள்ளேன்.

முடிவு. எனவே, காவலர் துன்புறுத்தியது, கற்பழித்தது, ஏனைய முறையற்ற செயல்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை; அதில் எவ்வித உண்மையும் இல்லை என்று நான் தீர்ப்பளிக்கிறேன்.

(xiii) காவலரின் நடவடிக்கைகள். பெரியகுப்பம் மக்கள் குற்றம் சாட்டியுள்ளவாறு 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாளன்று நடந்த நிகழ்ச்சிகள் பற்றி விவாதித்த பின்னர், காவலரின் கூற்றுப்படி அந்நாளில் காவலர் நடவடிக்கைகள் பற்றி நான் தற்போது விவரிக்கிறேன்.

(xiv) 80/73 ஆம் குற்ற எண் பதிவு செய்யப்பட்டது குறித்து காவல் துறை வட்ட இன்ஸ்பெக்டர் இரவு 1-00 மணிக்குத் தொலைபேசியில் காவல் துறை டெபுடி சூப்பிரண்டு திரு. S. ராமநாதனுக்கு தகவல் கொடுத்தார். செங்கற்பட்டு காவல்துறை சூப்பிரண்டுக்கு தகவல் தெரிவித்து, படைக்கலந் தாங்கிய ஏமக் காவல் படையின் இரண்டு பிரிவுகளை அனுப்புமாறு கேட்டார். அவர் மதுராந்தகத்திற்கு சுமார் 8.00 மணிக்கு (1973 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாளில்) வந்து சேர்ந்தார். காவல் துறை இன்ஸ்பெக்டருடன் பேச்சு வார்த்தைகள் நடத்திய பின்னர், தன்னுடன் அழைத்து வந்த படைக்கலந் தாங்கிய ஏமக் காவல் படையின் இரண்டு பிரிவுகளுடன் கடலூருக்குச் சென்றார். கடலூரில் சப்-இன்ஸ்பெக்டரையும் அவரது குழுவினையும் அழைத்துக்கொண்டு அலிக் குப்பத்திற்கு 10.00 மணிக்கு வந்தார். குற்றம் நடந்த இடத்தைப் பார்வை யிட்டு புகைப்படம் எடுத்தார். நண்பகல் 12 மணிக்கு தன் படையுடன் பெரிய குப்பத்திற்குப் புறப்பட்டார். அலிக்குப்பத்தைச் சேர்ந்த 6 பெண்களை அவர் அழைத்துச் சென்றார். முந்தைய நாள் தங்களுடைய பொருள்கள் திருடு போய் விட்டன என அவர்கள் தெரிவித்தனர். பெரியகுப்பத்தை அவர் அடைந்த போது ஆண்கள் எவரையும் பார்க்கவில்லை. பெண்களும் குழந்தைகளும் மட்டுமே இருந்தனர். அலிக்குப்பம் மக்களுடைய திருடு போன பொருள்கள் அங்கு உள்ளனவா எப்பதைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு இயலும் வகையில், பாத்திகள் போன்ற உடைமைகளைக் கொண்டுவருமாறு பெரியகுப்பம் பெண்களை அவர் கேட்டுக்கொண்டார். ஆயினும், அவர்கள் அத்தகைய பொருள்கள் எதையும் கண்டுபிடிக்கவில்லை. அனுசூயா என்பவள் வீட்டில் பெட்டி ஒன்றில் லலிதாம் பாளுக்கு (A-3) சொந்தமான சேலை ஒன்று இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது மகஜர் (Ex. A-7) ஒன்றைக் கொடுத்ததன் பேரில், இச் சேலையை காவல் துறை இன்ஸ்பெக்டர் கைப்பற்றினர். இதில் அருணாசலமும், அப்பாதுரையும் (A-5) கையெழுத்திட்டனர். இவை அனைத்திற்கும் 2½ மணி நேரம் ஆயிற்று. அப் பொழுது பிற்பகல் சுமார் 3.00 மணி. பின்னர் அவர் தனது குழுவினருடன் பொதுப்பணித் துறை லாக் சைட்டிற்கு (Lock site) சென்றார். போகுமுன்பு,

1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாளன்று விடியற்காலையில் அலிக்குப்பத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டவர்கள் என்று குறிப்பிட்ட பெரிய குப்பத்தில் 23 பெண்களை லாக் சைட்டில் வந்திருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். அவர் அழைத்து வந்த அலிக்குப்பத்து ஆறு பெண்களையும் லாக் சைட்டில் வந்திருக்குமாறு கேட்டுக்கொண்டார். அவ்வாறே பெண்கள் அங்கு வந்தனர். லாக் சூப்பிரண்ட் K. T. நாராயணசாமி (A-6)லஸ்கர் கிருஷ்ணன் ஆகியோர் வந்திருந்தனர். முனுசாமி, மணி (A-7) ஆகிய இருவரும் வந்திருந்தனர். பெரிய குப்பத்துப் பெண்கள் 23 பேரிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர், மாலை 5.30 மணிக்கு போகுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். அலிக்குப்பத்திலிருந்து வந்த ஆறு பெண்களும் போகுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். அதே இரவு அவர் செங்கற்பட்டுக்குத் திரும்பி வந்து, காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும், காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும், காஞ்சிபுரம் காவல்துறை சூப்பிரண்டுக்கும் செய்தி யனுப்பினர். காவல் துறை டெபுடி சூப்பிரண்டு, வட்ட இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், படைக்கலந்தாங்கிய ஏமக் காவலர் ஏனைய காவலர்கள் பெரிய குப்பம் வந்தது பற்றி பெரியகுப்பம் மக்கள் முரண்பாடாகச் சொல்லவில்லை. அவர்கள் வந்தது பற்றி பாண்டுரங்கன் (A-1), லலிதாம்பாள் (A-3), அப்பாதுரை (A-5) ஆகியோர் பேசினர். காவலர் கூறியதையே திருப்பிச் சூறினர். காவல் துறை டெபுடி சூப்பிரண்டு, வட்ட இன்ஸ்பெக்டர், சுமார் 50 காவலர்கள், பெரியகுப்பம், அலிக்குப்பம் ஆகிய இடங்களைச் சேர்ந்த பெண்கள் லாக் சைட்டில் வந்திருந்தது பற்றி K. T. நாராயணசாமி (A-6) பேசினர். லாக் சைட்டில் பெண்களை துன்புறுத்தப்படவோ அல்லது தொல்லைப்படுத்தப்படவோ இல்லை என்று அவர் தெரிவித்தார். பெரியகுப்பத்தில் காவலர் பெண்களைப் பலவந்தப்படுத்தியதாகவோ அல்லது கற்பழித்ததாகவோ அவர் கேட்கவில்லை. பெரிய குப்பத்திலிருந்து வந்த காவல் படையுடன் P. மணி, (A-7) பேசினர். பெரியகுப்பத்தைச் சேர்ந்த பெண்கள் லாக் சைட்டிற்குகே நிலத்தில் அமர்ந்திருந்தனர். அலிக்குப்பத்தைச் சேர்ந்த பெண்களும் அங்கே இருந்தனர். அங்கு ஏனைய ஆண் பார்வையாளர்களும் இருந்தனர். காவலர் விசாரணை செய்து, மாலை 5-30 வரை வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர். இதன் பின்னர், பெண்கள் அவர்களுடைய குப்பங்களுக்குத் திரும்பி அனுப்பப்பட்டனர். சந்திரன் (A-8) மாலை 3-30 மணிக்கு லாக் சைட்டிற்குச் சென்றபோது, வாய்க்காலின் மற்றொரு பக்கத்திலிருந்து லாக் சைட்டை நோக்கி 40 காவலர்களும், 30 பெண்களும் வந்துகொண்டிருப்பதைக் கண்டார். வண்டு நாயக்கர், சொர்ணம், லாக் சூப்பிரண்டு ஆகியோரை அவர் கண்டார். காவல் துறை அதிகாரிகள் பெண்களைக் கேள்விகள் கேட்டபின்னர் அவர்கள் மாலை 5-30 மணிக்கு அனுப்பப்பட்டனர். காவல் துறை டெபுடி சூப்பிரண்டுடன் இருந்த காவல் துறை இன்ஸ்பெக்டரும் சப்-இன்ஸ்பெக்டரும் இதை ஒரு மொத்தமாகத் திருப்பிச் சொன்னர்கள்.

(xv) காவலரின் நடவடிக்கை அதாவது, பெரிய குப்பம் பெண்களின் உடைமைகளைக் காவல் துறை டெபுடி சூப்பிரண்டு, வட்ட இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், படைக்கலந்தாங்கிய ஏமக்காவலர் ஆகியவர் முன்னிலையில் சோதனையிட்டதை பெரியகுப்பம் பெண்களுக்கான வழக்குரைஞர் மறுக்கவில்லை. எனினும், காவலர் குறிப்பிட்டபடி அப்பணி நடைபெறவில்லை என்றும், பெண்களை அடிப்பது, ஆடைகளைக் கழைவது, பலவந்தப்படுத்துவது, கற்பழிப்பது ஆகிய வற்றில் ஈடுபட்டனர் என்றும் அவர் தெரிவித்தார். துன்புறுத்தல், கற்பழித்தல் ஆகியவை குறித்து நான் மேலே கூறிய பாராக்களில் விவாதித்து, குற்றச்சாட்டு ஆதாரமற்றது; அதில் உண்மை ஏதும் இல்லை என்ற முடிவிற்கு வந்துள்ளேன். பெரியகுப்பம் மக்களுக்கான வழக்குரைஞர் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது காவல் துறை டெபுடி சூப்பிரண்டு சொல்லிய கருத்துக்களிலிருந்து மூன்று கருத்துக்களில் மாறுபடுகிறார் :—

1. திரு ஆறுமுகம், எம்.எல்.ஏ., செய்யூர் தி.மு.க. செயலாளர், பாலகிருஷ்ணன், அஞ்சுக்கட்டு ஊராட்சித் தலைவர் குள்ளு நாயக்கர், கடலூர் ஊராட்சித் தலைவரும் லத்தூர் ஊராட்சி ஒன்றிய உதவித் தலைவருமான சொர்ணம், கடலூரைச் சேர்ந்த சந்திரன், வாண்டு என்கிற சொர்ணம், காவலருடன் பெரிய குப்பத்திற்குச் சென்று அவர்களுடன் இருந்தனர்.

2. பெரிய குப்பத்துப் பெண்கள் அலிகுப்பத்திற்கு வந்து, 1973 மே திங்கள் 11ஆம் நாளன்று விடியற்காலை நடந்த திடீர் தாக்குதலில் கலந்து கொண்டனர் என்று முதல் தகவல் அறிக்கையிலும் (Ex. A. 6) பாண்டுரங்கம் (A. 1) கொடுத்த புகாரிலும் திட்டவட்டமாக குறிப்பிடப்படவில்லை. எனவே, பெரியகுப்பம் பெண்கள் 23 பேர் அலிக்குப்பத்தில் நடந்த கலகத்தில் சம்பந்தப்பட்டனர் என்ற காவலரின் வாக்கு மூலத்தில் உள்ள உண்மைத் தன்மையை அவர் ஐயமுற்றார். அது பின்னர் உருவான கருத்தாகும் என்று கருதினர்.

3. கைப்பற்றுதல் குறித்த மகஜர் ஒன்றைக் (Ex. A-7) கொடுத்ததன் பேரில் சேலையைக் கைப்பற்றியது (M.O. A-1) ஒரு கட்டுக் கதையாகும். ஏனெனில், ஏனையவற்றிற்கிடையே அச்சேலையை மாஜிஸ்டிரேட் 1973 மே திங்கள் 30 ஆம் நாள் தான் பெற்றார். ஆனால் சேலை 1973 மே திங்கள் 12 ஆம் நாளில் கைப்பற்றப்பட்டுள்ளது. இங்கு நடைமுறைத் தவறுகள் இருப்பதையும், லலிதாம்பாளின் (A-3) சேலையின் நிறம், தன்மை ஆகியவற்றில் முரண்பாடு இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினர்.

(xvi) முதல் கருத்தை எடுத்துக்கொண்டால், வழக்குரைஞர் திரு. லட்சுமண ரெட்டி காவல் துறை டெபுடி சூப்பிரண்ட்டை (A-11) குறுக்கு விசாரணை செய்கையில், இருசப்ப நாயக்கர், பாண்டுரங்கன், வேலாயுதம், பால கிருஷ்ணன் ஆகியோர் மட்டுமே பெரியகுப்பத்திலிருந்து அலிக்குப்பத்திற்கு அவருடன் வந்ததாகத் தெரிவித்தார். (இங்கு குறிப்பிடப்படும் பாலகிருஷ்ணன் செய்யூர் பாலகிருஷ்ணனே விட முற்றிலும் மாறுபட்டவர். பெரியகுப்பம் மக்களின் சாட்சியங்கள் அனைத்திலும் அவர் வருகிறார்). மேலும் அவர் ஏற் கனவே சொல்லியுள்ளவாறு, கைப்பற்றுதல் குறித்த மகஜரில் கையெழுத்திட்ட அப்பாதுரையும் (A-5) அருணசலமும் அங்கிருந்தனர். நீண்ட குறுக்கு விசாரணையில் அவர் இதை எல்லா இடங்களிலும் வலியுறுத்தினர். வழக்குரைஞர் தெரிவித்தவாறு கடலூரைச் சேர்ந்த இருசப்ப நாயக்கர் தவிர மற்றவர்கள் தன்னுடன் வரவில்லை என்று பெரிய குப்பம் மக்களுக்கான வழக்குரைஞர் தன்னை குறுக்கு விசாரணை செய்தபோது அவர் உறுதிப்படுத்தினர்.

(xvii) கடலூர் சொர்ணம், சந்திரன், வண்டு நாயக்கர், அலிக் குப்பம் பாண்டுரங்கன், பஞ்சாமிர்தம், பூபாலன், பாலகிருஷ்ணன், மனோகரன் அங்கிருந்ததாக சுப்புலட்சுமி (P-6) எழுத்து மூலமான தனது வாக்குமூலத்தில் Ex. P-6 தெரிவித்தார். ஆயினும், தனி வழக்குரைஞர் அவரைக் குறுக்கு விசாரணை செய்தபோது, தன்னுடைய குடும்பத்தில் உள்ள ஆண்களைத் தவிர பெரியகுப்பத்தில் உள்ள பிற ஆண்களின் பெயர்கள் தனக்குத் தெரியாது என்று தெரிவித்தார். ஆயினும், அலிக்குப்பத்தைச் சேர்ந்த பாண்டுரங்கம், பால கிருஷ்ணன், வேலாயுதம், பட்டையன் ஆகிய பெயர்களை அவர் அறிந்திருந்தாள். பின்னர்க்குப்பத்தில் உள்ள ஆண்களின் பெயர்கள் தனக்குத் தெரியாது என்று அவள் தெரிவித்தாள். அணைக்கட்டு குள்ளு, கடலூரைச் சேர்ந்த சொர்ணம், வண்டு நாயக்கர், சந்திரன், அலிக்குப்பத்தைச் சேர்ந்த பாண்டுரங்கன், பஞ்சாமிர்தம், பூபாலன், மனோகரன் ஆகியோர் அங்கிருந்த தாக வேம்புலி அம்மாள் (P-7) தனது எழுத்து மூலமான வாக்குமூலத்தில் (Ex. P-7) தெரிவித்தாள். வழக்குரைஞர் லட்சுமண ரெட்டி அவரை குறுக்கு விசாரணை செய்கையில், சனிக்கிழமை அலிக்குப்பத்திலிருந்து சுமார் 40 அல்லது 30 பேர் வந்திருந்தனர் என்றும் அணைக்கட்டைச் சேர்ந்த குள்ளு, தென்னந் தோப்பு வண்டு, கடலூர் சொர்ணம் ஆகிய பெயர்கள் மட்டும் தனக்குத் தெரியும் என்றும் அவள் தெரிவித்தாள். கடலூர் சொர்ணம், சந்திரன், அணைக் கட்டுக் குள்ளு, வண்டு, நாயக்கர், அலிக்குப்பம் பாண்டுரங்கன், பஞ்சாமிர்தம், வேலாயுதம் ஆகியோர் அங்கிருந்ததாக நாயகம்மாள் (P-8) தனது எழுத்து மூலமான வாக்குமூலத்தில் (Ex. P-8) தெரிவித்தாள். வழக்குரைஞர் லட்சுமண ரெட்டி அவரைக் குறுக்கு விசாரணை செய்யும்போது, Ex.P-8-ல் தான் கொடுத்துள்ள பெயர்கள் தவிர அலிக்குப்பத்தில் உள்ள ஆண்களின் பெயர்கள் தனக்குத் தெரியாது என்று அவள் கூறினாள். கடலூர் சொர்ணம், சந்திரன், வண்டு நாயக்கர், அலிக்குப்பம் பாண்டுரங்கன் பஞ்சாமிர்தம், ஆகியோர் அங்கிருந்ததாக ராஜாம்பாள் (P-10) தனது எழுத்துமூலமான வாக்குமூலத்தில் (Ex. P-10) கூறினாள். லட்சுமண ரெட்டி அவரைக் குறுக்கு விசாரணை செய்யும்போது பாண்டுரங்கம், பஞ்சாமிர்தம், பாலகிருஷ்ணன், வடிவேலு ஆகிய பெயர்கள் தவிர அலிக்குப்பத்தில் உள்ள ஏனைய பெயர்கள் தனக்குத் தெரியாது என்று கூறினர். அந்த நாளில் பெரிய குப்பத்தில் இவர்களில் யாரையும் பார்த்தது குறித்து கஸ்தூரி (P-12) எதுவும் தெரிவிக்கவில்லை. கடலூர் சொர்ணம் சந்திரன், வண்டு நாயக்கர், குள்ளு, அலிக்குப்பம் பாலகிருஷ்ணன், பாண்டுரங்கன், பஞ்சாமிர்தம், வடிவேலு, வேலாயுதம் ஆகியோர் அங்கிருந்ததாக பூபதி (P-20) தனது எழுத்து மூலமான வாக்குமூலத்தில் (Ex. P-18) கூறினாள். லட்சுமண ரெட்டி அவரைக் குறுக்கு விசாரணை செய்யும்போது, தான் அணைக்கட்டிற்கு சந்தைக்கு வழக்கமாகப் போகும் சமயம் சில சமயங்களில் அணைக்கட்டுக் குள்ளு வைப் பார்த்திருப்பதாக அவள் கூறினாள். மீண்டும் விசாரணை செய்யும்போது, அவள் குறிப்பிட்டுள்ள நபர்களில் யாரையாவது அவள் நினைவுபடுத்தமுடியுமா எனக் கேட்டபோது, அவள் பஞ்சாமிர்தத்தை அடையாளம் காட்டினாள்.

மற்றெருவரை பட்டையன் என அடையாளம் காட்டினுள். ஆனல் அவர் பூபாலன் ஆவார். ஆறுமுகம், எம். எல். ஏ. வும் செய்யூர் பாலகிருஷ்ணனும் லாக்சைட்டை நோக்கி காவல் துறை வண்டிகளில் சென்றதை தாம் பார்த்ததாக தேவராஜனும் (P-14) வினுயகமும் (P-12) சொல்லும்போது, அவர்களைப் பெரியகுப்பத்தில் பார்த்ததாக அவர் சொல்லவில்லே.

(xviii) பெண்சாட்சிகளில் பெரும்பாலோர் தங்கள் கிராமத்தில் அல்லது அலிக்குப்பத்தில் உள்ள ஏனேய ஆண்களின் பெயர்கள் தங்களுக்குத் தெரியாது என்று சொல்லியிருக்கையில் அலிக்குப்பத்திலிருந்து வந்தவர்களின் (அவர்களின் பெயர்களை எழுத்து மூலமான தங்களது வாக்குமூலத்தில் குறிப் பிட்டுள்ளனர்). பெயர்களை அறிவித்துள்ளனர் என்பது விந்தையானதாகும். காவலர்கள் பலவந்தப்படுத்தியது, கற்பழித்தது குறித்து அவர்கள் அளித்த சாட்சியம் ஒன்றுக்கு ஒன்று ஒவ்வாததாகவும் உண்மைக்குப் புறம்பானதாகவும், முரணுகவும் உள்ளது என்று நான் ஏற்கனவே கூறியுள்ளேன்.

அவர்கள் எல்லாம் குழப்பமடைந்திருந்தனர். ஒரு சமயத்தில் ஒரு விதமாகவும் மறு சமயத்தில் அதற்கு முணுகவும் அவர்கள் வாக்குமூலம் கொடுத்தனர். சாட்சியம் அளிக்கையில் அவர்கள் தயங்கித் தயங்கித் தெளி வின்றி சாட்சியம் அளித்துள்ளனர். அவர்கள் உள்ளத்திலிருந்து தங்குதடையின்றி வந்த சொற்கள் அல்ல அவை. எனவே, அவர்கள் சொல்வதில் நான் நம்பிக்கை வைக்க முடியாது. இங்கேயும்கூட ஆறுமுகம், எம். எல். ஏ., செய்யூர் பால கிருஷ்ணன், குள்ளு போன்றவர்கள் இருந்தது பற்றி அவர்கள் சொல்வதை நான் நம்பமுடியாது.

(xix) ஆறுமுகம், எம். எல். ஏ. (P-24) வைப் பொறுத்தவரையில், பெரியகுப்பம் சம்பவம் நடந்த அன்று அவர் நகரத்திலேயே இல்லேயென்றும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் அன்று காலே 11-00 மணியளவில் செய்யூர் பாலகிருஷ்ணன், எருவாக்கம் சண்முகம், புதூர் மோறன், வேடல் கிராமத் திலிருந்து சபாபதி, ராமலிங்கம் ஆகியோர்களுடன் TNH 1006ஆம் எண் சுற்றுலா வாடகைக் வண்டியில் திண்டுக்கலுக்குச் சென்றார் என்றும், ஆறுமுகம், எம். எல். ஏ. சாட்சியம் அளித்துள்ளார். அவர் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 21ஆம் நாள் அன்று இரவு தான் மதுராந்தகத்திற்குக் திரும்பினர். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் அன்று காலே 10-30 மணியளவில் மதுராந்த கத்தை விட்டுச் சென்றது குறித்தும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 21ஆம் நாள் அன்று இரவு 11-30 மணியளவில் திரும்பியது குறித்தும் P-24 அளித்த வாக்கு மூலத்தை TNH 1006ஆம் எண் வாடகை வண்டியின் வலவர் V. சம்பந்தம் (P-22) உறுதிப்படுத்தினர். இப்பயணம் குறித்து (Ex. P-19) ஆவணத்தில் (பக்கங்கள் 31 முதல் 41 வரை) இவரால் கொடுக்கப்பட்ட பயண அட்டவணை இந்த வாக்குமூலத்திற்கு ஆதரவாயுள்ளது. எம்.எல்.ஏ., ஆறுமுகம் சம்பவம் நடந்தஅன்று வேறு இடத்தில் இருந்தார் என்ற கூற்று பொய்யென்று பெரியகுப்பம் கிராமத்தினரின் வழக்குரைஞரால் எதிர்க்கப்படவில்லே. பொறுப்புமிக்க சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர், பொய் சத்தியஞ்செய்வதனுல் உண்டாகும் விளேவுகளே யறிந்திருந்தும் தான் அந்தச் சம்பவம் நடந்த இடத்தில் இல்லேயென்று ஏன் பொய் சத்தியஞ்செய்ய வேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லே. இதைத் தவிர, Ex. P-6 முதல் Ex. P-10 வரை, Ex. P-12, Ex. P-18, ஆகிய நேரிட சாட்சிகளால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துமூலமான வாக்குமூலங்கள் எதிலும் ஆறுமுகம், எம். எல். ஏ.-வின் பெயர் குறிப்பிடப்படவில்லே என்பது குறிப்பிடத் தக்கதும் முக்கியமானதும் ஆகும். எனவே, என் முன் வைக்கப்பட்ட ஆவணங் களின் அடிப்படையிலும், கூறப்பட்ட சாட்சியத்தைக் கொண்டும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் அல்லது ஏனேய தேதிகளில் ஆறுமுகம், எம். எல். ஏ. பெரியகுப்பத்தில் இருந்ததாகக் கூறும் கூற்றை நான் நிராகரிக்க வேண்டும். ஆறுமுகம், எம். எல். ஏ., செய்யூர் பாலகிருஷ்ணனுடன் வாடகை வண்டி மூலம் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளதாலும், அக் கூற்றை வாடகை வண்டி வலவர் உறுதிப்படுத்துவதாலும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாளன்று அல்லது ஏனேய தேதிகளில் அவர் பெரியகுப்பம் கிராமத்தில் இருந்ததாகக் கூறும் கூற்றையும் நான் நிராகரிக்க வேண்டும்.

(xx) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாளன்று அல்லது ஏனேய தேதிகளில் ஆறுமுகம் எம். எல். ஏ., செய்யூர் பாலகிருஷ்ணன் ஆகியோர் பெரிய குப்பத்தில் இருக்கவில்லே என்று நான் கூறும் அதே சமயத்தில், கடலூர் சொர்ணம் பற்றி நான் தயங்க வேண்டியுள்ளது. எனினும், சம்பவம் நடந்த இடத்தில் அவர் இருந்ததாகக் கூறப்பட்டதை அவர் மறுத்துள்ளார். இது அவரது வழக்குரைஞர் திரு பி. எம். சுந்தரத்தின் மூலம் 1973ஆம் ஆண்டு ஜூலே திங்கள் 14ஆம் நாள் அன்று தாக்கல் செய்யப்பட்ட உறுதிமொழிப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளது. அவர் ஈமக்கடன் சடங்கு ஒன்றில் கலந்துகொள்வதற்காக 1973ஆம் ஆண்டு

மே திங்கள் 10ஆம் நாளன்று செய்யூர் வட்டத்திலுள்ள ஆக்கூர் கிராமத்திற்குச் சென்றார் என்றும், இரவு சுமார் 1-00 மணிக்கு கடலூருக்குத் திரும்பினர் என்றும் அவர் அதில் கூறுகிறார். திருமதி ரமணிபாயும், வக்கீல் கணேசனும் இவர் மீது கொண்டிருந்த அரசியல் பகைமையே இதற்குக் காரணமாகும் என்று இவர் கூறுகிறார். எனினும், சந்திரன் (A-8) என்பவர் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாளன்று மாலை 3-00 மணியளவில் லாக் செட்டுக்குச் சென்று போது, அங்கு சுமார் 40 பேர் கொண்ட காவல் படையையும், சுமார் 30 பெண்களும் கால்வாயின் மறுபக்கத்திலிருந்து லாக் சைட்டை நோக்கி வந்து கொண்டிருந்ததையும் பார்த்தார் என்று கூறிய சாட்சியத்திலிருந்து இது தெளிவாகிறது. சிறிது நேரத்திற்குப் பின்பு, வண்டுவையும் (இருசப்ப நாயக்கர்) சொர்ண்தையும் அவர் கண்டார். குறுக்கு விசாரணையில் இது எதிர்க்கப்படவில்லை. எனவே, 1963ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாளன்று மாலை 3-00 மணியளவில் கடலூர் சொர்ணம் லாக் சைட்டில் இருந்திருக்கலாம் என்று நான் முடிவு செய்ய வேண்டும். இருந்த போதிலும், அவர் பெரியகுப்பத்தில் இருந்தார் என்பது எனக்கு சந்தேகமாயிருக்கிறது.

(xxi) எனவே பெரியகுப்பம் கிராமத்தினரின் வழக்குரைஞர் குறுக்கு விசாரணை செய்கையில் (வண்டு நாயக்கர் என அழைக்கப்படும்) இருசப்ப நாயக்கர் தவிர வேறு எவரும் காவல் துறை டெபுடி சூப்பிரண்டுடன் (A-11) பெரியகுப்பத்திற்குச் செல்லவில்லை என்று அவ்வழக்குரைஞர் அவருக்குத் தெரிவித்த கருத்துப்படி டெபுடி சூப்பிரண்டு தொடுத்துள்ள வாக்குமூலம் சரியாயிருக்கலாமெனத் தோன்றுகிறது.

(xxii) இரண்டாவது பிரச்சினையை எடுத்துக்கொள்வோமானால், பெரிய குப்பத்தைச் சேர்ந்த 23 பெண்கள், அலிக்குப்பம் கலவரத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாக முதல் தகவல் அறிக்கையிலும் (Ex-A-6) பாண்டுரங்கன் (A-1) கொடுத்த புகாரிலும் சொல்லப்படாததால் காவல் துறை டெபுடி சூப்பிரண்டண்டு சொல்லிய வாக்குமூலம் சந்தேகத்திற்குரியது என்று பெரியகுப்பம் கிராமத்தினரின் வழக்குரைஞர் கருதுகிறார். அவர்களின் பெயர்கள் அவ்வறிக்கையிலும் புகாரிலும் குறிப்பிடப்படவில்லை என்று பெரியகுப்பம் வழக்குரைஞர் சொல்வது உண்மைதான் என்றும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாளன்று இரவு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் நடத்திய புலனாய்வின் போது, அவர் அலிக்குப்பத்தைச் சேர்ந்த கோதையம்மாள், சின்னப்பொண்ணு மனோன்மணி, அங்கம்மாள், வேடுரு கோதையம்மாள், வலிதாம்பாள், விசாலாட்சி, கனகாம்பாள் ஆகியோர்களை விசாரித்தார் என்று சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வழக்குக் குறிப்பேட்டில் நான் காண்கிறேன். இப் பெண்கள் பெரியகுப்பத்தைச் சேர்ந்த 19 பெண்களின் பெயர்களைச் சொன்னார்கள் என்று பெரியகுப்பம் கிராமத்தினரின் வழக்குரைஞரால் நடத்தப்பட்ட குறுக்கு விசாரணையின் போது காவல் துறை டெபுடி சூப்பிரண்டு கூறினர். அவர் பெரியகுப்பத்தில் தங்கியிருக்கும்போது, அலிக்குப்பம் கலவரத்தில் மேலும் 4 பெண்கள் பங்கு கொண்டதாக பின்னர் கண்டறியப்பட்டது. காவல் துறை டெபுடி சூப்பிரண்டு தன்னுடைய குறுக்கு விசாரணையில் இதையும் குறிப்பிட்டுள்ளார். இந்த 23 பெண்கள்தான் தங்கள் வாக்குமூலங்களை பதிவு செய்வதற்காக காவல் துறை டெபுடி சூப்பிரண்டால் லாக் சைட்டிற்கு வருமாறு அழைக்கப்பட்டவர்கள். இந்த 23 பெண்கள் அனைவரையும் குறுக்கு விசாரணை செய்தது குறித்தும் வழக்கு நாட்குறிப்பேட்டில் சொல்லியுள்ளவாறு லாக் செட்டில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இந்தப் பெண்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார் என்பதும் எழுத்துமூலமாக உள்ளன. பெரியகுப்பத்தின் வழக்குரைஞர் இதைத் கூற்று பொய்யென வாதித்தார். ஆனால் அவ்வாறு செய்வதில், அவர் குறுக்கு விசாரணை வெற்றியளிக்கவில்லை.

(xxiii) மூன்றாவது பிரச்சினையை எடுத்துக்கொண்டால், Ex. A-7 ஆவணத்தில் மகஜர் மீட்புமூலம் புடவை (M.O.A-1) பெறப்பட்டது கற்பனைக் கதையென்று குப்பம் கிராமத்தினரின் வழக்குரைஞர் கருதுகிறார் என்று சொல்லலாம். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் அன்று கைப்பற்றப்பட்ட பொருளானது 1973ஆம் ஆண்டு மே திங்கள் 30ஆம் நாளன்று தான் மாஜிஸ்ரேட்டுக்கு அனுப்பப்பட்டது அல்லது மாஜிஸ்ரேட் அவர்களால் பெறப்பட்டது என்பதே அவருடைய முக்கிய கூற்றாகும். Ex. A-7 ஆவணத்தில் கையெழுத்து போட்டவர்களில் ஒருவரான அப்பாதுரை (A-5) என்பவர் நிர்வாகத்தின் சார்பில் விசாரிக்கப்பட்டார். அன்று அவர் தன்னுடைய வலிக்காக நூல் வாங்கும் பொருட்டு அங்காளம்மன் குப்பத்திலிருந்து கடலூருக்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் அலிக்குப்பத்தை நோக்கி காவல் படையினர் சென்று கொண்டிருந்ததை அவர் கண்டார். Ex. A-7 ஆவணத்தில் கையெழுத்து போட்ட மற்றொருவரான அருணாசலம், இருசப்ப நாயகர், பாண்டுரங்கன் (A-1), வேலாயுதம் ஆகியோர்களுடன் இவரும் காவல் படையைப் பின்தொடர்ந்து அலிக்குப்ப

திற்குச் சென்றார். அனுசூயா என்பவளால் கொண்டுவரப்பட்ட பெட்டியி யிலிருந்து சேலை ஒன்றைக் கைப்பற்றியது பற்றி அவர் கூறினர். அது தன் னுடையது என்று லிலிதாம்பாள் (A-3) அடையாளம் காட்டினாள். Ex. A-7 என் னும் ஆவணத்தில் (மீட்பு மகஜர்) அருணாசலத்துடன் தான் கையெழுத்திட்டது அவர் உறுதிப்படுத்தினர். பெரியகுப்பம் மக்களின் வழக்குரைஞர் சார்பில் வழக்குரைஞர் கணேசன் குறுக்கு விசாரணை செய்தார். வேடிக்கை பார்ப் பதற்காகவே தான் அங்கு சென்றதாகவும் காவற்படை கேட்டுக்கொண்டதன் மேல் தான் அலிக்குப்பம் செல்லவில்லை என்றும் குறுக்கு விசாரணையில் அவர் சொன்னார். Ex. A-7 என்னும் ஆவணத்தில் கையெழுத்துப் போடும்போது அதில் குறிப்பிட்டுள்ள வேறு எந்த விவரங்களைப் பற்றியும் தமக்குத் தெரியாது என அவர் கூறினர். அனுசூயா அலிக்குப்பத்தைச் சேர்ந்தவள் என்றும், ஆனல் தகராறு தொடங்கும் முன்பே அவள் தன்னுடைய குடியிருப்பைப் பெரியகுப்பத் திற்கு மாற்றிக் கொண்டாள் என்றும் அவர் கூறினர். சேலை கைப்பற்றப்பட் வீடு அனுசூயாவின் சொந்த வீடு அல்ல. ஆனல் சேலை எந்தப் பெட்டியில் இருந்து கைப்பற்றப்பட்டதோ அந்தப் பெட்டி அந்த வீட்டிலிருந்து கொண்டு வரப்பட்டது. கைப்பற்றப்பட்ட பின்பு அந்தச் சேலையை அவர் கண்டார். ஆனல், அச்சேலையின் நிறம் Ex. A-7 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிறம் தானு என்பது அவருக்குத் தெரியாது. Ex. A-7 என்னும் ஆவணம் தனக்கு படித்துக் காண்பிக்கப்படவில்லை என்று அவர் சொன்னர். அவ்வாறு சேலையைக் கைப்பற்றும்போது ரொம முன்சீப்பையோ அல்லது கர்ணத்தையோ காவல் படை யினர் அழைக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(xxiv) பெரியகுப்பத்தில் காவல் படையினரைத் தொடர்ந்து சென்ற 6 பெண்களில் லலிதம்பாள் (A-3) ஒருத்தி. பெரியகுப்பத்தில் பாத்திரங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், ஆனல் ஒரு சேலை மட்டும் கைப்பற்றப் பட்டது என்றும் தனது சாட்சியத்தில் அவள் கூறினள். இந்தச் சேலை தன்னுடை யது என அவள் அடையாளங் காட்டினள். மேலும் இது அனுசூயாவின் வீட் டிலிருந்து கைப்பற்றப்பட்டது என்று உறுதிப்படுத்தினள். அச்சேலை ''சிகப்பு'' நிறமானது என்று, அவள் தனது சாட்சியத்தில் கூறினள். ஆனல் நீதிமன்ற அறையில் அதே வர்ணமுடைய எதாவது ஒரு பொருளைக் காண்பிக்குமாறு கேட்ட போது, நீதிமன்ற கூடத்திலுள்ள ''பச்சை'' வர்ண தூண் வரிசைத் தொகுதியை சுட்டிக் காட்டி அந்தச் சேலையும் இதே ''சிகப்பு'' வர்ணமுடையதே எனக்கு கூறினள். இச்சேலை பூக்கள் அச்சிடப்பட்ட நீல வர்ண வாயில் சேலை என்றும், இது பிளாஸ்டிக் பையில் இருந்ததாகவும் (மீட்பு மகஜர்) Ex.A-7 என்னும் ஆவணத் திலிருந்து எனக்குத் தெரிந்தது.

(xxv) கமிஷன் முன்பு அவள் தாக்கல் செய்த உறுதி மொழிப் பத்திரத் தில் இந்த புடவையை அவள் ''வாயில்'' சேலை என்று குறிப்பிட்டிருந்தாள். ஆனல், அதனுடைய நிறத்தைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இது இவ்வாறிருக்க, இந்தச் சேலை ''காஞ்சிபுரம் பட்டுச்'' சேலை என்றும், உறுதி மொழிப் பத்திரத்தில் இது ''வாயில்'' சேலை என்று எவ்வாறு விவரிக்கப்பட்டது என்பது தனக்குத் தெரியாது என்றும், பெரியகுப்பம் மக்களுக்கான வழக்குரைஞர் நடத்திய குறுக்கு விசாரணையில் இவள் தெரிவித்தாள். இங்கு குறிப்பிட்டுள்ள இச்சேலையை ரூ. 30-க்கு தான் வாங்கியதாக மற்று விசாரணையின்போது அவள் கூறியது வியப்புக் குரியதாகும். இச் சேலை மீட்கப்பட்டதில் சில குழப்பங்கள் உள்ளன என்று நான் சொல்வேன். Ex. A-7 என்னும் ஆவணத்தில் கையெழுத்துப் போட்ட இருவரில், அப்பாதுரை (A-5) என்பவர் மட்டும் விசாரிக்கப்பட்டார். இவர் பெரியகுப்பத்தையோ அல்லது சின்னக்குப்பத்தையோ சேர்ந்தவரல்ல. ஆனல் அங்காளம்மன் குப்பத்தைச் சேர்ந்தவர். கடலூருக்கு இவர் செல்லும்போது காவல் படையினரைச் சந்தித்து அவர்களுடன் அலிக்குப்பத்திற்குச் சென்றார், பிறகு பெரியகுப்பத்திற்குச் சென்று அங்கு மகஜரில் கையெழுத்திட்டவர் எனத் தெரிகிறது. (முன்பு நான் கூறியவாறே, இந்த மீட்பு மகஜர் அவருக்குப் படித்துக் காண்பிக்கப்படவில்லை என்றும், அவர் அப்படித்தான் கையெழுத்துப் போட்டிருக் வேண்டும் என்று தெரிகிறது. இந்த சேலை தன்னுடையதுதான் என அடை யாளம் காட்டிய லலிதாம்பாள் (A-3) அச்சேலை வாயில் சேலையா அல்லது பட்டுச் சேலையா என்பது குறித்தும் நீல நிறச் சேலையா அல்லது சிகப்பு நிறச் சேலையா என்பது குறித்தும் குழப்பம் அடைந்தாள். மேலும், அது காஞ்சிபுரம் பட்டுச் சேலை என்றும், அதை தான் ரூ. 30-க்கு வாங்கியதாகவும் தெரிவித்தாள். எனவே, அவள் கூறிய சாட்சியம் நம்பத் தகுந்ததல்ல. இவற்றுடன், காவல் படையினரால் 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள் அன்று மீட்கப்பட்ட சேலையானது 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 30 ஆம் நாள் அன்றுதான் மாஜிஸ்ட்ரேட் டால் பெறப்பட்டது என்னும் கூற்று உண்மையாகும். 591 (1)-ஆம் எண் காவல் துறை நீதி ஆணையின்படி அத்தகைய மீட்புப் பொருள்கள் மீட்கப்படும்போது,

பொருளை மீட்கப்படும் இடத்திற்கு அருகாமையில் உள்ள இடங்களில் வசிக்கும் பொறுப்புள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் சாட்சியாகக் கையெழுத்து போடவேண்டும். அக்கிராமத்தின் கிராம முன்சீப் அல்லது கர்ணம் அவ்விடத்தில் இருக்குமாறு கேட்டுக் கொண்டதற்கு சாட்சியம் ஏதும் இல்லை. சொத்து, ஆவணங்கள் யாவும் தாமதமின்றி மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பப் பட்டிருக்க வேண்டும்.

(xxvi) சேலையை (**M.O. A. I,**) மீட்ட சூழ்நிலையும், மகஜர் (**Ex.A. 7**) தயாரிக்கப்பட்ட சூழ்நிலையும் பெரியகுப்பம் கிராமத்தினர் வழக்குரைஞர் கருத்து தெரிவித்துள்ளது போல் சந்தேகத்தை உருவாக்கக் கூடியதாக இருக்கின்றது என்பதை மறுப்பதற்கு இல்லை. குறிப்பாக அனுசூயாவை விசாரிக்கப்படாத போது, அனுசூயா இல்லத்திலிருந்து மீட்கப்பட்ட சேலையைக் குறித்த கூற்றை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை லலிதாம்பாள் (**A. 3**) கூறும் சாட்சியத்திலும் நம்பிக்கையில்லை. 91 ஆம் எண் படிவத்தில் மாஜிஸ்டிரேட்டுக்கு சேலை தாமதமாக அனுப்பப்பட்டதற்குரிய காரணம் காவல்படையினரால் இங்கு சரியாக விளக்கப்படவில்லை. எனவே, இவற்றையாவும் கருத்தில் கொண்டு, Ex.A. 7 ஆவணத்திலுள்ள மீட்கப்பட்ட சேலையைக் குறித்த கூற்று சரியானதல்ல என்று நான் சொல்லுவேன்.

(e) நிகழ்ச்சி எண் 5.—பெரியகுப்பத்தில் சனிக்கிழமை (1973-ம் ஆண்டு மே திங்கள் 12-ம் நாள்) அன்று இரவு சுமார் 11-00 மணியளவில்.

(i) 1973-ம் ஆண்டு மே திங்கள் 12-ம் நாள் அன்று இரவு 11-00 மணியளவில் அலிக்குப்பத்தைச் சேர்ந்த அதே நபர்கள், கடலூர் சொர்ணம், சந்திரன் வாண்டு நாயக்கர் முதலியோர்களுடன் காவல் படையினருடனும் மீண்டும் பெரியகுப்பத்திற்குச் சென்று இராமசாமி செட்டியார் வீட்டில் பூட்டி வைக்கப்பட்டிருந்த பொருள்களை தோணிப்பைகளில் எடுத்துக்கொண்டு சென்றனர் என்று குற்றச்சாட்டில் கூறப்பட்டது. பெரியகுப்பம் பெண்கள் ஆட்சேபித்த போது காவல் படையினரால் அவர்கள் அடிக்கப்பட்டதாகவும், துரத்தப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

(ii) சுப்புலட்சுமி (P-6), வேம்புலி அம்மாள் (P-7), நாயகி அம்மாள் (P-8), குள்ளம்மாள் (P-9) ஆகியோர்கள் எழுத்து மூலம் கொடுத்த அவர்களுடைய வாக்கு மூலங்களில் இந்நிகழ்ச்சியைப்பற்றித் தெரிவித்துள்ளனர். வேம்புலி அம்மாள் (P-7) வீட்டிலுள்ள பெட்டியும், பீரோவும் உடைக்கப்பட்டு அதிலுள்ள துணிகளும், நகைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன என்று சுப்புலட்சுமி (P-6) பிறர் சொல்லக் கேட்டாள். மூன்று பவுன் தங்கச் சங்கிலி ஒன்றும், ஒரு பவுன் தங்க மோதிரம் ஒன்றும், அணி மணிகளும் காவல் படையினரால் திருடப்பட்டது என்று வேம்புலியம்மாள் (P-7) தன்னுடைய சாட்சியத்தில் தெரிவித்தாள். மீன்பிடி வலைகளும், மீன்பிடி சுருவிகளும் எடுத்துச் செல்லப்பட்டன என்று கூறப்படுகிறது. இராமசாமி செட்டியார் இல்லத்தில் இருந்த பொருள்களும் எடுத்துச் செல்லப்பட்டன. நாயகம்மாள் (P-8) என்பவள் P-6 கூறிய வாக்குமூலத்தையும் குள்ளம்மாள் (P-9) என்பவள் P-6, P-8 ஆகியோர்கள் கூறிய வாக்கு மூலங்களையும் உறுதிப்படுத்தியிருந்தாள். காவல் துறையின் சிறப்பு வழக்குரைஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, பகலில் இந்த நிகழ்ச்சிகள் யாவும் நடந்த பின்னரும்கூட அவர்கள் (பெண்கள்) பெரிய குப்பத்தை விட்டு எங்கும் செல்லவில்லை என்று சுப்புலட்சுமி (P-6) தன்னுடைய முதல் வாக்கு மூலத்தில் தெரிவித்தாள். அந்த நிகழ்ச்சி நடந்த நாளுக்குப் பின்னர் சென்னை மாநகர் போன்ற இடங்களிலுள்ள அவர்களுடைய உறவினர்களின் வீடுகளில் தங்கியிருப்பதற்காக, திருமணமான, திருமணமாகாத சுமார் 20 அல்லது 30 இளம் பெண்களை பேருந்தில் அனுப்புவதற்காக அவர்கள் (பெண்கள்) ஏற்பாடு செய்தனர் என்று அவர் மேலும் தெரிவித்தாள். காவல்துறையின் சிறப்பு வழக்குரைஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, சின்னகுப்பம் போன்ற வெளியிடங்களுக்கு இளம் பெண்களை அவர்கள் (பெண்கள்) அனுப்பினர்கள் என்றும், ஏனைய பெண்கள் (வேம்புலி அம்மாள் உட்பட) பெரியகுப்பத்திலுள்ள வீடுகளைக் காக்கும் பொருட்டுத் தொடர்ந்து அங்கு தங்கி இருந்தார்கள் என்றும், அவ்வாறு தங்கியிருக்க அவர்களுக்கு பயம் ஏதுவும் ஏற்படவில்லை என்றும் வேம்புலியம்மாள் (P-7) தன்னுடைய சாட்சியத்தில் தெரிவித்தாள். சனிக்கிழமை இரவு காவல் படையினரும் ஏனையோரும் திரும்பி வந்தபோதும்கூட அவள் அக்குப்பத்திலேயே தங்கியிருந்தாள். ஞாயிற்றுக்கிழமை மாலையில்தான் அவள் சின்னக்குப்பம் கிராமத்திற்குச் சென்று நடந்த சம்பவங்கள் குறித்து அங்கு கூறினாள். பெரியகுப்பத்தில் வசிக்கும் பெண்கள் பெரியகுப்பத்திலிருந்து

சின்னக்குப்பம் வழியாக ஓய்யாலிக்குப்பம், புதுப்பட்டினம் போன்ற இடங்களுக்கு சனிக்கிழமையிலிருந்துதான் சென்றனர் என்று வேறு ஓர் இடத்தில் குறுக்கு விசாரணையில் இவள் தெரிவித்தாள். காவல் படையினர் அவர்களை அடித்தபோதிலும், அவர்கள் குப்பத்தை விட்டுச் செல்லாமல் சனிக்கிழமை அன்று வரை அங்கேயே தங்கியிருந்தார்கள் என்றும், மீண்டும் சனிக்கிழமை அன்றிரவு காவல் படையினர் வந்து அங்கு வசிக்கும் பெண்கள் அனைவரையும் அடித்தார்கள் என்றும் காவல் துறையின் சிறப்பு வழக்குரைஞர் நடத்திய குறுக்கு விசாரணையில் நாயகம்மாள் (P-8) தனது சாட்சியத்தில் தெரிவித்தாள். இதற்குமுன் கேட்ட ஒரு கேள்விக்கு, இவர் சனிக்கிழமை இரவு அன்று காவல் படையினர் எந்தப் பெண்ணையும் அடிக்க வில்லை என்றும், அன்றிரவு கொஞ்ச நேரமே காவல் படையினர் அங்கு தங்கியிருந்தனர்என்றும் தெரிவித்தார். சனிக்கிழமை அன்றிரவு பெரியகுப்பம் பெண்களில் ஏறத்தாழ பாதி பேர் சின்ன குப்பத்திற்குச் சென்றனர் என்று மேலும் அவள் தெரிவித்தாள். காவல்துறையின் சிறப்பு வழக்குரைஞர் நடத்திய குறுக்கு விசாரணையில், சனிக்கிழமை அன்று மாலையில் சுமார் 10 முதல் 20 பெண்களை அவர்கள் (பெண்கள்) அக்குப்பத்திற்கு வெளியே அனுப்பினர் என்றும், எஞ்சியவர்கள் அன்றிரவு அக்குப்பத்திலேயே தங்கினர் என்றும் குள்ளம்மாள் (P-9) தனது சாட்சியத்தில் தெரிவித்தாள். அன்றிரவு காவல் படையினர் அக்குப்பத்திற்கு வந்து அவளை அடித்தபோதிலும் அவள் அக்கிராமத்திலேயே தங்கியிருந்தாள். காவல் துறையின் சிறப்பு வழக்குரைஞர் நடத்திய குறுக்கு விசாரணையில், சனிக்கிழமை அன்றே சுமார் 60 அல்லது 70 பெண்கள் பெரிய குப்பத்தை விட்டுச் சென்றனர் என்றும், அவர்கள் பற்பல இடங்களுக்குச் சென்றனர் என்றும், அவை தனக்குத் தெரியாது என்றும் ராஜம்மாள் (P-10) தனது சாட்சியத்தில் தெரிவித்தாள். கடலூர் காலனியைச் சேர்ந்த தேவராஜன் (P-14) என்பவரும் அன்றைய நாள் பெரியகுப்பத்தில் தங்கியிருந்தார். 12—5—1973 அன்றிரவு காவல் படையினர் அக்குப்பத்தில் தங்கியிருந்ததைப் பற்றிய செய்தியை அவர், தன்னுடைய எழுத்து மூலமாக் கொடுத்த வாக்குமூலத்திலோ (Ex. P-13) அல்லது தனது சாட்சியத்திலோ எதுவும் தெரிவிக்கவில்லை.

(iii) 1973 ஆம் ஆண்டு மே மாதம் 12-ம் தேதி அன்றிரவு பெரியகுப்பத்தில் தங்கியிருந்த பெண்களின் எண்ணிக்கைக் குறித்தும், காவல் படையினர் தவறுக நடந்து கொண்டதாகச் சொல்லப்பட்ட பின்னர், தாமாகவே வெளியேறிய பெண்களின் எண்ணிக்கைக் குறித்தும் அல்லது மாலையில் வெளியேற்றப்பட்ட பெண்களின் எண்ணிக்கைக் குறித்தும் ஒரே மாதிரியான வாக்குமூலம் இல்லையென இதிலிருந்து தெரிகிறது. தாங்கள் பலவந்தப்படுத்தப்பட்டது, தாங்கள் கற்பழிக்கப்பட்டது போன்ற குற்றச்சாட்டுகளின் தொடர்பாக பெரியகுப்பம் பெண்களின் சாட்சியத்தில் முரண்பாடுள்ளதாகவும் திரித்துக் கூறப்பட்டதாகவும் உள்ளது என்பதை நான் முன்னரே கூறியுள்ளேன். எனவே 12—5—1973 அன்றிரவு காவல் படையினர் அங்கு தங்கியிருந்தார்கள் என்று அவர்களே கூறும் கூற்றையுங்கூட என்னால் நம்புவதற்கில்லை.

(iv) அவர்கள் முன்பு குறிப்பிட்டுள்ளவாறு காவல் துறையின் டெபுடி சூப்பிரண்டு (A-11) கடலூர் லாக் சைட்டிலுள்ள 23 பெண்களை விசாரித்து அவர்கள் கொடுத்த வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர், தான் அன்றிரவு செங்கற்பட்டு சென்றதாக அவர் தெரிவித்தார். இச்சாட்சியத்தை பாண்டுரங்கன் (A-1), நாராயணசாமி (A-6) ஆகியோர்கள் உறுதிப்படுத்தினார்கள். லாக் சைட் சூப்பிரண்டு தான் 12—5—1973 அன்றிரவு லாக் சைட்டில் தங்கியிருந்ததாகவும், 13—5—1973 அன்று காலை 6-00 மணியளவில் அலுவல் காரணமாக கூவத்தூருக்குச் சென்றதாகவும் தனது சாட்சியத்தில் தெரிவிக்கிறார். 12—5—1973 அன்றிரவு காவல் துறையின் டெபுடி சூப்பிரண்ட் அங்கு இல்லையெனவும் அவர் தெரிவித்தார். காவல் துறையின் இன்ஸ்பெக்டர் பாலுசாமி (A-13) தான் பொதுப்பணித்துறை லாக் சைட் பகுதியில் காவல் படையினருடன் அன்றிரவு தங்கியிருந்ததாகத் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். லாக் சைட் பகுதியில் அவரே தங்கியிருந்தார் என்றும், கடலூர் கிராமத்தில் சில காவலர்கள் தங்கியிருந்தார்கள் என்றும் தெரிவித்தார். காவல் துறையின் சாட்சியம் பொய் என நிரூபிக்கப்படவில்லை.

(v) 12—5—1973 அன்றிரவு, குறிப்பாக பகல் நேர நிகழ்ச்சிக்குப் பின்னர், பெரியகுப்பத்தில் சில பெண்களைத் தவிர மற்றவர்கள் தங்கியிருந்தனர் என்று கூறும் கூற்றை என்னால் நம்பமுடியவில்லை. திருமதி ரமணிபாய் (P-1), கண்ணப்பச் செட்டியார் (P-2) ஆகியோர்கள் அவர்களது உறுதிமொழிப் பத்திரத்தில் (Ex. P-1 and P-2) அல்லது அவர்களது சாட்சியத்தில் இந்நிகழ்ச்சி குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்பதும் முக்கியமானதாகும்.

(vi) என்ன நடந்திருக்கக்கூடுமென்றுல் அவர்களது வாக்குமூலங்கள் லாக் சைட் பகுதியில் பதிவு செய்யப்பட்ட பிறகு பெரியகுப்பத்திலிருந்து வந்த 23 பெண்கள், பாதுகாப்பிற்காகவும், தங்குவதற்காகவும், சின்னகுப்பத்திற்கு நேரடியாகச் சென்றிருக்கலாம். இவ்வாறு அனுமானிப்பது நியாயமென்று நினைக்கிறேன். அன்றிரவு பெரியகுப்பத்தில் ஒருவரும் தங்கவில்லை என்று அனுமானிப்பதும் நியாயமென்று நினைக்கிறேன்.

(vii) முடிவில் இந்த நிகழ்ச்சி நடந்திருக்க முடியாது என நான் கருதுகிறேன்.

(f) நிகழ்ச்சி எண் 6—1973 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதி ஞாயிறு (காலை 7-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை).

(i) 12—5—1973 ஞாயிறு அன்று அலிக்குப்பத்தைச் சேர்ந்த அதே நபர்கள் கடலூர் சொர்ணம் என்பவருடன் பெரியகுப்பத்திற்கு காலை சுமார் 7-00 மணியளவில் காவலருடன் மீண்டும் வந்ததாகச் சொல்லப்படுகிறது. தெருவில் பெண்களை அடித்து உட்காரவைத்து அவர்களைச் சுற்றி காவலர்கள் நின்றனர், வீடுகளுக்குள் புகுந்து அரிசி, பருப்பு மீன்பிடி வலைகள் ஆகியவற்றை கொள்ளையடித்தனர். பெட்டிகளும், அலமாரிகளும் உடைக்கப்பட்டு நகைகள், பணம், துணி போன்ற பொருட்களை எடுத்துக்கொண்டனர். சட்டிப்பானைகள், தட்டு முட்டுச் சாமான்கள் உடைத்துப்பட்டன. பசுமாடுகளை வெட்டிக் கடலில் எறிந்தனர். படகுகளையும் கட்டுமரங்களையும் கடலில் மிதக்கவிட்டனர்.

(ii) P-6 P-7, P-8, P-9, P-10 ஆகிய சாட்சிகள் தாங்கள் இதை நேரடியாகப் பார்த்ததாக மீண்டும் கூறியுள்ளனர். கப்புலட்சுமி (P-6) எழுத்து மூலமாகத் கொடுத்த தனது வாக்கு மூலத்தில் சில பொருள்கள் உடைக்கப்படும் சத்தம் கேட்டு இல்லத்திற்குள் சென்றதாகவும், அங்கே பாண்டுரங்கனும், பஞ்சாமிர்தமும் தமது பெட்டியை உடைத்து துணிகளை எடுத்து பூபாலன் கடலூர் சொர்ணம், சந்திரன் ஆகியோரிடம் கொடுத்ததாகக் கூறியுள்ளார். பாலகிருஷ்ணனும், மலேகரனும் தனான் மீன்பிடி வலைகளை எடுத்துச் சென்றனர். அரிசி, மிளகாய், கோழிக் குஞ்சுகள் ஆகியவையும் எடுத்துச் செல்லப்பட்டன. கண்ணப்பர் சிட்டி (P-2)க்குச் சொந்தமான பசுமாடுகள் வெட்டப்பட்டு இழுத்துக்கொண்டுபோய்க் கடலில் எறியப்பட்டன. கட்டுமரங்களும், படகுகளும், கடலில் மிதக்கவிடப்பட்டன. வேம்புலியம்மாள் (P-7), P-6 கூறிய கூற்றை உறுதிப்படுத்தியுள்ளார். நாயகம்மாளும் (P-8) P-6 கூறிய கூற்றை உறுதிப்படுத்தியுள்ளார். மேலும் அவள் தமது மாமனுருக்கு (P-2) சொந்தமான நான்கு பசுமாடுகளை பாண்டுரங்கன், வேலாயுதம், கடலூர் சொர்ணம், காவலர் ஆகியோர் அரிவாள் கொண்டு வெட்டியதாகக் கூறினள். பின்னர் வெட்டிய அந்த பசுமாடுகளைக் காவலர் இழுத்துக் சென்று ''நானேக்கு எவ்வாறு உன் கணவருக்குப் பால் கொடுப்பாய்?'' என்று கூறி கடலில் எறிந்தனர். நான்கு பசுமாடுகளை அரிவாள் கொண்டு வெட்டி, இழுத்துச் சென்று கடலில் எறிவது அவ்வளவு எளிதான காரியமல்ல என்பதை இது தொடர்பாக நான் சொல்ல வேண்டும். நான் 28—6—1973 அன்று கிராமத்தைப் பார்வையிட்டபோது அக்கைள் வெட்டப்பட்டதாகக் கூறப்படும் இடத்தைப்பற்றி யாரும் எனக்குத் தெரிவிக்கவில்லை. இது குறித்து வேறு எந்த சாட்சியமும் எனக்கு கூறப்படவுமில்லை. மேலும், இரண்டு பவுன் தங்கச் சங்கிலி ஒன்றும், மூக்குத்தி ஒன்றும், பட்டுப்புடவை ஒன்றும் பட்டு வேட்டி ஒன்றும், பிற துணிகளும் காணவில்லை என்று P-8 மேலும் கூறுகிறார். குள்ளம்மாள் (P-9) என்பவள் (P-6, P-7, P-8) ஆகியோரது கூற்றை உறுதிப்படுத்துகிறார். தன் வீட்டுக்குச் சென்று தான் வைத்திருந்த சிட்டுப் பணம் ரூ. 1,000-ஐ எடுத்துச் சென்று விடாமல் பாதுகாப்பதற்காக வீட்டிற்கு விரைந்ததாகவும் அவள் கூறினுள். எனினும், அவள் வீட்டை அடைவதற்கு முன்னரே பெட்டியை உடைத்துப் பணத்தை எடுத்து விட்டு இருந்தனர். அவள் பாண்டுரங்கன் என்பவரால் தள்ளப்பட்டு, காவலரால் அடிக்கப்பட்டு மயக்கமடைந்து கீழே விழுந்தாள். மீண்டும் சுய நினைவு அடைந்தபோது சட்டிப்பானைகள் உடைக்கப்பட்டு, அரிசி, ஏனைய பொருள்களும் மீன் பிடி வலைகளும் திருடிக் கொண்டு போய்விடப்பட்டதைக் கண்டாள். மற்றெல்லா வீடுகளிலும் இது போன்று நிகழ்ச்சிகளே நடந்தன என்றும் பெண்கள் அனைவரும் அழுது கொண்டிருந்ததாகவும் இவள் கூறினுள். ராஜாம்பாள் (P-10) எழுத்து மூலமாகக் கொடுத்த வாக்குமூலத்தில் தான் சனிக்கிழமை அன்று பெரியகுப்பத்தை விட்டுச் சின்னக்குப்பத்திற்குக் சென்றதாக கூறியுள்ளாள். காவல் துறையின் சிறப்பு வழக்குரைஞர் நடத்திய குறுக்கு விசாரணையில் ஞாயிற்றுக்கிழமை காலை சின்னக்குப்பம் சென்றதாகவும், அன்றிரவு பெரியகுப்பம் வந்ததாகவும், அது முதல் அங்கு தொடர்ந்து

இருந்து வருவதாகவும், அவள் கூறினாள். காவல் துறையின் சிறப்பு வழக்குரைஞர் நடத்திய குறுக்கு விசாரணையில் ஞாயிறு காலை சுமார் 10 அல்லது 11 மணிக்கு சுமார் 50 முதல் 60 காவலர்கள் வந்ததாக நாயகம்மாள் (P-8) கூறினாள். பெரியகுப்பத்திலுள்ள பெண்களில் சுமார் பாதி பேர் சனிக்கிழமை இரவே சின்னக் குப்பத்திற்குச் சென்று விட்டதாகவும், காவலர் ஞாயிறு அன்று வந்தபோது சுமார் 30 பேர்களே பெரியகுப்பத்தில் இருந்ததாகவும் கூறினர். ஞாயிறு காலை காவலர் கற்பழித்த இரண்டு பெண்களில் தானும் ஒருத்தி என்று கூறியவள் இவளே. (இந்த சாட்சி கூறும் பொய்க் கூற்றை ஏற்கெனவே நான் விவாதித்துள்ளேன்). தேவராஜன் (P-14) எழுத்து மூலமாகக் கொடுத்த தனது வாக்கு மூலத்தில் (Ex. P-13) ஞாயிறு அன்று அலிக்குப்பம் மக்கள் காவலர் ஆகியோர் மீன்பிடி வலைகள் அண்டா, தவலே போன்ற பிற பித்தளைச் சாமான்கள், கோழிக் குஞ்சுகள், கட்டுமரங்கள் ஆகியவற்றை எடுத்துச் சென்றதாகக் கூறியுள்ளார். எனினும், அவர் பெரியகுப்பத்தில் நிகழ்ச்சிகளே நேரடியாகப் பார்த்த சாட்சியமல்ல. கிராமத்தில் ஆண்கள் எவரும் இல்லாத சமயத்தில் இத்தகைய அட்டூழியங்களை ஏன் செய்கின்றனர் என்று தலைமைக் காவலர் மாணிக்கத்தையும், அவருடன் வந்த காவலரையும் கேட்டபோது, அவர்கள் அனைவரும் நீதிமன்றத்திற்குச் செல்வதால் இதைப்பற்றி அவருக்கு இது குறித்து கவலையில்லை எனக் கூறினர். குட்டியப்பன் (P-18) எழுத்து மூலமாக வாக்கு மூலத்தை (Ex P-16) தாக்கல் செய்தார். ஞாயிறு காலை சுமார் 10 மணிக்கு லாக் சைட்டிலிருந்து காவல் துறை வண்டி ஒன்று வந்ததாக அவர் கூறியுள்ளார். அவ்வண்டியில் மீன்பிடி வலைகளும், கட்டுமரங்களும் இருந்தன. வண்டியின் பின் கதவுதிறந்திருந்தது தவிர வண்டியில் பலகைகளும் இருந்தன. வண்டியின் உட்புறத்தில் காவலர்கள் உட்கார்ந்திருந்தனர். வண்டி சென்ற பின்னர், காவலர் மல்லிகா மூன்று கோழிக் குஞ்சுகளை காகிதத்தில் மடித்து எடுத்துக் கொண்டு வந்தார். அவருடன் மற்றொரு காவலர் கோழிக் குஞ்சு ஒன்றையும், இன்னொருவர் காகிதத்தில் சுற்றி மூன்று கோழிக் குஞ்சுகளையும் எடுத்துக்கொண்டு வந்தார். அவர்களுக்கிடையில் பாண்டுரங்கம், பஞ்சாமிர்தம், ஒரு அண்டாவை எடுத்துக்கொண்டு வந்தனர். அந்த அண்டாவிலிருந்த இறக்கை நீக்கிய கோழிக் குஞ்சுகளை எடுத்தனர். அவர்களுடன் கடலூர் சந்திரனும், காவலர்களும் வந்தனர். காலை ஒருவர் மூன்று கோழிக் குஞ்சுகளை அவற்றின் கால்களைக் கட்டி உயிருடன் கொண்டு வந்தார். என் இந்த அட்டூழியங்களைச் செய்கின்றீர்கள் என்று காவலர் மல்லிகாவிடம் அவர் கேட்டபோது, அவரை கழுத்தின் மீது அடித்தனர். காவல் துறையின் சிறப்பு வழக்குரைஞர் சார்பில் வழக்குரைஞர் லட்சுமண ரெட்டி நடத்திய குறுக்கு விசாரணையில், காவலர் மல்லிகாவைத் தவிர எனைய காவலர்களுக்குத் தெரியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். செய்தித்தாளில் கோழிக்குஞ்சுகளை சுற்றி எடுத்துக் கொண்டு காவலர் வந்ததைத்தான் மட்டுமே பார்த்ததாகவும், வேறு எவரும் இதனைச் செய்யவில்லை என்றும் அவர் கூறினார். காவலர் தன்னை அடித்த இரண்டு நாட்களுக்குப் பின்னர் அதாவது 16—5—1973 அன்று Ex-P-16 ஆவணத்தில் தனது கைப்பெறு விரல் அடையாளத்தை இட்டு அவர் தனது வாக்கு மூலத்தை கடலூர் விநாயகத்திடம் கொடுத்தார். அடுத்த கேள்விக்கு பதில் அளிக்கையில், சுமார் இரண்டு திங்களுக்கு முன்னர்தான் கைப் பெருவிரல் அடையாளமிட்டிருக்க வேண்டுமென்று கூறினர்.

(iii) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் ஞாயிறு அன்று பிற்பகல் சுமார் 2 மணிக்கு மீன்பிடி வலைகள், கட்டுமரங்கள், கோழிக் குஞ்சுகள் ஆகியவைகளுடன் காவல் துறை வண்டிகள் கால்வாய்ப்பக்கத்தில் விருந்து கடலூருக்கு வந்தன என்று எழுத்து மூலமான தனது வாக்குமூலத்தில் (Ex. P-16) வேதாசலம் (P-17) கூறியுள்ளார். காவல் துறை வண்டிகள் கடலூரை நெருங்கும்போது, கோழிக்குஞ்சுகள் கத்தின. கட்டுமரங்கள் உடைந்திருந்தன. அவைகள் உள்ளே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வண்டியின் பின் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது. அவர் காவலரையும் அலிக்குப்பம் பஞ்சாமிர்தத்தையும் பார்த்தார். காவல் துறையின் சிறப்பு வழக்குரைஞரால் நடத்தப்பட்ட குறுக்கு விசாரணையின்போது, அவருடைய கடையின் அருகாமையில் பெரியகுப்பம், சின்னகுப்பத்தில் வாழ்பவர்கள், காவலர் அட்டூழியத்தைப்பற்றி பேசிக்கொண்டிருந்ததைத் தாம் கேட்டதாக தெரிவித்தார். அவர்களுடைய பெயர்கள் தனக்கு தெரியாது என்றும், ஆனல் அவர்களே தான் அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

(iv) ஞாயிற்றுக்கிழமை அன்று லாக் சைட்டிலிருந்து காவல் துறை வண்டி வருவதைத் தாம் பார்த்ததாகவும், அது தமது வீட்டின் முன்புறமாகக் கடந்து சென்றதாகவும் விநாயகம் (P-21) சாட்சியம் அளித்தார். கட்டுமரத் துண்டுகள் வண்டியின் உள்ளே அடுக்கி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி வலைகள்

கோணிப்பைகள் இருந்ததையும் அவர் பார்த்தார். அந்த வண்டி சொர்ணம் வீட்டின் எதிரில் நின்றது. காவலர்கள் வண்டியிலிருந்து கீழே இறங்கினர். இதைப்பற்றி காவலர் மல்லிகாவிடம் கேட்டதற்கு அவர், அவைகள் பெரிய குப்பம் மக்களால் அலிக்குப்பத்திலிருந்து திருடப்பட்டது என்றும், அவைகளை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன என்றும் கூறினர்.

(v) A-11, A-13, A-14 ஆகியோர் சொல்லியுள்ளபடி, காவல் துறையின் வேற்றிடச் சான்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஒய்யாலிக்குப்பத்தில் இருந்ததாக கடலூரில் 13 ஆம் தேதியன்று தங்களுக்கு தகவல் கிடைத்ததாகக் கூறுகிறது. அவர் கடலூரில் காலை 7-30 மணிக்குப் புறப்பட்டு காலை சுமார் 9-00 மணிக்கு ஒய்யாலிக்குப்பத்திற்கு வந்தனர். அங்கு பெரியகுப்பத்தைச் சேர்ந்தவரென்று ஐயமுறும் 50 பேர்கள், 5 சுட்டுமரங்களில் கடலில் இருந்து கொண்டிருந்ததை அவர்கள் பார்த்தார்கள். திரும்பி வருகையில் அவர்களைப் பிடிப்பதற்காக ஒரு தலைமைக் காவலரையும் 10 காவலர்களையும் அங்கே நிறுத்தி வைத்துவிட்டு, எஸ்.ஐயோர் உணவிற்காக கல்பாக்கம் சென்றனர். காவல்துறை டெபுடி சூப்பிரண்டு அவர்களும், காவல் துறை இன்ஸ்பெக்டர் அவர்களும் உணவிற்குப் பின்னர் சிறிது நேரம் கல்பாக்கத்திலுள்ள மத்திய அரசு விருந்தினர் மாளிகையில் இளைப்பாறினர். காவலர்கள் வெளியில் உணவு உண்டனர். மாலை அவர்கள் எல்லோரும் கடலூர் லாக் சைட்டுக்கு மாலை சுமார் 5-30 மணிக்குத் திரும்பினர். அன்றிரவு அங்கேயே தங்கினர். பெரியகுப்பம் கிராமத்தினரின் வழக்குரைஞர் குறுக்கு விசாரணை நடத்தியபோது, 13-ந் தேதி காலையில் தாம் ஒய்யாலிக்குப்பம் சென்று, மாலையில் கடலூர் லாக் சைட்டுக்குத் திரும்பு கிறவரை கடலூரில் காவலர்கள் யாரும் இல்லை என்றும் காவல் துறை டெபுடி சூப்பிரன்டு (A-11) கூறினர். காவலர்கள் ஒய்யாலிக்குப்பத்திற்குச் சென்றது பற்றியும், குற்றஞ் சாட்டப்பட்டவர்களைப் பிடிப்பதற்காக காவலர் கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததைப்பற்றியும் காவல் துறை சூப்பிரன்டெண்டு கூறியதுபோலவே பாண்டுரங்கன் (A-1) திருப்பிக் கூறினர். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் அன்று காலையில் தான் மரம் ஏறச் சென்றபோது, காவலர்கள் லாக் சைட்டிலிருந்து சென்று விட்டார்கள் என்று மணி (A-7) தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். தாம் காலை சுமார் 7-00 மணிக்கு அவர்களைக் கடலூரில் பார்த்தார். காலை 7 மணிக்கு லாக் சைட்டிற்குச் சென்று கொண்டிருக்கையில், காவல் துறை வண்டிகள் கடலூரை நோக்கி செல் வதைப் பார்த்ததாக சந்திரன் (A-8) சாட்சியம் அளித்துள்ளார். அன்று காலை 3-00 மணிக்கு தாம் லாக் சைட்டுக்குச் சென்று மாலை 5-00 மணிக்குத் திரும்பிய போதும், லாக் சைட்டுக்கு அதே வண்டி சென்று கொண்டிருப்பதையும் பார்த்த தாகத் தெரிவித்தார். காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் அவரை 10 படி அரிசி வாங்கி வரும்படிச் சொன்னர். அதற்காக அவர் ரூ. 17.50-ஐத் தந்தார். ஒரு காவலர் அவருடன் வந்தார். அவரிடம் தான் வாங்கி வந்த அரிசியைக் கொடுத் தார். செல்லமுத்து நாயக்கர் (A-9), வசவசமுத்திரக் கிராமத்தின் கிராம முன்சீப் ஆவார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் அன்று காலை சுமார் 9-00 மணிக்கு, புதுப்பட்டினத்தில் அவர் காவலரைப் பார்த்தார். இரண்டு காவல் துறை வண்டிகளையும், காவல் துறை டெபுடி சூப்பிரன்டெண்டையும், சுமார் 30 முதல் 35 காவலர்களையும் பார்த்தார். அவர்கள் செக்போஸ்ட் அருகிலுள்ள பாலத்தில் இறங்கி, ஒய்யாலிக் குப்பத்தை நோக்கி நடந்து சென்றனர். பிற்பகல் சுமார் 1-00 மணிக்கு அவர்கள் திரும்பி வந்து வண்டியில் ஏறிக்கொண்டு கல்பாக்கத்தை நோக்கிச் சென்றதை அவர் பார்த்தார். மீண்டும் அன்று மாலை அவர்கள் வயலூரை நோக்கிச் செல்வ தையும், அவர் பார்த்தார். ஆஞ்சநேயலு (A-10) என்பவர் கல்பாக்கத்திலுள்ள அரசு விருந்தினர் மாளிகையில் எடுபிடியாளாகப் பணி புரிகிறார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் அன்று பிற்பகல் சுமார் 1-30 மணிக்கு காவல் துறை டெபுடி சூப்பிரன்டென்டு, காவல் துறை இன்ஸ்பெக்டர் சப்-இன்ஸ்பெக்டர் மற்றும் காவலர்கள் ஆகியோர்—இரண்டு வண்டிகளின் விருந்தினர் மாளிகை நோக்கி வந்தனர். உணவு ஏதும் கிடைக்காதென என்று அறிந்ததும் அவர்கள் சென்றுவிட்டனர். 2-30 மணிக்கு மீண்டும் அவர்கள் அங்கு வந்தனர். கூடத்தில் சிறிது ஓய்வு எடுத்த பின்னர் சுமார் மாலை 3-30 மணிக்குச் சென்று விட்டனர். பெரியகுப்பம் கிராமத்தினரின் வழக்குரைஞர் சார்பில் வழக்குரைஞர் கணேசன் நடத்திய குறுக்கு விசாரணையின்போது, 13-ந் தேதி காவலர் தரப்பில் சாட்சியம் அளிக்கும்படி சதுரங்கப்பட்டணம் சப்-இன்ஸ்பெக்டர் கூறியதாக அவர் கூறினர்.

(vi) P-6, P-7, P-8, P-9, P-10 ஆகிய பெரியகுப்பம் பெண் களின் நிலையில்லா சாட்சியத்தைக் காட்டிலும் காவல் துறையினரின் வேற்றிட சாட்சியம் உறுதியாகவும் முரண்பாடு இல்லாமலும் அமைந்துள்ளது. P-14,

P-17, P-21, ஆகியோர்களின் சாட்சியங்கள் அற்பத்தனமாக உள்ளது. இது குறித்து சாட்சியளிப்பாதற்காக குட்டியப்பன் (P-18) என்பவர் எவ்வாறு தோன்றினர் என்று தெரியவில்லை. அவர்மீது நம்பிக்கைக் கொள்வதற்கும் முடியாது. 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் அன்று பகலில் கடலூர் லாக் சைட்டில் காவலர்கள் யாரும் இல்லை என்பதும், காவலர் நடமாட்டம், ஒய்யாலிக் குப்பம், கல்பாக்கம் விருந்தினர் மாளிகையில் காவலர்கள் வந்தார்கள் என்பதும், A-9, A-10 ஆகியோரின் தனிப்பட்ட சாட்சியங்களின் மூலம் உறுதி செய்யப் பட்டுள்ளது. 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் அன்று அதாவது விசாரணைக் குழு நியமிப்பது பற்றிய கருத்தே தோன்றியிராத போது, சதுரங்கப் பட்டினம் ஆஞ்சநேயலுவை (A-10) அவர்கள் சார்பாகச் சான்று அளிக்கும்படி கூறியுள்ளதைப் பற்றிய ஒரு கருத்தைப் பெரியகுப்பம் கிராமத்தினரின் வழக்குரைஞர் சொன்னர். இதிலிருந்து இந்த சாட்சி போலி சாட்சியென அவர் எண்பிக்க முற்பட்டார். மே 13-ந் தேதியன்று சாட்சியம் அளிக்குமாறு இந்த வழக்கில் சம்பந்தப்படாத சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் கேட்டதனு லேயே விசாரணைக் குழுவின் முன்பு அவரது சாட்சியத்தின் நம்பகத் தன்மை பாதிக்கப்பட்டு விடாது என்றும், ஏனெனில், அது எந்த வகையாலும் மறுக்கப் படவில்லை என்றும் காவல் துறையின் சிறப்பு வழக்குரைஞர் பதில் சொன்னர்.

(vii) திருமதி ரமணிபாய் (P-1), கண்ணப்பச் செட்டி (P-2) ஆகி யோர் தங்கள் உறுதிமொழிப் பத்திரங்களில் (Ex. P-1 & P-2) இந்நிகழ்ச்சி பற்றி குறிப்பிடவில்லை என்பதை இங்கு குறிப்பிடலாம். பெரியகுப்பத்தில் மே 13, அல்லது மே 14ஆம் தேதி அல்லது அதற்குப் பின்னர் எந்த நிகழ்ச்சியும் நடந்ததாகக் குறிப்பிடவில்லை என்பதே உண்மையாகும். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் அன்று காவலின் வேற்றிட சாட்சியத்தை முறியடிப் பதில் பெரியகுப்பம் கிராமத்தினரின் வழக்குரைஞர் வெற்றி பெறவில்லை.

(viii) முடிவாக, இந்நிகழ்ச்சி நடந்திருக்க முடியாது என நான் கருது கிறேன்.

(ட) நிகழ்ச்சி எண் 7—1973ஆம் ஆண்டு மே மாதம் 14-ந் தேதி திங்கட் கிழமை (சுமார் 9 மணியிலிருந்து 10 மணி வரை) பெரியகுப்பத்தில்.

(i) காவலர் பெரியகுப்பத்திற்கு 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கும், 10 மணிக்குமிடையே மீண்டும் வந்து பெண்களை அடித்துச் சிலரின் உடைகளைக் கீறினர்கள். அதன் காரணமாக நான்கு பெண்கள் கடலை நோக்கி ஓடினர் என்பதே இங்கு கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களாகும். கடலூருக்குச் செல்லும் லாக் சைட்டிலிருந்து பித்தனீ, அலுமினியம், எவர்சில்வர் பாத்திரங்கள், மீன்பிடி வலைகள், கட்டுமரங்கள், கோழிக்குஞ்சு ஆகியவற்றைக் காவலர் எடுத்துச் சென்று விட்டனர்.

(ii) 1973ஆம் ஆண்டு மே மாதம் 14-ந் தேதி திங்கட்கிழமை காலை சுமார் 9 மணிக்கு காவலர் வந்து பெண்களை நாய்களை அழைப்பது போல் அடித்தனர் என்று சுப்புலட்சுமி (P-6) தனது சுழற்று மூலமான வாக்கு மூலத்தில் (Ex P-6) தெரிவித்தார். அவர்கள் தாங்கள் விரும்பியபடியெல்லாம் அடிந்தனர். ஒரு காவலர் அவளை அணைத்தார். அவள் தப்பியோட முயற்சித்தபோது அவர் அவ ளுடைய சேலையைப் பிடித்து இழுத்தார். அவள் ஓடிக் கடலில் நிர்வாணமாக விழுந்தாள். அவளைப் போலவே மற்ற மூன்று பெண்களும் கடலில் நிர்வாணமாக விழுந்தனர். அவர்கள் அனைவரும் சின்னகுப்பத்தை நோக்கிச் சென்றனர். அங்கு அவர்களை துரைக்கண்ணு செட்டியார் (P-16) காப்பாற்றினர். அவர் தனது தலையில் கட்டியிருந்த துணியை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் தங்களது சோகக் கதையை சின்னகுப்பம் மக்களுக்கு எடுத்துரைத்தனர். தங்க ளுடைய காயங்களுக்கு நாட்டு மருந்தைப் போட்டனர். பெண்களை அடித்தது குறித்து வேம்புலி அம்மாள் (P-7) P-6 கொடுத்த வாக்குமூலத்தையே சொன் னாள். வடக்குப் பக்கத்தில் சில காவலர்கள் சில பெண்களின் ஆடைகளைக் கீறி தனர் என்று தெரிவித்தாள். அப்போது சந்து ஒன்றில் அவள் சின்ன குப்பத்தை நோக்கி ஓடினாள். பன்னிரண்டு மணிக்குப் பின்னர் நான்கு பெண்கள் கடலில் விழுந்து சின்னகுப்பத்தை வந்தடைந்தனர் என்று அவள் தெரிவித்தாள். சின்ன குப்பம் பெண்கள் அவர்களுக்கு சேலைகள் கொடுத்தனர். காவல் துறையினருக் கான தனி வழக்குரைஞர் அவளைக் குறுக்கு விசாரணை செய்தபோது ஞாயிற்றுக் கிழமை மாலையில்தான் அவர்கள் சின்னகுப்பத்திற்குச் சென்று நிகழ்ச்சியை எடுத் துரைத்தனர் என்றும், சுமார் 20 பேர் சின்னகுப்பத்திற்குச் சென்றனர் என்றும், அதே இரவில் அவர்கள் பெரியகுப்பத்திற்குத் திரும்பினர் என்றும், அவள்

தெரிவித்தாள். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள் திங்கட்கிழமை காவலர் ஒருவர் அவளோப் பிடித்து அவளுடைய சேலையைப் பறித்தார் என்று நாயகம்மாள் (P-8) தெரிவித்தாள். தன்னுடைய மானத்தை இழப்பதைவிட இறப்பதே மேல் என்று கருதிய அவள் கடலில் நிர்வாணமாக விழுந்தாள். தன்னுடன் குள்ளம்மாள் (P-9), சின்னம்மாள், சுப்புலெட்சுமி (P-6) ஆகியோரும் உடன் வந்து கடலில் நிர்வாணமாக விழுந்தனர் என்று அவள் தெரிவித்தாள். அவர்கள் அனைவரும் சின்னகுப்பத்திற்கு சென்றனர். அங்கு அவர்களோ துரைக்கண்ணு செட்டியார் (P-16) காப்பாற்றினர். ஆராயி அம்மாள் (P-19) அவளுக்கு சேலை ஒன்றைக் கொடுத்தாள். இரண்டு நாட்களுக்குப் பின்னர் அவள் திருவான்மியூர் குப்பத்திற்குச் சென்று இந்நிகழ்ச்சிகள்பற்றி அவளுடைய மாமனுருக்குத் (P-2) தெரிவித்தாள். பின்னர் அவள் சின்னகுப்பத்திற்கு திரும்பி வந்தாள். காவல்துறையினருக்காக தனி வழக்குரைஞர் அவளிக் குறுக்கு விசாரணை செய்தபோது திங்கட்கிழமை காலே சுமார் பத்து மணிக்குத் தானும், சின்னம்மாள், குள்ளம்மாள், சுப்புலெட்சுமி ஆகியோரும் கடலில் ஒடிச்சென்று விழுந்து சின்னகுப்பத்தைச் சென்றடைந்ததாக அவள் தெரிவித்தாள். தங்களுக்கு ஏற்பட்ட நிகழ்ச்சிகள் குறித்து அவர்கள் எதுவும் சொல்லவில்லே. அவள் சின்னகுப்பத்தில் சுமார் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கியிருந்து விட்டு புதுப்பட்டணத்தில் பெருந்து ஒன்றில் ஏறி திருவான்மியூர் குப்பத்தை அடைந்தாள். அவள் தனது கணவரைச் சந்திக்கச் செல்லவுமில்லே, அவனுக்கு செய்தி சொல்லி அனுப்பவும் இல்லே. திங்கட்கிழமை சுமார் 20 பெண்கள் இருந்ததாகவும், காலே சுமார் 9 அல்லது 10 மணிக்கு காவலர் எல்லாப் பக்கங்களிலிருந்தும் வந்து அவர்களேத் துரத்தி அடித்தனர் என்றும், அவர்கள் எங்கெலாம் சென்றார்களோ, அங்கெல்லாம் சென்று அடித்தனர் என்று குள்ளம்மாள் (P-9) தனது எழுத்து மூலமான வாக்குமூலத்தில் (Ex. P-9) தெரிவித்தாள். அப்போது காவலர் ஒருவர் அவளது சேலையைப் பிடித்திழுத்தார். தனது மானத்தை இழந்து விடுவோம் என்று பயந்து அவள் முழங்காலிட்டு உட்கார்ந்தாள். அவளே பின்னலிருந்து தள்ளி அவளுடைய மர்ம ஸ்தானத்தின்மீது முனை அள்ளிப்போட்டுக் கிழித்தார். அவளேப் போலவே மற்ற மூன்று பெண்களும் ஒடிச் சென்று கடலில் நிர்வாணமாக விழுந்தனர். அவர்கள் அனேவரும் சின்னகுப்பத்திற்குச் சென்றனர். அவர்களே துரைக்கண்ணு செட்டியார் (P-16) காப்பாற்றினர். வள்ளியம்மாள் என்ற ஒரு பெண் அவளுக்குச் சேலே யொன்றைக் கொடுத்தாள். காவல்துறையினருக்காக தனி வழக்குரைஞர் அவளிக் குறுக்கு விசாரணை செய்தபோது திங்கட்கிழமை காலே காவலர் வந்த போது தாங்கள் 20 பேர் மட்டுமே இருந்தனர் என்றும், எஞ்சியுள்ளவர்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்றிருந்தனர் என்றும், அவர் தெரிவித்தார். திங்கட்கிழமை அங்கிருந்த நாயகம்மாள், சின்னப்பொண்ணு, மாரியம்மா, மேகாத்தா ஆகியோரை அவள் நினேவுபடுத்திக் கொண்டாள். கடலில் விழுந்த பின்னர் திங்கட்கிழமையன்று கின்னகுப்பத்தைச் சென்றடைந்தபின்னர், அங்கு சுமார் 1½ மாதங்கள் இருந்ததாக அவள் மேலும் தெரிவித்தாள். அவர்கள் ஆடை ஏதுமின்றி கடற்கரையோரமாக நடந்து சென்று கின்னகுப்பம் மக்களுக்கு இந் நிகழ்ச்சியைத் தெரிவித்தனர்.

(iii) சின்னகுப்பத்தைச் சேர்ந்த துரைக்கண்ணு (P-16) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள் என்று கடலில் மீன் பிடித்த பின்னர் காலே சுமார் 11 மணிக்குத் திரும்பியதாகத் தெரிவித்தார். சின்னகுப்பத்தின் தென் பகுதியில் கூக்குரல் சத்தத்தை அவர் கேட்டார். அவர் அந்தப்பக்கம் பார்த்தபோது, மிலர் தங்களே கைகளே அசைத்து சைகை காட்டித் தன்னே வரும்படி அழைப்பதைக் கண்டார். அவர்கள் அருகே அவர் சென்றபோது, கடலில் மார்பளவு தண்ணீரில் நான்கு பெண்கள் உட்கார்ந் திருப்பதைக் கண்டார். பெரியகுப்பத்தைச் சேர்ந்த சுப்பி அம்மா, குள்ளம்மாள், சின்னம்மாள், நாயகம் ஆகியோர் பெண்கள் என்று அவர் கண்டுகொண் டார். அவர்கள் தங்களிடம் ஆடையில்லே என்று சொன்னபோது, தன்னுடைய தலேயைச் சுற்றிக் கட்டியிருந்த எட்டு முழத் துண்டை எடுத்து அவர்களிடம் வீசி விட்டு, அவருடைய வீட்டிற்குச் சென்றார். அவர் சின்னகுப்பத்திலுள்ள பெண்களே அழைத்து கடலிலுள்ள பெண்களுக்கு உதவும் பொருட்டு சேலேகளே எடுத்துக்கொண்டு அவர்களிடம் செல்லும்படி கேட்டுக்கொண்டார். காவலர்கள் தங்களின் சேலேகளே எடுத்துக் கொண்டதாகவும், அவமானத்தைத் தடுக்கும் பொருட்டு அவர்கள் கடலுக்கு ஒடினதாகவும், அப்பெண்கள் சொன்னர்கள். நாயகம்மாள் (P. 8) மூன்று காவலர்கள் தன்னேக் கற்பழித்ததாகக் கூறினுள். ஆகவே அவள் தன்னேக் கொல்லும் பொருட்டு கடலே நோக்கி ஒடினதாகச் சொன் னுள். சின்னகுப்பத்திலுள்ள வெவ்வேறு வீடுகளில் இப்பெண்கள் தங்குவதற்கு அவர் வசதி செய்து கொடுத்தார். காவல்துறைக்கான சிறப்பு வழக்குரைஞர் லட்சுமண ரெட்டி குறுக்கு விசாரணே செய்ததில் அந்த சனிக்கிழமை, ஞாயிற்றுக்

கிழமை ஆகிய இரு தினங்களில் சின்னகுப்பத்திலிருந்ததாகவும், அந்த இரு நாட்களிலும் பெரியகுப்பத்தைச் சேர்ந்த பெண்கள் எவரையும் சின்னகுப்பத்தில் பார்க்கவில்லையென்றும், அவர் தெரிவித்தார். ஒரு நாளுக்கு மேற்பட்டு, அல்லது பல நாட்கள் சேர்ந்து கடலில் தங்கியிருப்பது அவர்களுக்கு வழக்கம் என்று மேலும் அவர் தெரிவித்தார். அந்த குறிப்பிட்ட நாளில் அவர் மட்டும் தனியாக தன்னுடைய கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்றுள்ளார். அப்போது வேறு சிலர்களும், பிற கட்டுமரங்களில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, கடலிலிருந்து பெண்களைப் பார்த்த ஒரே நபர் இவர்தான். இந்த நிகழ்ச்சிகள் குறித்தும், காவலர் நடவடிக்கை குறித்தும் தெரிவிப்பதற்காக அவர் கடலூருக்கோ அல்லது வேறு எந்த இடத்திற்கோ செல்லவில்லை. இந்நிகழ்ச்சிகள் குறித்து மேல் அதிகாரிகளிடம் போய் முறையீடு செய்வதற்கும் அவர் முடிவெடுக்கவில்லை. பெரியகுப்பத்திற்குச் சென்று அங்கு என்ன நடந்தது என்பதைப் பார்க்கப் போகவேண்டுமென்று கூட அவர் நினைத்துப் பார்க்கவில்லை. நிகழ்ச்சி நடந்து 10 அல்லது 15 நாட்களுக்குப் பின்னர் காவலர் லாக்கைட்டுக்கு வந்து விசாரணைகள் நடத்தினர். அந்நேரத்தில் அவர் ஒன்பது பேர்களுடன் அங்கு சென்று, கடலில் இருந்த பெண்களைப்பற்றியும், அதன்பின் நடந்த சம்பவங்களைப்பற்றியும் காவலர்களிடம் கூறினர். (லாக்கைட்டில் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 24ஆம் நாள் அன்று காவலர்கள் விசாரணை நடத்துவது இதுவே முதல் முறையாகும், இதை இதுவரை எவரும் சொல்லவில்லை.) நிகழ்ச்சி குறித்துப் புகார் செய்ய கடலூர் சொர்ணத்திடம் அவர் செல்லவில்லை. ஏனெனில், அவருக்கும், இவருக்கும் சுமுகமான நட்பு முறை நிலவவில்லை. இந்நிகழ்ச்சி குறித்துக் காவலுக்கு எடுத்துரைக்க அவர் முயன்றார். ஆனால் அவர்கள் அசட்டை செய்தனர். ஆரோ அம்மாள் (P. 19) எழுத்து மூலமான வாக்குமூலத்தை (Ex. P. 17) தாக்கல் செய்தார். திங்கட் கிழமை 11 மணிக்கு துரைக்கண்ணு செட்டியார் (P. 16) சின்னகுப்பத்திற்கு வந்து கத்தினார் என்று அதில் அவர் குறிப்பிட்டார். அவள் நாயகம், பூம்பாவதி வெள்ளையம்மாள் ஆகியோருடன் அவரிடம் ஓடினாள். கடலில் நான்கு பெண்கள் ஆடையின்றி நீர்நு கொண்டிருப்பதாக துரைக்கண்ணு அவளிடம் கூறினர். அந்தப் பெண்களுக்கு சேலைகள் எடுத்துச் செல்லுமாறு அவர்களிடம் கூறினர். அவர்கள் தத்தம் வீடுகளுக்குச் சென்று வேலைகளை எடுத்துக்கொண்டு கடலில் இருந்த பெண்களை நோக்கி ஓடினர். தான் எடுத்துச் சென்ற சேலையை அவர் (P. 19) பெரியகுப்பத்தைச் சேர்ந்த நாயகம்மாளுக்குக் கொடுத்தார். பின்னர் நாயகம்மாளே துரைக்கண்ணு செட்டியார் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். தன்னை காவல் படையினர் அடித்ததாகவும், கற்பழித்ததாகவும், நாயகம்மாள் (P. 8) புகார் செய்தாள். அவர்களுக்கு நாட்டு மருந்து சிகிச்சையும், ஒத்தடமும் கொடுக்கப்பட்டது. தம்முடன் வந்த மற்றவர்கள் யார் யாருக்குச் சேலைகள் கொடுத்தார்களோ, அவர்களின் பெயர்கள் தனக்குத் தெரியாது என்று தமது சாட்சியத்தில் அவர் சொல்லியுள்ளார். நாயகம்மாளைத் தவிர கடலிலிருந்த மற்ற மூன்று பெண்களின் பெயர்கள் அவளுக்குத் தெரியாது. ஆனால் அவர்களை அவருக்குத் தெரியும். அவர்களில் ஒருவர் தான் சுப்புலெட்சுமி என்று சொன்னாள். மற்றொருவர் தான் சின்னம்மாள் என்று சொன்னாள். சின்னக்குப்பத்தில் துரைக்கண்ணுவைத் தவிர மற்றவர் அனைவரும் வேலைக்குச் சென்றிருந்ததால் ஆண்கள் யாருமில்லை. துரைக்கண்ணு தான் கடலில் இருந்த பெண்களைப்பற்றி சொன்னார். அவர் தன்னுடைய வாக்குமூலத்தை வாய்மொழியாக ஜெயராம வாத்தியாருக்குச் சொன்னார். அதுவும் அப் பெண்கள் கடலில் இருந்த வீட்டிற்குக் கொண்டு வரப்பட்ட ஒரு நாட்களுக்குப் பின்னர் சொன்னார். விசாரணை ஒன்று நடத்தப்படப்போதாகவும், சாட்சிகள், தேவைப்படும் என்றும் கூறி ஜெயராம வாத்தியார் ஒரு வாக்குமூலத்தைத் தன்னிடமிருந்து கேட்டதாகச் சொன்னார்.

(iv) காவல்துறையினர் வண்டிகளில் செம்பு, அலுமினியம், எவர்சில்வர் பாத்திரங்களையும், மீன்பிடி வலைகள் முதலியவற்றையும் எடுத்துச் சென்றதாகச் செய்யப்படும் குற்றச்சாட்டைப் பற்றி ஒரே சாட்சிதான் சாட்சியம் அளித்துள்ளார்.

(v) வேதாச்சலம் (P. 17) எழுத்து மூலமான வாக்குமூலம் ஒன்றைக் (Ex. P. 15) கொடுத்துள்ளார். 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள் அன்று காலை 10 மணியளவில் காவல்துறை வண்டிகள் கால்வாய் பக்கத்திலிருந்து கடலூருக்குச் செம்பு, அலுமினியம், எவல்சில்வர் பாத்திரங்கள், மீன்பிடி வலைகள் ஆகியவற்றுடன் வந்ததாக அவர் தமது சாட்சியத்தில் சொல்லியுள்ளார். இந்த வண்டி கடலூரில் சிறிது நேரம் நின்றது. அவை ஏன் எடுத்துச் செல்லப்படுகின்றன என்று அவர் கேட்டதற்கு

அவை அலிக்குப்பத்திலிருந்து பெரியகுப்பம் மக்களால் திருடப்பட்டவை யென்றும், அவற்றை காவல்துறையினர் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லு கின்றனர் என்றும், வண்டியில் இருந்த பாண்டுரங்கன் அவரிடம் சொன்னர். காவற்படையினரின் சிறப்பு வழக்குரைஞர் லட்சுமண ரெட்டி அவரைக் குறுக்கு விசாரணை செய்தார். எச்சமயத்திலும் தான் எந்தக் காவல்துறை அதிகாரியை யும் பார்த்தும் புகார் கொடுக்கச் சொல்லவில்லையென்றும், டெபுடி சூப்பிரெண்டு யார் என்பதோ, இன்ஸ்பெக்டர் யார் என்பதோ தனக்குத் தெரியாது என்றும், குறுக்கு விசாரணையில் அவர் கூறினர். கடலூரிலுள்ள வினயகம் (P. 21) தவிர வேறு எவருக்கும் Ex. P. 15 ஆவணத்தில் கண்டுள்ள எதையும் எவருக்கும் சொல்லவில்லை. இந்த வினயகம் (P. 21) தன்னைப் போல் கடலூருக்கு வந்த வெளியாள்தான் என்று அவர் சொன்னர். காவற் படையினர் செய்த அட் டூழியம் பற்றி கடலூரில் முக்கியச் சாலையில் அமைந்துள்ள தனது கடையின் அருகே பெரியகுப்பம், சின்னக்குப்பம் மக்கள் பேசிக் கொண்டதை அவர் கேட்டார். அவர் யாரென்று அவருக்குத் தெரியாது. அவர்களை கண்டுகொள்ள வும் முடியாது.

(vi) இராமனுதன் (A. 11) 1973 மே 14-ஆம் நாளன்று காலை 7 மணியளவில் காவற்படையினருடன் ஒய்யாலிக்குப்பம் சென்றார் என்று காவற் துறையினர் சொல்லுகின்றனர். குற்றம் சாட்டப்பட்ட எவரும் கைது செய்யப் படவில்லையென்று அவருக்குத் தெரியவந்தது. கைது விஷயத்தை குறித்து மேல் நடவடிக்கையெடுப்பதற்காக அவர் சப்-இன்ஸ்பெக்டரையும், காவல்படையினரை யும், புதுப்பட்டணத்திலிருக்குமாறு விட்டுச் சென்றார். அதன் பின்னர் இன்ஸ் பெக்டருடன் அவர் தொலை வழக்கொன்றை புலனுரவு செய்வதற்காக தென் பட்டணம் சென்றார். அதன் பின்னர் அவர் 4-30 மணியளவில் செங்கற்பட்டு திரும்பினர். இதற்குப் பிறகு 1973ஆம் ஆண்டு ஜூன் 28-ஆம் நாள் வரை பெரியகுப்பத்திற்குப் போகவில்லை. 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28 ஆம் நாள் அன்று அவர் அக்கிராமத்தைப் பார்வையிடச் சென்ற விசாரணைக் கமிஷனுடன் சென்றார் அவர்கள் ஒய்யாலிக்குப்பம் சென்றது பற்றியும், சப்-இன்ஸ்பெக்டரையும் காவற்படை யினரையும் ஒய்யாலிக்குப்பத்தில் விட்டுச் சென்றதைப்பற்றியும் தாம் ராமநாதனுடன் (A-11) தென்பட்டினம் சென்றதைப்பற்றியும் பாலுசாமி (A-13), ராமநாதனின் (A.11) வாக்குமூலத்தை உறுதிப்படுத்துகிறார். காவற்துறை டெபுடி சூப்பிரெண்டு பலி 12 மணிக்கு செங்கற்பட்டுக்குப் புறப்பட்டார். அவரது வேலையை முடித்த பிறகு அவர் மாலை 6 மணியளவில் மதுராந்தகம் திரும்பினர். அதன் பின்னர் கடலூருக்கோ, கடலூர் லாக்சைட்டுக்கோ, பெரியகுப்பத்திற்கோ அலிக்குப்பத்திற்கோ அவர் செல்ல வில்லை. 80/73 எண்ணுள்ள குற்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஏழுவரை கைது செய்துள்ளதாக செய்யூர் சப் இன்ஸ்பெக்டரிடமிருந்து அவருக்கு 9 மணியளவில் தகவல் வந்தது. ராமநாதனுடனும் (A.11) பாலுசாமியுடனும் (A. 13) ஒய்யாலிக்குப்பத்திற்குச் சென்றதுபற்றி சுப்பிர மணியம் (A. 14) உறுதி கூறுகிறார். காவல்துறை டெபுடி சூப்பிரண்டு கட்டளைப் படி அவர் 80/73 எண்ணுள்ள குற்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்வதற்காக காவற்படையினருடன் ஒய்யாலிக்குப்பத்தில் தங்கிய தாக அவர் கூறுகிறார். அன்று மாலை அவர் ஏழு பேரைக் கைது செய்து அவர்கள் இரவு 8-30 மணி அவலில் செய்யூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்தனர். அவர்களைச் சோதனையிட்டு லாக் அப்பில் வைத்தபிறகு அவர், ஏழுபேர் கைது செய்யப்பட்ட விவரங்களை, இரவு 9-00 மணி அவலில் மதுராந்தகத்தில் உள்ள (A. 13) பாலுசாமிக்கு தகவல் அனுப்பினர்.

(viii) 1973-ஆம் ஆண்டு மே திங்கள் 14ம் நாள் அன்று நடந்த முக்கிய சம்பவங்கள் சுப்புலட்சுமி (P. 6), நாயகம்மாள் (P. 8), குள்ளம்மாள் (P. 9), சின்னம்மாள் ஆகியோர் துகிலுரிப்பட்டதும், அவர்கள் ஓடிக் கடலுக்குள் விழுந்ததும், பின்னர் சின்னக்குப்பத்திற்குச் சென்றதும் தொடர்பானவையாகும்.

(ix) மேற்படி நான்கு பெண்களும் கடலில் மார்பளவு நீரில் அமிழ்ந் திருப்பதைத் தாம் பார்த்ததாக துரைக்கண்ணு (P. 16) சொல்லுகிறார். தாங் கள் ஓடிக் கடலில் அமிழ்ந்து கொண்டதாக அப்பெண்கள் சொல்கிறார்கள். தங்கள் மானத்தைக் காத்துக் கொள்ளவே ஓடி கடலில் அமிழ்ந்து கொண்டனர் என்பதும் தற்கைலை செய்து கொள்ள அல்ல என்பதும் வெளிப்படையாகப் புரிகிறது. ஆயினும் தாங்கள் தண்ணீரில் அமர்ந்திருந்ததாக அவர்களில் எவரும் சொல்லவில்லை. தாங்கள் கரையோரமாக ஆடையின்றி சென்று கொண்டிருந்த தாக குள்ளம்மாள் (P. 9) காவல்துறையின் சிறப்பு வழக்குரைஞர் குறுக்கு

விசாரணை செய்கையில் கூறியுள்ளார். துரைக்கண்ணு தங்களைக் காப்பாற்றியதை அவர்களில் எவரும் குறுக்கு விசாரணையில் தங்கள் சாட்சியத்தில் சொல்லவில்லை. தானும், சின்னம்மாள், குள்ளம்மாள், சுப்புலட்சுமி ஆகியோரும் கடலுக்கு ஓடி கடலில் விழுந்து சின்னக்குப்பம் சென்றதாக மட்டுமே நாயகம்மாள் சொல்கிறார். அவர்கள் கடலுக்கு ஓடி, கடலில் விழுந்து சின்னக்குப்பம் சென்றதாக என் முன் உள்ள சாட்சியத்திலிருந்து தெரிகிறது. இப்பெண்கள் மார்பளவு தண்ணீரில் அமிழ்ந்திருந்ததைத் தாம் பார்த்ததாக துரைக்கண்ணு (P. 16) கொடுத்துள்ள வாக்குமூலத்திற்கு ஆதரவாக இப் பெண்களே சொல்லவில்லை.

(x) முந்தைய நாட்களில் நடந்த சம்பவங்கள் குறித்து இப் பெண்கள் கொடுத்துள்ள வாக்குமூலங்களையும் என்னுல் நம்ப முடியவில்லை. ஏனெனில் அவற்றில் முரண்பாடுகள் உள்ளன. அவர்களது வாக்குமூலங்கள் ஒளிவு மறைவின்றி சரளமாகச் சொல்லப்படுபவையாகத் தெரியவில்லை.

(xi) காவலர் கூற்றுப்படி அவர்கள் காலையில் ஒய்யாலிக்குப்பத்திற்குப் புறப்பட்டனர். ஒய்யாலிக்குப்பத்தில் காவல்துறை சப் இன்ஸ்பெக்டர் தலைமையில் காவற்படை முழுவதும் தங்கியிருந்தது. அவர்கள் கடலூருக்கோ, பெரியகுப்பத்திற்கோ திரும்பி வரவில்லை. இந்த நேர்விலும் காவற்படையினரின் சாட்சியங்கள் பெரியகுப்பம் மக்களின் வழக்குரைஞரால் கணிசமான அளவிற்குத் தகர்த்தெறிய முடியவில்லை.

(xii) துகிலுரிந்த சம்பவம் பற்றி தனிப்பட்ட சாட்சிகள் செம்மையான முறையில் சாட்சியமளிக்காத காரணத்தினாலும், காவல்துறையின் சாட்சியம் உடைக்கப்படாததன் காரணத்தினாலும், 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ம் நாள் அன்று துகிலுரித்த சம்பவமும், கடலில் விழுந்த சம்பவமும் நடந்திருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

(xiii) காவலர்கள் செம்பு, அலுமினியப் பாத்திரங்களையும், மீன்பிடி வலைகளையும், கோழிக்குஞ்சுகளையும் எடுத்துச்சென்றதைக் கண்ட ஒரே ஒரு சாட்சி வேதாசலம் (P.17) ஆவர். அங்கு எவ்வளவோ பேர் இருந்திருக்கலாம். அவர் மட்டும் தான் 12, 13, ஆம் தேதிகளில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக காவல்படையினர் பித்தளைப் பாத்திரங்கள், கோழிக்குஞ்சுகள் முதலியவற்றை எடுத்துச் சென்றதை அவர் மட்டும் தான் பார்த்தார் என்பதைப் புரிந்த கொள்ள முடியவில்லை. வேதாசலம் (P-17) கொடுத்துள்ள வாக்குமூலங்கள் நம்ப முடியாதவை என்று நான் ஏற்கனவே சொல்லியுள்ளேன். இந்த நேர்விலும் அதே கருத்தைத்தான் சொல்லுகிறேன். எனவே, இந்த சம்பவமும் நடந்திருக்க சாத்தியமில்லையென்று நான் கருதுகிறேன்.

(h) நிகழ்ச்சி எண் 8:—(1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் முதல் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 15ஆம் நாள் வரை காவல்துறையினர் சித்திரவதை செய்தது.)

(i) குப்புசாமி (P-15) எழுத்து மூலமான வாக்குமூலமொன்றை (Ex. P. 14) தாக்கல் செய்துள்ளார். இந்த வாக்குமூலம் 1973ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 8ஆம் நாள் என்று தேதியிடப்பட்டுள்ளது. ஆனால் 1973ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2ஆம் நாள் அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அன்று தான் அவர் சாட்சியம் அளித்தார். பெரியகுப்பம் சம்பவம்பற்றி தனக்கு ஒன்றுமே தெரியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். பெரியகுப்பம் சம்பவங்கள் நடந்ததற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் அவர் சூரம்பேடு வயலூரில் அவர் இருந்ததாக அவர் சொல்லியுள்ளார். அவரது மனைவியும் அங்கு இருந்தார். அவர் லாரி ஒன்றில் பயணம் செய்து 1973ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் காலை 9 மணியளவில் செய்யூர் சாலை சந்திப்பை அடைந்தார். அலிக்குப்பம் பாண்டுரெங்கனும், சந்திரனும் லாரி கொட்டகையில் அருகேயிருந்தனர். அவர்கள் ஏன் அங்கு வந்தார்கள் என்று அவர் கேட்டார். தங்களுக்கும், தன்சிங் கட்சியினருக்கும் சண்டையிருப்பதாக அவர்கள் சொன்னார்கள் பின்னர் பவுஞ்சூர் பேடுந்தைப் பிடிப்பதற்காக அவர் பேருந்து நிலையத்திற்குச் சென்றார். அங்கு செய்யூர் காவல் நிலையத்தின் அருகே செய்யூர் பாலகிருஷ்ணன், கடலூர் சொர்ணம், அலிக்குப்பம் பாண்டுரங்கன், வேலாயுதம், பஞ்சாமிர்தம் ஆகியோர் இருந்தனர். இவரைக் கண்டவுடன் பாண்டுரங்கனும், சொர்ணமும் காவல் நிலையத்திற்குச் சென்று வந்தனர். காவல் நிலையத்திலிருந்து தலைமைக் காவலர் மாணிக்கமும், இன்ஸ்பெக்டரும் வெளி

வந்து அவரைக் கூப்பிட்டனர். அவரது மனைவி வெளியிலிருந்தாள். அவர் பெரிய குப்பம் போக்கிரி என்று சொர்ணம், இன்ஸ்பெக்டரிடம் சொன்னர். அவர் கழுத்திலிருந்த துண்டை சப்-இன்ஸ்பெக்டர் முறுக்கி அவரை அடித்துக் கொண்டே உள்ளே இழுத்துச் சென்றார். இன்ஸ்பெக்டர் அவரை காவல் நிலையத்தில் அடித்துக்கொண்டிருந்தபோது, அவ்வாறு அடிப்பதை மக்கள் பார்க்க லாமாதலால் அவர் லாக் அப்பில் வைக்கப்பட்டு பின் அடிக்கப்படலாம் என்று பாண்டுரங்கனும், பஞ்சாமிர்தமும் சொன்னர்கள். தலைமைக் காவலர் மாணிக் கமும், காவலர் மல்லிகாவும் பின்னர் அவரை லாக் அப்பில் வைத்து தடியால் அடித்தனர். பூட்ஸ் காலுடன் எட்டி உதைத்ததால், தாழ்வாரத்திலிருந்து இவற்றையெல்லாம் கண்ட அவரது மனைவி கதறியழுதார். அவள் அங்கிருந்து விரட்டப்பட்டார். அன்று மாலை அவர் பிரப்பதாகச் சொல்லி உணவு கேட்டார். தலைமைக்காவலர் மாணிக்கம் வெளியே சென்று மலமும் நீரும் கலந்த மண்பானையொன்றைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்து குடிக்கச் சொன்னர். அவ்வாறு குடிக்க அவர் மறுத்தார். மயக்கமடையும் வரை அவர் அடிக்கப்பட்டார். நினைவு திரும்பியதும் தன்மீது நீர் தெளிக்கப்பட்டிருப்பதை அவர் கண்டார். இரவு 7 மணியளவில் அவர் மனைவி அங்கு வந்தார். அவருக்கு உணவு கொண்டு வந்தாள். மூன்று நாட்கள் கழித்து திங்கட்கிழமை அன்று கையெழுத்து கொண்டு வரப்பட்டவர்களுள் அவரது மகன் சாமிநாதனும் ஒருவர் அவரும் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். இறுதியாக 1973ஆம் ஆண்டு மே திங்கள் 5 ஆம் நாள் அன்று மதுராந்தகம் கிளை சிறைச்சாலைக்கு அவர் அனுப்பப்பட்டார். இதுபற்றி யாரிடமாவது மூச்சு விட்டால் கூட அவரது உயிருக்கு ஆபத்து வரும் என்று அவர் அச்சுறுத்தப்பட்டார். சாட்சியம் அளித்த நாளன்று அவர் தான் பிணையத்தில் இருந்ததாகவும், தாற்காலிகமாக பெரிய குப்பத்திலிருந்ததாகவும் அவர் சொன்னர்.

(ii) தாம் சித்திரவதை செய்யப்பட்டது குறித்து தான் யாரிட மும் சொல்லவில்லையென்ற குறுக்கு விசாரணையில் அவர் சொன்னர். காவலர் துன்புறுத்தியது குறித்து மாஜிஸ்ட்ரேட்டிடம் அவர் சொல்லவில்லை.

(iii) Ex. P-2, Ex. A-14 ஆகிய ஆவணங்கள் இந்த சித்திரவதை சம்பவம் குறித்து எதுவும் சொல்லப்படவில்லையென்பது குறிப்பிடத் தக்கதாகும். திருமதி ரமணிபாய் (P-1) பெரியகுப்பம் செய்யூர், காவல்நிலையம், மதுராந்தகம் கிளை சிறைச்சாலை, ஆகியவற்றைப் பார்வையிட்ட போது எழுதிய Ex. P-1 ஆவணத்திலும் இதுபற்றி குறிப்பிடப்பட வில்லை. காயங்கள்பற்றி அவர் மருத்துவச் சான்றிதழ் எதையும் கொடுக்க வில்லை.

(iv) பொன்னுச் செட்டியின் மகன் குப்புசாமி 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14 ஆம் நாள் அன்று பகல் 12-30 மணிக்கு ஓய்யாலிக்குப்பத்தில் கைது செய்யப்பட்டு இரவு 8-30 மணிக்கு செய்யூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு வரப் பட்டார் என்று ரிமாண்டு அறிக்கையிலிருந்து (Ex. A-1) தெரியவருகிறது. அவரும், குற்றம் சாட்டப்பட்ட ஏனைய அறுவரும் 1973 ஆண்டு மே திங்கள் 15 தேதி அன்று ரிமாண்டில் வைக்கப்படுவதற்காக மாஜிஸ்ட்ரேட் முன்பு கொண்டு வரப்பட்டனர். ரிமாண்ட் மனுவில் மாஜிஸ்ட்ரேட் மேற்கையெழுத்திட்டுள்ளார். குற்றம் சாட்டப்பட்ட எழுவரும் எந்தவிதமான புகார் எதையும் செய்யவில்லை யென்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த சான்றுவணம் எந்த இடத்திலும் மறுக்கப்படவில்லை. காவலர் சித்திரவதை செய்தது குறித்து அவர் கொடுத்துள்ள வாக்குமூலத்தை தவிர அவரது குற்றச்சாட்டு உண்மையானதுதானு அல்லவா என்பது பற்றி முடிவுக்கு வர என் முன் உள்ள சாட்சியங்களிலும், ஆவணங் களிலும் எதுவும் இல்லை. கைது செய்யப்பட்ட நாளும் வேறுக உள்ளது. எனவே, இந்த சம்பவம் நடந்திருக்கவே சாத்தியமில்லை. இது கற்பனையானது என்று நான் கருதுகிறேன்.

(i) நிகழ்ச்சி எண் 9 புதன்கிழமை 1973ஆம் ஆண்டு மே திங்கள் 16ஆம் நாள்.

(i) ஜெயராமன் (P-4) வேணு (P-5) ஆகியோர் எழுத்து மூலமான வாக்குமூலங்களைத் தாக்கல் செய்துள்ளனர். (Ex. P-4. Ex. P-5) 1973ஆம் ஆண்டு மே திங்கள் 16ஆம் நாள் அன்று அவர்கள் இருவரும் குழியம்பேடு கிராமத்திற்குச் சென்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தனர். அச்சமயத்தில் கடலூர் அருகே அவர்கள் தங்களுக்கு எதிரே காவல்துறை வண்டி வந்துகொண்டிருப்பதை

அவர்கள் கண்டனர். அந்த வண்டியிலிருந்து காவலர் மல்லிகா இறங்கி இருவரையும் தடியால் அடித்தார். ஜெயராமனுக்குக் காலிலும் தொடையிலும் அடிப்பட்டது. வேணுவின் இடது ஆள் காட்டி விரல் உடைந்து ரத்தம்வந்தது. அவர்கள் இருவரும் வண்டிக்குள் இழுத்துத் தள்ளப்பட்டனர். அவர்கள் இருவரும் பின்னர் கடலூர் வக்ர சைட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் காவலர் மல்லிகாவினுல் கேவலமாக நடத்தப்பட்டனர். ஒருவர் மற்றவரது மறைவிடங்களை சப்பும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டனர். வண்டியிலிருந்த தி.மு.க. வினர், சிரித்துக் கொண்டிருந்தனர். மேலும் அடிப்பட்ட பின்னர் அவர்கள் செய்யூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

(ii) காவல்துறை வண்டிகளில் இருந்தார்கள் என இவர்கள் குறிப்பிட்டுள்ள அலிக்குப்பம் தி.மு.க. உறுப்பினர்களின் பெயர்கள் ஒத்துவரவில்லை என்று இந்த இரண்டு பேர்களும் தாக்கல் செய்துள்ள எழுத்து மூலமான வாக்கு மூலங்களிலிருந்து தெரியவருகிறது. தனக்கு அவர்கள் பெயர்கள் தெரியாது என்றும், ஆனல் அவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியும் என்றும் வேணு (P-5) தனது எழுத்து மூலமான வாக்குமூலத்தில் (Ex. P-5) சொல்லியுள்ளார்.

(iii) காவல்துறையின் சிறப்பு வழக்குரைஞர் ஜெயராமனை (P-4) குறுக்கு விசாரணை செய்தார். தாம் 1973 ஆம் ஆண்டு மேதிங்கள் 15ஆம்நாள் அன்று கைது செய்யப்பட்டதாகவும், நிறுத்தி வைக்கப்படுவதற்காக மாஜிஸ்ட் ரேட்டுக்கு அடுத்த நாள் அனுப்பப்பட்டதாகவும் அவர் குறுக்கு விசாரணையில் கூறினர். Ex. P-4 சான்முவணத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதற்கு முரணுக இது உள்ளது. இந்த ஆவணத்தில் அவர் கைது செய்யப்பட்ட தேதி 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 16ஆம் நாள் என்று எழுதப்பட்டுள்ளது. தனது காயங்களை அவர் அச்சமயத்தில் மாஜிஸ்ட்ரேட்டிடம் சான்பிக்கவில்லை, அல்லது காவலர் தங்களை அடித்தது பற்றி புகார் செய்யவுமில்லை. ஒவ்வொரு நாளும் ஊசி சிறைச்சாலைக்கு வரும் மருத்துவரிடம் தனது காயங்களைக் காண்பித்து சிகிச்சை பெறவும் இல்லை. அவர் விவரங்களை ஜெயராம் வாத்தியாரிடம் விளக்கினர். அந்த விவரங்களின் அடிப்படையில் சான்முவணம் Ex. P-4 தயாரிக்க செய்யப்பட்டது. அவர் அதில் கையொப்பமிட்டார். வேணு (P-5) காவல் துறைக்கான சிறப்பு வழக்குரைஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது 1973ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள் புதன்கிழமையன்று தான் காவலரால் கைது செய்யப்பட்டு வெள்ளிக்கிழமையன்று மதுராந்தகம் மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறினர். ஒரு நிலையில் அவர், தான் நீதி மன்றத்துக்குப் போகவில்லை என்றும் மாஜிஸ்ட்ரேட்டைத் தான் காணவில்லை என்றும் முன்னுக்குப் பின் முரணுகக் கூறியுள்ளார். அவரை சிறைச்சாலையின் மருத்துவரிடம் புகார் செய்ததின் மேல் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்படி மருத்துவர் கூறினர். மருத்துவமனையில் சிகிச்சை முடிந்த பிறகு சிறைச்சாலைக்குத் திருப்பியனுப்பப்பட்டார். அவர் பிணையத்தில் வெளிவந்த சுமார் 4 அல்லது 5 நாட்களுக்குப் பிறகு சாத்தோமுக்கு அருகில் இருந்த ஜெயராம வாத்தியாரிடம் சென்று இந்நிகழ்ச்சியை அவரிடம் விளக்கி தார். அவர் அதை எழுதிக் கையொப்பமிட்டார்.

(iv) குப்புசாமியின் (P. 15) நேர்வைப் போலவே காவலர்கள் சித்திரவதை செய்தது, புடைத்தது குறித்த நிகழ்ச்சிகள், திருமதி ரமணிபாயால் சான்முவணம் Ex. P-1 தாக்கல் செய்யப்பட்ட உறுதி மொழிப் பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை. அவர்களும் (P-4. P-5.) விசாரணை ஆணைக்குமுவின் முன்பு உறுதிப் பத்திரங்கள் எதனையும் கொடுக்கவில்லை. அவர்களது சாட்சியம் வேறெந்தத் தனி சாட்சிகளாலும் உறுதிப்படுத்தப்பட வில்லை. காயங்கள் குறித்த அவர்களது கூற்றுகளுக்கு ஆதரவாக மருத்துவச் சான்று எதையும் கொடுக்கப்படவில்லை. மாஜிஸ்ட்ரேட்டிடமோ துணை சிறைச்சாலை மருத்துவரிடமோ P. 4 புகார் எதையும் ஒரு போதும் கொடுக்கவில்லை. ஆயினும், காயங்கள் குறித்துத்தான் துணை சிறைச்சாலை மருத்துவரிடம் புகார் செய்ததாகவும், மாஜிஸ்ட்ரேட்டிடம் அதுபற்றி எதையும் கூறவில்லை என்றும் P. 5 கூறுகிறார். அவர் தான் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றதாகக் கூறுகிறார். ஆனல் இது சம்பந்தமாக மருத்துவச் சான்று எதுவும் கொடுக்கப்பட வில்லை. சான்முவணம் A.2-ல் கண்டுள்ள காவல் அறிக்கையின்படி, ஜெயராமனும் P. 4 வேணுவும் P. 5 மற்றெருவருடன் மதுராந்தகம் சப் மாஜிஸ்ட்ரேட் முன்பு கொண்டு வரப்பட்டனர். அது சம்பந்தமாக மாஜிஸ்ட்ரேட் காவல் அணையில் ''புகார் எதுவுமில்லை'' என்று குறிப்பெழுதியுள்ளார். இந்த ஆவணத்திற்கு எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

(v) இந்த இரண்டு சாட்சிகளின் சாட்சியம் வேறெவராலும் உறுதிப் படுத்தப்படாததாலும், மேற்குறிப்பிட்ட முன்னுக்குப்பின் முரணை கூற்றுக்கள் காரணமாகவும், மருத்துவச் சான்று எதுவும் இல்லாததை முன்னிட்டும், இந்த நிகழ்ச்சியில் இவ்விருவர் தொடர்பான சம்பவங்களும், பெரிதும் பொருத்த மற்றவை என்றும், கற்பனையானவை என்றும் கருதுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

XVII. முடிவு செய்யப்படுவதற்கான பொருள்கள்.

(1) விசாரணைக்குச் சம்பந்தப்படுகிற பொருத்தமான கால அளவாகிய 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் தேதி விடியற்காலையிலிருந்து 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 16 நாள் வரையில் கால வரிசைப்படி 1 முதல் 9 வரையிலான நிகழ்ச்சிகளே முந்திய பக்கங்களில் நான் பட்டியலிட்டுக் குறிப்பிட்டுள்ளேன். எனினும், விசாரணையின்போது என் முன் கொடுக்கப்பட்ட சாட்சியம் மே 11, 12, 13, 14 ஆம் நாட்கள் சம்பந்தமாக மட்டுமே பெரியகுப்பத்தில் காவலர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளே வெளிப்படுத்தினன. 1973 மே 15, 16 ஆம் நாட்களைப் பொறுத்த வரையில் காவலர்க்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் எவையும் இல்லை.

(2) நிகழ்ச்சிகளுக்கு ஆதாரவாகவும், அவற்றுக்கு மறுப்புத் தெரிவித்தும், வாய் மொழியாகவும், எழுத்து மூலமாகவும் கொடுக்கப்பட்ட சாட்சியத்தையும் வைக் கப்பட்ட பொருள்களையும் அடிப்படையாகக் கொண்டு, இந்த நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருக்கக்கூடும், இல்லையா என்பது குறித்து நான் நியாயமான ஒரு முடிவுக்கு வந்துள்ளேன். பெரியகுப்பம் நிகழ்ச்சிகளின் தொகுப்பு முழுவதையும் நான் இப்போது விரிவாக்கல் விடிவில் கூற வேண்டியுள்ளது. பெரியகுப்பம் மக்களால் பல்வேறு குற்றச் சாட்டுக்களுக்கு ஆளாகியுள்ள காவலர்களும், ஏனையோரும் குற்றம் புரிந்தவர்களா இல்லையா என்பதை அந்த விஷயங்களுக்குரிய விடைகள் உறுதிப்படுத்தும், ஆயினும், அவ்வாறு செய்வதற்கு முன்பு இந்த வழக்கு முழுவதும் உருவானது தொடர்பாக, ஆர்வத்துடன் கவனிக்க வேண்டியவையும், முக்கியத் துவம் வாய்ந்தவையுமான சில கூறுகளை நான் விளக்கிக் விளம்புகிறேன்.

(3) பெரியகுப்பத்தில் நடந்த நிகழ்ச்சிகளை அதிகாரிகளின் நாட்டத்திற்குக் கொண்டு வந்ததும், என் முன் உள்ளதுமான முதல் ஆவணம் சிங்காரவேலு என் பவர் மதுராந்தகம் காவல்துறை இன்ஸ்பெக்டருக்கு அனுப்பிய 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 16 ஆம் நாளிட்ட தந்தியாகும், (சான்முவணம் Ex. A13) பாண்டுரங்கன் என்பவர் (A-1) காவலருக்கு கொடுத்த பொய்ப்புகார் எதுமையாப் பாமர மக்கள் துன்புறுத்தப்பட்டு, நிகழ்ச்சியில் சம்பந்தப்படுத்தப்பட்டது. பெண்களுக்குத் தொல்லை விளைவித்தது, உடைமைகளை சேதப்படுத்தியது, காவலரின் அளவுக்கு மீறிய செல்வாக்கு ஆகியவை பற்றி இந்த தந்தியில் கூறப்பட்டுள்ளது. அந்த வரிசையில் அடுத்த ஆவணம் சடகோபால் என்பவர் செங்கு பட்டு, காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டருக்கு அனுப்பிய 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 17 ஆம் நாளிட்ட தந்தியாகும். அதிகாரப்பூர்வமான கடிதமாகும். பெரியகுப்பம் மீனவர் களின் குடிசைகளும், உடைமைகளும் குறையாடி அழித்ததாகவும், பெண்கள் துன்புறுத்தப்பட்டு பெரியகுப்பத்துக்கு வெளியே துரத்தியடிக்கப்பட்டதாகவும், கட்டுமரங்களும், படகுகளும் நாசமாக்கப்பட்டதாகவும், காவலர்கள் அதிகாரப்பூர்வ மீனவர்களுக்கு ஆதரவாகச் செயலாற்றியதாகவும் அந்தத் தந்தியில் கூறப்பட்டிருந்தது. மூன்றாவதும், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஆவணம், கண்ணப்பச் செட்டி (P-2) நந்தகோபால், சடகோபால், சண்முகம், கண்ணாஜன் ஆகியோர் அனுப்பிய 1973ஆம் ஆண்டு மே திங்கள் 19ஆம் நாளிட்ட படியெடுக்கப்பட்ட மனுவாகும். (சான்முவணம் A-14) இது முக்கியமான ஆவணமாகும். ஏனெனில், பெரிய குப்பத்தில் நடந்த கொண்டிருப்பதாகக் கூறப்படுகிற நிகழ்ச்சிகள் யாவை என்பது குறித்த விவரங்கள் அதில் கண்டுள்ளன. மேலும் அது முதலமைச்சருக்கும், மீனளத்துறை அமைச்சருக்கும், அரசுத் தலைமைச் செயலாளருக்கும் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், சப் கலெக்டருக்கும், காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும், பரங்கிமலை மாவட்ட காவல்துறை சூப்பிரண்டுக்கும், செங்கல் பட்டு, காவல்துறை டெபுடி சூப்பிரண்டுக்கும், மதுராந்தகம் காவல்துறை இன்ஸ் பெக்டருக்கும், செய்யூர் காவல்துறை சப்-இன்ஸ்பெக்டருக்கும், சென்னை மீனளத் துறை இயக்குநருக்கும், முகவரியிடப்பட்டுள்ளது. விசைப்படகைப் பயன்படுத் துவது குறித்து தன்சிங் கட்சிக்கும், பாண்டுரங்கன் கட்சிக்கும் இடையில் அலிக் குப்பத்தில் தகராறு உருவாகியதுபற்றியும், நிராமவாசிகள் முதலியோர் 5,000 ரூபாய் கேட்டது பற்றியும், மற்றும் 1973 மே 11 ஆம் நாள் இரவு வரையில் சம்மந்தப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றியும் இந்த மனுவில் கையொப்பமிட்டவர்கள் கூறுகின்றார்கள். 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள் விடியற்காலை முதல்

பெரியகுப்பத்தில் அவர்கள் இல்லை. மே 12-ஆம் நாளன்று பெரியகுப்பத்தில் நடந்ததாக அவர்கள் கூறியுள்ள நிகழ்ச்சிகள் பிறரிடமிருந்து கேட்டறிந்தவையே அன்றி பெரியகுப்பத்தில் அவர்கள் தாங்களே கண்கூடாகக் கண்ட நிகழ்ச்சிகள் அல்ல. 1973 மே 13, 14, 15, 16ஆம் நாட்களில் நடந்த நிகழ்ச்சிகள் எதையும் பற்றி இந்த ஆவணத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பது கவனத்திற்குரிய தாகும். காவலர்களின் அட்டூழியச் செயல்களால் பாதிக்கப்பட்ட பெண்களின் பெயர்களும் அதில் கூறப்படவில்லை.

(4) பெரியகுப்பம் மக்கள் சார்பில் (நிகழ்ச்சிகளுக்குக்) கண்கூடான சாட்சிகளாகிய P-6, P-7, P-8, P-9, P-10, P-12, P-13, P-20 ஆகியோர் விசாரணை ஆணைக்குழு கேட்டுக் கொண்டபடி உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்யாமல், வாக்குமூலம் கொடுக்கும் சமயத்தில்தான் எழுத்து மூலமான வாக்கு மூலங்களைத் திடீரெனக் கொடுக்க முன் வந்தனர் என்று வாதங்களின்போது காவல்துறை சார்பான சிறப்பு வழக்குரைஞரும், வழக்குரைஞர் லட்சுமண ரெட்டியும் சுட்டிக் காட்டினர். படி எடுக்கப்பட்ட எழுத்து மூலமான இந்த வாக்கு மூலங்களில், (சான்றுவணம் 6 முதல் 10, 12, 13, 20) சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல 1973 மே திங்கள் 12, 13, 14ஆம் நாட்களில் காவலர் மீதான குற்றச் சாட்டுகள் திரும்பத் திரும்பக் கூறப்பட்டிருப்பதை அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர். ஆணைக்குழுவின் முன்பு சாட்சிகள் வாக்குமூலம் அளிக்கும் சமயத்தில்தான் முதல் தடவையாக இவ்வாக்குமூலங்கள் கொடுக்கப்பட்டன என்றும் அவர்கள் கூறினர். இக்குற்றச்சாட்டுகள் ஏற்கனவே கொடுத்துள்ள சான்று வணங்கள் A-4, A-13, A-14, A-15 ஆகியவற்றில் குறிப்பிடப்படவில்லையென் பதையும் அவர்கள் குறிப்பிட்டனர். ஆகவே, விசாரணை நாளுக்கு நாள் தொடர்ந்து நடைபெற்றுவரும்போது எவ்வகையிலும் மாற்றமேயில்லாத, எழுத்து மூலமான இந்த வாக்குமூலங்கள் பின்னர் சுற்றுக்கு செய்யப்பட்டு உருவாக்கப் பட்டவையென்றும் இவற்றை நம்ப முடியாதென்றும் அவர்கள் வாதித்தனர். திருமதி வி. ரமணிபாய் தாக்கல் செய்த ஆணையுறுதிப் பத்திரத்தில் (சான்றுவணம் P-1) 1973 மே மாதம் 13, 14, 15ஆம் நாட்களில் நடந்த நிகழ்ச்சிகள் எவையும் குறிப்பிடப்படவில்லையென்பது உண்மையே. கண்ணப்ப செட்டி கொடுத்துள்ள ஆணையுறுதிப் பத்திரத்தில் (சான்றுவணம் P-2), அவர் 1973 மே 12-ம் நாளன்று பெரியகுப்பத்திலிருந்து ஓடியபோது அன்று அதிகாலை வரை நடந்த நிகழ்ச்சிகளை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். இதற்கு முன்னர் குறிப்பிட்ட நேரடி சாட்சியங்கள் கொடுத்துள்ள எழுத்துமூலமான வாக்குமூலங்கள் எதிலும் திரு. ஆறுமுகம், எம். எல். ஏ. மீன் பெயர் குறிப்பிடப்படவில்லை யென்பதும் முக்கியமாகும். எனவே, இவ்வழக்குபற்றி கூறும் மிக முக்கியமானவர் களான திருமதி வி. ரமணிபாய் (P-1), கண்ணப்ப செட்டி (P-2) ஆகியோர் இந்நிகழ்ச்சிகளை நேரடியாகப் பார்த்த சாட்சிகளாயிராத போது நேரடி சாட்சி களான எட்டு பெண்கள் என்ன கூறியுள்ளனரோ அதையே நான் முற்றிலும் நம்பவேண்டியுள்ளது. இவ்வழக்கு முழுவதும் அவர்கள் கூறும் வாக்குமூலத்தை பொறுத்தே அமைந்திருக்கிறது. அவர்கள் அளித்த சாட்சியும், அது எந்த அளவிற்கு மறுப்புக்குரிய இடமில்லாமல் இருக்கிறதோ அதைப்பொறுத்தும் காவ லரும், ஏனையோரும் குற்றம் செய்தவரா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியும். அவர்கள் நேரடியாக அளித்த வாக்குமூலத்திலும், எழுதிக்கொடுத்த வாக்குமூலத்திலும் அவர்கள் குறுக்கு விசாரணை செய்தபோதும் நம்பமுடியாத அளவுக்கு அவர்களது முரணை ஈரொட்டான் சாட்சியங்களையும் பொய்யான வாக்குமூலங்களையும் மருத்துவ சாட்சி எதுவும் இல்லாதிருப்பதையும் நான் ஏற் கனவே குறிப்பிட்டுள்ளேன். பெண்களைப் பலாத்காரம் செய்ததாகவும், கற்பழித்த தாகவும் கூறப்படும் குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரையில் மருத்துவச் சாட்சி அவ சியம் தேவை. என் முன் அளித்த சாட்சியம், பொருள்கள் ஆகியவற்றின் அடிப்படை யில், 1973 மே மாதம் 12, 13, 14ஆம் நாட்களில் காவலர் நடவடிக்கை குறித்து காவலரது வாதம் அவர்கள் கூற்றினை உடைத்துவிடும் வகையில் அல்லது அவர்களின் நல்ல பெயர் கெட்டுவிடும் வகையில் முறியடிக்கப்படவில்லை. குற்றச்சாட்டுகளில் குறிப்பிட்டுள்ள, தி. மு. க. தலைவர்களான திரு. ஆறுமுகம், எம். எல். ஏ. செய்யூர் பாலகிருஷ்ணன் ஆகியோரும் நிகழ்ச்சி நடந்தபோது தாங்கள் வேறிடத் தில் இருந்ததாக மெய்ப்பித்து காட்டியுள்ளனர். 80/73ஆம் எண் குற்ற வழக்கு பதிவு செய்யப்படும் வரை அலுவலர்கள் நடந்திருப்பதை நம்பாமலிருப்பதற்குக் காரணம் ஏதுமில்லை. இல்லையேல், சாட்சியத்தில் தெரி வித்துள்ளவாறு 1973 மே 12-ம் நாளன்று தனசிங், சீதாராமன், அவர்கள் கூட்டாளிகள், ஆதரவாளர்கள் ஆகியோர் காவலர்களைக் கண்டவுடன் ஏன் ஓடவேண்டும்? உண்மையாகவோ, தவருகவோ, அவர்கள் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எங்கள் மீதான வழக்கு பொய்யானது என்று அவர்கள் உணர்ந்திருந்தால் அவர்கள் காவலரிடம் சென்று புகார் கொடுப்பதற்கு யாரும் தடை செய்யவில்லை.

(5) குற்றம் சாட்டப்பட்டுள்ளவாறு பெரியகுப்பத்தில் மேற்படி சம்பவங்கள் உண்மையிலேயே நடந்திருப்பின் அதுபற்றி பெரியகுப்பத்திற்கு மிக அருகாமையில் இருக்கும் சின்னக்குப்பத்தின் மக்களுக்குத் தெரிந்திருக்காது என எண்ணுவது எனக்கே கஷ்டமாக இருக்கிறது. பெரியகுப்பத்தைச் சேர்ந்த 30-க்கு மேற்பட்ட பெண்களும் பலாத்காரம் செய்யப்பட்டும் கற்பளிக்கப்பட்டும் ஏனய சித்திரவதை செய்யப்பட்டும் இருந்தால், மே 12-ம் நாளன்று இரவு முதல் பெரியகுப்பத்தில் எவ்வாறு தங்கியிருந்திருக்க முடியும்? எனவே, இக்கூற்றை நம்புவது கடினம். பெரியகுப்பத்தைச் சேர்ந்த பெண்கள் அருகிலிருக்கும் சின்னக் குப்பத்திற்கு சென்று அங்கு தங்களுக்கு பாதுகாப்பைத் தேடிக்கொள்ள விழைவதே இயல்பானதென எவரும் கருதுவர். நேரடி சாட்சிகள் இதனை கற்பனை செய்து பின்னர் விசாரணையின்போது அதனைக் கூறமுற்பட்டுள்ளதாகக் காவலர் தரப்பு சிறப்பு வழக்கறிஞரும் வழக்கறிஞர் கி. லட்சுமண ரெட்டியும் வாதிப்பதில் சாரமிருக்கிறது. இதற்கு காரணம், சான்றுவணம் A-4, A-13 ஆகிய முந்தைய ஆவணங்களில், குறிப்பாக சான்றுவணம் A-14, A-15 ஆகிய வற்றில் குறிப்பிட்டுள்ள விரிவான மனுக்களில் (சம்பவங்கள் நடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பின்னர் உடனடியாக அனுப்பப்பட்டவை) அவைபற்றி ஏன் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதற்கு விளக்கம் ஏதும் கொடுக்கப்படவில்லை. ஆயினும், இக்குற்றச் சாட்டுக்கள் கூறப்பட்டுள்ளதாலும், அவற்றின் அடிப் படையில் சாட்சியம் கொடுக்கப் பட்டுள்ளதாலும் ஆவணங்கள் வைக்கப் பட்டுள்ளதாலும், இந்த நாட்களில் சம்பவங்கள் நடந்ததாகக் குற்றம் சாட்டி யுள்ளது குறித்து ஒவ்வொரு நிர்ள் நிகழ்ச்சி தொடர்பாக வினு எழுப்பி அதற்கு விடை காண வேண்டியது அவசியமாகும். அவ்வாறே, இதற்கு முடிவு காண வேண்டிய வினுக்களைத் தொடுக்க இப்போது நான் முன்வருகிறேன். இவ்வினுக் களுக்குரிய விடை அதனதன்மீம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. காவலரும் ஏனையோரும் குற்றம் செய்தனரா இல்லையா என்பதை அவை உறுதிப்படுத்தும்.

வினு எண் 1:—செய்யூர் காவல் நிலையத்தின் 80/73-ஆம் எவ்ணில் குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டது குறித்து காவலர் தரப்பில் கெட்ட எண்ணம் ஏதும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா?

விடை:—1-ம் எண் நிகழ்ச்சியின் கீழ் இதுபற்றி விரிவாக விவாதிக்கப் பட்டுள்ளது. 80/73ம் எண்ணில் குற்ற வழக்குப் பதிவு செய்யும் அளவிற்கு சம்பவங்கள் நடந்திருக்கக் கூடும் என்பதில் ஐயமேதும் இல்லை என்ற முடிவுக்கு நான் வந்துள்ளேன்.

எனவே, 80/73-ம் எண்ணில் குற்ற வழக்கைப் பதிவு செய்வதில் கெட்ட எண்ணம் ஏதும் இல்லை என்ற வெளிப்படையாகத் தெரிவதாக நான் கருதுகிறேன்.

வினு எண் 2.—குற்றம் சாட்டப்பட்டுள்ளவாறு அலிகுப்பத்திலும் பெரியகுப்பத்திலும் 1973 மே மாதம் 11-ம் தேதி அன்று வெள்ளிக்கிழமை முறையே மாலை 4-30 மணிக்கும் இரவு 11 மணிக்கும் சம்பவங்கள் நடை பெற்றனவா?

விடை:—2, 3-ம் எண் சம்பவங்களின் கீழ் இது பற்றி நான் விவாதித் துள்ளேன். என் முன் அளித்த சாட்சியம், வைக்கப்பட்ட பொருள்கள் ஆகிய வற்றைப் பார்க்கும்போது, முதலாவது சம்பவம், அதாவது அலிகுப்பத்தில் 1973 மே 11-ம் தேதி அன்று மாலை 4-30 மணிக்கு நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் உண்மையில் நிகழ்ந்திருக்க முடியாது என்ற முடிவிற்கும், இரண்டாவ தாக பெரியகுப்பத்தில் 1973 மே 11-ம் தேதி அன்று இரவு 11 மணிக்கு சம்பவம் ஏதும் நடைபெறவில்லையென்றும் முடிவிற்கும் நான் வந்துள்ளேன்.

எனவே, புகார் கூறப்பட்டுள்ளவாறு இவ்விரு சம்பவங்களும் நடைபெற வில்லையென்று நான் கருதுகிறேன்.

வினு எண் 3:—பெரியகுப்பம் மக்கள் குற்றம் சாட்டியுள்ளவாறு பெரியகுப்பத்தில் 1973 மே 12-ம் தேதி அன்று பகல் 11 மணியிலிருந்து மாலை 5-30 மணி வரையிலான சம்பவங்கள் நடைபெற்றனவா?

விடை:—4-ம் எண் சம்பவத்தின் கீழ் இதுபற்றி நான் விரிவாக விவாதித் துள்ளேன். என்முன் அளித்த சாட்சியத்தையும், வைக்கப்பட்ட பொருள்களையும் பார்க்கும்போது, காவலர், பெண்களை பலாத்காரம் செய்ததாகவும், கற்பளித் ததாகவும், கண்ணியமற்ற ஏனைய செயல்களில் ஈடுபட்டதாகவும், கூறப்படும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. அதில் சாரமே இல்லையென்ற வகையில் அதனைத் தள்ளிவிட வேண்டுமென்ற முடிவிற்கு நான் வந்துள்ளேன்.

ஆகவே, பெரியகுப்பம் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளவாறு 1973 மே மாதம் 12-ம் தேதி அன்று பகல் 11 மணிக்கும் மாலை 5-30 மணிக்கும் இடையே சம்பவங்கள் நடைபெறவில்லை என்று நான் திண்ணமாகக் கூறுகிறேன்.

வினு எண் 4 :—பெரியகுப்பம் மக்கள் குற்றம் சாட்டியுள்ளபடி பெரியகுப்பத்தில் 1973 மே மாதம் 12-ம் தேதி அன்று இரவு 11 மணிக்கு சம்பவம் நடந்ததா?

விடை:—5-ம் எண் சம்பவத்தின் கீழ் இதுபற்றி நான் விவாதித்துள்ளேன். என் முன் அளித்த சாட்சியத்தையும், வைக்கப்பட்ட பொருள்களையும் பார்க்கும் போது, இந்த சம்பவம் நடந்திருக்க முடியாது என்ற முடிவுக்கு நான் வந்துள்ளேன்.

ஆகவே, பெரியகுப்பம் மக்கள் குற்றம் சாட்டியுள்ளபடி, பெரியகுப்பத்தில் 1973 மே 12 அன்று இரவு 11 மணிக்கு இச்சம்பவம் நடக்கவில்லையென்று நான் திண்ணமாக கூறுகிறேன்.

வினு எண். 5 : —பெரியகுப்பம் மக்கள் குற்றம் சாட்டியுள்ளபடி, பெரியகுப்பத்தில் 13–5–1973 அன்று காலை 9 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் இடையே சம்பவம் நடந்ததா?

விடை : —6-ம் எண் சம்பவத்தின்கீழ் இதுபற்றி நான் விவாதித்து இச்சம்பவம் நடந்திருக்க முடியாது என்ற முடிவிற்கு வந்துள்ளேன்.

ஆகவே, என் முன் அளித்த சாட்சியத்தையும், வைக்கப்பட்ட பொருள்களையும் பார்க்கும் போது, பெரியகுப்பம் மக்கள் குற்றம் சாட்டியுள்ளபடி 13–5–1973 அன்று காலை 9 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் இடையே சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்று நான் திண்ணமாகக் கூறுகிறேன்.

வினு எண். 6 : — பெரியகுப்பம் மக்கள் குற்றம் சாட்டியுள்ளபடி, பெரியகுப்பத்தில் 14–5–1973 அன்று காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையே சம்பவம் நடந்ததா?

விடை :—7ம் எண் சம்பவத்தின்கீழ் இதுபற்றி நான் விவாதித்து, இச்சம்பவம் நடந்திருக்க முடியாது என்ற முடிவிற்கு நான் வந்துள்ளேன்.

ஆகவே, என் முன் அளித்த சாட்சியத்தையும், வைக்கப்பட்ட பொருள்களையும் பார்க்கும்போது, குற்றம் சாட்டியுள்ளபடி 14–5–1973 அன்று காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையே சம்பவமேதும் நடக்கவில்லை என்று நான் திண்ணமாகக் கூறுகிறேன்.

வினு எண். 7—11–5–1973 முதல் 15–5–1973 வரை காவலர் சித்திரவதை செய்ததாக திருவாளர் குப்புசாமியும், 16–5–1973-ல் அவ்வாறு செய்ததாகத் திருவாளர்கள் ஜெயராமனும் வேணுவும் கூறும் குற்றச்சாட்டுக்கள் மெய்ப்பிக்கப்பட்டுள்ளனவா?

விடை:—இது பற்றி சம்பவங்கள் 8, 9 ஆகியவற்றின்கீழ் நான் விவாதித்து குற்றச் சாட்டுக்கள் உண்மையாய் இருக்க முடியாதவை என்ற முடிவுக்கு வந்துள்ளேன்.

எனவே, என் முன் அளிக்கப்பட்ட சாட்சியம், வைக்கப்பட்ட பொருட்கள் ஆகியவற்றைப் பார்க்கும்போது இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை யென்றும் சத்தற்றவை என்றும் நான் திண்ணமாகக் கூறுகிறேன்.

வினு எண். 8—பெரியகுப்பம் மக்களால் குற்றம் சாட்டப்பட்டிருப்பது போல் அட்டூழியம் செய்வதில் காவலர்களுக்கு திரு ஆறுமுகம், எம்.எல்.ஏ.யும் செய்யாறு பாலகிருஷ்ணனும் தீவிரமாக உதவி செய்தார்கள், துணை நின்றார்கள் என்ற குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறதா?

விடை :— திரு ஆறுமுகம், எம்.எல்.ஏ. செய்யாறு பாலகிருஷ்ணன் ஆகியோரின் வேற்றிட வாதம் பற்றி விவாதிக்கையில் இது பற்றி பரிசீலித்து அவர்களது வேற்றிட வாதம் வெற்றிகரமாகத் தகர்க்கப்படவோ குறைகாணப்படவோ இல்லை ; அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிலைநாட்ட முடியாது என்ற முடிவுக்கு நான் வந்துள்ளேன்.

எனவே, திரு ஆறுமுகம், எம்.எல்.ஏ., தி.மு.க. தலைவராகிய செய்யாறு பாலகிருஷ்ணண் ஆகியவர்களே இவ்வழக்கில் சம்பந்தப்படுத்தியிருப்பதற்கு ஆதாரமேயில்லை என்றும், அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் ஆதார மற்றவை சாரமற்றவை என்றும் நான் திண்ணமாகக் கூறுகிறேன்.

XVIII. வீடுகள் சூறையாடப்பட்டமையும், வீட்டுச் சமான்கள் முதலிய வற்றிற்கு சேதம் விளைவித்தமையும்.

(1) பல்வேறு தரப்பினரின் பிரதிநிதிகளான பல வக்கில்களுடனும், பிற அதிகாரிகளுடனும் நான் 28–6–1973 அன்று பெரியகுப்பம் கிராமத்துக்குச் சென்ற போது 13 குடிசைகளைப் பார்வையிட்டேன் (இணைப்பு VI-ஐக் காண்க). இவற்றில் 11 குடிசைகளில், உடைந்த பானைகள் வெளியே தென்பட்டன; விட்டுவிடப் பட்டுச் சென்ற குடிசைகளில்கூட, சில பெட்டிகள் உடைத்துத் திறக்கப்பட்டு, பண்டங்கள் அங்குமிங்கும் சிதறிக்கிடப்பது காணப்பட்டது. பஞ்சநாதன் என்ற ஒருவருக்கும் துளசிங்கம் என்ற மற்றொருவருக்கும் சொந்தமான வீட்டில் ஒரு மர பீரோ உடைந்திருப்பதைக் கண்டேன். எனினும், மதுராந்தகம் தாசில்தார், கடலூர் கிராம முன்சீப்புடன் 31–5–1973 அன்று பெரியகுப்பத்தைச் சென்று பார்வையிட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிக்கை ஒன்று (Ex. A-18) அனுப்பியபோது, நிரண்டு குடிசைகளும் ஒரு பெட்டிக் கடையும் மட்டும் சேதமடைந்திருப்பதைத்தான் பார்த்ததாகவும் அவை, முறையே கவிஞரதன் குடிசைச் செட்டியார், புஷ்புலிங்கம் ஆகியோருக்குச் சொந்தமானவை என்றும் கூறியிருப்பதும் அவையாக உள்ளது. வீடுகளுக்கு முன்னர் உடைந்த பானைகள் கிடப்பதைக் கண்டதாகவும் அவர் எழுதி வைத்துள்ளார். 57 ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டதாலும் பெண்களும் சிறுவர்களும் உட்பட பெரியவர்கள் அனைவரும் அண்டைக் கிராமங்களில் உள்ள அவர்களது உறவினர்களின் வீடுகளுக்குச் சென்றுவிட்ட தாலும் அவர் வீடுகளுக்குள் நுழைய முடியவில்லையாதலால் வீட்டுக்குள் இருந்த நிலைமைகள் பற்றி அவர் எதுமே எழுதி வைக்கவில்லை. வீடுகள் பூட்டப்பட்டிருந்து திருக்க வேண்டும். அன்றைக்கு யாருமே குப்பத்தில் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார். குறுக்கு விசாரணையின்போது அவரது அறிக்கையை எவரும் மறுத்துக் கூறவில்லை.

(2) நான் அந்தக் கிராமத்தைப் பார்வையிட்டபோது வீடுகளுக்குள் கண்ட நிலைமைகள், 31–5–1973-க்குப் பின்னர் ஏற்பட்டிருக்கவேண்டும் என்றும் பெரிய குப்பத்தில் சம்பவங்கள் நடைபெற்றதாகக் கூறப்படுகின்ற கால அளவில் (1973 மே 12, 13, 14 தேதிகளில்) அல்ல என்றும் இதிலிருந்து தோன்றும். எனவே, இவையெல்லாம் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 12, 13, 14 தேதிகளில் அலிக் குப்பத்தைச் சேர்ந்தவர்களுடன் அதாவது பாண்டுரங்கன், பஞ்சாமிர்தம், வடிவேலு, பூபாலன், பாலகிருஷ்ணன், மலேகரன், வேலாயுதம் ஆகியோருடன் காவலர்களால் நடத்தப்பட்டது என்றும் பெரியகுப்பம் மக்களின் வாதம் ஏற்றுக் கொள்ளமுடியாததாகும். ஏற்கெனவே விவாதிக்கப்பட்டு என்னுல் வேறுவிதமாக முடிவு செய்யப்பட்டுள்ளபடி இத்தற்குக் காவலர்கள் மீது எக்குற்றத் தையும் சுமத்த முடியாது. இருப்பினும், எப்பொழுது, எப்படி, யாரால் இந்தக் காரியங்கள் செய்யப்பட்டன என்ற வினு இருக்கத்தான் செய்யும். சில உள்ளூர் விஷமிகளும் சமூக விரோதிகளும் பெரியகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் ஊரைவிட்டுச் சென்றதைத் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு இந்த அழிவு வேலைகளைச் செய்திருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. எப்படியும், இவ்வாறு நடந்திருக்கக்கூடும் என்பதைத் தள்ளிவிடுவதற்கில்லை.

XIX. திரு. சி. ஆறுமுகம், எம்.எல்.ஏ.க்கு எதிரான லஞ்சக் குற்றச்சாட்டு.

விசாரணையின் போது திரு ஆறுமுகம், எம்.எல்.ஏ. அட்டுழியங்கள் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார், காவலர்களுக்கு அச்செய்கையில் உதவியாக இருந்தார் என்பதற்கான நோக்கம் கற்பிக்கும் கூறுகளில் ஒன்று திரு. தனசிங் அல்லது சீதாராமனிடமிருந்து அல்லது அவ்விருவரிடமிருந்தும் அவர் ரூ. 5,000 லஞ்சம் கேட்டதாவும், அதைக் கொடுக்க அவர்கள் மறுத்துவிட்டதாவும் கூறப்படும் குற்றச் சாட்டு ஆகும். எனினும், திரு ஆறுமுகம், எம்.எல்.ஏ. வாக்குமூலம் அளிக்கையில் அவரால் இது திட்டவட்டமாக மறுக்கப்பட்டுள்ளது. இது அவரது குறுக்கு விசாரணையின்போது எந்தவழியிலும் நிராகரிக்கப்படவில்லே. இதைத் தவிர குப்புராஜ் (P-23) என்பவர், லஞ்சம் கேட்டது முதலிய எம்.எல்.ஏ.

பற்றிய குற்றச்சாட்டு பொய் என்று கூறியுள்ளார். இது இந்த விசாரணைக்குச் சம்பந்தப்பட்டதில்லையாகையால், விசாரணையின்போது இந்தக் குற்றச்சாட்டு மறுக்கப்பட்டது என்று சொல்வதைத் தவிர, இதுபற்றி விரிவாகப் பரிசீலிப்பது எனது அதிகார வரம்புக்குட்பட்டதல்ல.

XX. எனது தீர்ப்புகள்.

என்முன் அளித்த சாட்சியம், வைக்கப்பட்ட பொருட்கள் ஆகியவற்றின் அடிப்படையில், விசாரணையின் முடிவாக நான் அளிக்கும் தீர்ப்புகள் வருமாறு :—

(a) வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த இரண்டு பிரிவினரிடையே ஏற்பட்ட சாதாரண உள்ளூர் தகராறுக்கு அரசியல் லாபம் அடைவதற்காக அரசியல் சாயம் பூசப்பட்டு எல்லாவகையிலும் மிகைபடுத்திக் காட்டி காவல் துறையினரையும் ஏதுமறியா மற்றவர்களையும் தேவையில்லாமல் இதில் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது.

(b) 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாளன்று பெரியகுப்பத்தில் காவலர்கள் பெண்களை துன்புறுத்தி, பலவந்தப்படுத்தி கற்பழித்ததாகவும், சொத்துக்களை சூறையாடி நாசம் செய்ததாகவும் பெரியகுப்பம் மக்களால் செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்றும், சத்தற்றவை என்றும் நிராகரிக்கப்பட வேண்டும்.

(c) 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 13, 14 ஆகிய தினங்களில் பெரியகுப்பத்தில் காவலர்கள் இருந்தது நிலைநாட்டப்படவில்லை, எனவே, இத்தத் தேதிகளில் அவர்களுக்கு எதிராகச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கவையல்ல.

(d) பெரியகுப்பத்தைச் சேர்ந்த மக்கள் 1973-ம் ஆண்டு மே திங்கள் 15, 16 ஆகிய தினங்களில் காவலர்கள் எதுவும் செய்ததாகக் குற்றம் சாட்ட வில்லை. எனவே இதற்குத் தீர்ப்பு எதையும் நான் அளிக்கத் தேவையில்லை.

(e) உள்ளூர் தி.மு.க. தலைவர்களான திரு ஆறுமுகம், எம்.எல்.ஏ., செய்யாறு பாலகிருஷ்ணன் ஆகியோர் இந்த வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டிருப் பது வாத ஆதாரமற்றதும் நியாயமற்ற அரசியல் நோக்கம் கொண்டதும் ஆகும்.

(f) பீரோக்கள், பெட்டிகள், மட்பாண்டங்கள் போன்ற வீட்டுச் சாமான் களுக்கு ஏற்பட்ட சேதம், சில உள்ளூர் போக்கிரிகள், சமூக விரோதிகள் ஆகியோரின் விரும்பத்தகாத் நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்டதெனத் தோன்று கிறது. இது குறித்து காவலர்களைக் குற்றம் கூற இடமில்லை.

XXI. என் கருத்துக்கள்.

(1) கலவரம் நிகழ்ந்த இடங்களுக்கு நிர்வாக உயர் அதிகாரிகள் உடனடியாகச் சென்று பார்க்கவேண்டியதின் அவசியம் (a) சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பு வகிக்கும் நிர்வாக அதிகாரிகள் இன்னும் அதிகக் கண்காணிப்புடன் விழிப்புடனும் இருக்க வேண்டியதின் அவசியத்தை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விழை கிறேன். கண்ணப்பச் செட்டி (P.2) கையொப்பமிட்ட 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 19-ம் நாளிட்ட சான்றுவணம் Ex. A-14 மனு, ஏனையவர்களுடன்கூட, செங்கற் பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், செங்கற்பட்டு சப்-கலெக்டருக்கும், பரங்கிமலை காவல்துறை சூப்பிரண்டுக்கும் முகவரியிடப்பட்டுள்ளது. பயங்கர மான கலவரங்கள் நிகழ்ந்ததாக அந்த மனுவில் கூறப்பட்டிருக்கிறது. அவற்றை உயர் அதிகாரிகள் உடனடியாகத் தமது நாட்டத்தில் கொண்டிருத்திருக்கவேண்டும். பெரியகுப்பத்தில் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதைத் தெளிவாக அறிந்து கொள்வதற்காக பெரியகுப்பத்திற்கு உடனடியாகச் சென்று பார்க்க வேண்டும் என்ற எண்ணம் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ காவல் துறை சூப்பிரண்டுக்கோ, செங்கற்பட்டு சப்-கலெக்டருக்கோ தோன்றுதது வியப்பாக உள்ளது. காவல் துறை டெபுடி சூப்பிரண்டு இயன்றளவு விரைவில் அலிக்குப்பத்துக்கும், பெரியகுப்பத்துக்கும் விரைந்து சென்று, காவல்துறை சூப்பிரண்டு உட்பட, தனது மேல் அதிகாரிகளுக்குத் தனது அறிக்கைகளை அனுப் பினர். 80/73 ஆம் எண். குற்றத்தில் கடுமையான தன்மையை முன்னிட்டு, மேற்படி 2 சிற்றூர்களிலும், நிலவும் நிலவரங்கள் குறித்து நேரில் அறிந்து கொள் வதற்காக 1973 மே 20ஆம் நாளன்று அல்லது 21ஆம் நாளன்று காவல் துறை

சூப்பிரண்டு அந்தச் சிற்றூர்களுக்குச் சென்றிருக்க வேண்டும். அதேபோல் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 19-ம் நாளிட்ட மனு வரப்பெற்றதின் மேல், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவராவது, சப்-கலெக்டராவது உடனடியாக மேற்படி சிற்றூர்களுக்குச் சென்று பார்த்திருக்க வேண்டும். எப்படியும், சட்டம்-ஒழுங்கு ஆகியவற்றுக்குப் பொறுப்பு வகிக்கும் உள்ளூர் நிர்வாக அதிகாரியாக உள்ள செங்கற்பட்டு சப்-கலெக்டர் அந்த இடங்களுக்கு உடனடியாகச் சென்றிருக்க வேண்டும். மதுராந்தகம் தாலில்தார் 1973ஆம் ஆண்டு மே திங்கள் 31ஆம் நாள் அன்று காலம் தாழ்த்தி, அதுவும், மாவட்ட ஆட்சித் தலைவர் பணித்ததன் மேல், அந்த இடங்களுக்கு சென்றார் என்பதைத் தவிர, மேற்குறிப்பிட்ட அதிகாரிகளில் எவரும் பெரியகுப்பத்திற்குச் சென்ற தற்கான சாட்சியம் எதுவும் எனக்கு அளிக்கப்படவில்லை. சட்டம்-ஒழுங்கு ஆகியவற்றிற்குப் பொறுப்பு வகிக்கும் உயர் அதிகாரிகள் உடனடியாக அங்கு சென்றிருப்பார்களேயானால், மக்களிடையே நம்பிக்கையும் ஒழுங்குணர்வும் நிலவ ஏதுவாய் இருந்திருக்கும் என்று நான் கருதுகின்றேன். 1973 மே 20ஆம் நாளன்று அல்லது 21ஆம் நாளன்று அவர்கள் அவ்வாறு செய்திருந்தால் நிலைமையைச் செவ்விய முறையில் கட்டுப்படுத்தியிருக்க முடியும் என்பதுடன், பொது மக்களுக்கு சரியான தகவல் கிடைத்திருக்கும். காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல், காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆகியோர் செய்தித் தாள்களுக்கு விடுத்த அறிக்கைகள் ஓரளவுப் பலன் அளித்தன. ஆயினும், செய்தித்தாள்களில் இந்த நிகழ்ச்சி பற்றி திரித்துக் கூறப்பட்ட செய்திகள் வெளியான பிறகுதான் அவை வெளியிடப்பட்டன. 1973 மே 20 ஆம் நாளன்று, அல்லது 21ஆம் நாளன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது சப்-கலெக்டர் அதிகாரப் பூர்வமான அறிக்கை ஒன்றை விடுத்திருந்தால், செய்தித் தாள்களில் திரித்துக் கூறப்பட்ட செய்திகளும் பரப்பரப்பூட்டும் செய்திகளும் வெளியானதை தடுத்திருக்கலாம். மேலும், வெளியார் புகுந்து மக்களையும், சூழ்நிலையையும் தங்களுக்குச் சாதகமாகிக் கொண்டிருப்பதை நிறுத்தியிருக்கலாம்.

(b) சட்டம், ஒழுங்கு சம்பந்தப்படுகிற அத்தகைய சூழ்நிலைகளில் நிர்வாக உயர் அதிகாரிகள் கலவரம் நிகழ்ந்த இடங்களுக்கு உடனடியாக விரைந்து செல்ல வேண்டியதன் தேவையை அரசு வலியுறுத்த வேண்டுமென்று நான் கருத்துரைக்கின்றேன்.

(2) கிராம மணியக்காரரின் பங்கு :—(a) குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 45 (1) பிரிவின்படியும், கிராம அதிகாரிகள், ஊழியர்கள் நடைமுறை நூலின் IIIஆம் அத்தியாயம், 2-வது பத்தியைச் சேர்ந்த (6) துணைப் பத்தியின்படியும் இந்திய தண்டனை சட்டக் கோவையின் பல்வேறு பிரிவுகளின்கீழ் தண்டிக்கத் தக்க குற்றங்கள் எவையேனும் புரியப்பட்டது தொடர்பாக, அல்லது புரியப்பட விருப்பது தொடர்பாகத் தகவல் ஒன்றை, கிராம மணியக்காரர் ஒவ்வொருவரும், மிக அண்மையில் உள்ள மாஜிஸ்ட்ரேட் அல்லது மிக அண்மையில் உள்ள காவல் நிலையப் பொறுப்பு அதிகாரி, இவர்களில் யார் மிக அண்மையில் உள்ளாரோ அவருக்கு உடனடியாகத் தெரிவிக்கவேண்டும்.

(b) கடலூர் கிராம மணியக்காரர் இது பற்றி நடவடிக்கை எடுத்ததாகவே தோன்றவில்லை. அல்லது அப்படியே எடுத்திருந்தாலும் அது குறித்து சாட்சியம் எதுவும் எனக்கு அளிக்கப்படவில்லை. காவலர்கள் பெரியகுப்பம் சென்று சோதனை செய்தபோது, அவர் அங்கு இல்லை என்பதுடன், அலிக்குப்பத்தில் கலவரம் நிகழ்ந்ததற்கு முன்போ அல்லது அதற்குப் பிறகோ உயர் அதிகாரிகளுக்கு அவர் அறிக்கை எதையேனும் அனுப்பினார் என்பதைக் காட்டுவதற்கான சான்று ஏதுமில்லை. கலவரம் சிறிது காலமாகவே உள்ளீடாக உருவாகிக் கொண்டிருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் இதனைக் கவனித்து உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

XXII. பரிவுரைகள்.

(1) மீனவர் குப்பங்களுக்குச் செல்வதற்கான வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம்.—(a) இந்தப் பகுதியில் பக்கிங்காம் கால்வாயின் கிழக்குப் பக்கத்திலுள்ள மீனவர் குப்பங்கள் மிகவும் ஒதுக்குப்புறமாக உள்ளன. தகுந்த இடங்களில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்காக பாலங்கள் இல்லாமையால், நெருக்கடிக் காலங்களில் அந்தக் குப்பங்களை விரைவில் சென்றடைவது மிகவும் கடினமாக உள்ளது. பொதுப்பணித்துறையின் படகு மதகுத் துறை உள்ள இடத்தில் ஒருவர் பக்கிங்ஹாம் கால்வாயைக் கடந்து, மணலில் சற்று அதிக தொலைவு நடந்து சென்றால் அந்தக் குப்பங்களைச் சென்றடைய முடியும். எனினும் குறிப்பாக இவ்வாறு இருப்பது மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்

அங்காடிகளுக்குக் கொண்டு செல்வதற்கு அல்லது நோயுற்றவர்களை மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ மனைகளுக்கு அழைத்துச் செல்வதற்கு இடர்ப்பாடாக உள்ளது. இந்தக் குப்பங்களில் வசிப்பவர்கள் ஒதுக்குப்புறமான ஒரு சூழ்நிலையில் வசித்து வருவதால், போக்கிரிகளும், சமூக விரோதக் கூட்டத்தினரும் சட்டத்திற்கு அஞ்சாமல், விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபட அவர்களுக்குத் துணிச்சல் ஏற்படுகிறது.

(b) எனவே, வண்டிப் போக்குவரத்துக்காகப் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே தேவையான எண்ணிக்கையில் பாலங்கள் கட்டவும் குப்பங்களுக்குள் செல்வதற்கான இணைப்பு சாலைகளை அமைக்கவும் சிறப்புத் திட்டம் ஒன்றை வகுக்க உடனடி நடவடிக்கைகளை கருதிப் பார்க்குமாறு அரசிற்கு நான் பரிந்துரைக்க விழைகிறேன்.

(2) குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின்கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகள்.—தன்சிங், சீதாராமன் மற்றும் அவர்களது கூட்டாளிகள் ஒரு பக்கமும், பாண்டுரங்கன், வேலாயுதம் மற்றும் அவர்களது கூட்டாளிகள் மற்றொரு பக்கமும் சேர்ந்து மோதிக்கொண்டதின் விளைவாகப் பெரியகுப்பம் கலவர நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்று நான் கருதுகிறேன். அந்த இரு கட்சியாருக்குமிடையே, சொந்தக் காரணங்களை முன்னிட்டு நெடுங்காலமாகப் பகையும் வாய் சண்டைகளும், கைகலப்புகளும் தொடர்ந்து இருந்துவந்தன. அதனால், அங்கு அமைதி பாதிக்கப்பட்டிருந்தது. சுட்டம்-ஒழுங்கு பொறுப்பிகாரிகள் குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையின் 107-வது பிரிவின் விதித்துறைகளின்கீழ் பொருத்தமான நடவடிக்கையை முன்னரே மேற்கொண்டிருக்கலாம். பெரியகுப்பத்தில் 1973 மே 30ஆம் நாளன்று தீ வைத்த நிகழ்ச்சி நடந்த பிறகு ஓரளவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் சமாதானக் குழு ஒன்றை அமைத்துள்ளார் என்றும் நான் இப்போது அறிகிறேன். மேற்கொண்டும், நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், சட்டத்தையும் ஒழுங்கையும் மீறுவதற்கும், நாட்டுப்புறப் பகுதிகளில் அமைதியைக் குலைப்பதற்கும் மற்றும் நாச வேலைகள் நடப்பதற்கும் பொறுப்பாளிகளாக இருந்தவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள்மீது விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் நான் கருத்துரைக்க விழைகிறேன்.

(3) புறக் காவல் நிலையங்களை நிறுவுவதற்கான அவசியம்.—கடற்கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்காகவும், போக்கிரிகள், சமூக விரோதக் கூட்டத்தினர் ஆகியோரின் நடவடிக்கைகளிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவும், கடற்கரையோரப் பகுதியில் தகுந்த இடங்களில் ஒரிரு புறக்காவல் நிலையங்களை விரைவில் நிறுவுவது அவசியமெனத் தோன்றுகிறது.

XXIII. நன்றி நவிலல்.

(1) எனது அறிக்கையை நான் முடிக்கு முன்பு விசாரணை முழுவதிலும் பங்கெடுத்துக்கொண்ட வழக்குரைஞர்கள் எனக்கு நல்கிய ஒத்துழைப்பிற்காக நான் எனது உளமார்ந்த நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். விசாரணை முழுவதிலும் வந்திருந்து, விசாரணையின் நடவடிக்கைகளை செய்தி தாள்களுக்குப் பரபரப்பான முறையிலன்றி உண்மை நிலைப்படி வெளியிடச் செய்ததற்காக பத்திரிகை நிருபர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) விசாரணை ஆணைக் குழுவின் மேலாளர் என்ற முறையில் செங்கற்பட்டு மாவட்ட தாசில்தார் திரு பி. திருவேங்கடம் மகிழ்ச்சியுடன் மிகக் கடினமானதும் பயனுள்ளதுமான பணியை ஆற்றியமைக்காக எனது பாராட்டுதல்களை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(3) எனது நேர்முக உதவியாளராகிய திரு கே. பாஷ்யம் மிகக் கடுமையாகப் பணியாற்றியமைக்காக அவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். விசாரணை நடைபெற்ற சமயத்தில் நான் நவின்றபடி எல்லாச் சாட்சியங்களையும் தட்டச்சு செய்யும் கடுமையான பணியை அவர் அயராமலும் மகிழ்ச்சியுடனும் செய்து முடித்தார். அத்துடன் இந்த அறிக்கையை எழுதும் சமயத்திலும் நான் சொல்லிக்கொண்டு வந்தவற்றை தட்டச்சு செய்யும் கடுமையான பணியைச் செவ்வனே ஆற்றினார்.

(4) செங்கற்பட்டு வருவாய்ப் பணியாளரமைப்பைச் சேர்ந்த உதவியாளர் திரு M. முத்தையா, தட்டச்சர்களாகிய திருவாளர்கள் A. மணி, E. கோதண்டம் ஆகியோர் கடுமையான பணியை முகமலர்ச்சியுடன் செய்து உதவியதற்காக அவர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். விசாரணையின் போதும் இந்த அறிக்கையை எழுதும்போதும் அவர்கள் பகலென்றும் இரவென்றும் பாராமல் தயக்கம் காட்டாமல் எல்லாச் சமயங்களிலும் என்னுடன் ஒத்துழைத்து கடுமையாக பணியாற்றினர்.

(5) இறுதியாக விசாரணை நடத்துவதற்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தமைக்காகச் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் காவல் துறை சூப்பிரண்டுக்கும், செங்கற்பட்டு மாவட்ட வருவாய் அதிகாரிக்கும் மதுராந்தகத்திலும், செங்கற்பட்டிலும் உள்ள வருவாய்த்துறை சார் நிலைப் பணியாளர்களுக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) குறிப்பாக, நீதிமன்றக்கூடத்தை எனது பணிக்காக ஒதுக்கி, விசாரணை ஆணைக் குழு விசாரணை நடத்துவதற்கான ஏனைய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்துகொடுத்தமைக்காக, செங்கற்பட்டு சப் கலெக்டருக்கும் அவரது அலுவலகப் பணியாளர்களுக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடம் : சென்னை,

நாள் : 1973ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17ஆம் நாள்.

(ஒப்பம்) எம். ஜி. ராஜாராம்,
விசாரணை ஆணைக்குழு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

விசாரணை ஆணைக்குழுவை நியமித்து சென்னை-9, தலைமைச் செயலகம் பொது (ஜெனரல்-D) துறையின் அரசு துணைச் செயலாளரிட மிருந்து பெறப்பட்ட 1973 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2ஆம் நாளிட்ட 1543ஆம் எண் அரசு ஆணையின் நகல்.

சுருக்கம்

சட்டம்-ஒழுங்கு செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பெரியகுப்பம் கிராமம்- இரு கட்சியினரிடையே மோதல்—காவலர்கள் அத்துமீறியதாகக் குற்றச்சாட்டு--1952ஆம் ஆண்டு விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின் கீழ் விசாரணை-ஆணையிடப்படுகிறது.

ஆணை :

கடலூர் கிராமத்தில் சிற்றாராகிய அலிக்குப்பம் கிராமத்தில் தன்சிங் என்பவருக்கும் பாண்டுரங்கம் என்பவருக்கும் சொந்தக் காரணங்களை முன்னிட்டு சச்சரவுகள் நிலவி வந்தன. 1973ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் நாள் அளவில், அலிக்குப்பத்திலிருந்து அண்மையிலுள்ள மற்றொரு சிற்றூராகிய பெரியகுப்பத் துக்கு இருப்பிடத்தை மாற்றிக்கொண்ட தன்சிங்கும் அவரது குடும்பத்தினரும் அலிக்குப்பம் கிராமத்திற்குள் நுழைந்து அங்குள்ள மீனவர்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. பல்வேறு தண்டனைப் பிரிவுகளின்கீழ், 80/73ஆம் குற்ற எண்ணில் செய்யூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல்துறை இன்ஸ்பெக்டர் 1973ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் நாளன்றும் செங்கற்பட்டு காவல் துறை டெபுடி சூப்ரண்டு 1973ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் நாளன்றும் பிந்திய நாட்களிலும் புலனுய்வுகளை மேற்கொண்டனர். இது வரை 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களது புலனுய்வுகளின்போது காவலர்கள் அட்டூழியங்கள் செய்ததாகக் குறிப்பாக பெரியகுப்பக் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் முறையீடுகள் செய்துகொண்டனர். 1973ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் நாளன்று காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் செய்தித்தாள்களில் வெளியிட்ட அறிக்கையால் அவர்கள் மன நிறைவு அடைய வில்லை. செய்யப்பட்டதாகக் கூறப்படுகிற செயல்கள் குறித்து செய்தித்தாள்களில் செய்தி வெளியாகியது. எனவே, செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பெரியகுப்பம் கிராமத்தில் 1973ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் நாளிலிருந்து 16ஆம் நாள் வரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் குறித்தும், குறிப்பாக, காவலர்கள் புரிந்ததாகக் கூறப்படுகிற அட்டூழியச் செயல்கள் குறித்தும், விசாரணை நடத்துவதென அரசு முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க தனி நபர் ஆணைக் குழுவை அமைப்பதெனவும், சென்னை வருவாய்த்துறை வாரியத்தின் முதல் உறுப்பினராகிய திரு. எம். ஜி. ராஜாராம், ஐ.ஏ.எஸ். அவர்களை 1952ஆம் ஆண்டு விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின்கீழ், இந்த நோக்கத்திற்காக நியமிப்பதெனவும் அரசு முடிவு செய்துள்ளது.

1973ஆம் ஆண்டு ஜூன் இரண்டாம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் கீழ்க்கண்ட அறிவிப்புகள் வெளியிடப்படும்.

அறிவிப்பு–I.

செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பெரியகுப்பம் கிராமத்தில் 1973 மே திங்கள் 11ஆம் நாளிலிருந்து 16ஆம் நாள் வரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் குறித்தும், குறிப்பாக, செங்கற்பட்டு மாவட்டம், செய்யூர் காவல் நிலையத்தின் 80/1973ஆம் எண் குற்ற எண்ணில் உள்ள வழக்குகுறித்து புலனுய்வுச் செய்கையில் காவலர்கள் அட்டூழியச் செயல்கள் புரிந்ததாகக் கூறப்பட்ட குற்றச் சாட்டுகள் குறித்தும் விசாரணை நடத்துவதற்காக, சென்னை, வருவாய்த்துறை வாரியத்தின் முதல் உறுப்பினராகிய திரு. எம். ஜி. ராஜாராம், ஐ. ஏ. எஸ்., அவர்களை தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் விசாரணை ஆணைக்குழுவாக இதனால் நியமிக்கிறார். 1952ஆம் ஆண்டு விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) 3-வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு இவ்வாறு நியமனம் செய்யப்படுகிறது. விசாரணை ஆணைக்குழு, இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து ஒரு திங்களுக்குள் தனது அறிக்கையை அரசுக்குப் பணிந்தனுப்பும்.

அறிவிப்பு-II.

1952ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 5-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங் களைக்கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், பொது (ஜெனரல்-D) துறையில் ஸ்ரீ.ஆர்.ஒ.....ல் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக் குழுவைப் பொறுத்த வரையில், மேற்படி 5-வது பிரிவைச் சேர்ந்த (2), (3) உட்பிரிவு, (4) உட்பிரிவு (5) உட்பிரிவு ஆகியவற்றின் விதித் துறைகள் அனைத்தும் பொருந்துமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கட்டளையிடுகிறார்.

(ஆளுநர் ஆணைப்படி)

(ஒப்பம்) எம். வைத்தியலிங்கம்,

அரசு துணைச் செயலாளர்.

2—6—1973

(உண்மை நகல்)

இணைப்பு-I (a).

1973ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள் வரை காலவரையறைக்கு அனுமதி வழங்கி, சென்னை 9, தலைமைச் செயலகம், பொதுத் (ஜெனரல்-A) துறையின் 1973ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4ஆம் நாளிட்ட 1821ஆம் எண் ஆணையின் அரசு நகல்.

சுருக்கம்.

சட்டம்—ஒழுங்கு—செங்கற்பட்டு மாவட்டம்—பெரிய குப்பம் கிராமம்—காவலர் அத்து மீறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள்—1952ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் (மத்திய சட்டம் 60/1952) விசாரணை —ஆணையிடப்பட்டது. விசாரணை அறிக்கையை அனுப்புவதற்கான காலவரம்பை நீட்டித்தல்—அனுமதிக்கப்படுகிறது.

படிக்கவும்.—1. அரசு ஆணை எண் 1543, பொது (ஜெனரல்-D) துறை, நாள் 2-6-1973.

2. விசாரணை ஆணைக்குழுவிடமிருந்து வந்த 22—6—1973ஆம் நாளிட்ட 573 P.A.M. 1 ஆம் எண் கடிதம்.

ஆணை.

மேலே முதற்கண் குறிப்பிடப்பட்ட அரசு ஆணையில் நியமிக்கப்பட்டுள்ள ஒரு நபர் விசாரணை ஆணைக்குழுவின் வேண்டுகோளின்படி, அதன் அறிக்கையை அனுப்புவதற்கான கால வரம்பை 15—8—1973 வரை நீட்டிப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. இதனையொட்டி, 4—7—1973 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்படவேண்டு மென்று அரசு கட்டளையிடுகிறது:—

அறிவிப்பு.

1952ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3-வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ் நாட்டு ஆளுநர் அவர்கள் 2—6—1973 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் (சிறப்பு வெளியீடு) II-ம் பாகம், I பிரிவு-1-ம் பக்கத்தில் வெளியிடப்பட்ட பொது (ஜெனரல்-A) துறையின் II-1 2586 (e)/1973-ம் எண் அறிவிப்பில் கீழ்க் காணும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

திருத்தம்.

மேற்சொன்ன அறிவிப்பின் '' இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஒரு திங்கள் காலத்திற்குள் '' என்ற சொற்களுக்குப் பதிலாக, '' 1973 ஆகஸ்ட் 15 ஆம் நாளன்று அல்லது அந்நாளுக்கு முன்னர் '' என்ற சொற்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

(ஒப்பம்) H. K. காஜி,

அரசு சிறப்புக் கூட்டுச் செயலாளர்.

(உண்மை நகல்)

இணைப்பு I (b)

1973 அக்டோபர் 15-ம் நாள் வரை காலவரம்பை நீட்டித்து சென்னை-9, தமிழக அரசு தலைமைச் செயலகம், அரசுத் தலைமைச் செயலாளரிடமிருந்து வந்த பொது (ஜெனரல்-A) துறையின் 22—8—1973 ஆம் நாளிட்ட 2271 ஆம் எண் அரசு ஆணையின் நகல்.

சுருக்கம்.

சட்டம்-ஒழுங்கு—செங்கற்பட்டு மாவட்டம்—பெரியகுப்பம் கிராமம்—காவலர் அத்து மீறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள்— 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) கீழ் விசாரணை —ஆணையிடப்பட்டது—விசாரணை அறிக்கையை அனுப்புவதற்கான கால வரம்பை மேலும் நீட்டித்தல்— அனுமதிக்கப்படுகிறது.

படிக்கவும் :

1. அரசு ஆணை எண் 1543, பொது (ஜெனரல்-D) துறை, நாள் 2—6—1973.

2. அரசு ஆணை எண் 1821 பொது (ஜெனரல்-A) துறை, நாள் 4—7—1973.

3. ஒரு நபர் விசாரணை ஆணைக்குழுவிடமிருந்து வந்த 2—8—1973 ஆம் நாளிட்ட 5/73 ஆம் எண் கடிதம்.

ஆணை :

மேலே முதற்கண் குறிப்பிடப்பட்ட அரசு ஆணையில் நியமிக்கப்பட்டுள்ள ஒரு நபர் ஆணைக் குழுவின் வேண்டுகோளின்படி அதன் அறிக்கையை அனுப்புவதற்கான கால வரம்பை மேலும் 15—10—1973 வரை நீட்டிப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. இதற்கிணங்க 22—8—1973 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும் என்று அரசு கட்டளையிடுகிறது.

அறிவிப்பு.

1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) 3-வது பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக்கொண்டு தமிழ் நாட்டு ஆளுநர் அவர்கள் 2—6—1973 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் (சிறப்பு வெளியீடு), பாகம் II, பிரிவு 1, 1-ம் பக்கத்தில் வெளியிடப்பட்டு பின்னர் திருத்தப்பட்டுள்ள பொது (ஜெனரல்-A) துறையின் II-1 2586 (e)/1973 ஆம் எண் அறிவிப்பில் கீழ்க்காணும் திருத்ததை இதனுல் செய்கிறார்.

திருத்தம்

மேற்சொன்ன அறிவிப்பில் '' 1973 ஆகஸ்ட் 15-ம் நாளன்று அல்லது அந்த நாளுக்கு முன்னர் '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' 1973 அக்டோபர் 15 ஆம் நாளன்று அல்லது அந்த நாளுக்கு முன்னர் '' என்ற சொற்களை அமைத்துக் கொள்ளவேண்டும்.

(ஆளுநர் ஆணைப்படி)

(ஒப்பம்) பி. சபாநாயகம்,

அரசு தலைமைச் செயலாளர்.

(உண்மை நகல்.)

இணைப்பு I (e)

1973 நவம்பர் 30 ஆம் நாள் வரை கால வரம்பை நீட்டித்து பொது (ஜெனரல் A) துறையிடமிருந்து 27—10—1973 அன்று பிறப்பிக்கப்பட்ட 2826-ம் எண் அரசு ஆணையின் நகல்.

சுருக்கம்.

சட்டம்—ஒழுங்கு—செங்கற்பட்டு மாவட்டம்—பெரியகுப்பம் கிராமம்—காவலர் அத்துமீறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள்—1952-ம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) கீழ் விசாரணை—ஆணையிடப்பட்டது—விசாரணை அறிக்கையை அனுப்புவதற்கான கால வரம்பை மேலும் நீட்டித்தல்—அனுமதிவழங்கப்படுகிறது.

படிக்கவும்:

1. அரசு ஆணையின் 1543 பொது (ஜெனரல்-D) துறை, நாள் 2—6—1973.
2. அரசு ஆணை எண் 1821 பொது (ஜெனரல்-A) துறை, நாள் 4—7—1973.
3. அரசு ஆணை எண் 2271 பொது (ஜெனரல்-A) துறை, நாள் 22—8—1973.
4. சென்னை ஒரு நபர் விசாரணை ஆணைக்குழுவிடமிருந்து வந்த 3—10—1973 ஆம் நாளிட்ட 5/73 ஆம் எண்ணுள்ள கடிதம்.

ஆணை :

மேலே முதற்கண் குறிப்பிடப்பட்ட அரசு ஆணையில் நியமிக்கப்பட்டுள்ள ஒரு நபர் விசாரணை ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில் அதன் அறிக்கையை அனுப்புவதற்கான காலவரம்பை மேலும் 30—11—1973 வரை நீட்டிப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. இதற்கிணங்க 27—10—1973-ம் நாளிட்ட தமிழ் நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் கீழ்க் காணும் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டுமென்று அரசு கட்டளையிடுகிறது.

அறிவிப்பு.

1952-ம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) மூன்றாவது பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ் நாட்டு ஆளுநர் அவர்கள் 2—6—1973-ம் நாளிட்ட தமிழ் நாடு அரசிதழ் (சிறப்பு வெளியீடு), பாகம்—II, பிரிவு 1, 1ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டு பின்னர் திருத்தப்பட்டுள்ள பொது (ஜெனரல்-A) துறையின் II-1 2586 (e)/1973 ஆம் எண் அறிவிப்பில் கீழ்க்காணும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

திருத்தம்.

மேற்சொன்ன அறிவிப்பில் '' 1973 அக்டோபர் 15-ம் நாளன்று அல்லது அந்நாளுக்கு முன்பு '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' 1973 நவம்பர் 30-ம் நாளன்று அல்லது அந்த நாளுக்கு முன்னர் '' என்ற சொற்களை அமைத்துக் கொள்ளவேண்டும்.

(ஆளுநர் ஆணைப்படி)

(ஒப்பம்) பி. சபாநாயகம்,
அரசுத் தலைமைச் செயலாளர்.

(உண்மை நகல்)

இணைப்பு I (d)

1973 டிசம்பர் 25ஆம் நாள் வரை காலவரம்பை நீட்டித்து பொதுத் (ஜெனரல்-A) துறையிடமிருந்து 5—12—1973 அன்று பிறப்பிக்கப்பட்ட 3187ஆம் எண் அரசு ஆணையின் நகல்.

சுருக்கம்.

சட்டம்—ஒழுங்கு—செங்கற்பட்டு மாவட்டம்—பெரியகுப்பம் கிராமம்—காவலர் அத்துமீறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள்—1952 ஆம் ஆண்டு

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) கீழ் விசாரணை ஆணையிடப்பட்டது—விசாரணை அறிக்கையை அனுப்புவதற்கான காலவரம்பை மேலும் நீட்டித்தல்—அனுமதி வழங்கப்படுகிறது.

படிக்கவும் :

1. அரசு ஆணை எண் 1543 பொது (ஜெனரல்-D) துறை, நாள் 2—6—1973.
2. அரசு ஆணை எண் 1821 பொது (ஜெனரல்-A) துறை, நாள் 4—7—1973.
3. அரசு ஆணை எண் 2271 பொது (ஜெனரல்-A) துறை, நாள் 22—8—1973.
4. அரசு ஆணை எண் 2826 பொது (ஜெனரல்-A) துறை, நாள் 27—10—1973.
5. சென்னை, ஒரு நபர் ஆணைக்குழுவிடமிருந்து வந்த 28—11—1973ஆம் நாளிட்ட 5/1973 ஆம் எண்ணுள்ள கடிதம்.

ஆணை :

மேலே முதற்கண் குறிப்பிடப்பட்ட அரசு ஆணையில் நியமிக்கப்பட்டுள்ள ஒருநபர் விசாரணை ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில் அதன் அறிக்கையை அனுப்புவதற்கான காலவரம்பை மேலும் 25—12—1973 வரை நீட்டிப்பது என்று அரசு முடிவுசெய்துள்ளது. இதற்கிணங்க 5—12—1973 ஆம் நாளிட்ட தமிழ் நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டுமென்று அரசு கட்டளையிடுகிறது.

அறிவிப்பு.

1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952 மூன்றாவது பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ் நாட்டு ஆளுநர் அவர்கள் 2—6—1973 ஆம் நாளிட்ட தமிழ் நாடு அரசிதழ் (சிறப்பு வெளியீடு) பாகம்-II, பிரிவு 1, 1 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டு பின்னர் திருத்தப்பட்டுள்ள பொது (ஜெனரல்-A) துறையின் II-1 2586 (e)/1973 ஆம் எண் அறிவிப்பில் கீழ்க்காணும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

திருத்தம்.

மேற்சொன்ன அறிவிப்பில் '' 1973 நவம்பர் 30ஆம் நாளன்று அல்லது அந்நாளுக்கு முன்னர்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''1973 டிசம்பர் 25ஆம் நாளன்று அல்லது அந்நாளுக்கு முன்னர் '' என்ற சொற்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

(ஆளுநர் ஆணைப்படி)

(ஒப்பம்) பி. சபாநாயகம்,
அரசுத் தலைமைச் செயலாளர்,

(உண்மை நகல்)

இணைப்பு II.

சென்னை, வடக்கு சரகம், காவல்துறை—துப்புடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் 30—5—1973 அன்று வெளியிட்ட பத்திரிக்கை குறிப்பின் நகல்.

இரு தமிழ் நாளிதழ்களில், திருமதி. ரமணிபாய் என்ற பெயரில் வெளி வந்த பத்திரிகைக் குறிப்பில் காவலர் மீதானகீழ்க்காணும் குற்றச் சாட்டுகள் கண்டிருந்தன :—

(i) உள்ளூர் மீனவக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராயிருக்கும் சீதாரமன் என்பவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அவரது குடும்பத்தினர் நிறுவனக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ;

(ii) திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சீதாராமனிடம் உள்ளூர் கோயில் நிதிக்கு 5,000 ரூபாய் நன்கொடை வழங்குமாறு கேட்டனர். சீதாரமன் அதனைக் கொடுக்க மறுத்தார். அதன் விளைவாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சீதாராமனையும் அவரது சகோதரர் தனசிங்கையும் அடித்தனர். இதுபற்றி சீதாராமன் உள்ளூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார், அவ்வுரைச் சேர்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தலையிட்டதன் காரணமாக, பதிவு செய்யப் படவுமில்லை. நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவுமில்லை.

(iii) 1973 ஏப்ரல் திங்களில், சீதாராமனும் அவர் குடும்பத்தினரும் திராவிட முன்னேற்ற கழகத்தினரால் அடிக்கப்பட்டனர். இது பற்றியும் புகார் ஒன்று உள்ளூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது. ஆனால் எவ்வித தடவடிக்கையும் எடுக்கப்படவில்லே. எனவே, சீதாராமனும், அவரது சகோதரர் தனசிங்கும், அவரது குடும்பத்தினரும் அலிகுப்பத்திலிருந்து பெரியகுப்பத் திற்குச் சென்று வசித்து வந்தனர்.

(iv) 1973 மே திங்களில் அலிக்குப்பத்தைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பெரியகுப்பத்திற்குச் சென்று சீதாராமனியும் அவரது குடும்பத் தினரையும் தாக்கினர். பெரியகுப்பம் மீனவர்கள் சீதாராமனியும் அவரது குடும்பத்தினரையும் காப்பாற்ற விரைந்தனர். எனவே, அலிக்குப்பம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 11—5—1973 அன்று அவ்வூரைச் சேர்ந்த சட்ட மன்றப் பேரவை உறுப்பினரை அணுகினர். அதன் பின்னர் இரவு சுமார் 1 மணிக்கு அவர்கள் காவலருடன் பெரியகுப்பம் சென்றனர். காவலர் சீருடையில் இல்லாத தால், பெரியகுப்பத்தின் மக்கள், சில ரவுடிகள் தங்களைத் தாக்க வந்துள்ளதாக நினைத்து அவர்களை கிராமத்திற்குள் நுழைய விடாமல் தடுத்தனர்.

(v) 12—5—1973 அன்று, மாவட்டக் காவல் துறை கூப்பிரண்டு, ஆயுதம் தாங்கிய காவலர்களுடன் பெரியகுப்பம் கிராமத்திற்குச் சென்றபோது அக் கிராமத்திலுள்ள ஆடவர் அனைவரும் ஓடிவிட்டனர். பெண்கள் மட்டுமே தங்கள் குழந்தைகளுடன் அங்கிருந்தனர். கிராமத்திற்குள் நுழைந்தவுடன் காவலரும் அலிக்குப்பம் திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் அங்குள்ள வீடுகள் அனைத் திலும் உட்புகுந்து அங்கிருக்கும் பாத்திரங்களை உடைத்தெறிந்து சொத்துக்களையும் சேதப்படுத்தினர். மேலும் அங்குள்ள பெண்களை அடித்து, தெருவில் நிர்வாண மாக நடக்க வைத்து கொளுத்தும் வெயிலில் மதியம் 12 மணி முதல் இரவு 9 மணி வரை மணலில் உட்கார வைத்தனர்.

(vi) மே 13, 14-ம் நாட்களிலும் காவலர் இதுபோன்ற அட்டூழியங்களைச் செய்தனர். பெண்கள் சிலரும் கல் நெஞ்சம் கொண்டவர்களால் கற்பழிக்கப் பட்டனர்.

(vii) கால்நடைகள் வெட்டப்பட்டு, கடலில் எறியப்பட்டன; வயல் களில் இருந்த வைக்கோல் கன்றுகள் நாசமாக்கப்பட்டு மீன்பிடி படகுகள் உடைத் தெறியப்பட்டன, மேலும் குடிசைகளிலிருந்து அரிசியும் கோழிகளும் திருடப்பட்டு காவலர்களால் சமைத்து உட்கொள்ளப்பட்டன. பெண்கள் மோசமாக நடத்தப் பட்ட காரணத்தால், அவர்களில் சிலர் கடலில் மூழ்கி தற்கொலை செய்துக் கொள்ளவும் முற்பட்டனர். அப்போது சின்னக்குப்பத்தைச் சேர்ந்த மீனவர்கள் அவர்களைத் தடுத்து விட்டனர்.

(viii) திருமதி ரமணிபாயும் மற்றவர்களும் செய்யூர், சித்தாமூர் காவல் நிலையங்களையும் மதுராந்தகம் துணைச் சிறைச்சாலையையும் சென்று பார்வையிட்ட னர். காவலர்கள் தாக்கியதனல் ஏற்பட்ட காயங்களுடன் குற்றஞ் சாட்டப்பட்ட 17 பேர் காவலில் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். நடராஜன் என்ற ஒருவர் செய்யூர் காவல் நிலையத்தில் கடந்த 6 நாட்களாக காவலில் வைக்கப்பட்டிருந்த தையும் கண்டனர்.

2. மேற்சொன்ன குற்றச்சாட்டுக்கள், 11—5—1973 அன்று அலிக்குப்பத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி தொடர்பாகவும் 11—5—1973 அன்றும் அதற்குப் பிந்திய நாட்களிலும் பெரியகுப்பத்திலும் அலிக்குப்பத்திலும் காவலர்களால் நடத்தப்பட்ட புலன் விசாரணை தொடர்பாகவும் செய்யப்பட்டுள்ளன.

3. குற்றச்சாட்டு எண் (1) -ஐ பொறுத்தவரையில், சீதாராமன், அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டபடி, தி. மு. க. உறுப்பினர் இல்லே. ஆனல் இவரது சகோதரராகிய தனசிங் என்பவர் முன்னர் 10 ஆண்டு காலம் தி. மு. க.-வில் உறுப்பினராக இருந்தார். அவர் தற்போழுது கடந்த மூன்று ஆண்டுகளாக உறுப்பினர் இல்லே.

4. குற்றச்சாட்டு எண் (2)-ஐ பொறுத்த வரையில், சிற்றூர்களாகிய அலிக்குப்பத்திலோ பெரியகுப்பத்திலோ தி. மு. க. வினர் எதுவும் கிடையாது. ஆனல், ஒரு மைல் தொலேவில் உள்ள கடலூர் கிராமத்தில் ஒரு கிளே உள்ளது. இந்தக் கிளேயில் அலிக்குப்பத்திலும் பெரியகுப்பத்திலும் வசிப்பவர்கள் சிலர் உறுப்பினர்கள் ஆவர். சீதாராமனின் வாக்குமூலத்தின்படி, தி. மு. க. வினர்

எவரும் கோவில் நிதிக்காக ரூபாய் 5,000 கேட்கவில்லை. மேலும் 23—3—1973 அன்று காவலர்களிடம் தனசிங் கொடுத்த புகார் மீது அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது உண்மை அல்ல. உண்மையில், 23—3—1973 அன்று செய்யூர் குற்ற எண். 46/73-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, காவலரால் உறியவாறு புலனுய்வு செய்யப்பட்டது. புலனுய்வு நடந்துகொண்டிருக்கையில், தனசிங், தனது புகார் உண்மையானதல்ல என்றும் மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும் வாக்குமூலம் கொடுத்தார். எனவே, மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது கைவிடப்பட்டது.

5. மூன்றுவது குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில் சீதாராமனின் மாமா ஆறுமுகம் கொடுத்த புகாரின் மேல் காவல்துறை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது உண்மையல்ல. மாறுக செய்யூர் குற்ற எண். 71/73-ல் 23—4—1973 ஆம் நாளன்று வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலனுய்வு செய்யப்பட்டு வருகிறது.

6. குற்றச்சாட்டு எண். (iv)-ஐ பொறுத்த வரையில் அலிகுப்பத்தைச் சேர்ந்த தி. மு. க. வினர் சீதாராமனையும் அவரது குடும்பத்தாரையும் தாக்கியது தொடர்பாக காவல் துறைக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. உண்மையில், மேற்சொன்ன தாக்குதல் தொடர்பாக அது நடைபெற்ற நாள், இடம் எதுவும் கொடுக்கப்படவில்லை. ஆனுல். 11—5—1973 அன்று அதிகாலை 3-00 மணி முதல் 5-00 மணி வரையில் தனசிங், சீதாராமன் மற்றும் அவரது குடும்பத்தினர் பெரியகுப்பத்தைச் சேர்ந்த 100 பேர் ஆகியோருடன் அலிக்குப்பத்தைச் சேர்ந்த மீனவர்களைத் தாக்கி 12 மீனவர்களுக்குக் காயமேற்படுத்தினர். இவர்களில் 3 பேர் செங்கற்பட்டு கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். 9 பேர் செய்யூர் மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டனர். அவர்கள் 14 கூரை வீடுகளை நாசப்படுத்தி அலிக்குப்பத்தில் உள்ள வேறு சில குடிசைகளிலிருந்து 2 டிரான்சிஸ்டர்கள், பித்தளைப் பாத்திரங்கள், துணிகள் மற்றும் ரொக்கத்தையும் எடுத்துக் கொண்டு சென்று விட்டனர். பாண்டுரங்கன் புகார் செய்ததன் பேரில், செய்யூர் காவல்நிலைய குற்ற எண். 80/73-ல் 11—5—1973 அன்று பிற்பகல் 2-15 மணிக்கு குற்றஞ்சாட்டப்பட்ட 59 பேர்கள் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, புலனுய்வு மேற்கொள்ளப்பட்டது. மதுராந்தகம், காவல் துறை இன்ஸ்பெக்டர், சிருடை அணிந்த உள்ளூர் காவலர்கள் 10 பேருடன் இரவு சுமார் 8-00 மணிக்கு அலிக்குப்பம் கிராமத்தைச் சென்று பார்வையிட்டு புலனுய்வு மேற்கொண்டனர். இன்ஸ்பெக்டர் அலிக்குப்பத்தில் புலன் விசாரணையை முடித்துவிட்டு காவலர்களுடன் திரும்பிக் கொண்டிருக்கையில் பெரியகுப்பத்தைச் சேர்ந்த சுமார் 200 மீனவர்கள் ஒன்றுகத் திரண்டு அச்சுறுத்தும் முறையில் வந்தனர். அமைதியாகக் கலைந்து செல்லுமாறு காவலர்கள் அவர்களை எச்சரித்தனர். பெரியகுப்பம் மீனவர்கள் சென்ற பின்னர் காவலர்கள் திரும்பினர்.

7. குற்றச்சாட்டு (v)-ஐ பொறுத்தவரையில், 12—5—1973 அன்று காவல் துறை டெபுடி சூப்பிரண்டுதான் ஆயுதந்தாங்கிய ரிசர்வ் காவற்படைப் பிரிவுடன் அலிக்குப்பத்திற்கும் பெரியகுப்பத்திற்கும் சென்று புலன் விசாரணை செய்தாரே ஒழிய மாவட்ட சூப்பிரண்டு ஆயுதந் தாங்கிய சிறப்புக் காவல் படைப் பிரிவுடன் செல்லவில்லை. பெரியகுப்பத்தில், குற்ற எண் 80/73-ல் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் இல்லை. பெண்கள் மட்டுமே இருந்தனர். காவல் துறை டெபுடி சூப்பிரண்டு, தலைமறைவாகிவிட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எங்கிருக்கின்றர்கள் என்றும் அலிக்குப்பத்திலிருந்து திருடப்பட்ட சொத்துக்கள் பற்றியும் விசாரித்தார். 14—5—1973 அன்று குற்றஞ்சாட்டப்பட்ட 7 பேர் அலிக்குப்பத்திலும், 17—5—1973 அன்று குற்றஞ்சாட்டப்பட்ட மூன்று பேரும் 19—5—1973 அன்று மற்ற ஏழு பேரும் கடலூர் கிராமத்திலும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 17 பேர்களில் எவருமே காவலில் வைக்கப்பட்ட போது மதுராந்தகம் துணை மாஜிஸ்ட்ரேட்டிடம் தாங்கள் மோசமாக நடத்தப்பட்டதாகப் புகார் எதுவும் கொடுக்கவில்லை. குற்றஞ்சாட்டப்பட்ட எஞ்சிய 42 பேர்களும் மதுராந்தகத்தில் 30—5—1973 அன்று கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு வருகின்றனர். காவல் துறை டெபுடி சூப்பிரண்டின் கீழ் உள்ள காவலர்கள், குற்றஞ்சாட்டப்பட்டவர்களைக் கைது செய்வதற்காகவும், குற்ற எண் 80/73-ல் கூறிய திருடப்பட்ட பொருள்களை மீட்பதற்கும் மட்டுமே பெரியகுப்பத்திற்குச் சென்றனர். பெண்கள் அடிக்கப்பட்டு, தெருவில் நிர்வாணமாக நடத்திச் செல்லப்பட்டனர் என்பதும் கொஞ்சும் வெயிலில் நடுப்பகல் 12 மணியிலிருந்து இரவு 9 மணி வரையில் மணலில் உட்கார வைக்கப்பட்டனர் என்றும் கூறுவது அப்பட்டமான பொய்யாகும்.

8. குற்றச்சாட்டு (vi) -ல் கொடுக்கப்பட்டுள்ளவை அணைத்தும் அப்பட்ட மான பொய்யாகும். காவலர்கள் 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 13, 14 ஆகிய நாட்களில் பெரியகுப்பத்தில் தங்கவில்லை. ஆயுதந் தாங்கிய ரிசர்வ் காவற்படை யினர் கடலூர் கிராமத்தில் தங்க வைக்கப்பட்டு பல்வேறு கிராமங்களில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்வதற்காக காவல் துறை இன்ஸ்பெக்டரினால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

9. குற்றச்சாட்டு எண் (vii)-ஐப் பொறுத்த வரையில், கால்நடைகள் வெட்டப்பட்டு கடலில் தூக்கி எறியப்பட்டன என்பதும் வயல்களில் இருந்த சவுக்கு மரக் கன்றுகள் சேதப்படுத்தப்பட்டன என்பதும் படகுகள் உடைக்கப் பட்டன என்பதுவும் வெறுங்கற்பனையே. உணவுக்காக அரிசியோ, கோழிகளோ கிராமங்களிலிருந்து திருடப்படவில்லை. கடலில் மூழ்கி தற்கொலை செய்துகொள்ள எந்தப் பெண்ணும் முயலவில்லை.

10. குற்றச்சாட்டு (viii)-ஐப் பொறுத்தவரையில், குற்றஞ்சாட்டப்பட்டு காவலில் வைக்கப்பட்ட 17 பேர்களில் எவருமே மோசமாக நடத்தப்பட்டதாக அல்லது காயப்படுத்தப்பட்டதாக மதுராந்தகம் துணை மாஜிஸ்ட்ரேட்டிடம் புகார் செய்யவில்லை. நடராஜன் ஒரு தி. மு. க. உறுப்பினர். இவர் குற்ற எண் 80/73-ல் குற்றஞ்சாட்டப்பட்டவர்; இவர் குற்றஞ்சாட்டப்பட்ட மற்றவர்களுடன் 30—5—1973 அன்று கைது செய்யப்பட்டார். ஆனல் இங்கு கூறப்பட்டிருப்பது போல் செய்யூர் காவல் நிலையத்தில் வைத்திருக்கப்படவில்லை.

11. இவ்வாறு குற்றச்சாட்டுகள் மிகைப்படுத்திக் கூறப்பட்டவையாகவோ ஆதாரமற்றவையாகவோ, தவருனவையாகவோ உள்ளன. 11—5—1973 அன்று நடைபெற்ற ஒரு சம்பவம், 19 நாட்களுக்குப் பின்னர், தாமாகவே தயாரித்த புகைப்படங்களின் ஆதரவுடன் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறி உள்நோக்கத் துடன் மிகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

(ஒப்பம்) பொன் பரமகுரு,
காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல், வடக்கு சரகம்,
சென்னை-18.

(உண்மை நகல்.)

இணைப்பு II (ஏ).

சென்னை, காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் கொடுத்த 31—5—1973ஆம் நாளிட்ட பத்திரிகைச் செய்தியின் நகல்.

11—5—1973 அன்று அதிகாலை 3-00 மணிக்கும் 5-00 மணிக்கும் இடையில் சுமார் 100 மீனவர்கள் பெரியகுப்பத்திலிருந்து சென்று அலிக்குப்பத்தில் நுழைந்து அங்கிருந்து மீனவர்களைத் தாக்கினர். இத்தக் கலவரத்தில், அலிக்குப்பத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் காயமடைந்தனர். அவர்களில் மூன்று பேர், செங்கற் பட்டு கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெறுவதற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மீதிப்பேர், செய்யூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். 14 குடிசைகள் சேதப்படுத்தப்பட்டன. இரண்டு டிரான்சிஸ்டர்கள், பித்தளைப்பாத்திரங்கள், துணிகள், சிறிது பணமும் கூட குடிசைகளிலிருந்து அகற்றப்பட்டன. பாண்டுரங்கம் என்ற ஒருவர் புகார் செய்ததன் பேரில், செய்யூர் காவல் நிலைய குற்ற எண் 80/73-ல் இ. பி. கோ. 149, 147, 397, 395, 325, 326, 324, 323, 448, 379, 402, 427, 34 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. 11—5—1973 அன்று இரவு மதுராந் தகம் காவல் துறை இன்ஸ்பெக்டர் குற்றம் நடைபெற்ற இடத்தைச் சென்று பார்த்து புலன் விசாரணை மேற்கொண்டார். 12—5—1973 அன்று செங்கற்பட்டு காவல் துறை டெபுடி சூப்பிரண்டு குற்றம் நடைபெற்ற இடத்தைச் சென்று பார்த்து புலன் விசாரணைக்கு ஆலோசனை அளித்தார். 14—5—1973-க்கும் 30—5—1973-க்கும் இடைப்பட்ட காலத்தில் முதல் தகவல் அறிக்கையில் கூறப் பட்டுள்ள 59 பேர்களும் காவலர்களால் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில்

வைக்கப்பட்டனர். குற்றஞ்சாட்டப்பட்ட இவர்கள் மதுராந்தகம் துணை மாஜிஸ்ட்ரேட்டினுல் காவலில் வைக்கப்பட்டபோது அவர்கள் மோசமாக நடத்தப்பட்டதாக காவலர்களுக்கு எதிராக புகார் எதுவும் கொடுக்கவில்லை.


2. எனது உத்தரவின்பேரில், கிராமங்களைச் சென்று பார்த்து விசாரணை செய்த செங்கற்பட்டு மேற்கு காவல் துறை சூப்பிரண்டு, காவலர்கள் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அதாவது, சொத்துக்களுக்குச் சேதம் விளை வித்தமை, பெண்களை மோசமாக நடத்தியமை, கைது செய்யப்பட்டவர்களை மோசமாக நடத்தியது, புகார்கள் மீது நடவடிக்கை எடுக்காமை போன்ற குற்றச் சாட்டுகள் ஆதாரமற்றவை எனக்கண்டறிந்துள்ளார்.

3. இத்தகைய குற்றங்களைச் சாட்டுவது பொதுமக்களிடையே தேவையற்ற பீதியை ஏற்படுத்தக்கூடும் ; அது சட்டப்படி நடவடிக்கை எடுக்கத்தக்கதுமாகும்.



இணைப்பு - III

பெரியகுப்பம், சுற்றுப்புறம் ஆகியவற்றைக் காட்டும் தோராய வரைபடம்.




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு IV.

திரு. கே. வி. பாண்டுரங்கன் 11—5—1973 ஆம் நாளிட்ட குற்ற எண் 80 73-ல் கொடுத்த புகாரின் நகல்.

உயர் திரு செய்யூர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் சமூகத்திற்கு அலிக்குப்பம் வெங்கட செட்டி மகன் பாண்டுரங்கன் கொடுத்த ரிபோர்ட்.

ஐயா,

10—5—1973-ந்தேதி இரவு விடியற்காலை சுமார் 3 மணிக்கு எங்க ஊர் அலிக்குப்பத்து நபர்கள் தனசிங், சீதாராமன், ராமு, தனபால், தங்கராஜீ, ஆறுமுகம், அண்ணுமலை, வேலாயுதன், சிங்காரவேலு, சிவசேனன், பத்மநாபன் ஜெயபாலன், பெருமாள், முருவன், செல்வம், இவர்களும் கடலூர் காலணியை சேர்ந்த ஆட்கள் தேவராசன், பலராமன், காளப்பன், காசி, எட்டியான், செல்லப்பன், கண்ணன், தேவராசன் இவர்களும் பெரியகுப்பத்தைச் சேர்ந்த ஆட்கள் நடராஜன், ஜெயராமன், கோவிந்து, ஜெயபாலன், கணேசன், புஸ்பவிங்கம், நந்தன், நாராயணன், சுந்தரமூர்த்தி, மணி, குப்பன், துளசிங்கம், சாமிநாதன், வீரமுத்து, சிவானந்தம், பாலன், தோனண்டன், தேவேந்திரன், நாராயணன், சண்முகம், வாமணி, கந்தன், ஸ்ரீமணன், பேசாரங்கநாதன், வேலாயுதம், வச்சிரவேலு, செல்வராஜி, செல்வம், ஜெயராமன், பஞ்சநாதன், ஜெயகாந்தன், த. கணேசன், கோட்டி, ராமன், கருப்பு தம்பி, ரா. சிங்காரவேலு இன்னும் பெரியகுப்பத்து ஆட்கள் பெயர் தெரியாத ஆள் தெரிந்த நபர்கள் சுமார் 30 பேர்கள் தடி, கொம்பு, இரும்பு பைப்பு, வேலா முள், திருக்கை வால், கொடுவாள் சகிதமும், சில்லாக் கோல்கள் சகிதமும், அடி, வெட்டு, குத்து, கொள்ளே அடி என்று கோஷம் போட்டுக் கொண்டு அலிக்குப்பத்திற்குள் பெரியகுப்பம் மார்க்கத்திலிருந்து வந்து நுழைந்தார்கள், நான் எழுந்து ஒடிப்போய் பார்க்கும்போது எங்கள் ஊருக்குள் புகுந்து விட்டார்கள். என்னைக் கண்டதும் தனசிங் விடாதே அவனே என்று சொன்னான். என்னைத் துரத்தினார்கள். நான் ஒரு சந்து வழியாக புகுந்து ஒடி ஒரு பூவரச மரத்தில் ஏறிக்கொண்டேன். அப்போது மேற்படி நபர்கள் செல்வம், சுந்தரசாமி, பஞ்சாமிர்தம், பட்டையன், பிச்சைக்காரன், சாமிநாதன், செல்வம், தேசப்பன், பொன்னுரங்கம், ஆரணி செட்டி, இவர்களின் வீடுகளில் புகுந்து விட்டார்கள். வீட்டிலுள்ள பொருள்களை அடித்தும், நொறுக்கியும், நாசம் செய்து அந்த வீட்டிலுள்ள ஆண்களை தடியாலும், கொம்பாலும், இரும்பு பைப்பாலும், திருக்கை வால் வேலா முள்ளால், குத்தியும் பொருள்களை கொள்ளே இட்டும், சூரையாடியும், பயங்கரமான காயங்களையும், பொருட்சேதங்களையும் விடியற்காலை 5 மணி வரை அவர்கள் கலகத்தை செய்துவிட்டு என்னுடைய வீட்டிலும் அவர்கள் புகுந்து பணம், பித்தளைச் சாமான்கள் இன்னும் சில ரிக்கார்டுகளை கொள்ளே அடித்துச் சென்றுவிட்டார்கள். மேற்படி அடிபட்ட நபர்களை போலீஸ் ஸ்டேஷனில் தக்க நடவடிக்கைக்கு ஆஜர்படுத்தி இருக்கிறேன். மேற்படி பொருள்களின் சேதம் அடிபட்ட நபர்களைக் கேட்டால் குத்தப்பட்ட அடிபட்ட விபரமும் அவர்களுக்குத் தெரியும். மேற்படி சம்பவம் நடக்கும் போது மின்சார விளக்குகள் எல்லாம் எரிந்துகொண்டு இருந்தது. சாட்சிகள், புதுப்பட்டினம் வேலாயுதம், அலிக்குப்பம் பாலகிருஷ்ணன், மற்றும் சிலரும் இருந்தார்கள்.

கே. வி. பாண்டுரங்கன்.

11—5—73.

இணைப்பு V.

தனி, நபர் ஆணைக் குழுவினுல் வகுக்கப்பட்ட விதிமுறைகளின் நகல் பொதுக் (ஜெனரல்-டி) துறையின் 2—6—1973 ஆம் நாளிட்ட 1543 ஆம் எண் அரசாணையின்கீழ் அமைக்கப்பட்ட தனி நபர் ஆணைக் குழு—(செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பெரியகுப்பம் கிராமத்தில் நடைபெற்ற சம்பவம் பற்றிய விசாரணை).

விதிமுறைகள்.

[விசாரணை ஆணைக் குழுக்கள் (தமிழ் நாடு) 1972 ஆம் ஆண்டு விதிகளின் 14-வது விதியின்கீழ் வகுக்கப்பட்டவை.[

1. தனி நபர் ஆணைக் குழு, அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன நாட்களிலும் இடத்தில் அல்லது இடங்களில் மன்றப் பொதுவில் இன்றித் தனியாக விசாரணை நடத்தும்.

2. இக்குழு, அறிவிக்கப்பட்ட நாட்களில் சாதாரணமாக காலை 10-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரையிலும் பிற்பகல் 2-30 மணியிலிருந்து 4-30 மணி வரையிலும் விசாரணை நடத்தும்.

3. நீதி மன்றக் கட்டளைகள்.—சாட்சிகளுக்கு அனுப்பப்படும் அழைப் பாணைகள் உட்பட நீதி மன்றக் கட்டளைகள் அனைத்தும் குழுத்தலைவரினுல் அல்லது நிர்வாகியால் அல்லது தலைவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட பிற நபர்களால் கையொப்பமிடப்பட்டு தனி நபர் ஆணைக் குழுவின் (ரப்பர் முத்திரை) முத்திரை கொண்டு முத்திரையிடப்படவேண்டும்.

4. வழக்கறிஞர்கள்.—எவருக்காகவும் அல்லது கூட்டத்தினருக்காகவும், வாதிடுகின்ற வழக்கறிஞர்கள் அவ்வாறு செய்ய தங்களுக்கு அதிகாரம் அளிக்கும் சீட்டுக்களைத் தங்களது கட்சிக்காரர்களிடமிருந்து பெற்று தாக்கல் செய்ய வேண்டும்.

உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்.—உறுதிமொழி எடுத்துக்கொள்வதன் மேல் அளிக்கப்படும் சாட்சியம் ஆணைக் குழுவினுல் பதிவு செய்யப்படும். ஆணைக் குழு அனுமதிக்கும் வழக்கறிஞர்கள் அல்லது நபர்களால் இது குறுக்கு விசாரணை செய்யப்படுவதற்குட்பட்டதாகும்.

5 (ஏ). உறுதிமொழியின் படிவம்:—உறுதிமொழியின் படிவம் கீழ்க்கண்ட வாறு இருக்கும்.—

''இந்த வழக்கு தொடர்பான பொருள் குறித்து விசாரணை ஆணைக் குழுவின் முன்பு நான் அளிக்கும் சாட்சியம் உண்மையானது என்றும் முழுவதும் உண்மை யானது என்றும், உண்மையைத் தவிர வேறில்லை என்றும் எல்லாம் வல்ல இறை வன் சாட்சியாக.....என்னும் நான் உறுதி கூறுகின்றேன்''.

6. மேற் குறிப்பிட்ட படிவத்தை பயன்படுத்த மறுப்புத் தெரிவிப்பவர் களிடம் கீழ்க்கண்ட படிவத்தில் உறுதிமொழியைப் பெற வேண்டும்.—

''இந்த வழக்கு தொடர்பான பொருள் குறித்து விசாரணை ஆணைக்குழுவின் முன்பு நான் அளிக்கும் சாட்சியம் உண்மையானது என்றும், முழுவதும் உண்மை யானது என்றும், உண்மையைத் தவிர வேறில்லை என்றும்..... .....என்னும் நான் மனப்பூர்வமாகவும் உண்மையாக வும் உறுதி கூறுகிறேன்.

7. சாட்சியம் கூற முன்வருபவர்களின் பெயர்கள் ஒரு பதிவேட்டில் குறித் துக் கொள்ளப்பட வேண்டும். அவர்களுக்கு அழைப்பாணைகள் விடுவிக்கப்படும் போது, அந்தப் பதிவேட்டில் அதுபற்றிக் குறித்துக்கொள்ளப்பட வேண்டும். சாட்சிகளின் பெயர்கள் எந்த வரிசையில் பதிவு செய்யப்படுகின்றதோ அந்த வரிசையில் அவர்களுக்கு சாதாரணமாக அழைப்பாணைகள் அனுப்பப்படும். விசாரணைக் குழு முடிவு செய்யுமாறு நடைமுறை மாற்றம் எதற்கேனும் அது உட்பட்டதாகும்.

8. விசாரணை ஆணைக் குழுவால் பெறப்படும் உடைமைகளும், காட்சிப் பொருள்களும், உடைமைப் பதிவேட்டில் குறித்துக் கொள்ளப்பட வேண்டும். விசாரணை முடிந்த பிறகு இறுதியாக அதனை ஒரு வகை செய்வதற்கு விசாரணைக் குழு தக்க ஆணைகளைப் பிறப்பிக்கும்.

9. பதிவேடுகளும், நாட்குறிப்பேடுகளும்.—விசாரணை ஆணைக்குழு 18ஆம் எண் சிவில் பதிவேட்டில் நாட்குறிப்போடு ஒன்றைவைத்து வரும். ஒவ்வொரு நாளும் நடவடிக்கைகள் எந்த நேரத்தில் தொடங்கி எந்த நேரத்தில் முடிவடைந்தன என்பதையும் நாள்தோறும் விசாரணையில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் இந்த நாட்குறிப்பேடு தெளிவாகக் காட்டும். பதிவுகள் எந்த நாளுக்குச் சம்பந்தப்படு கின்றனவோ அந்நாளில் விசாரணை ஆணைக்குழு அந்தப் பதிவுகளில் சுருக்கொப்ப மிடுவார்.

10. பெறப்படும் நீதிமன்றக் கட்டணங்களும், நீதிமன்ற ஆணைகளைச் சேர்ப் பிப்பதற்கான கட்டணங்களும் C. R. 19 ஆம் எண் படிவப்படியுள்ள பதிவேட்டில் குறித்துக் கொள்ளப்படவேண்டும்.

11. சாட்சிகளுக்கு நாட்படி வழங்கியதற்கான பதிவேடு C. R. 18 ஆம் எண் படிவப்படியுள்ள பதிவேட்டில் வைத்துவரப்படவேண்டும். நாள்தோறும் வழங்கப்படும் தொகைகள் ரொக்க இருப்புப் பதிவேட்டிற்கு மாற்றப்பட வேண்டும்.

12. நாட்படிவழங்கல்.-சாட்சிகளுக்கு நாட்படி வழங்குவது விசாரணை ஆணைக் குழுவின் விருப்பத்தைப்பொறுத்ததாகும். குற்றவியல் நடை முறை விதிகள் (Criminal Rules of Practice) விசாரணை நடத்தப்படுகிற இடங்களில், செயலில் உள்ள சுற்றறிக்கை ஆணைகள் ஆகியவற்றின்கீழ் அனுமதிக்கப்படும் வீதங்களில் சாதாரணமாக அந்தப்படி வரையறுக்கப்படும். அரசு சார்பற்ற சாட்சிகளுக்கு அப்படி வழங்கப்படும்.

13. சில்லறைச் செலவுகள்.—சில்லறைச் செலவுத் தொகையிலிருந்து பணம் வழங்கப்படுவதற்காக உரிய படிவத்தின் சில்லறைச் செலவுப் பதிவேடு ஒன்று, தேவையான கைச்சாத்துக்களுடன் வைத்துவரப்பட வேண்டும். வாங்கப்பட்ட தொகைகளை காட்டுவதற்காக ரொக்கப் பதிவேடு ஒன்று வைத்து வரப்படவேண்டும்.

